# கடதீர் காவலும்

(பிரயாணக் கதை)

சிந்தனைச் செம்மல்
பசுந்தீவு கோவிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூதிர் காலம்

(பிரயாணக் கதை)

ஆக்கியோன் :
சிந்தனைச் செம்மல்
பசுந்தீவு கோவிந்தன்



வெளியீடு :
கோ. சரோஜினிதேவி
சிற்பனை முருகன் வீதி,
6ம் வட்டாரம்
வேலணை, இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் பற்றிய விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | கூதிர் காலம் |
| முதற்பதிப்பு | : | ஏப்ரல், 2012 |
| நூலாசிரியர் | : | பசுந்தீவு கோவிந்தன் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| நூல் வரிசை | : | 05 |
| பிரதிகள் | : | 1000 |
| கணனி வடிவமைப்பு | : | சன் பிறிண்டர்,<br>66/2, பழம் வீதி, கந்தர்மடம்,<br>யாழ்ப்பாணம்.<br>இலங்கை. |
| அச்சிடல் அமைப்பு | : | விவேகானந்தா அச்சகம்,<br>ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம்,<br>இலங்கை. |
| பக்கம் | : | X + 235 |
| விலை | : | 250 ரூபா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

நூலாசிரியர் பசுந்தீவு கோவிந்தன், கதாசிரியரின் உரையில் என்ன நோக்கத்தோடு தான் இந்தப் பிரயாணக் கதையை எழுதியுள்ளேன் என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். அவர் எதிர்பார்ப்பது போன்று அவருடைய நோக்கம் நிறைவேறுமா? என்று கேட்டால், நிச்சயம் நிறைவேறும் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பிரயாணக் கதையைப் படிப்பதன் மூலம் நெடுந்தீவிற்குப் போகாமலேயே நெடுந் தீவைப் பற்றிப் பூரணமாய்த் தெரிந்துகொள்ள முடியும். அந்தளவிற்குத் தனது எழுத்தாற்றல் மூலம் ஒவ்வொரு நிகழ்வையும் ஒவ்வொரு முக்கிய இடங்களையும் ஒவ்வொரு வரலாற்று உண்மைகளையும் படம்பிடித்துக் காட்டுகிறார். அவை போதாதென்று அவற்றிற்கு மெருகூட் டுவது போன்று அழகான படங்களையும் இணைத்துள்ளார். கலை, கலாச்சாரம், பண்பாடு, வாழ்க்கை முறை என்பனவற்றில் நெடுந்தீவு மக்களுக்கென்றே உரிய விசேட அம்சங்களையும், விருந்தோம்பல், விசேட உணவுகள், பழக்க வழக்கங்கள் என்பனவற்றையும் தத்ரூபமாய் எம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார். உதா: பட்டுவினு டைய வீட்டில் கோவிந்தும் அருளும் மதியச் சாப்பாடு உண்ட நிகழ்வை நான் வாசித்தபொழுது, அதில் நானும் பங்குபற்றியிருக்கலாமே என்ற ஓர் எண்ணம் எனது மனதில் எழுந்தது. என்ன அற்புதமாய் அந்தக் காட்சியைச் சித்தரித்துள்ளார்!

இந்நூலை வாசித்து முடித்த பொழுது, 'இவ்வளவு விடயங்கள் நெடுந்தீவிற்குள் உண்டா?' என்பதைத் தெரிந்து உண்மையிலேயே பிரமித்துவிட்டேன். இதை ஒரு சிறந்த சுற்றுலா இடமாக ஆக்கமுடியுமே! என்ற ஓர் ஏக்கம், ஓர் ஆதங்கம் என்மனதுள் எழச் செய்தது. இதுவரை நான் நெடுந்தீவிற்குப் போகவில்லை. இக்கதையைப் படித்த பிற்பாடு, நிச்சயம் ஒருதடவை நெடுந்தீவிற்குப் போய்த்தானாக வேண்டும் என்ற முடிவை எடுத்துள்ளேன். அந்தளவிற்கு அங்குள்ள விடயங்கள் அவற்றை ஆசிரியர் சித்தரித்திருக்கின்ற விதம் என்பன என்னை மிகவும் கவர்ந் துள்ளன என்றால் மிகையாகாது.

நெடுந்தீவைப் பற்றித் தெரியாதவர்களுக்கு அதைத் தெரியப்ப டுத்துவதற்காக பிரயாணக் கதை வடிவத்தைத் தேர்ந்தெடுத்துள்ளாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்! இதைப் பாராட்டாமலிருக்க முடியாது. இதுவரை யாரும் கையாண்டிருக்காத ஓர் அற்புதமான படைப்பு. இது இவருடைய சொந்தப் படைப்பு. இவருடைய சிந்தனையின் வெளிப்பாடு. இந்த முறையைக் கையாண்டாற்றான் வாசகர்களைக் கவர்ந்திழுக்க முடியும் என்பது இவருடைய சொந்தக் கண்டுபிடிப்பு. நிச்சயமாக இக்கதை வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் என்பதிற் சிறிதளவேனும் சந்தேக மில்லை. புதிதாக ஒன்றைப் படைப்பவனைத்தான் படைப்பாளியென்று சொல்ல முடியும். அவனை இவனைத் தழுவியோ பின்பற்றியோ எழுதுபவனைப் படைப்பாளி என்று சொல்ல முடியாது. அந்த வகையில் பசுந்தீவு கோவிந்தன் ஒரு படைப்பாளி தான் என்பதை நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன்.

பிரயாணக் கதை வடிவத்தைத் தேர்ந்தெடுத்த பசுந்தீவுக் கோவிந்தன் அந்தப் பிரயாணத்தைச் சம்பாசனை வடிவில் எவ்வளவு அழகாக இழுத்துச் செல்கிறார்! சம்பாசனையின் மூலம் நிகழ்வுகளையும் காட்சிகளையும் படம் பிடித்துக் காட்டுவதுடன் அதிற் பங்குபற்றுப வர்களுடைய உணர்வுகளை எவ்வளவு யதார்த்தமாக வெளிப்படுத்து கிறார்! என்பதைப் பார்க்கும்போது, இவர் மனித வாழ்க்கையோடு எவ்வளவு தூரம் தன்னைப் பின்னிப்பிணைத்து வைத்துள்ளார் என்பது தெளிவாகப் புலப்படுகின்றது. இப்படிப்பட்டவர்களினாற்தான் சமூகத் துக்குப் பிரயோசனமான படைப்புக்களை உருவாக்க முடியும். எனவே இந்நூல் மட்டுமல்ல இவருடைய எல்லாப் படைப்புக்களுமே சமூகத்திற் குப் பிரயோசனப்படக்கூடிய படைப்புக்களாய் இருக்கும் என்பதிற் சந்தேகத்திற்கு இடமில்லை.

எழுத்தாளர்கள் தாம் சொல்லப் போகும் விடயத்தைச் சிறப்பாக எழுதினால் மட்டும் வாசகர்களைக் கவர்ந்துவிட முடியாது. கதையை வாசிக்கத் தொடங்கும் வாசகர்களை இறுதிவரை இழுத்துச் செல்லக் கூடிய வல்லமையும் இடையில் வாசகர்கள் சோர்வடைந்து போகாது பார்த்துக் கொள்ளக் கூடிய விறுவிறுப்பும் கதையில் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட எழுத்தாளன்தான் எழுத்துத் துறையில் வெற்றிவாகை சூடுகிறான். கதையில் விறுவிறுப்பும், நகைச்சுவையும், கிளுகிளுப்பும் சீரான ஓட்டமும் இருக்க வேண்டும். ஒரு வாசகன் வாசித்துக் கொண்டி ருக்கும் பொழுது தன்னுக்குள் சிரிக்க வேண்டும். தன்னுக்குள் கவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லைப்பட வேண்டும், தனக்குள் ஆச்சரியப்பட வேண்டும், தனக்குள் இரக்கப்பட வேண்டும், தனக்குள் சிந்திக்க வேண்டும். இவ்வாறு பல்வேறு உணர்வுகளையும் அனுபவித்து வாசிக்கும்பொழுது வாசகன் இறுதிவரை சோர்வடையாது வாசிப்பான். பிரயாணக் கதையொன்றில் எல்லாவகையான உணர்வுகளையும் எதிர்பார்க்க முடியாவிட்டாலும் இவருடைய இக்கதையில் விறுவிறுப்பு, நகைச்சுவை, கிளுகிளுப்பு, சீரான ஓட்டம் என்பன நிறைந்து காணப்படுகின்றன என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை. அத்துடன் பல்வேறு கட்டங்களில் சிந்தனைக்கு வாய்ப்பளிப்பதாயும் பல்வேறு உணர்வுகளை அனுபவிக்கச் செய்யக் கூடியதாயும் கதை அமைந்துள்ளது என்பது எனது உளப் பூர்வமான முடிவு. எனவே இந்தப் பிரயாணக் கதை விறுவிறுப்பும் காசியமும், சீரான ஓட்டமும் நிறைந்த கதை என்பதை வாசகர்களாகிய நீங்கள் வாசிக்கும் பொழுது நிச்சயம் ஏற்றுக் கொள்ளுவீர்கள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

இக்கதையிலுள்ள மிகச் சிறப்பான ஓர் அம்சம், இதை வாசிப்பவர்களை ஒருபுறம் நெடுந்தீவிற்குப் போகத் தூண்டும், போக இயலாதவர்களுக்கு மறுபுறம் நேரிற் போய்ப் பார்த்தது போன்ற ஓர் உணர்வையும் திருப்தியையும் அளிக்கும். அப்படியான ஒரு வல்லமை இக் கதைக்கு உண்டு என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்க முடியாது. இதனால் ஆசிரியர் எதிர்பார்ப்பது போன்று, இக்கதையை வாசிக்கும் அனைவரும் நெடுந்தீவைப் பற்றிப் பூரணமாகத் தெரிந்து கொள்வார்கள் என்பது திண்ணம்.

இதில் இரண்டு புராணக் கதைகள் மூலிகைத் தீவுடன் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. அவை நம்பத் தகுந்தவையா? அல்லது நம்பத் தகுதியற்றவையா? என்பது ஒருபுறமிருக்க, அவை தொடர்புபடுத்தப் பட்டுள்ள விதம் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதே. அவை வாசகர்களைச் சிந்திக்க வைப்பதற்கும் மகிழ்ச்சியடையச் செய்வதற்கும் உதவுகின்றன என்றால் மறுப்பதற்கில்லை. மற்றவை அனைத்தும் உண்மையானவை என்பதும் உண்மைக்குப் புறம்பாக எதுவும் சொல்லப்படவில்லை என்பதும் வெள்ளிடைமலை.

நெடுந்தீவைச் சேராத ஒருவர் இந்நூலுக்கு அணிந்துரை எழுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற ஆசிரியரின் எதிர்பார்க்கைக்கேற்ப, இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதனால் நடுநிலையில் நின்று எனது கருத்துக்களைச் சொல்ல வேண்டியது எனது கடமையென நினைக்கிறேன். இந்நூலைப் படிக்கும் எவரும் ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. இந்நூலினுடைய ஒவ்வொரு அம் சத்திலும் ஆசிரியருடைய சிந்தனா சக்தி வெளிப்படுத்தப்பட்டிருப் பது உள்ளங்கை நெல்லிக்கனி. இந்த வகையில் இவர் 'சிந்தனைச் செம்மல்' என்ற கௌரவப் பட்டத்தைப் பெற்றிருப்பது பொருத்தமென்றே சொல்லவேண்டும்.

எதிர்காலத்தில் தமது ஊரைப் பற்றி எழுத விரும்புபவர்கள் இவருடைய பிரயாணக் கதைப் பாணியைப் பின்பற்றலாம் என்பது எனது அபிப்பிராயம். அந்த வகையிற் பார்க்கும்போது இவருடைய இந்நூல் எதிர்காலத்தில் பல எழுத்தாளர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாக அமையும் என்பதிற் சந்தேகம் இல்லை. கதை முழுவதும் பேச்சு வழக்கில் எழுதப்பட்டிருப்பதனால் நெடுந்தீவு மக்களுடைய பேச்சு வழக்கை நேரடியாகக் கேட்டு மகிழக்கூடிய ஒரு வாய்ப்பு இதைப் படிக்கும் அனைவருக்கும் கிட்டும். அத்தோடு நெடுந்தீவைப் பற்றித் தப்பான அபிப்பிராயங்களை, கருத்துக்களை, செய்திகளைக் கொண் டிருப்பவர்கள் இந்நூலைப் படிப்பதன் மூலம் நிச்சயமாக அவற்றிலிருந்து விடுபட்டு உண்மையைத் தெரிந்துகொள்ள முடியும். உண்மைக்குப் புறம்பான செய்திகளை உள்வாங்கிக் கொண்டு தனது ஊரைப் பற்றி மற்றையோர் தப்பான அபிப்பிராயம் கொண்டிருப்பது நெடுந்தீவு மக்களைப் பொறுத்தவரையில் ஆரோக்கியமான ஒன்றல்ல எனும் ஆசிரியரின் கவலை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றுதான்.

இந்நூலை மக்கள் நிச்சயமாக வாங்கிப் படிப்பார்கள். அதன் மூலம் ஆசிரியரின் கவலை தீரும், எதிர்பார்க்கை நிறைவேறும் என்ப தில் எனக்கு நிறையவே நம்பிக்கை உண்டு. காரணம் இது அந்தள விற்கு ஒரு தரமான படைப்பு. வாசகர்களாகிய நீங்கள் எல்லோரும் கட்டாயம் வாங்கிப் படிக்க வேண்டிய நூல் இது என்பதை ஆத்ம சுத்தியோடு சொல்லி வைக்க விரும்புகிறேன். நெடுந்தீவில் புதைந்து கிடக்கும் முத்துக்களையெல்லாம் தேடி எடுத்து, முத்துமணிகளாகச் சேர்த்து, அவற்றை மாலையாகக் கோர்த்து "ஒரு முத்து மணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையை" ஆக்கியுள்ளார் ஆசிரியர் என்றால் மிகையாகாது. அந்த மாலைக்கு "கூதிர் காலம்" என்ற அழகான ஒரு தலைப்பையும் வழங்கியுள்ளார். இந்தக் கூதிர் காலத்தை வாசகர்களாகிய நீங்கள் எல்லோரும் வாங்கி வாசிக்க வேண்டும். அதன் மூலம் உங்களுடைய பேராதரவைப் பசுந்தீவு கோவிந்தனுக்கு வழங்க வேண்டும்.

இப்பிரயாணக் கதை பசுந்தீவு கோவிந்தனை எழுத்துத்துறையில் மேலும் ஒருபடி மேலே தூக்கி வைக்க நிச்சயம் உதவும் என்பதில் இரண்டாம் பேச்சுக்கே இடமில்லை. இத்துறையில் அவர் மேன் மேலும் வளர்ந்து சமூகத்திற்குப் பயன்தரவல்ல மேலும் பல படைப்புக் களைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, பசுந்தீவு கோவிந் தன் பல சிறப்புக்களையும் பாராட்டுக்களையும் பெற்று மேன்மேலும் பேருடனும், புகழுடனும் வளர வேண்டுமென வாழ்த்தி எனது அணிந்து ரையை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்!

அன்புடன்

**க.சண்முகநாதன்**

(ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதாசிரியரின் உரை

இந்தப் பிரயாணக் கதை நான் பிறந்து வளர்ந்த நெடுந்தீவையும் அதைச் சூழ்ந்துள்ள சமுத்திரத்தையும் பற்றியது. இதை எழுதிய தற்கான முக்கிய காரணம் நெடுந்தீவைப் பற்றி இலங்கைத் தீவிலுள்ள எல்லா மக்களும் அறிந்துகொள்ள வேண்டுமென்பதே ஆகும். அத்துடன் நெடுந்தீவிற் பிறந்து வளராத நெடுந்தீவைச் சேர்ந்த பிற்சந்ததியினரும் தமது தாய் ஊராம் நெடுந்தீவைப் பற்றிக் கொஞ்சமாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்பதிலும் அக்கறை கொண்டுள்ளேன். வெளிநாடு களிலும், வன்னிப் பிரதேசங்களிலும் வாழும் நெடுந்தீவு மக்களுக்கும் பிற ஊரவர்களுக்கும் இடையே வளர்ந்து வரும் திருமணப் பந்தங் களால் புதிய உறவினர் உருவாகி வருகின்றனர். அவர்களும் நெடுந் தீவைப் பற்றி அறிந்து கொள்ளவது அவ்வுறவின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவும் என்பது எனது எதிர்ப்பார்க்கை. இன்று உலகம் முழுவதும் தமிழர்கள் பரந்திருப்பதனால் அவர்களும் நெடுந்தீவைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்பதே எனது பேரவா.

நெடுந்தீவைப் பற்றி மற்றையவர்கள் ஏன் அறிந்துகொள்ள வேண்டும்? அப்படி என்ன நெடுந்தீவில் விசேடம் இருக்கின்றது? என்று நீங்கள் கேட்கலாம். உங்களுடைய கேள்வி வாஸ்தவமாயிருக்கலாம். நான் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்தாலும், எனது வாழ்நாளில் பெரும் பகுதியை நெடுந்தீவிற்கு வெளியே கழித்தனான் என்ற வகையில், மற்றையவர்கள் நெடுந்தீவையும் அம்மக்களையும் பற்றி என்ன அறிந்துள்ளார்கள், என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்பதை நான் நன்கு அறிந்து வைத்துள்ளேன்.

யாழ்ப்பாணத் தமிழனுக்குள்ள ஒரு பொதுவான குணம் மற்றை யவர்களைத் தாழ்த்திக் கதைப்பதும் அதில் இன்பம் காணுவதுமாகும். இதனால் அவர்கள் மற்றையவர்களைப் பற்றிச் சரியாக அறிந்து கொள்வதற்குக்கூட முயற்சிப்பதில்லை. அந்த நிலையிலிருந்துகொண்டு எடுத்த எடுப்பிலேயே மற்றையவர்களைத் தாழ்திக் கதைக்க முற்படு கின்றார்கள். அதற்கு ஏற்றவகையில் சிந்தனைகளையும் கட்டுக்கதை களையும் உருவாக்கிக் கொள்கின்றார்கள். உதாரணத்திற்கு நான் பெற்ற ஓர் அனுபவத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1966ம் ஆண்டு கொழும்பில் ஒரு படித்த தமிழனுடன் நான் கதைத்துக் கொண்டிருந்த பொழுது, "நெடுந்தீவில் வேடர்கள் இருக்கின்றார்களா?" என்று அவர் கேட்டார். அவரை நான் பாராட்டுகிறேன். காரணம் அவர் நேரடியாகக் கேட்டபடியால் அவருக்கு உண்மையைப் புரியவைக்க என்னால் முடிந்தது. இவ்வாறான சிந்தனைகளோடு எத்தனைபேர் பேசாமலிருக்கின்றார்கள் என்பது இறைவனுக்குத்தான் வெளிச்சம். இன்னொரு தப்பான அபிப்பிராயம்: நெடுந்தீவு மக்கள் தண்ணீருக்குப் பதிலாக கள்ளைத் தான் குடிக்கிறார்கள் என்பது, இவையெல்லாம் உண்மைக்குப் புறம்பான, தப்பான சிந்தனைகளையும், அபிப்பிராயங்களையும் தம்முள் வளர்த்து வைத்துள்ளார்கள் என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகும்.

இந்நிலையில் நெடுந்தீவு மண்ணினதும் மக்களினதும் உண்மைத் தன்மையை மற்றையவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று உருவாகிய ஆதங்கத்தின் வெளிப்பாடே இக்கதையாகும் (இந்நூலாகும்). இந்நூலில் உண்மைக்குப் புறம்பாக, உண்மைக்கு மேலதிகமாக நான் எதையும் எழுதவில்லை என்பதை ஆத்மசுத்தியோடு சொல்லிவைக்க விரும்புகிறேன்.

நெடுந்தீவைப் பற்றி வெறுமனே கதை சொன்னால் அதை யாரும் வாசிக்க முற்படமாட்டார்கள் என்பதை நான் நன்கு அறிந்து வைத்திருக்கின்றபடியால், பிரயாணக்கதை வடிவத்தைத் தேர்ந்தெடுத்தேன். நகைச்சுவையோடு சேர்ந்த பேச்சு வழக்கில், சம்பாசனை வடிவில் இதை எழுதியிருப்பதன் மூலம், வாசிக்கத் தொடங்குபவர்களைத் தொடர்ந்து இழுத்துச் செல்ல முடியும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அப்பொழுது நெடுந்தீவையும் நெடுந்தீவுக் கடலையும், நெடுந்தீவு மக்களையும் பற்றிய எல்லா விபரங்களையும் அறியக்கூடிய வாய்ப்பு வாசகர்கட்குக் கிட்டும். பிற ஊரவர்கள் மட்டுமல்ல, நெடுந்தீவைச் சேர்ந்த தற்போதைய இளஞ்சந்ததியினர் வன்னிப் பிரதேசங்களிலும் வேறு ஊர்களிலும் வெளிநாடுகளிலும் பிறந்து வளர்ந்திருப்பதனால், அவர்களும் நெடுந்தீவைப் பற்றிச் சரியாக அறியாதிருக்கின்றார்கள். இந்நூலைப் படிப்பதன் மூலம் எல்லோரும் நெடுந்தீவைப் பற்றிச் சரியாக அறிந்துகொள்ள முடியும் என்பது எனது நம்பிக்கையாகும். ஒரு மனிதன் தனது சொந்த ஊரைப் பற்றிச் சரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாகத் தெரிந்துகொள்ளாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம். இந்நூலைப் படிப்பதன் மூலம் அக்குறையைப் போக்கிக்கொள்ள முடியும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

நெடுந்தீவு என்ற தலைப்பில் இந்நூலை வெளியிட்டால், பலர் இதை வாங்கிப் படிக்க முயலாது போகலாம் என்று நான் கருதிய படியால், கூதிர்காலம் என்ற தலைப்புடன் இந்நூலை ஆக்கியுள்ளேன். கூதிர்காலம் என்ற தலைப்பை இந்நூல் கொண்டிருக்கின்றபோதும், பின்பனிக்காலம் என்னும் இன்னொரு பகுதியையும் இந்நூல் தன்னுள் அடக்கியுள்ளது. இந்த இரண்டு பருவ காலங்களும் நெடுந்தீவின் சிறப்புக்களையும், உண்மைத் தன்மையையும் வெளிப்படுத்தப் போதுவானவையாய் இருப்பதனால், இவை இரண்டையும் தேர்ந்தெடுத் துள்ளேன். கதையை இயக்கிச் செல்லுகின்ற அருள், கோவிந், பசுபதி, பட்டு, பொன்னி, நடுவிலார், மருது, மணி, பொன்னன் போன்ற பல பெயர்கள் அங்குள்ள எவரையும் குறிப்பிடவில்லை என்பதையும் கதை எழுதுவதற்காக எழுந்தமானத்தில் கையாளப்பட்டுள்ளன என்பதையும் சொல்லி வைக்க விரும்புகின்றேன். கதை முழுவதும் பேச்சு வழக்கில் சம்பாசனைப் பாணியில் எழுதப்பட்டிருப்பதனால் அந்தப் பாணியிலேயே வாசிக்க வேண்டும். அப்பொழுது மேற்கோட் குறி, கேள்விக்குறி, ஆச்சரியக் குறி, கொம்மா போன்ற குறிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வாசிக்கவும். அப்படி வாசிப்பதன் மூலந்தான் உணர்வுகளைப் புரிந்து கதையைப் பூரணமாய் இரசிக்க முடியும்.

நடைமுறை யாதார்த்தத்திற்கேற்ப ஆங்கிலச் சொற்களும் வடமொழிச் சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை வாசிக்கும் பொழுது நீங்கள் புரிந்துகொள்ளுவீர்கள். வாசிக்கும்பொழுது முதலில் குறைகளைக் காண்பதற்கு முயற்சிக்க வேண்டாம். நிறைகளை ஏந்தி வாசிக்கவும். அப்புறம் நிறையும் குறையும் சேர்ந்த உங்களுடைய விமர்சனத்தைக் கொடுப்பது சாலச்சிறந்ததாகும். வாசகர்களுடைய ஆரோக்கியமான விமர்சனங்கள்தான் என்னை சிறந்த எழுத்தாளனாக ஆக்குவதற்கு உதவும் என்பதை நான் ஒருபோதும் மறப்பதற்கில்லை.

எனது அறிவிற்கும் ஆற்றலுக்கும் அனுபவத்திற்கும் ஏற்பவும், மற்றையவர்களிடம் கேட்டறிந்தனவற்றைக் கொண்டும் இப்பிரயாணக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை எழுதப்பட்டுள்ளது. மேலும் இதிற் சேர்க்கப்பட வேண்டிய நல்ல விடயங்கள் இருப்பின் எனக்கு அறியத் தரவும். அவற்றை மறுபதிப்பில் உள்ளடக்க முடியும் என்பதைப் பணிவுடன் கூறிவைக்க விரும்புகிறேன்.

இந்நூலில் உள்ள இரண்டு பகுதிகளில் ஒன்று கூதிர்காலம், மற்றையது பின்பனிக்காலம். கூதிர்காலம் என்பது ஐப்பசி, கார்த்திகை மாதங்களை உள்ளடக்கியது. பின்பனிக்காலம் என்பது மாசி, பங்குனி மாதங்களை உள்ளடக்கியது. மேற்கூறப்பட்ட மாதங்களில் நெடுந்தீவு எப்படி இருக்கும் என்பதை மையமாக வைத்தே கதை எழுதப்பட் டுள்ளது.

1965ம் ஆண்டுக்கு முன் நிகழ்ந்தவற்றை அடிப்படையாய் வைத்தே இந்நூல் எழுதப்பட்டிருப்பதால், இந்நூலை வாசிக்கும் பலருக்குப் பல விடயங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பது போற் தோன்றும். அவ்வாறு தோணும் பட்சத்தில் 1965ம் ஆண்டை ஞாபகப் படுத்திக் கொள்ளும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்குப் பிற்பட்ட எந்தவொரு நிகழ்வும் இக்கதையில் உள்ளடக்கப் வில்லை. இது ஒரு வரலாற்று நூலல்ல, இது பிரயாணக் கதை. இருந்தபோதும் நெடுந்தீவுக்குச் சிறப்பை அளிக்கக் கூடிய பல விடயங்களை உள்ளடக்கியிருக்கிறேன்.

இந்தப் பிரயாணக் கதை கனடா முரசொலிப் பத்திரிகையில் வெளிவந்தபொழுது, இதை வாசித்த பல வாசகர்கள் இதைப் புத்தக வடிவில் வெளியிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோள்கள் எனக்குப் பெரிய ஊக்கத்தைக் கொடுத்தன என்ற வகையில் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு, இக்கதையைப் பத்திரிகையில் பிரசுரித்ததின் மூலம் என்னை யும் எனது எழுத்தாற்றலையும் வாசகர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பேருதவி புரிந்த கனடா முரசொலிப் பத்திரிகையின் உரிமை யாளர் பல் வைத்திய நிபுணர் டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களுக்கு எனது உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இக்கதையை உயிரோட்டம் உள்ளதாக ஆக்குவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அணிந்துரை | i - v |
| 2. | கதாசிரியரின் உரை | vi - x |
| 3. | கூதிர்காலம் | 1- 95 |
| 4. | பின்பனிக் காலம் | 97 - 235 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூதிர் காலம்
## (1965)

### அங்கம் - 01

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தி ஐந்தாம் ஆண்டு கார்த்திகை மாதம் திகதியென்னவென்று தெரியவில்லை, கோவிந் நெடுந்தீவு மாவலித்துறையில் நின்றுகொண்டிருக்கிறார். நேரம் ஏறக்குறைய முற்பகல் பதினொரு மணியிருக்கும். மாவலித்துறையின் பாலத்தின் ஓரமாக நின்றுகொண்டிருந்த கோவிந்திற்கு அங்கு தென்பட்ட இயற்கையின் கோலங்கள் மனத்திற்கு அற்புதத்தையும் உள்ளத்திற்கு கலக்கத்துடன் கூடிய மகிழ்ச்சியையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தன.

கார்த்திகை மாதம் என்பது வடதமிழீழத்தைப் பொறுத்தவரையிற் கூதிர்காலம். நெடுந்தீவைப் பொறுத்தவரையில் வானம் முகிற் கூட் டங்களால் நிறைந்திருக்கும். கருமுகிற் கூட்டங்கள் கீழிறங்கி நெடுந்தீவு மண்ணை ஆசீர்வதிப்பதுபோன்று மழையைப் பொழிந்து தள்ளுவாள். அகமகிழ்ந்த பூமிதேவி கைமாறாக அங்கு காணப்படும் நீண்டு பரந்து கிடக்கும் புற்றரைகளை பச்சைப்பசேலென்று காட்சி கொடுக்கவும் வானளாவிய மரங்களை பசுங்கொழுந்துவிட்டு வளரவும் வாடிக்கிடந்த செடி கொடிகளைப் புத்துயிர் பெற்றுப் பசுமையோடு தழைக்கவும் அருள்பாலிப்பாள். இதன் பெறுபேறாக நெடுந்தீவு ஒரு பசுந்தீவாகக் காட்சி கொடுக்கும். எங்கும் ஒரே பசுமை, பசுமை நிறைந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியென்றால் யாரும் மறுக்க முடியாது.

கோவிந் மாவலித்துறையில் நின்றுகொண்டிருந்தபொழுது வானம் மப்பும் மந்தாரமும் நிறைந்து காணப்பட்டது. வாடைக்காற்று வழமை யைவிட மிகவும் உக்கிரமாக வீசிக்கொண்டிருந்தது, அதனாற் குமுறிக் கொந்தளித்து வந்துகொண்டிருந்த அலைகள் கரைமீது ஒன்றின்பின் ஒன்றாக இடைவிடாது மோதிக்கொண்டிருந்தன. சில அலைகள் ஆத்துக்கட்டைத் தூண்களை மேவிப்பாயும் அளவிற்கு மேலெழுந்து வந்து, அசாதாரண காலநிலையை வெளிப்படுத்துமாப் போல் அடித்துக் கொண்டிருந்தன. சினம் கொண்டு எழுந்து வந்தாற்போன்ற நுரை கக்கிய பேரலைகளில் இருந்து வந்துகொண்டிருந்த பேரிரைச்சலுடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிர காற்றின் ஓசையும் சேர்ந்து மாவலித்துறையையே ஒரு அசாதாரண நிலைக்குட் தள்ளியிருந்தது அன்றைய வானிலை.

வழமையாகச் சிலபல ஓடங்களைப் பார்க்க முடிந்த அந்தக் கடலில் இன்று கண்ணுக்கெட்டிய நயினாதீவு புங்குடுதீவுக் கரைகள் வரை கடல் வெறிச்சோடிக் கிடந்தது.

“இந்தச் சூழ்நிலையில் யார் போவான் கடலுக்கு!”

கோவிந்தின் வாய் முணுமுணுத்துக் கொண்டது.

இந்த வேளையிலும் கோவிந்தின் கண்களைக் கவரும் ஒரு காட்சி அங்குமிங்குமாய்ப் பறந்துகொண்டிருந்த மீன்கொத்திப் பறவை கள். அவை கோவிந்தைப் பொறுத்த மட்டில் கண்களைப் பறிக்கும் காட்சியாகத் தென்பட்டது என்றால் மிகையாகாது. அடிக்கும் காற்றிற் கும் கொந்தளிக்கும் கடலிற்கும் பயந்து அவை இரைதேடாமலிருக்க முடியாதே! என்பதை நிரூபிப்பதுபோன்று, மீன் களைக் கண்டவுடன், அவை தங்களுடைய இறக்கைகளை மடித்துக் கொண்டு ஜெட் விமானங்கள் போன்று உருவிச் சென்று நீரில் மூழ்கி மீனைப் பிடித்துக் கொண்டு பின் மெது மெதுவாக மேல் எழுந்து வருவதையும், அப்போது சில மீன்கள் திமிறிக் கொண்டு அவற்றின் சொண்டிலிருந்து விடுபட்டு விழுவதையும், அந்தக் கணப்பொழுதில் அவை நீரினுள் விழுவதற்குள் மறுபடியும் உருவிச் சென்று அவற்றைப் பிடித்துக்கொள்வதையும் பார்த்தபொழுது கோவிந்திற்கு இயற்கையின் கோலங்களை எண்ணி வியப்படையாமலிருக்க முடியவில்லை.

அடித்துக் கொண்டிருந்த வாடைக்காற்றையும் அதிலிருந்து வந்த சில் என்ற குளிரையும் கூடப் பறுவாய் பண்ணாது தன்னையே மறந்து இந்தக் காட்சியை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்ற கோவிந்தின் தோழின்மீது யாரோ ஒருவர் தட்டினார். திடீரென்று திரும்பிய கோவிந்,

“டேய் அருளப்பு, நீயா? நீ எங்கடா இந்த நேரத்தில் இங்க?”

என்றதும்,

“ஏன்? நீ வரலாம் இங்கு இந்த நேரத்தில் நான் வரப்படாதோ?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1) மாவலித் துறைமுகம், நெடுந்தீவு



(2) மாவலித் துறைமுகம், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(3) மாவலித் துறைமுகம், நெடுந்தீவு.



(4) மகாவலித்துறை நுழைவாயில், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான் அருளப்பு. அவன் கேட்பதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கிறது என்பதை உணர்ந்து கொண்ட கோவிந் புன்னகைத்துக் கொண்டு,

"இல்லை..... இந்த அடிக்கிற காற்றிலும் விறைக்கிற குளிரிலும்....",

என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,

"ஏன் வந்திருக்கிறாய்? " எனக் கேட்க வாறாய், அப்படித்தானே?"

என்று வசனத்தை முடித்த அருளப்பு,

"நான் வந்த விடயம் ஒருபுறமிருக்கட்டும், நீ என்ன! இந்த வேளையில் உன்னையே மறந்து பார்த்துக் கொண்டு நிற்கிறாய் எதையோ.....?"

என்று கேட்டு முடிப்பதற்குள்.

"அதுவா! அங்க பார் மச்சான் அந்த மீன் கொத்திப் பறவைகளை, குமுறும் காற்றும் கொந்தளிக்கும் கடலென்றும் பாராமல் அவைகள் என்ன மாதிரி இரை தேடுகின்றனவென்று! மீனைப் பிடித்துக்கொண்டு மேலெழும்பொழுது சில மீன்கள் திமிறிக்கொண்டு சொண்டிலிருந்து நழுவி விழுகின்றன. அந்தக் கணப்பொழுதில் அவை நீரினுள் விழுமுன் மீன் கொத்திகள் உருவிச் சென்று அவற்றை மறுபடியும் பிடிக்கின்ற காட்சி வியப்பாக இல்லையா?"

என்று கேட்டுவிட்டு கேள்விக்குறி கலந்த பார்வை பார்த்தான் கோவிந். அவனுடைய பார்வையிலிருந்து அந்தக் காட்சியை எந்தள விற்கு இரசித்துப் பார்த்திருக்கிறான் கோவிந் என்பதைப் புரிந்துகொண்ட அருளப்பு,

"நீ சொல்வது உண்மைதான் கோவிந், நானும் பல தடவைகள் பார்த்து இந்தக் காட்சியை இரசித்திருக்கிறேன். இயற்கையின் படைப்புக்களில் எத்தனை அதிசயங்கள். அவற்றினுள் ஒன்றுதான் இது. அதுசரி, நீ என்ன இந்த வேளையில் இங்கு?"

என்று கேட்டு கதையை முடிப்பதற்குள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது மச்சான், நான் படிக்கிற பள்ளிக்கூடமிருக்கே, அதுதான் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, அங்கு என்னோடு படிக்கும் ஒரு மாணவன், அதாவது எனது நண்பன், நம்மளுடைய ஊரைப் பார்க்க வேணுமென்று இன்று வரு கிறான். அவன் வசாவிளானைச் சேர்ந்தவன். அவனைக் கூட்டிச் செல்லுவதற்காகத்தான் வந்தனான். அவனுடைய கஸரகாலமோ என்னுடைய கஸ்ரகாலமோ தெரியவில்லை, வானிலை ரொம்ப மோசமாயிருக்கு. இண்டைக்கு லோஞ் வருமோ என்பதுகூடச் சந்தேகமா யிருக்கு. இப்படி நடக்கு மென்று தெரிந்திருந்தால் வேறொருநாளில் வரும்படி சொல்லி யிருக்கலாம். யாருக்கு மச்சான் தெரியும் இப்படி வானிலை மாறுபடுமென்று. கடலும் காற்றும் பேசிப் பறஞ்சு செய்வது போன்று இந்தப் போடல் போடுதுகள்....!"

என்று சொல்லிக் கொண்டு போக குறுக்கிட்ட அருளப்பு,

"இராஜேஸ்வரி ஆத்துக்கட்டையை நெருங்கிவிட்டாள். துறையிற்குள் நுழையப்போகிறாள் என்றதும்," லோஞ் இன்று வருமோ வென்று ஏங்கிக் கொண்டிருந்த கோவிந்திற்கு ஆச்சரியம். எனினும், ஆனந்தம் பொங்கி வழிகின்றது. வைத்த கண் வாங்காது இராஜேஸ்வரி லோஞ்சையே பார்க்கிறான்.

"சீதேவியென்ற இராஜேஸ்வரி இருக்கும்வரை நமக்கென்ன குறைச்சல்! இந்தக் கடலென்ன காற்றென்ன! பூகம்பந்தான் வந்தாலென்ன! இராஜேஸ்வரி எமது மக்களைக் கொண்டுவந்து சேர்ப்பாள், பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்ப்பாள்," தனக்குள்ளே பேசிக்கொண்டான். ஆத்துக் கட்டைத் தூண்களைத் தாண்டித் துறையிற்குள் நுழைந்து விட்டாள் இராஜேஸ்வரி. அப்பொழுது கோவிந்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லையெனலாம்.

நுழைந்ததும் அடித்த காற்றிற்கும் குமுறிக் கொந்தளித்த கடலுக்கும் ஈடுகொடுக்குமுகமாய் கர்ச்சித்துக் கொண்டு இயங்கிய இரட்டை இயந்திரங்கள் சாந்தமடைந்தன. மெதுவான இசைவான சத்தத்துடன் தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருந்தன. மெதுவாக ஊர்ந்து வருகிறாள் இராஜேஸ்வரி. உள்ளிருந்த மக்களெல்லாம் மகிழ்ச்சி பொங்க மேற்தட்டிற்கு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவிந்தின் கண்கள் மேற்தட்டின்மேல் விழுகின்றன. தனது நண்பன் வருகின்றானா என்பதை அறியும் ஆவலுடன் உற்றுப் பார்க்கிறான், நன்கு உற்றுப் பார்க்கிறான், மேலும் உற்றுப் பார்க்கிறான். ஓ! பார்த்துவிட்டான். நண்பனைப் பார்த்துவிட்டான். அப்பொழுது அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை அவனாலேயே நம்பமுடியவில்லை. கைகள் உயர்ந்தன, தலைக்குமேல் உயர்ந்தன, கைகளை அசைத்த படியே,

"அருள்!"

என்று அழைக்கிறான். அவனுடைய அந்த அழைப்பு அருளுக்குக் கேட்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அவனும் கோவிந்தைக் கண்டு விட்டான். பதிலுக்கு கைகளை அசைக்கிறான், அசைக்கிறான், தொடர்ந்து அசைக்கிறான். அப்பொழுது அருளின் முகத்திற் தென்பட்ட ஆனந்தம் பிரயாணத்தின் நிறைவையும் நட்பின் மகிமையையும் வெளிப்படுத்துமாப் போலிருந்தது என்றால் மறுப்பதற்கில்லை. அருளின் முகமலர்ச்சியைப் பார்த்ததும் கோவிந்திற்கு வர்ணிக்க முடியாத, வார்த்தைகளாற் சொல்ல முடியாத மட்டற்ற மகிழ்ச்சி. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்! நட்பு என்பது இரு அன்பு உள்ளங்களின் சங்கமம். இதை இப்போது உணர முடிந்தது கோவிந்தால். அருளும் கூட உணர்ந்திருப்பான்.

துறையிற்குள் நுழைந்ததும் மெதுமெதுவாக ஊர்ந்து வந்த இராஜேஸ்வரி பாலத்தை நெருங்கிவிட்டாள். கயிறுகள் வீசப்படுகின்றன. பாலத்தில் நின்ற இருவர் அதைப் பாய்ந்து பிடித்துக் கட்டையிற் கொழுவுகின்றனர். லோஞ் ஊழியர் இருவர் கயிற்றை இழுத்தபடியே லோஞ்சைப் பாலத்துடன் அணைக்கின்றனர், அணைந்துவிட்டாள். எமது மக்களைத் தாங்கிவந்த தாய் இராஜேஸ்வரி பாலத்தை முத்த மிட்டாள். அடுத்த நிமிடம் சங்கிலி அகற்றப்பட பாதை திறக்கின்றது. முதலில் நின்ற இளைஞர்களும் யுவதிகளும் பாய்ந்து இறங்கு கின்றார்கள். நடுத்தர வயதினர் மெதுவாக இறங்குகின்றனர். முதியோ ரையும் இயலாதவர்களையும் பாலத்தில் நின்றவர்கள் கைகொடுத்து இறக்குகின்றனர். இளைஞர்களுடன் ஒருவனாகப் பாய்ந்து இறங்கிய அருளைக் கட்டித் தழுவுகிறான் கோவிந். இருவரும் கட்டித் தழுவித் தமது அன்பினதும் நட்பினதும் உச்ச உணர்வுகளைப் பரிமாறிக் கொள்கின்றனர் அப்புறம் ஆவலோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய்! அருள் எப்படியடா இருந்தது பிரயாணம்?"

கோவிந்தின் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன் திடீரென்று கடலைத் திரும்பிப் பார்த்தான் அருள். சில வினாடிகளின் பின் கோவிந்தைப் பார்த்து,

"வந்த பாதையைப் பார்த்தனான். எனது வாழ்க்கையிலே மறக்க முடியாத அனுபவத்தைக் கொடுத்த பாதையை எப்படித் திரும்பிப் பார்க்காமலிருக்க முடியும்! நான் கேள்விப் பட்டிருக்கிறேன் நெடுந்தீவு மக்கள் மனோதைரியசாலிக ளென்று, இப்பதான் புரியுது ஏனென்று. இந்தக் கடலிற் பிரயாணம் செய்து பழக்கப்பட்டால் மனோதைரியம் வராமல் வேறென்ன வரும்!"

என்றதும் அருளின் கதையின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட கோவிந்.

"என்ன மச்சான், நல்லாய்ப் பயந்திட்டாயா?"

எனக் கேட்டதுதான் தாமதம்.

"பயப்படவில்லை என்று சொல்ல முடியாது, இருந்த போதும் கரையை வந்து அடைந்த பிற்பாடு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சி அந்தப் பயத்தையும் ஈடுசெய்து மேலாகிவிட்டது. ஆனபடியால் இப்பொழுது சந்தோசமாய்த்தான் இருக்கிறேன்,"

என்றான் அருள். இதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த கோவிந் நண்பனுடைய அனுபவத்திற்கு வலுவூட்டுவது போன்று,

"அனுபவசாலிகள் சொல்லுவார்கள், ஒரு மனிதன் இடர்களையும், துயரங்களையும், ஆபத்துக்களையும் எதிர் கொண்டு ஒரு காரியத்தைச் செய்து முடிக்கும்பொழுது அதிலிருந்து கிடைக்கும் ஆனந்தம் பல மடங்கு அதிகமானதென்று. அதாவது எவரெஸ்ற் சிகரத்துக்குச் சென்று திரும்பியது போன்று"

என்று சொன்னதும், வாய் நிறையச் சிரித்துக்கொண்டு,

"சரியாய்ச் சொன்னாய் மச்சான்",

என்று கூறிய அருள் தொடர்ந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காலை ஒன்பது மணிக்கு ஊர்காவற்றுறைத் துறைமுகத்திலிருந்து லோஞ் புறப்பட்டது. ஏறிய சனங்களில் ஒரு பகுதியினர் உள்ளுக்குச் சென்றனர். மிகுதிப்பேர் மேற்தட்டில் இருந்தனர். இடங்களைப் பார்க்கலாம் என்பதற்காக நானும் மேற்தட்டில் இருந்து கொண்டேன். முதலில் லோஞ் மெதுவாகப் புறப்பட்டது. அப்பொழுது காரைநகர்த் துறை, நேவித்தளம், கடற்கோட்டை எல்லாவற்றையும் நன்கு பார்க்க முடிந்தது. நல்ல மகிழ்ச்சியாகவும் இருந்தது. கடற்கோட்டையைத் தாண்டியதும் இயந்திரங்களின் வேகம் முடுக்கிவிடப்பட்டது. இயந்திரங்களின் கர்ச்சிக்கும் சத்தம் காதுகளில் அதிர்வை ஏற்படுத்தியபொழுதும் சாதாரண ஆட்டத்தோடு பிரயாணம் இதமாயிருந்தது. அப்பொழுது எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, புங்குடுதீவு, லைடன் தீவின் மேற்குக் கரை எல்லாவற்றையும் நன்கு பார்த்து ரசித்தேன். எனக்குப் பக்கத்திலிருந்த ஒரு நபர் எல்லாவற்றையும் காட்டி எனக்குக் கொஞ்ச விளக்கமும் கொடுத்தார். ஏழாற்றுப் பிரிவையும் தெரியப்படுத்தினார்.

அப்புறம் நயினாதீவு முனையைலோஞ் தாண்டியது தான் தாமதம் லோஞ் சற்று ஆட்டங் காணத் தொடங்கியது. தொடர்ந்து ஆட்டம் அதிகரித்தது. அப்பொழுது அங்கிருந்த சிலர் 'மலையடி வரப்போகின்றது. காற்று உக்கிரமாய் வீசுவதனால் தண்ணீர் அடிக்கும். அதற்கு முன் உள்ளுக்குப் போய்விட வேண்டும்,' என்று பேசிக் கொண்டனர். அப்பொழுது அதன் தார்ப்பரியம் முழுவதாய் எனக்குப் புரியவில்லை. தொடர்ந்து லோஞ் உக்கிரமாய் ஆடத் தொடங்கியது. மலைபோன்று எழுந்து வந்துகொண்டிருந்த அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக லோஞ்சில் மோதிக் கொண்டிருந்தன. அடித்துக் கொண்டிருந்த காற்றிற்கும் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த கடலுக்கும் ஈடுகொடுக்கும் முகமாய் இயந்திரங்களின் வேகம் மேலும் முடுக்கிவிடப்பட்டது. லோஞ் தன்மீது மோதிய அலைகளைப் பிளந்து சென்று கொண்டிருந்தது. மலையடி வந்துவிட்டது. உள்ளுக்குப் போங்கள் என்று யாரோ சொல்லிக் கேட்டது. மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிலிருந்தவர்கள் எழுந்து உள்ளுக்குப் போகத் தொடங்கி னார்கள். அந்த வேளையில் மலைபோன்று எழுந்து வந்த அலையொன்று லோஞ்சில் மோதி தண்ணீரை அள்ளி மழைபோல் சொரிந்தது. அவசரமாய் உள்ளுக்குள் போய் விட்டோம். ஆனால் உடுப்பெல்லாம் நனைந்துவிட்டன.

அப்புறம் ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டு அதை இறுகப் பிடித்துக் கொண்டேன். ஆட்டம் மேலும் உக்கிரம் அடைந்தது. இரட்டை இயந்திரங்களினதும் கர்ச்சிக்கும் சத்தம் காதுகளை அதிரவைத்தன. லோஞ் அலையின் உச்சிக்கு எழுந்து பள்ளத்தில் குதிக்கும்போது ஏற்பட்ட அதிர்வு லோஞ் பிளந்து விடுமோ என்ற அச்சத்தைக்கூடக் கொடுத்தது. கிறீச்கிறீச் என்ற சத்தமும் வந்து கொண்டிருந்தது. லோஞ் அலையின் உச்சிக்குப்போய் பள்ளத்தில் பாயும் ஒவ்வொரு வேளையும் அடிவயிறு நெஞ்செல்லாம் கூசியது. கரிக்குட லைக் கையிற் பிடித்த பயம். தூக்கிப்போடும் ஒவ்வொரு தடவையும் நான் என்னுடைய இருக்கையை இறுகப்பற்றிக் கொண்டேன். ”

என்னுடைய நிலமையைப் பார்த்த ஒரு நபர்,

“தம்பி, பிரயாணத்திற்குப் புதிசா?”

என்று அனுதாபத்துடன் கேட்டார். நான் இருக்கையை இறுகப் பற்றிக் கொண்டே,

“ஆம்”,

என்றேன்.

“உங்களைப் பார்த்தவுடனேயே எனக்குப்புரிந்துவிட்டது நீங்கள் பிரயாணத்திற்குப் புதியவராய்த்தான் இருக்க வேண்டு மென்று,”

எனச் சொன்னவர் தொடர்ந்து

“தம்பி எந்த ஊர் என்று அறியலாமோ?”

என்று கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வசாவிளானைச் சேர்ந்தனான். நெடுந்தீவில் எனக்கொரு நண்பன் இருக்கிறான். நானும் அவனும் சுன்னா கம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் க.பொ.த. (உயர்தர) வகுப்பில் படிக்கிறோம். என்னுடைய விருப்பத்தின்பேரில் நெடுந்தீவைப் பார்ப்பதற்குப் போய்க் கொண்டிருக்கிறேன். எனக்காக எனது நண்பன் நெடுந்தீவு மாவலித்துறையிற் காத்து நிற்பான்...."

என்று கதையை முழுவதாய்ச் சொல்லி முடிப்பதற்குள் குறுகிட்ட அந்த நபர்,

"ஓ! அப்படியா விசயம், நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம், ஒன்றும் நடக்காது. பக்குவமாய்ப் போய்க் கரை சேருவோம். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. சிலவேளை களிற் பிரயாணம் இப்படித்தான் கொஞ்சம் மனதை உலுக்குவது போலிருக்கும். இதெல்லாம் எங்களுக்குப் பழக்கப்பட்ட விடயம். நீங்கள் புதிசானபடியாற் பயப்படுகின் றீர்கள். அதிற் தப்பொன்றுமில்லை. இருந்தபோதும் உங்களை மனத்தைரியசாலி என்று சொல்ல வேண்டும்,"

என்று சொன்னதும், நான் கேட்டேன்.

"ஏன் அப்படிச் சொல்லுகின்றீர்கள்?"

என்று, அதற்கு அவர் வாய் நிறையச் சிரித்துவிட்டு,

"உங்களைப் போன்ற பிரயாணத்திற்குப் புதிசானவர் கள் சிலர் வாய்விட்டுக் குளறுவார்கள். நீங்கள் அப்படிக் குளறவில்லையே! அப்படியானால் நீங்கள் மனோ தைரிய சாலிதானே!"

என்றதும், எனக்கு என்னைத் தெரியாமலேயே மனோதைரியம் பிறந்துவிட்டது. உசாராகிக் கொண்டேன். கதையைத் தொடர்ந்த அந்நபர்.

"இந்த இடம் மலையடி என்று சொல்லப்படுகின்றது. அதாவது கடலின் அடியில் மலைபோன்ற பாறைகள் அமைந்துள்ளன. அதனால் அதில்மோதிவரும் அலைகளும் நீரோட்டமும் சேர்ந்து கடலைக் கொந்தளிக்க வைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கிட்டத்தட்ட அரை மைல் நீளத்திற்குத்தான் அமைந் துள்ளது. இன்னும் சில நிமிடங்களில் இதை நாங்கள் தாண்டிவிடுவம். அப்புறம் இந்த உக்கிரமான போராட்டம் இருக்கமாட்டாது. ஆனால் மாவலித்துறையைச் சென்று அடையும் வரை சாதாரண ஆட்டம் இருக்கத்தான் செய்யும். காரணம் இது கூதிர்காலம். இக்காலத்தில் கூதிர்காலத் திற்கான உக்கிரமான வாடைக்காற்றுடன் மழைபொழிந்து தள்ளும். இந்த மாதத்தில் வானம் எப்பொழுதும் மப்பும் மந்தாரமுமாய்க் காணப்படும். வாடைக்காற்று உக்கிரமாய் வீசும். அதன் காரணமாய்த்தான் சமுத்திராதேவி கொந்தளித் துக் காணப்படுகிறாள். உங்களைப் போன்றவர்கள் நெடுந் தீவுப் பிரயாணத்திற்கு இந்தக் காலத்தை, அதாவது கூதிர் காலத்தை, தவிர்த்துக் கொள்வது உசிதம். உங்கள் நண்பர் இதைப்பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையா?"

என்று கேட்டுவிட்டு என்னுடைய முகத்தை உற்றுப் பார்த்தார். இதை நன்கு அவதானித்த நான் சில வினாடிகள் யோசித்துவிட்டு,

"நீங்கள் கூறுவது எனக்குப் புரிகின்றது. இருந்தபோதும் எனது நண்பன் அதைப்பற்றிப் பிரஸ்தாபிக்காமைக்குச் சில காரணங்கள் இருக்கலாம். அதற்கும்மேலால், இந்த மாதத்தில் வருவதற்கு நான்தான் விருப்பம் தெரிவித்தனான். எனது விருப்பத்திற்கு அவர் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அதற்கும் சில காரணங்கள் இருக்கலாம்,"

என்று சொல்லிக்கொண்டு போகக் குறிக்கிட்ட அந்நபர்,

"எனக்கு எல்லாம் புரிகின்றது தம்பி. நெடுந்தீவு பொது வாக ஒரு வரண்ட பூமி, அதாவது இலங்கையில் மழை வீழ்ச்சி குறைந்த பிரதேசங்களில் இத்தீவும் ஒன்று. ஆனால் இந்தக் கூதிர் காலமிருக்கே! இந்தக் காலப் பகுதியில் நெடுந்தீவு பச்சப்பசேலென்று காட்சி அளிக்கும். வேறு வார்த் தையிற் சொன்னால் இது பசுந்தீவாகக் காட்சியளிக்கும். எங்கும் நீர் நிறைந்து காணப்படும். இந்தக் காலப் பகுதியில் மக்களுடைய வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்கள் தென்படும். அதை உங்களுக்குக் காண்பிக்கும் முகமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுடைய நண்பன் உங்களுடைய இந்தக் காலப் பிரயாணத்திற்கு ஆட்சேபனை தெரிவிக்காமலிருந்திருக்கலாம். அதுவும் ஒருவகையிற் புத்திசாலித்தனமான விடயம்தான்,"

என்று கூறிவிட்டு, லோஞ்சியிலிருந்த சிறிய கண்ணாடியூடாகப் பார்த்தவர் திடீரென்று,

" தம்பி, நெடுந்தீவிற்கு வந்துவிட்டோம்,"

என்றார். பிறகென்ன, அப்புறம் இயந்திரங்களின் வேகம் திடீரென்று குறைக்கப்பட்டது.

"மிகுதியை நீ தானே நேரில் பார்த்திருப்பாய், மிகுதிக் கதையை நான் சொல்லித்தானா நீ தெரிந்துகொள்ள வேண்டும்!"

என்று சொல்லிக் கொண்டுபோக எல்லாவற்றையும் நன்கு புரிந்து கொண்ட கோவிந்,

"எனக்கு எல்லாம் புரியுது. நீ பாதுகாப்பாய் வந்து சேர்ந்துவிட்டாயே! அதுவே போதும்! வா நாமள் போவம்,"

என்று கூறிக்கொண்டு நண்பனின் பெட்டியைத் தூக்கினான். அப்பொழுது,

"தண்ணீர் விடாய்க்கிது மச்சான். அத்தோடு பசியும் தொடங்கிவிட்டது. இங்கு சாப்பாட்டுக் கடைகள் ஏதும் இருக்கே?"

என்று கேட்டான் அருள்.

"இருக்கே? என்றா கேட்டாய்?

என்ன நினைக்கிறாய் நெடுந்தீவைப் பற்றி? ஒன்றில்லை... இரண்டு ஹோட்டல்கள் உண்டு. ஒன்று பொன்னம்மா ஹோட்டல் மற்றையது அந்தோனி ஹோட்டல். வா அங்கு போய்ச் சாப்பிடலாம்," என்று கூறிக்கொண்டு பெட்டியுடன் முன் சென்றான் கோவிந். சில நிமிடங்கள் கழித்து புகைபிடித்த ஒரு தட்டிக்கடையின் முன் போடப் பட்டிருந்த ஒரு வாங்கிலில் இருந்துகொண்டு நண்பனைப் பார்த்து,

"இதில் இரு மச்சான்,"

என்று கேட்டுக் கொண்டான். அருகில் அமர்ந்துகொண்ட அருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடையினுள் நோட்டமிட்டான். அந்தத் தட்டிக் கடையின் முற்பகுதியில் ஒரு சிறிய கண்ணாடிப் பெட்டி, அதனுள் இரண்டு இறாத்தல் பாணும் நாலைந்து பணிசும் இருந்தன. அத்தோடு ஒரு தகரத்தட்டின் மீது நான்கு தகர மூக்குப்பேணிகளும் காணப்பட்டன. அப்பொழுது கடையிற்குள் யாரும் இருக்கவில்லை.

இவற்றை அவதானித்த அருள்,

"என்ன மச்சான் இரண்டு ஹோட்டல்கள் இருக்கென்று சொல்லிக் கொண்டு வந்தாய், இப்ப இதல வந்திருக்கிறாய்,"

என்று சொல்லிவிட்டு கேள்விக்குறியோடு பார்த்தான். அருளின் பார்வையிலிருந்து அவரின் எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட கோவிந் சிறிய சிரிப்புடன்,

"இதுதான் மச்சான் நான் சொன்ன பொன்னம்மா ஹோட்டல். அடுத்த அந்தோனி ஹோட்டல் அங்கார் இருக்கு,"

என்று பக்கத்திலிருந்த இன்னொரு தட்டிக் கடையைக் காட்டினான். இதைக்கேட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரித்த அருள் சில வினாடிகளின் பின் ஒருவாறு சிரிப்பை வலிந்து நிறுத்திக்கொண்டு,

"புரியுது புரியுது, எல்லாம் புரியுது மச்சான்,"

என்றதும், சேர்ந்து சிரித்துக்கொண்ட கோவிந்,

"பொன்னம்மா அக்கா,"

என்று குரல் கொடுத்தான். அதைத் தொடர்ந்து உள்ளுக்கு இருந்து வந்த நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு திடகாத்திரமான பெண்,

"என்ன தம்பி வேண்டும்?"

என்று கேட்டதும்,

"இரண்டு பணிசு தாங்கோ, அப்புறம் இரண்டு ரீ போடுங்கோ,"

என்றான். பொன்னம்மா அக்கா இரண்டு பணிசை எடுத்து நீட்டிக் கொண்டு,

"ரீ போடுவதற்கு பால் முடிந்துவிட்டது தம்பி, இரண்டு ப்ளேன்ரீ போடட்டே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டாள். வேறு வழியில்லை என்பதைப் புரிந்து கொண்ட கோவிந்,

"சரி அக்கா, இரண்டு பிளேன் ரீ போடுங்கோ,"

என்று கூறிவிட்டு ஒரு பணிசை அருளிடம் நீட்டினான்.

அதைப் பெற்றுக்கொண்ட அருள்,

"முதலிற் குடிக்கத் தண்ணீர் வேணும் மச்சான்,"

என்றான். உடனே கோவிந்,

"பொன்னம்மா அக்கா, பிளேன் ரீ போடுவதற்கு முன் குடிப்பதற்குத் தண்ணீர் தாங்கோ,"

என்றதும், அங்கிருந்த தகர மூக்குப் பேணி ஒன்றில் தண்ணீரைக் கொடுத்தாள் பொன்னம்மா அக்கா. தண்ணீரைப் பெற்றுக் கொண்ட அருள் தண்ணீரைக் குடித்துவிட்டுப் பணிசைச் சாப்பிட ஆரம்பித்தான். அருளுக்கிருந்த அப்போதைய பசிக்கு அந்த ஒரு பணிசு யானைப் பசிக்குச் சோளம் பொரி போட்டது போன்றிருந்தது. இதைப் புரிந்து கொண்ட கோவிந் இரண்டாவது பணிசையும் வாங்கி அருளிடம் கொடுத்தான். அதையும் சாப்பிட்டுவிட்டு பிளேன்ரீயைக் குடித்துமுடித்த அருள்,

"கிளம்புவமா?"

என்றான். பணத்தைக் கொடுத்துவிட்டு அருளின் பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான் கோவிந். இது கூதிர் காலமான படியால் மரங்கள் கொடி செடிகளெல்லாம் பச்சைப் பசேலென்று காட்சி அளித்தன. கோவிந்தினுடைய வீடு நெடுந்தீவு மேற்கு ஐந்தாம் வட்டாரம் வெட்டாக்காட்டில் இருக்கிறது. ஏறக்குறைய மூன்று மைல்கள் தூரம் நடந்து போகவேண்டும். இதெல்லாம் கோவிந்திற்கு தண்ணிபட்ட பாடம்போன்று பழகிப்போன விடயம். நெடுந்தீவு மகாவித்தியாலயத்திற் படித்த காலத்திற் காலையும் மாலையும் நடந்து பழக்கப்பட்ட தூரம் தானே! நண்பனுடைய பெட்டி தான் கொஞ்சம் பாரம். எப்படியும் சமாளிப்பம் என்ற எண்ணத்துடன் நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு சைக்கிள் மணி அடித்துக் கேட்டது. திரும்பிப் பார்த்தான் கோவிந். திரும்பிப் பார்த்த கோவிந் வாய் திறக்க முன் வந்தவர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மணியண்ண, சுமையோடு போறீங்க, பெட்டி பாரம் போலத் தோணுது......"

என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்

"சரியாய்ச் சொன்னாய் நடேசு, கொஞ்சம் பாரம்தான். இவர் என்னுடைய நண்பன். இவர் வசாவிளானைச் சேர்ந்தவர். என்னோடு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஒன்றாய் படிக்கிறார். நெடுந்தீவைப் பார்க்க வேண்டுமென்பது இவருக்கு தீராத ஆசை. இன்று அந்த ஆசை தீர்ந்துள்ளது.... ஓரளவிற்கு எனலாம்,"

என்றதும்,

"அப்படியே விடயம்! நல்லது!"

என்று கூறிய நடேசு சைக்கிளைவிட்டு இறங்கி அருளுடன் கை குலுக்கிய பிற்பாடு கோவிந்தைப் பார்த்து,

"இப்பொழுது நீங்கள் உங்களுடைய வீட்டிற்குத்தானே போய்க் கொண்டிருக்கிறீங்கள்?"

என்று கேட்டதும்,

"அப்படியேதான் நடேசு, நாங்கள் இப்பொழுது எங்களுடைய வீட்டிற்குத்தான் போய்க்கொண்டிருக்கிறோம்,"

என்று சொன்னதுதான் தாமதம்.

"மணியண்ண, அப்படியானால் பெட்டியை என்னிடம் தாங்கோ, நான் கொண்டுபோய் உங்களுடைய வீட்டில் ஒப்படைத்துவிட்டுப் போறன்,"

என்றான் நடேசு.

உடனே கோவிந் அருளைப் பார்த்தான். கோவிந்தின் பார்வையிலிருந்து அவனுடைய எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட அருள்,

"அதற்குள்ள பெரிய பெறுமதியான சாமான்கள் ஒன்றுமில்லை. எனது உடுப்புகள் மட்டும் தானுண்டு. ஆனபடியால் அவர் கொண்டு போகலாம்,"

என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(5) மாவலித் துறை பிரதான வீதி, நெடுந்தீவு.



(6) மகாவித்தியாலயம், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(7) மகாவித்தியாலயம், நெடுந்தீவு.



(8) சந்தை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது வீசியகையோடும் வெறுங்கையோடும் சுதந்திரமாய் நடந்துசென்று கொண்டிருந்தனர் இருவரும். நெடுந்தீவு மகாவித்தி யாலயத்தை அடைந்ததும்,

"இதுதான் அருள், நெடுந்தீவு மகாவித்தியாலயம். இங்கு தான் நான் ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு சித்தி யடையும்வரை படித்தனான். அதைத் தொடர்ந்துதான் ஸ்கந் தாவிற்கு வந்தனான்,"

என்றான் கோவிந்,

"அப்படியா!"

என்று சொல்லிவிட்டு அருள் நன்றாகப் பாடசாலைக் கட்டி டங்களையும், அங்கு பச்சைப்பசேலெனக் காட்சி கொடுத்த கோணற் புளியமரம், வாதுமை மரம், ஆலமரம், கிளிசீறியா என்பவற்றுடன் அவற்றிற்கு இடையில் அமைந்திருந்த சைவ, கிறிஸ்தவ வழிபாட்டி டங்களையும் பார்த்துவிட்டு,

"ஓ மை கோட்! இப்படியொரு மகாவித்தியாலயம் இங்கு உண்டா! என்னால் நம்பமுடியவில்லையே!! இங்கிருந்தா நீ ஸ்கந்தாவிற்கு வந்தாய்? நீ ஏன் எங்களுடைய வகுப்பில் முன்னணியில் நிற்கிறாய் என்று இப்பதான் எனக்குப் புரிகின்றது. இதைப் பார்க்கும் பொழுது ஒரு வகையில் பெரும் சந்தோசமாயிருக்கின்றது. அதேவேளை, சற்றுப் பொறாமையாயும் இருக்கின்றது,"

என்று சொல்லிவிட்டு ஒரு மாதிரிப் பார்த்தான் கோவிந்தை. அவனுடைய பார்வையிலிருந்து அருள் என்ன கேட்க விளைகிறான் என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்,

"டேய் மச்சான், இந்த மகாவித்தியாலயத்தின் அதிபர் உடுப்பிட்டியைச் சேர்ந்தவர். இவருடைய பெயர் சி.வி.எட் வேட் நவரட்ணசிங்கம். இவர் திருமணம் செய்து தற்போது வாழ்ந்து கொண்டிருப்பது பண்டத்தரிப்பில். இவர் கடந்த இருபது வருடங்களாக இந்தப் பாடசாலையின் அதிபராக இருந்து வருகிறார். இவர் இந்தப் பாடசாலையை ஆரம்பித்த பொழுது கனிஸ்ட பாடசாலையாகவும், பின் சிரேஸ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை யாகவும் அப்புறம் S.W.R.D. பண்டாரநாயக்கா காலத்தில் மகாவித்தியாலயமாகவும் தரம் உயர்த்தப்பட்டது. இந்த மூன்று காலத்திலும் இவரே இந்தப் பாடசாலையின் அதிபராக இருந்து வந்துள்ளார். இவரை சாதி, சமயம், எரிச்சல், பொறாமை, யாழ்ப்பாணத் தானுக்கே உரிய வேறுபட்ட கிராமிய பாகுபாடு, வரட்டுக் கௌரவம், அற்ப குணம் போன்றவை இல்லாத ஒரு நல்ல உள்ளம் படைத்த மனிதன் எனலாம். இந்த மனிதனுடைய இடைவிடாத முயற்சியாலும், இந்தப் பாடசாலையில் ஆரம்பம் தொட்டு இன்றுவரை படித்து வந்த மாணவர்களின் முயற்சியாலும் உருவாக்கப்பட்டதுதான் தற்போது நீ பார்க்கும் மகாவித்தியாலயம்,"

என்று கூறிவிட்டு தொடர்ந்து நடந்தான். அப்புறம் சந்தைக்கடை, கோவிந்தர் தேனீர்ச்சாலை, தபாற்கந்தோர், கிராமச் சங்கம், உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், டிஸ்பென்சறி, வைத்தியசாலை என்பவற்றைக் காட்டி விளக்கம் கொடுத்துக் கொண்டு சென்ற கோவிந் வைத்தியசாலையின் பின்புறமாய் அமைந்திருந்த கோட்டையைக் காட்டி,

"இதுதான் இந்தத் தீவில் தற்போது காணப்படும் வரலாற்றுச் சின்னங்களில் முற்றாகச் சிதைந்து போகாம லிருப்பது. இதன் பெயர் மீகாமன் கோட்டை. இது சோழ சாம்ராட்சியம் கொடிகட்டிப் பறந்த காலத்திற் கட்டப்பட்டது. இந்தக் காலத்தில் வட ஈழத்தின்பால் அமைந்துள்ள தீவுப் பகுதியிற் பல சிற்றரசர்கள், சேனாதிபதிகள், முதலிமார் ஆகியோர் அரச நிர்வாகத்தை மேற்கொண்டு நடாத்தியதன் மூலம் சோழசாம்ராட்சியத்தின் செயற்பாட்டிற்கு உறுதுணை யாக இருந்து வந்தனர் என்கிறது வரலாறு.

அதில் ஒரு சிற்றரசன் பெயர்தான் வெடியரசன். அவனு டைய கோட்டை நெடுந்தீவின் மேற்குக் கரையில் அமைந் துள்ளது. அதை நான் உனக்கு அப்புறம் காட்டுகிறேன். மீகாமன் என்ற சோனாதிபதி சோழசாம்ராட்சியத்திற்கு எதிரா கச் செய்த ஒரு சதி வேலைக்காக இந்தக் கோட்டையில் சிறைவைக்கப்பட்டான் என்று சிலர் கூறுகின் றனர். தற்போது சொல்லுவாங்களே (House Arrest) வீட்டுக்காவல் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(9) சந்தை, நெடுந்தீவு.




(10) பிரதேச சபை அலுவலகம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(11) உதவி அரசாங்க அதிபர் பணிமனை



(12) அஞ்சல் நிலையம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுதான் இது. மீகாமனுடைய வீட்டுக்காவலை மேற்பார்வை செய்தவன் வெடியரசன். இவனோர் இளவரசன். இக்கோட்டை யினுள் போய்ப் பார்ப்பதென்றால் சிறிது நேரமெடுக்கும். ஆனபடியால் இன்னொரு தடவை உள்ளுக்குப் போய்ப் பார்க்கலாம். இப்போது நம் இருவருக்கும் நல்ல பசி. ஆனபடியால் நேரே வீட்டிற்குப் போவம்,"

என்று கூறிவிட்டுத் தொடர்ந்து நடந்தான் கோவிந். அவனைப் பின்தொடர்ந்து நடந்த அருள்,

"மச்சான், தண்ணி விடாய்க்கிது, இங்கு ஏதாவது தண்ணீர் கிடைக்குமா?"

என்று கேட்டான். உடனே கோவிந்,

"என்ன கேட்டாய்? தண்ணீர் கிடைக்குமா என்றா? நீ அப்படிக் கேட்டதன் அர்த்தம் எனக்குப் புரிகின்றது. நீ சில வேளைகளில் கேள்விப்பட்டிருப்பாய் நெடுந்தீவில் தண்ணீர் கிடையாது. தண்ணீருக்குப் பதிலாக எல்லோரும் பனங் கள்ளுத்தான் குடிக்கிறார்கள் என்று, அப்படித் தானே?"

எனக் கேட்டு வாய் மூடுவதற்குள்,

"இல்லை மச்சான், நல்லாய்த் தண்ணீர் விடாய்க்கிது. அதுதான்.....,"

என்று சொல்லிய அந்த வேளையில் அக்காச்சியின் தட்டிக்கடை யின் முன் நின்ற கோவிந்,

"அக்காச்சி அக்கா, எங்களுக்குத் தண்ணீர் விடாய், குடிப்பதற்கு ஏதாவது வைத்திருக்கிறீங்களா?"

என்று கேட்டான். உடனே அக்காச்சி,

"என்ன தம்பி கேட்டாய், ஏதாவது வைத்திருக்கிறீங்களா என்றா? தம்பி, எனது கடை தட்டிக்கடை தான், அதற்காக நான் விபரம் தெரியாமல் வியாபாரம் பண்ணிக் கொண்டிருக் கிறேன் என்று நினைக்க வேண்டாம். குடிப்பதற்கு குளிர்ந்த நீர் மண் பானையிலுண்டு. அத்துடன் யானை மார்க் கொழும்புச் சோடா உண்டு. இன்னும் உள்ளூர்ச் சோடாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் உண்டு. பசித்தால் சாப்பிடுவதற்கு பணிஸ், பாணு முண்டு,"

என்று சொன்னதுதான் தாமதம்,

"இரண்டு யானை மார்க் கொழும்புச் சோடா தாங்கோ அக்கா,"

என்றான் கோவிந். இரண்டு ஒறேஞ்பார்லி சோடாப் போத்தல்களை உடைத்துக் கொடுத்தாள் அக்காச்சி. அவற்றை வாங்கிய கோவிந் ஒன்றை நண்பனிடம் கொடுத்து,

"இந்தா மச்சான், குடி,"

என்று சொல்லிவிட்டு மற்றையதைத் தான் குடித்தான். அண்ணாந்து இரண்டு இழுப்பிழுத்த வேளையில் கண்ணிற்பட்ட புளியமரத்தைப் பார்த்த அருள்,

"நல்ல பெரிய புளியமரம் மச்சான், பார்க்க ஆசை யாயிருக்கு!"

என்றான். நெடுந்தீவின் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து நண்பன் இரசிக்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட கோவிந்,

"இதென்ன பெரிய புளியமரம் மச்சான், இதைவிடப் பெரிய புளியமரங்களும் உண்டு. போகும்போது எல்லாவற் றையும் பார்த்துக் கொண்டு போகலாம், வா"

எனக்கூறிக்கொண்டு வெற்றுப் போத்தல்களை அக்காச்சியிடம் கொடுத்துவிட்டு நடக்க ஆரம்பித்தான். தில்லை மதவை அடைந்ததும் அவ்விடத்தில் நின்றுகொண்டு,

"அங்கபார் அருள், அந்த நீர்த்தேக்கத்தை. இதன் பெயர் வெட்டுக்கழி. இது ஏறக்குறைய ஒரு மைல் நீளத்தையும் அரை மைல் அகலத்தையும் கொண்ட நீர்த்தேக்கம். இப்படி ஒரு நீர்த்தேக்கம் உள்ள நெடுந்தீவைப் பார்த்து தண்ணி யில்லாத பூமி என்று சொல்லுகிறாங்கள், அதிலும் ஓர் அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது. ஏன் தெரியுமா? இது உவர் நீர் ஏரி. ஆடி ஆவணி மாதங்களில் வெறும் உப்பு நீராக மாறிவிடும்,"

என்றதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(13) பொது வைத்தியசாலை, நெடுந்தீவு.



(14) மீகாமன் கோட்டை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(15) மீகாமன் கோட்டை, நெடுந்தீவு.



(16) சீக்கிரியாம் பள்ளம் அரசினர் பாடசாலை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! அப்படியா! எனினும் பார்க்க ஆசையாயிருக்கு மச்சான். அப்ப.... இதனால ஒரு பிரயோசனமும் இல்லையா உங்களுக்கு?"

என்று கேட்டான் அருள். நண்பனின் கேள்வியின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட கோவிந்,

"ஆண்டவனின் படைப்புக்களில் எதையும் பிரயோசனம் அற்றவை என்று கூறிவிடமுடியாது. சிறிய அளவில் மீன்கள் வளருகின்றன. அவற்றை ஆனி, ஆடி மாதங்களில் மக்கள் பிடிப்பார்கள். குறவை என்ற ஒரு வகை மிகச்சிறிய மீனினமும் உண்டு. அதையும் மக்கள் உணவிற்காகப் பயன்படுத்துகி றார்கள். அதற்கும் மேலால், மாரிகாலத்தில் இங்கு பொழிந்து தள்ளும் மேலதிக மழைநீரை கடலுக்கு எடுத்துச் செல்லும் வடிகாலாகவும் இது பயன்படுகின்றது. இதுபோன்ற பல நீர்த் தேக்கங்கள் இங்கு உண்டு. அவற்றுள் இதுதான் மிகப் பெரியது,"

என்று கூறிமுடித்த கோவிந் தொடர்ந்து நடக்க ஆரம்பித்தான்.

அப்பொழுது ஓமலாக்காட்டைக் காட்டி,

"இது மச்சான் இத்தீவின் இயற்கைத் தாவரத்தை வெளிப்படுத்தும் ஒரு காடு. இதில் காட்டுப் பூவரசு, விகாய் போன்ற சிறிய மரங்களும் வல்லுவெட்டி, பிரம்பட்டை நாறி, புல்லாந்தி, ஆவரசு போன்ற செடியினங்களும் கொவ்வை, தும்பை, தூதுவளை, முசுக்கட்டை, கோழி ஆவரை போன்ற கொடியினங்களும் பீச்சிலாத்தி, ஈஞ்சு, காரை இயங்கு போன்ற பற்றைகளும் கரந்தை போன்ற பூண்டுகளும் முக்கிய மாய்க் காணப்படுகின்றன. ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் கருக்குவாச்சி, குரா, திணாக்கு, பாலை போன்ற பெரிய மரங்களும், நாகதாளி, கள்ளி போன்ற வரண்ட பூமித் தாவரங்களும் அதிகம் காணப்பட்டதாயும், அவற்றுட் பெரும்பாலானவை காலநிலை மாற்றத்தின் காரணமாகவும் மனிதனின் எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனையற்ற செயற்பாட்டினாலும் அழிந்து போய்விட்டன என்று பெரியவர் கள் கூறுகின்றார்கள்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொன்னதும், எல்லாவற்றையும் கிரகித்துக் கொண்டவன் போன்று

"எது என்னவானாலும் பார்க்கப் பச்சைப் பசேலென்று கண்ணுக்கு ரம்மியமாயிருக்கு. இப்படிக் காடுகளெல்லாம் எங்களுடைய இடங்களிற் கிடையாது. ஒரே வீடும், தோட்டமும் வயலும் தான். புவியியலிற் படித்திருக்கிறேன் பற்றைக் காட்டைப் பற்றி. அதை இப்போது நேரிற் பார்ப்பதில் ரொம்ப மகிழ்ச்சி, நல்ல அனுபவமும் கூட,"

என்றான் அருள். மேலும் சிறிது சொல்ல விரும்பிய கோவிந்,

"இது கூதிர் காலமானபடியால் நீ சொன்னது போன்று இக்காடு பச்சைப் பசேலென்று காட்சி அளிக்கின்றது. ஆடி, ஆவணி மாதங்களில் வரண்டு காணப்படும். அப்புறம், ஆவணியில் மழை ஆரம்பித்தால் மறுபடியும் வளர்ச்சி ஆரம்பிக்கும்,"

என்று கூறிக்கொண்டுபோக வண்ணாங்கழிச் சந்தியை அடைந்தனர் இருவரும். அதில் நின்றுகொண்டு,

"இதுவரை நேராக நடந்துவந்த நாங்கள் திரும்பிப்போக வேண்டிய நேரம் வந்துவிட்டது,"

என்று கூறிய கோவிந், நண்பன் நல்லாய்க் களைத்துவிட்டான் என்பதை உணர்ந்து,


"என்ன மச்சான் பசிக்கிதே? யோசிக்காத, எனது கிராமம் வந்து விட்டது. வீடு கிட்டத்தானிருக்கு,"

என்று கூறி நண்பனை உசார்ப்படுத்திவிட்டுச் சிறிது தூரம் நடந்து சென்று வண்ணாங்கழியைக் காட்டி,

"இது மச்சான் என்னுடைய நீர்த்தேக்கம். அதாவது இது என்னுடைய சொந்தச் சொத்தல்ல, என்னை வளர்த்த நீர்த்தேக்கமென்று சொல்லலாம். இதுதான் நான் எனது நண்பர்களோடு குளித்து முழுகி விளையாடி மகிழ்ந்த நீர்த்தேக்கம். அதுமட்டுமா! நீந்திப் பழகியதும் நண்பர்களுடன் நீச்சற் போட்டிபோட்டுச் சாதனை புரிந்ததும் இதே நீர்த்தேக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(16-1) வெட்டுக்கழி, நெடுந்தீவு.



(16-2) வெட்டுக்கழி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(16-3) வெட்டுக்கழி, நெடுந்தீவு.



(17) ஓமலாக்காடு, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்திற்தான். தென்னம்பாளைத் தோணி ஓடவிட்டு மகிழ்ந்த நாட்களை எப்படி மறக்க முடியும்! முதலாவது வெள்ளத் திற்கே தென்னம்பாளைத் தோணியுடன் இங்கு என்னைக் காணலாம். அந்த நாள் மனதிலே என்றுமே....."

என்று பாடிக்கொண்டு விரைந்து நடந்தான். வீடு வந்து விட்டது.

## அங்கம் - 02

மகனுடையதும் அவரது நண்பனுடையதும் வரவிற்காக காத்திருந்த அம்மாவின் சமையல் இருவரையும் ஒரு அசத்தல் அசத்தியது. உண்டகளை தொண்டருக்கும் உண்டு என்பதற்கிணங்க ஓய்வெடுத்துவிட்டு எழுந்துபார்த்த பொழுது நேரம் பிற்பகல் ஐந்து மணியாகிவிட்டது. அப்புறம் இடங்கள் பார்க்கப்போவது சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்துகொண்ட கோவிந்,

"டே அருள், இப்பொழுது இடங்கள் பார்க்கப் போவது சரிப்பட்டு வராது. காரணம் இப்பொழுது புறப்பட்டால் எந்தவொரு இடத்தையும் பார்த்துவிட்டு இருட்டுவதற்குள் திரும்பி வரமுடியாது. ஆனபடியால் நாளைக் காலை சற்று நேரத்தோடு புறப்படுவம். இப்பொழுது இந்த அயலைச் சுற்றிப் பார்க்கலாம் வா,"

என்று கூறிக்கொண்டு வெளியிற் கூட்டிச்சென்றான். கூதிர்காலமான படியால் வண்ணாங்கழி வெட்டைப் பகுதி முழுவதும் ஒரே வெள்ளக் காடாகக் காட்சி கொடுத்தது. அயலிலிருந்த பனைகள், தென்னைகள், பூவரசு, ஆவரசு, வேப்பரமரம், புளியமரம், ஆல், அரசு, முள்முருக்கு, கறிமுருங்கை ஆகிய மரங்கள் புதிய தளிர்களுடன் பச்சைப்பசேலெனக் காட்சி அளித்தன. அத்தோடு முல்லை, முசுட்டை, தும்பை, தூதுவளை, கொவ்வை, தாளி, பிரண்டை, குறிஞ்சா, கோழியாவரை போன்ற கொடியினங்களும், காத்தோட்டி, காண்டை, வல்லுவெட்டி போன்ற முள்ளினங்களும், கற்றாளை, கள்ளி, நாகதாழி ஆகிய வரண்ட பூமித்தாவரங்களும் காரை, புல்லாப்பற்றை, ஈஞ்சு, இயங்கு போன்ற முட்பற்றைகளும் அத்தோடு பல்வேறு சிறிய செடிகளும், பூண்டுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்து காணப்பட்டன. இவற்றையெல்லாம் பார்த்து இரசித்துக்கொண்டு போன வேளையில் ஓர் இடத்திற்காணப்பட்ட பூத்துக்குலுங்கிய கற்றாளைக் கூட்டத்தைப் பார்த்துவிட்டு ஆச்சரியத்தோடு வாயிற் கையை வைத்த அருள்,

"டேய் கோவிந், கற்றாளை இப்படிப் பூத்துக் குலுங்கு மென்று எனக்கு இன்றுதானே தெரியும். பார்ப்பதற்கு எவ்வளவு அழகாயிருக்கின்றது,"

என்று கூறினான். தொடர்ந்து,

"நான் இங்கு நின்றுகொண்டிருக்கும் இந்த வேளையில் புதிய ஓர் உலகத்தில் நிற்பதுபோன்ற உணர்வு ஏற்படு கின்றது. காரணம், நான் பிறந்து வளர்ந்த வசாவிளானோடும் மற்றும் நான் சென்ற யாழப்பாணக் குடாநாட்டின் பல பகுதிக ளோடும் ஒப்பிடும்போது இந்த இடம் முற்றிலும் வேறுபட்ட தாய்த் தென்படுகின்றது.

எங்களுடைய வீட்டைவிட்டு வெளியிற் சென்றால் அல்லது அயலிற்குச் சென்றால், ஏன் இன்னும் கொஞ்சம் அயற்கிராமங்களுக்குச் சென்றாற்கூட அங்கெல்லாம் நான் காண்பது நெருக்கமான வீடுவளவுகள், தென்னை, வாழை, மா, பலா, வேலியோர பூவரசங் கதியால்கள், அங்குமிங்கு மாய் சில பனை மரங்கள் மட்டும்தான், அப்புறம் தோட்ட வெளிகள். அவை கூதிர்காலத்தில் பெரும்பாலும் வெறிச் சோடிக் கிடக்கும். பின் பனிக்காலமாகிய மாசி, பங்குனி மாதங்களிற்தான் அவையாவும் பச்சைப்பசேலெனக் காட்சிய ளிக்கும். அதனாற்தான் இப்படிச் சொல்லுகிறேன். சில வகையில் நீங்களும் கொடுத்து வைத்தவர்கள்தான். இப்படி யான ஒரு இயற்கையுடன் வாழ்வதற்கும் கொடுத்து வைத்தி ருக்க வேண்டும். அந்த வகையில் உன்னுடைய பிறப்பை யிட்டும் மகிழ்ச்சியடைகிறேன்,"

என்று கூறிமுடித்தான் அருள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளையும் நன்கு தெரிந்து வைத்திருக்கும் கோவிந்திற்கு நண்பன் அருளினுடைய கூற்றுக்கள் ஏற்புடைத்தவையாயே இருந்தன. இவ்வாறு அன்றைய மாலை நேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(18) ஓமலாக்காடு, நெடுந்தீவு.



(19) வண்ணாங்கழி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(20) வண்ணாங்கழி, நெடுந்தீவு


(21) வெட்டாக்காடு கிராம நுழைவாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையாயும் சுவாரசியமாகவும் கழிந்து சென்றது என்றால் மிகையாகாது.

திட்டமிட்டபடி மறுநாள் காலை எட்டுமணிக்கு கோவிந் அருளை அழைத்துக்கொண்டு புறப்பட்டான். செல்லும் வழியில் பூக்கழியை அடைந்ததும் அதைக்காட்டி,

"இதுகும் ஒரு பெரிய நீர்த்தேக்கம் அருள். இதைப் பூக்கழி என்று அழைப்பார்கள்,"

என்று சொன்ன பொழுது, அதைக்கேட்டும் கேட்காததுமாக ஏதோ ஒரு புதினத்தைக் கண்டவன் போன்று,

"அங்க பார் மச்சான் பெண்கள் குளிக்கிறாளவ கூட்டமாய் நின்று. பத்துப் பதினைந்து குமரியள் குறுக்குக் கட்டோட குளிக்கிறாளவ. அவளவ குளிக்கிறதைப் பார்க்க ஆசையாய்த்தானிருக்கு மச்சான். டேய்! அவளவ நீந்துவதையும் பாய்ந்து ஓடிப்பிடித்து விளையாடுவதையும் பார்க்கும்போது ரொம்பக் கவர்ச்சியாயிருக்கல்லே?"

என்று ஆனந்தம் பொங்கக் கேட்டான் அருள். நண்பனின் கவனத்தையும் மகிழ்ச்சியையும் புரிந்துகொண்ட கோவிந்,

"கவர்ச்சியாத்தானிருக்கு, ஆனால் கனநேரம் நின்று பார்த்தால் நமக்குத் தண்ணீரால் எத்துவாளவ. பார்த்தும் பார்க்காததும் மாதிரிப் பார்த்துக்கொண்டு வாடா,"

என்று கூறிவிட்டு முன்சென்றான்.

"நீ சொல்வது சரிதான் மச்சான்,"

என்று சொல்லிக் கொண்டு பின்தொடர்ந்தான் அருள். அந்தப் பெண்களில் ஒருத்தி கோவிந்தின் அயல்வீட்டுக்காரி, பெயர் பட்டு. கோவிந்துடன் ஒத்த வயது மட்டுமல்ல அவர்கள் சிறுபிள்ளையாய் இருந்த காலத்தில் மண் விளையாட்டு விளையாடிய பங்காளியும் கூட. கோவிந்தைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்த பட்டு,

"டேய் மணி, எப்படா வந்தனீ?"

என்று மிகுந்த வாஞ்சையோடு கேட்டாள். நேற்று என்று உண்மையைச் சொன்னாள் ஏசுவாள் என்று எண்ணிய கோவிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக,

"இன்றுதான் வந்தனான் பட்டு,"

என்று கூறினான்.

"ஒரு செய்தி கூடக் கேள்விப்படவில்லையே! நீ யாழ்ப்பாணம் படிக்கப் போன பிற்பாடு உன்னைப் பார்க்கவே முடியுதில்லை,"

என்று சிறிது ஏமாற்றம் கலந்த தொனியில் கூறிய பட்டு தொடர்ந்து,

"அது சரி.... இந்த வெள்ளத்திலும் தண்ணியிலும் இப்ப நீ எங்க போகிறாய்? இது யார் பையன்?"

என்று நட்பும் உரிமையும் கலந்த தொனியிற் கேட்டாள். பட்டுவைக் கண்டதும் எதிர்பார்த்திராத ஓர் ஆனந்தம் கோவிந்திற்கு. உடனே,

"இவன் எனது நண்பன், என்னோடு யாழ்ப்பாணத்திற் படிக்கிறான். நம்ம ஊரைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறான். அவனின் விருப்பப்படி முதலில் குதிரைக் கூட்டங்களைக் காட்டுவமென்று கூட்டிப் போகிறேன்,"

என்று கூறியதும், பட்டுவிற்கு அருகில் நின்ற அவளது சிநேகிதி பொன்னி,

"என்ன... பையன் ஏற இறங்கப் பெட்டையளைப் பார்க்கிறான், இதற்கு முன் பெட்டையளைக் காணாதவன் போல,"

என்று தனகினாள். பொன்னி தனகற்காரி என்பதை கோவிந் ஏற்கனவே தெரிந்து வைத்திருந்தபடியினால் அதைப் பெரிதுபடுத்திக் கொள்ளாமல்,

"ஏன் பொன்னி அப்படிக் கேட்கிறாய்? அவருடைய ஊரிலும் பெட்டைகள் நிறையவே இருக்கிறார்கள். ஏன்.... எங்களுடைய கல்லூரியில் நூற்றுக்கணக்கான குமர்ப்பிள்ளைகள் படிக்கிறார்கள். ஆனால், பத்துப் பதினைந்து குமரியள் ஒன்று சேர்ந்து இப்படியான ஒரு பெரிய நீர்த்தேக்கத்தில் முழுகிக் குளித்து நீந்தி விளையாடுவதைப் பார்த்திருக்க மாட்டார். அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைப் பாத்ததும் அவருக்கு ஒரு கிழுகிழுப்பு, அவளவு தான்,''

என்றதும், கோவிந்தின் சாதுரியமான கதையைக் கேட்டு உள்ளூர மகிழ்ச்சியடைந்த பட்டு, கோவிந்தைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டு ஒரு மருண்ட பார்வை பார்த்துச் சிரித்தாள். அவளுடைய சிரிப்பு பொன்னியின் தனகலுக்கு நல்ல பதில் கொடுத்திருக்கிறாய் என்று கூறுவதைப் போன்று கோவிந்திற்குப் பட்டது. இதற்குமேலும் இங்கு நின்றால் வெறும் வம்புப்பகிடி விடுவாளவ என்று எண்ணிய கோவிந்,

''அப்ப நாங்கள் போயிட்டுவாறம் பட்டு,''

என்று கூறிவிட்டு மெதுவாக நழுவினான். அப்பொழுது பொன்னி,

''நண்பனைக் கவனமாய்க் கூட்டிக்கொண்டு போ மணி. போறவழியில வழுக்கிக் கிழுக்கி விழுந்திடுவார். அப்புறம் ஒழுங்காய் ஊர் போய்ச்சேர முடியாது. கூதிர்காலத்திற் கூட்டி வந்திருக்கிறாய், கவனம்,''

என்று மறுபடியும் கிண்டல் பண்ணினாள். இதைக் கேட்ட அருள்,

''டேய், அவள் சிலேடைக் கருத்தில் சொல்லுகிறாள் மச்சான்,''

என்று அங்கலாய்ப்புடன் கூற, அதைப் புரிந்துகொண்ட கோவிந்,

''எல்லாம் பருவத் துடிப்புத்தான். இதற்குமேலும் இங்கு நின்றால் அந்தப் பத்துப்பதினைந்து குமரியளும் சேர்ந்து நம்ம இருவரையும் சம்பல் போட்டு விடுவாளவ, பேசாமல் வா, நாம போய் நம்முடைய வேலைகளைப் பார்ப்பம்,''

என்று கூறிக்கொண்டு சிறிது வேகமாக நடக்கத் தொடங்கினான். அருளும் அதே வேகத்திற் தொடர்ந்தான்.

பூக்கழியைக் கடந்து சென்றதும் செல்லத்தம்பியைக் கண்ட கோவிந்,

''என்ன அத்தார், குதிரைக் கூட்டங்கள் எங்கு நிற்கின்றனவென்று பார்த்தீங்களே?''
என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் மச்சான், ஒரு கூட்டம் தாமரைக் குளத்தில் நிற்கிறது. மற்றைய கூட்டம் தெற்பட்டைக்கு கிழக்கால நிற்கின்றது. இன்னொரு கூட்டம் வெல்லையுக்கழிப் புட்டியில் நிற்கிறது,"

என்று கூறிவிட்டு அருளைப் பார்த்து,

"யாரு தம்பி? புதுமுகமாய்க் கிடக்கு?"

என்று கேட்ட செல்லத்தம்பிக்கு,

"தம்பி எனது நண்பன் யாழ்ப்பாணத்தில் என்னோடு படிக்கிறவர். ஊர் வசாவிளான். நம்ம உரைப் பார்க்க வந்திருக்கிறார். அதுதான் குதிரைக் கூட்டங்களைக் காட்டுவம் என்று கூட்டிக் கொண்டு போகிறேன்,"

என்று சொன்னதும்,

"அப்படியா விசயம், நல்லது, நல்லது, சவயுவெளிக்குப் போனால் சவயுவெளிச் சுட்டியனுடைய கூட்டத்தைப் பார்க்கலாமல்லே! அதில் ஐம்பது அறுபது குதிரைகளல்லே நிற்கும். சவயுவெளிச்சுட்டியன்தானே இங்கு இராசா,"

என்று கூற, பதிலுக்கு கோவிந்,

"நேரம் கிடைத்தால் பார்ப்பம், அப்ப.... நாங்கள் போயிட்டு வாறம் அத்தார்,"

என்று கூறிவிட்டு அப்பாற் செல்ல, ஏதோ சொல்ல மறந்தது ஞாபகத்திற்கு வந்தது போன்று திடீரென்று திரும்பிய செல்லத்தம்பி,

"தம்பியிட்டச் சொல்லு சண்டிக்கட்டை உயர்த்திக் கட்டச் சொல்லி, அல்லாவிட்டால் கொடுக்கை இழுத்துக் கட்டச் சொல்லு, போற பாதையெல்லாம் ஒரே வெள்ளக்காடல்லே! கூதிர்காலத்திற் கூட்டி வந்திருக்கிறாய். அதற்கேற்றபடி கூட்டிக் கொண்டு போ,"

என்று கூறிவிட்டு விரைந்து சென்றார்.

தாமரைக் குளத்தில் நின்ற குதிரைக் கூட்டத்தைப் பார்த்ததும் அருளுக்குப் பெரிய சந்தோசம், உடனே ஏதோ காணாததைக் கண்டவன் போன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(22) வெட்டாக்காடு கிராம நுழைவாயில்


(23) பூக்கழி, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(24) பூக்கழி, நெடுந்தீவு



(25) தாமரைக்குளம் வெளி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கபார் மச்சான், குதிரைக்குட்டி ஒன்று தாயிடம் பால் குடிக்கிறது. வாலை ஆட்டி ஆட்டி என்ன மகிழ்ச்சியோடு குடிக்கிறதென்று பார்த்தியே, சின்னக் குட்டியாக்கிடக்கு. சில நாட்களுக்கு முன்தான் பிறந்திருக்குப் போலும், பார்க்க ஆசையாய்க் கிடக்கு!"

என்று அருள் கூற,

"உண்மைதான் மச்சான்,"

என்று கூறிய கோவிந் மேலும் குதிரைகளை நெருங்கிச் சென்று ஓடச் செய்யும் வண்ணம் கலைத்தான். அப்பொழுது எல்லாக் குதிரை களும் ஓடத் தொடங்க ஒரு குதிரை மட்டும் கடைசியாகக் கனைத்துக் கொண்டு மெதுவாக ஓடியது. அதைப் பார்த்த அருள்,

"என்ன மச்சான், அதற்குக் கோபம் பத்திவிட்டதோ! நீ கலைத்தது?"

என்று வியப்போடு கேட்டான்.

"நீ கூறுவதிலும் உண்மையிருக்குத்தான் அருள். அது தான் மச்சான் இந்தக் கூட்டத்தின் தலைவன். மற்றைய குதிரைகள் எல்லாம் பெண் குதிரைகள். இவர் மட்டும் தான் கடா. தனது பெண்களையெல்லாம் பாதுகாப்பாக முன்னுக்கு ஓடவிட்டு இவர் பின்னுக்கு பாதுகாவலனாகப் போய்க் கொண்டிருக்கிறார். நான் பாதுகாவலனாகப் பின்னுக்கு வந்துகொண்டிருக்கிறேன். நீங்கள் ஒன்றுக்கும் பயப்படாதீர்கள் என்பதுதான் அவரின் கனைப்பின் அர்த்தம்,"

என்று கோவிந் கூற, அதைக்கேட்டு வியப்பும் சிறிது அச்சமும் அடைந்த அருள்,

"நம்மைக் கடிக்க மாட்டுதே கோபத்தில்?"

என்று கேட்டான். நண்பன் சிறிது பயப்படுகிறான் என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்,

"சீசீ அப்படியொன்றும் நடக்காது. நீ பயப்பட வேண்டாம். பயமாயிருந்தால் எனக்குப் பக்கத்தில் வா,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிவிட்டு வெல்லையுக்கழிப் புட்டியை நோக்கி நடந்தான். தெற்பட்டைக் கழியின் மேற்குக் கரையோரமாய் நடந்துகொண்டிருந்த பொழுது கிழக்குக் கரையில் நின்ற ஒரு குதிரைக் கூட்டத்தைக் காட்டி,

"அங்க பார் அருள், ஒரு குதிரைக் கூட்டம் நிற்கிறது. அதில் முப்பது நாற்பது குதிரைகள் நிற்கின்றன,"

என்றதும் அதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த அருள், சிறிது யோசித்துவிட்டு,

"இந்தக் கூட்டத்திற்கும் ஒரு கடாதானா தலைவன்?"

என்று கேட்டான். அவனின் எண்ணத்தைப் புரிந்துகோண்ட கோவிந்,

"பையன்கள் நிற்பாங்கள். ஆனால் பெரிய கடாவென்று ஒருவர்தான் தலைவனாக இருப்பான்."

என்றதும்,

"புரியுது, புரியுது. எல்லாம் ஒருவகையான வாழ்க்கை முறைதான்,"

என்று கூறிக்கொண்டு தொடர்ந்து நடந்தான் அருளும். வெல்லை யுக்கழிப் புட்டியை அடைந்ததும் அதில் பெரிய கூட்டமொன்று நின்றது. இதில் இரண்டு குதிரைகள் பயங்கர சண்டை போட்டுக் கொண்டிருந்தன. அதைப் பல நிமிடங்கள் இருவரும் ஆச்சரியத்தோடு பார்த்து இரசித்துக் கொண்டு நின்றனர். சண்டை ஓய்ந்தபாடாயில்லை. இதைப் பார்த்து, வியப்பும் அதிர்ச்சியும் அடைந்த அருள்,

"என்ன மச்சான் இந்த மோதல் மோதுதுகள். என்ன மாதிரி அடிக்கிதுகள், கடிக்கிதுகள், கட்டிப்பிடித்து விழுத்து துகள், பாயிதுகள், இதைப் பார்க்க ஒருபுறம் வியப்பாகவும் மறுபக்கம் அதிர்ச்சியாயும் இருப்பது மட்டுமல்ல இன்னொரு பக்கம் பயமாயும் கிடக்கு மச்சான். அதுகளின்ர கோபத்தில் வந்து நம்மையும் மோதிப்போடுங்களோ? ஓடவும் முடியாது. எல்லா இடமும் ஒரே வெட்டவெளியாயிருக்கிறது,"

என்று தனது மனதிலுள்ள ஏக்கத்தை வெளிப்படுத்த,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். அதுகள் நம்மை ஒன்றும் செய்யமாட்டாதுகள். ஏன் சண்டை நடக்கிறது தெரியுமே?"

என்றதும்,

"ஏன் மச்சான் நடக்கிறது?"

ஆர்வத்தோடு கேட்டான் அருள்.

"இரண்டு பேரும் கடாக்கள். இதில் ஒன்று இந்தக் கூட்டத்தின் தலைவன். மற்றையவர் வெளியிலிருந்து வந்து இந்தக் கூட்டத்தில் நிற்கிற சில மறிக் குதிரைகளைக் கூட்டிச் செல்ல முயற்சித்திருக்கிறார். இதை அவதானித்து விட்ட தலைவன் வந்தவரை அடித்துக் கலைக்கச் சண்டை தொடங்கிவிட்டது. வந்தவனும் பலசாலி போலத் தெரியுது. அதனாற்தான் சண்டை இவ்வளவு உக்கிரமாய்ப் போய்க் கொண்டிருக்கு. இந்தச் சண்டையில் யார் வெல்கிறானோ அவருக்குத்தான் இந்த மறிக்குதிரைகள் சொந்தம். இதில் ஒரு கடா தோற்று ஓடும்வரை சண்டை தொடரும். சில வேளையில் சண்டை நாளையும் தொடரலாம். இறுதியில் ஒருவருக்கு வெற்றி நிச்சயம் கிடைக்கும். அவருடன் இந்த மறிகளெல்லாம் சேர்ந்து வாழும். இன்னொரு சந்தர்ப்பத்தில் இன்னொரு வீரன் வருவான் சண்டை போட. சிலவேளை தோற்றுப் போனவனே திரும்பவும் வருவான் புதுத் தென்போடு. இது குதிரைக் கூட்டங்களின் வாழ்க்கை முறை,"

என்று கூறிக்கொண்டு போக,

"ஓ! இவ்வளவு விசயமிருக்கா குதிரைக் கூட்டங்களின் வாழ்க்கையில்! எல்லாம் கேட்பதற்கும், பார்ப்பதற்கும் ரொம்பச் சுவாரஸ்யமாயிருக்கு மச்சான்,"

என்று கூறிய அருள் தொடர்ந்து ஆச்சரியத்தோடு,

"அங்க பார் மச்சான், ஒரு கடா தோற்றுவிட்டது போன்று ஓடுகிறது. மற்றையது அதைக் கலைத்துச் செல்லுகின்றது,"

என்று சொன்ன ஓரிரு வினாடிகளில் ஓடிய கடா திடீரென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பி இரு பின்னங்கால்களாலும் கலைத்துச் சென்ற கடாவின் தாடைகளில் அடித்தது. அடியின் வேகத்தில் தாடைகள் உடைந்தது போன்ற ஒரு பயங்கர சத்தம்.

அதே கணப்பொழுதில் ஐயோ! என்று ஒரு சத்தமும் கேட்டது. திடீரென்று திரும்பிப் பார்த்தான் கோவிந். விழுந்து கிடந்த அருளைப் பார்த்து ஆச்சரியமும், அங்கலாய்ப்பும் அடைந்த கோவிந்,

"என்ன அருள் நடந்தது? ஏன் ஐயோ என்று கத்தினனீ? ஏன் விழுந்தனீ?"

என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டு கையைக் கொடுத்தான். கோவிந்தின் கையைப் பிடித்துக்கொண்டு தாங்கி எழுந்த அருள்,

"பார்த்தியே மச்சான், அது அடிச்ச அடியைக் கிளம்பி! மற்றையதனுடைய தாடை உடையவில்லையா? அது அடிச்ச அடி என்னுடைய தாடையில் பட்டது போன்று இருந்தது. அதுதான் மச்சான் ஐயோ என்று குளறிக் கொண்டு விழுந் திட்டேன். என்னை அறியாமலேயே விழுந்து விட்டேன்,"

என்று பயந்துகொண்டே சொன்னான். உடனே கோவிந்,

"என்ன அருள், பயந்தாங்கொள்ளியாய் இருக்கிறாய். நீ ஒன்றுக்கும் பயப்படாத, நான் பக்கத்தில் நிற்கிறேனல்லே? பிறகேன் பயப்படுகிறாய்? அதுகள் நம்மை ஒன்றும் செய்ய மாட்டாதுகள்,"

என்று சொல்லிக் கொண்டு குயிந்தா கோபுரம் நோக்கி கோவிந் நடக்க அருள் பின் தொடர்ந்தான்.

குயிந்தா கோபுரத்தை அடைந்த கோவிந் அதன் அடிவாரத்தில் நின்று கொண்டு,

"இதன் பெயர் குயிந்தா கோபுரம். இது போர்த்துக்கேய ரால் கட்டப்பட்டு ஒல்லாந்தராலும் ஆங்கிலேயராலும் பரா பரிக்கப்பட்டது. ஏறக்குறைய நானூறு வருடங்கள் பழமை வாய்ந்தது. இது இந்தப் பிராந்தியத்தினூடாகப் பிரயாணம் செய்யும் கடற்கலன்களுக்குத் திசை காட்டும் நோக்கோடு கட்டப்பட்டிருக்க வேண்டும்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(26) பெரியகழி மேற்குக் கரை, நெடுந்தீவு


(27) வெல்லைவெளி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(28) வெல்லைவெளி, நெடுந்தீவு



(29) வெல்லையுக் கழியுப்புட்டி வெளி,நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லி முடிப்பதற்குள் ஏதோ சொல்ல விளைபவன் போல் முந்திக்கொண்டு,

"நானூறு வருடங்களுக்கு முற்பட்டதென்று சொல்லுகிறாய். எந்தவித சேதமும் இல்லாமல் இதுவரை இவ்வளவு உறுதியாயிருக்கின்றது. ரொம்ப ஆச்சரியமாயிருக்கே!"

என்று கோபுரத்தின் நுனியை அண்ணாந்து பார்த்துக் கொண்டு அருள் சொன்னதும், அதற்கு,

"அவன்களுடைய தொழில்நுட்பம் அந்த் மாதிரி மச்சான்,"

என்று பதிலளித்த கோவிந் தொடர்ந்து,

"இன்னொரு தொழில்நுட்பத்தையும் காட்டுகிறேன் பார் மச்சான்,"

என்று கூறிவிட்டு கோபுரத்தின் அடிப்பாகத்தில் நின்றுகொண்டு அடிப்பாகத்திலிருந்து கோபுரத்தின் நுனிப்பாகத்திற்குச் செல்லும் துவாரத்தைப் பார்க்கச் சொன்னான். அருள் அதைப் பார்த்தபின், தனது காற்சட்டைப் பையிலிருந்து ஒரு சிறிய பேப்பர் துண்டை எடுத்த கோவிந் அதை அருளிடம் கொடுத்து,

"இதை இந்தத் துவாரத்திற்கு நேராகப் பிடி,"

என்றான். அருள் அதைக் கோவிந் கூறியபடி துவாரத்திற்கு நேராகப் பிடித்துக் கொண்டு நின்றபொழுது,

"கையை விடு,"

என்றான் கோவிந். உடனே அருள் கையை விட்டான். அந்தக் கணமே பேப்பர் துண்டு அருள் எதிர்பார்த்ததிற்கு மாறாக துவாரத்தினூடாக மேற்சென்றது. உடனே அருளை வெளியே அழைத்த கோவிந்,

"கோபுரத்தின் நுனியைப் பார்,"

என்றான். அருள் நுனியைப் பார்த்த மறுகணமே அந்தப் பேப்பர்த் துண்டு கோபுரத்தின் நுனியினூடாக வெளியேறி காற்றுடன் பறந்து சென்று கடலினுள் விழுந்தது. இதைப் பார்த்து வியப்படைந்த அருள்,

"காற்று இந்தத் துவாரத்தினூடாக மேலே சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கின்றது, அப்படித்தானே?"

என்றான். உடனே கோவிந்,

"உண்மைதான் மச்சான், மேல் நோக்கிச் செல்வதுமட்டு மல்ல, ஒருபோதும் காற்று கீழ்நோக்கி வருவதில்லை. இப்படி ஒரு தொழில்நுட்பம் இந்தக் கோபுரத்தினுள் அடங்கியுள்ளது,"

என்று கூறி பெருமைப்பட்டுக் கொண்ட கோவிந் சிறிது கடற்கரையோரமாய் நடந்து சென்று எதிரில் தென்பட்ட திணாக்கங் காட்டையும், பூவரசங் காட்டையும் காட்டி,

"இவைதான் மச்சான் இப்பொழுது இங்குள்ள பெரிய காடு. இவைதான் இத்தீவின் முக்கிய இயற்கைத் தாவரங்கள். அநேக மரங்கள் காலவோட்டத்தில் அழிந்து போய்விட்டன. இவைகள் தான் இன்றுவரை நின்றுபிடிக்கின்றன,"

என்று கூறியதும், அந்தக் காட்டைப் பார்த்து ஆச்சரியமடைந்த அருள்,

"உவா! இந்தப் பெரிய காடு இந்தத் தீவில் இருக்கிது! இதைப் பார்க்கும்போது ரொம்ப வியப்பாயும் மகிழ்ச்சியாயும் இருக்கின்றது. கூதிர்காலமானபடியால் எல்லாம் பச்சைப்பசேல் என்று காட்சி கொடுக்கின்றன, இல்லையா?"

என்றதும்,

"உண்மைதான் மச்சான்,"

என்று கூறிக்கொண்டு சிறிது தூரம் சென்றபொழுது எதிர்பாராத விதமாக ஒரு நபர்,

"டேய், மணி!, டேய் மணி!

என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. கோவிந் அந்தப் பக்கமாய்ப் பார்த்தான். கூப்பிட்டது வேறுயாருமில்லை மணியின் பழைய உடும்பு வேட்டைப் பங்காளி பொன்னன். பொன்னனைக் கண்டதும் மணிக்கு உள்ளார்ந்த மகிழ்ச்சி பொங்கிக் கொண்டு வந்தது. ஒரு கையில் அருவாள், மற்றைய கையில் இரண்டு உடும்புகள். பொன்னனின் வேட்டை நாய் முன்வந்து கொண்டிருக்கின்றது. பொன்னன் மணியை நெருங்கி வந்ததும் உடும்பையும், அருவாளையும் போட்டுவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(30) வெல்லையுக் கழியுப்புட்டி, நெடுந்தீவு



(31) வெல்லையுக் கழியுப்புட்டி, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(32) வெல்லை வெளி, நெடுந்தீவு



(33) வெல்லை வெளி, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எப்படி மணி இருக்கிறாய்?"

என்று கேட்டுக் கொண்டு மணியைக் கட்டித் தழுவி முத்தமிட்டு தனது பிரிவுத்துயரையும், மறுபடியும் கண்ட மகிழ்ச்சியையும் ஒருங்கே வெளிப்படுத்தினான். பதிலுக்கு மணியும்,

"எப்படி பொன்னண்ண இருக்கிறீங்கள்? நல்லாயிருக்கிறீங் களா?"

என்று கேட்டு பழைய நண்பனை மறுபடியும் எதிர்பாராத விதமாய்ச் சந்தித்ததனால் ஏற்பட்ட ஆனந்தத்தை வெளிப்படுத்தினான். கதைய்யைத் தொடர்ந்த பொன்னன்,

"என்ன மணி, நீ யாழ்ப்பாணம் படிக்கப் போனபிற்பாடு எங்களையெல்லாம் மறந்து போனாயா? நாம் பண்ணின உடும்பு வேட்டையெல்லாம் ஞாபகமிருக்கா? உங்கள் வீட்டில் நின்ற வேட்டைநாய், அதுதான் வெள்ளைப் பண்டுவன், எத்தனை உடும்புகளை நமக்குப் பிடித்துத் தந்திருக்கும். அதுகும் செத்துப்போய்ச்சு,"

என்று பழையவற்றை ஞாபகப்படுத்த,

"உண்மைதான் பொன்னண்ண, அவற்றையெல்லாம் மறக்க முடியுமா! எங்க போனாலும் என்னத்தைப் படித்தாலும் நாம் வந்த பாதையை வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியுமா பொன்னண்ண?"

என்று மணி கூறிக்கொண்டு போகக் குறுக்கிட்ட பொன்னன்,

"அது சரி.... இந்த மழையிலும் வெள்ளத்திலும் நீ எங்க இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்?" ஏதும் தேவையென்றால் வீட்டிற்கு வந்து என்னிடம் சொல்லியிருக்கலாமே! காமதேனுப் பால் என்றாலும் நான் கொண்டு வந்து தந்திருப்பேனே!"

என்று சொன்னதும், பொன்னன் தன்மீது வைத்திருக்கின்ற அன்பையும் நன்றியையும் புரிந்துகொண்ட மணி,

"என்ன பொன்னண்ண சொல்லுகிறீங்கள், உங்களைப் பற்றி எனக்குத் தெரியாதே? அது மட்டுமல்ல இந்த வெள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணியெல்லாம் எனக்குப் புதிசே? இதில நிற்பவன் எனது நண்பன். யாழ்பாணத்தில் என்னோடு படிக்கிறவன். நமது ஊரைப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டான். வாடா என்றேன், வந்திட்டான். கூதிர் காலத்தில் நம்ம ஊரின் முக்கிய இடங்களைக் காட்ட வேணுமல்லே! அதுதான் கூட்டி வந்தனான்,"

என்றதும்,

"அப்படியே விசயம், நல்லது, நல்லது. அப்ப... இதில ஒரு உடும்பைக் கொண்டுபோய் கறி சமையேன். நாவிற்குப் பழைய ஞாபகமிருக்கும்,"

என்றான் பொன்னன். உடனே,

"பொன்னண்ண, உங்களுடைய அன்பிற்கும் நட்பிற்கும் தலை வணங்குகிறேன். கேட்டதற்கு ரொம்ப நன்றி. ஆனால் பொன்னண்ண, ஏற்கனவே கறிக்கு ஒழுங்கு பண்ணியாச்சு,"

என்று சொல்லிக் கொண்டு போன கோவிந் ஏதோ முக்கியமான ஒன்றைப் பார்த்து விட்டவன்போன்று,

"அங்க பாருங்களேன் பொன்னண்ண, நம்ம மதி அண்ணரையும் கந்தசாமியையும்," என்றான்.

திரும்பிப் பார்த்தான் பொன்னன். மதியின் தோழில் துவக்கு. கந்தசாமியின் கையில் இரண்டு தாராக்கள்.

"மதியண்ண, என்ன தாரா வேட்டைக்குப் புறப்பட்டிருக்கி றீங்கள் போலத் தெரியுது,"

என்று பொன்னன் கேட்டு வாய் மூடுவதற்குள்,

"உன்னுடைய வேட்டை உடும்பு வேட்டை, எங்களு டைய வேட்டை தாரா வேட்டை. அது இருக்கட்டும், எப்படி இன்றைக்குப் பிளைப்பு?"

என்றார் மதி.

"பெரிதாய் ஒன்றுமில்லை, உங்களுக்கு இரண்டு தாராக்கள் போல எனக்கு இரண்டு உடும்பு ஆப்பிட்டது, அவ்வளவு தான்,"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதும், "இரண்டு உடும்பு போதும்தானே," என்ற மதி தொடர்ந்து,

"அது சரி... பொன்னண்ண, இந்தப் பக்கம் தாராக்கள் பறந்து போன சிலமன்? ஏதும் பார்த்தீங்களே?"

என்று அக்கறையோடு கேட்டார்.

"இப்ப நான் தாராக்களைக் காணவில்லை. ஆனால் சற்று முந்தி இரண்டு கூழக்கடாக்கள் பற்றைக் காட்டுப் பக்கமிருந்து தென்மேற்குப் பக்கமாய்ப் பறந்து போகிதுகள். சிலவேளை அவை வெல்லையுக் கழியில் இறங்கினாலும் இறங்கியிருக்கும், போய்ப் பாருங்கோ,"

என்றான். இதைக் கேட்டு பெருமகிழ்ச்சியடைந்த மதி,

"உண்மையாகவா பொன்னண்ண சொல்லுகிறீங்க? இரண்டு கூழக்கடா சோடியாகவா போகின்றன?"

என்று பொன்னனின் கூற்றை உறுதிப்படுத்துமாப்போல் கேட்க,

"இதென்ன மதி அண்ண! இது பகிடி விடுகிற விசயமா? நேரம் தாழ்த்தாமல் நீங்கள் உடனே வெல்லையுக் கழிக்குப் போங்க, சோடியாய்ப் போனபடியால் அங்கு தாமதித்து நிற்பினம்,"

என்று அழுத்திக் கூறினான் பொன்னன்.

"சரி அண்ண! நாங்கள் இப்பவே போறம்,"

என்று கூறிவிட்டு மதியும் கந்தசாமியும் வேகமாய் புறப்பட்டனர். அந்த வேளையில் பொன்னன் கோவிந்தைப் பார்த்து,

"மணி, கனநாட்களுக்குப் பிறகு உங்களைக் கண்டது பெரும் மகிழ்ச்சி. உடும்பும் வேணாமென்று சொல்லுகிறாய். அப்ப.... நான் போயிட்டு வரட்டே மணி?"

என்று கூறிக்கொண்டு புறப்பட்டான் பொன்னன். இவையெல்லா வற்றையும் கேட்டும் பாத்தும் இரசித்துக் கொண்டிருந்த அருள் பொன்னன் சென்றவுடன் கோவிந்தைப் பார்த்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டேய் மச்சான், உன்னை இந்த ஊரில் மணி என்றே கூப்பிடுவாங்க? பூக்கழியில் குளித்த பெட்டைகளும் மணி என்று கூப்பிட்டாளவ. இங்க பொன்னண்ணாவும் வசனத்திற் கொருதடவை மணி, மணி என்று சொல்லுகிறார்,"

என்று கேட்டதும்,

"நீ சொல்லுவது சரிதான். இந்த ஊரிலும் எனது கிராமத்திலும் என்னை மணி என்றுதான் கூப்பிடுவார்கள்,"

என்று பதிலளித்து விட்டு நடக்கத் தொடங்கினான் கோர்விந்.

இப்பொழுது இருவருக்கும் நல்ல பசி. கொண்டுபோன சாப்பாடும் சாப்பிட்டு முடிந்து சமித்தும் விட்டது. பற்றைக்காடு ஊடாக வீடு திரும்பினான் கோவிந். அங்கு நிறைந்திருந்த ஈச்சம் பற்றைகளைக் கண்டு அதிர்ந்துபோன அருள்,

"உவா! இவ்வளவு ஈச்சம்பற்றைகளா! பார்க்க ஜோராய் இருக்கு மச்சான். இவை எப்பொழுது மச்சான் பழம் பழுக்கும்?"

என்று ஆச்சரியம் கலந்த தொனியிற் கேட்டான். அவனின் வியப்பையும் மகிழ்ச்சியையும் புரிந்துகொண்ட கோவிந்

"பங்குனி சித்திரை மாதங்களிற் பழுக்கும். அப்போ தெல்லாம் எங்களுக்குக் கொண்டாட்டம் தான்,"

என்றதும்,

"இவ்வளவு ஈச்சம்பற்றைகளும் பழம் பழுத்தால் முழுவதையும் உங்களாற் சாப்பிட முடியுமா?"

என்று மறுபடியும் ஆச்சரியத்தோடு கேட்டான்.

"நாங்கள் மட்டுமா சாப்பிடுகிறம்? குருவிகள், பறவைகள், கீரி, அணில் என்று எத்தனையோ உயிரினங்கள் சாப்பிட்டு முடிக்கின்றன,"

என்று சொல்லிக் கொண்டு நடந்து கொண்டிருந்த வேளையில் ஒரு பதினைந்து இருபது பெண்கள் அடங்கிய கூட்டத்தைச் சந்தித்தனர். அவர்களிற் பலருக்கு கோவிந்தை ஏற்கனவே தெரியும். எல்லோருடைய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(34) வெல்லையுக் கழியுப்புட்டி வெளி,நெடுந்தீவு



(35) குயிந்தாக் கோபுரம்,நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(36) சாறாப்பிட்டி பம்ப் கௌஸ், நெடுந்தீவு



(37) சாறாப்பிட்டி கிணறு, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையிலும் கடகம் இருந்தன. கோவிந்தை நெருங்கியதும் அதில் சில பெண்கள்,

" என்ன மணி! இந்தவேளையில் இந்தப் பற்றைக் காட்டுக்குள்ளால் ஒரு பையனோடு வாறாய். எங்க போயிட்டு வாறாய்? யார் பையன்?"

என்று கேட்டனர்.

"இவர் அக்கா என்னுடைய நண்பன். யாழ்ப்பாணத்தில் என்னோடு படிக்கிறவர். நம்ம ஊரைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்,"

என்றதும்,

"அப்படியே! ரொம்ப நல்லது, நீ யாழ்ப்பாணம் படிக்கப் போன பிற்பாடு உன்னைக் காணக்கிடைக்குதில்லை,"

என்று சொல்லிக் கொண்டு போக குறுக்கிட்ட கோவிந்,

"அது சரி, எல்லோருடைய தலையிலும் கடகம் இருக்கின்றது. சிலருடைய மடியிலும் ஏதோ இருக்கு. என்னக்கா கொண்டு போகிறீங்கள்?"

என்று ஒன்றும் தெரியாதவன்போல் கேட்டான். அப்பொழுது பொன்னம்மா அக்கா,

"என்ன மணி, ஒன்றும் தெரியாதவன்போலக் கேட்கிறாய், யாழ்ப்பாணம் போனதால் எல்லாவற்றையும் மறந்தே போனாய்? கூதிர்காலம் வந்தால் நமது இயற்கைச் செல்வங்களான முல்லை, முசுட்டை, தும்பை, தூதுவளை, வீணாலை, காளான், தாழி இவைகளைச் சேகரிப்பது தானே நமது வழக்கம். அவைகளைத்தான் கடகத்திலும் மடியிலும் நிரப்பிக் கொண்டு போகிறம்,"

என்று சிறிது கடுகடுப்புடன் சொன்னதும் நிலமையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"நான் ஒன்றையும் மறக்கவில்லைப் பொன்னம்மா அக்கா, நம்ம ஊரைப் பார்க்க வந்த எனது நண்பனுக்கு எமது இயற்கைச் செல்வங்களைத் தெரியப்படுத்த வேண்டுமென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்திலதான் அப்படிக் கேட்டனான். குறை நினைக்க வேண்டாம் பொன்னம்மா அக்கா,"

என்று தாழ்ந்த குரலில் சொன்னான். இதைக் கேட்டுக் கொண்டு நின்ற சின்னம்மா அக்கா,

"மணி இப்ப தப்பா என்ன கேட்டுவிட்டது? நீங்கள் ஒன்றும் தப்பாய்க் கேட்கவில்லை மணி. இந்தாங்கோ நாங்கள் கொண்டுபோகும் செல்வங்களை நன்றாய்ப் பார்க்கச் சொல்லுங்கோ, உங்கள் நண்பனிடம்,"

என்று சொல்லி விட்டு,

"எல்லோரும் கடகங்களை வையுங்கடி கீழ. யாழ்ப்பாணப் பையன் நன்றாகப் பார்க்கட்டும் நாம் என்ன கொண்டு போகிறம் என்று,"

சொன்னதும் எல்லாப் பெண்களும் தலையிலிருந்த கடகங்களை இறக்கிக் கீழே வைத்தனர். அவற்றைப் பார்த்த அருள்,

"உவா! ஓ மை கோட்!! இவ்வளவு பொருட்களும் உங்களுக்குச் சும்மா கிடைக்கின்றனவா? ஓ! என்னால் நம்பவே முடியவில்லையே! உண்மையிலேயே நீங்கள் கொடுத்து வைத்தனீங்கள். இந்த மண்ணில் பிறந்ததிற்குக் கொடுத்து வைத்தனீங்கள். இவற்றையெல்லாம் பார்க்க எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாகவிருக்குத் தெரியுமோ? இன்னொரு வகையில் பொறாமையாயும் இருக்கின்றது இந்த மண்ணில் நான் பிறக்கவில்லையே என்று! எப்படியாயினும் இவற்றைப் பார்த்ததில் ரொம்பச் சந்தோசம்,"

என்று கூறி முடிக்க,

"தூக்கிவையுங்கடி தலையில,"

என்று கூறிய சின்னம்மா அக்கா கோவிந்தைப் பார்த்து,

"மணி, அப்ப... நாங்கள் போயிட்டு வாறம்,"

என்று கூற எல்லோரும் கிளம்பினார்கள்.

கோவிந்தும் அருளும் வீடுநோக்கி நடக்கத் தொடங்கினர். பசியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகமும் இருவரையும் சிறிது ஆட்டம் காணச் செய்தது. இருந்தபோதும் கூதிர்காலத்தின் மகிமையைத் தெரிந்துகொண்ட, அறிந்து கொண்ட மகிழ்ச்சியில் அவற்றைப் பற்றிக் கதைத்தபடியே அருள் நடந்தான். அப்பொழுது முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் காலங்ளில் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும், அக்காலங்களில் இயற்கைச் செல்வங்களில் ஏற்படும் மாறுதல்கள் பற்றியும் விளக்கமாக எடுத் துக்கூறிய கோவிந் தொடர்ந்து நெடுந்தீவின் பால், தயிர், மோர் மற்றும் பனங்கிழங்கு, பனங்கள்ளு என்பன பற்றியும் எடுத்துரைக்கத் தவறவில்லை. அவற்றிற்குச் சிறந்தகாலம் முன்பனி, பின்பனி காலங்கள் என்றும், அக்காலங்கள் நெடுந்தீவின் சிறுதானிய அறுவடைக்கால மென்றும் அந்தக் காலத்தில் ஒரு தடவை மறுபடியும் நெடுந்தீவிற்கு வந்து அவற்றை அனுபவித்துப் போகும்படியும், என்று சொல்லி முடிக்க வீடும் வந்து சேர்ந்தது. "வாழ்க்கையில் ஒரு மறக்க முடியாத புதிய அனுபவம்," என்று கூறிச் சந்தோசப்பட்டுக்கொண்டான் அருள்.

## அங்கம் -03

இப்பொழுது இரவுச் சாப்பட்டுக்கான வேளை, அம்மா சாப்பாட்டை பரிமாறிக்கொண்டு இருந்தாள். இரவுச் சாப்பாட்டை நன்கு ரசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளையில் அருள்,

> "அம்மா, உங்களுடைய மகன் உண்மையிலேயே கொடுத்து வைத்தவன். என்ன அற்புதமான சுவையோடு சமைக்கிறீங்கள்! எப்படி அம்மா இது!.... இந்த மீன் ஏன் இவ்வளவு சுவையாயிருக்கின்றது? இந்த மரக்கறிகள் என்னவென்று என்னால் அடையாளம்கண்டுகொள்ள முடியாதிருக்கின்றனவே! ஆனால் அந்தமாதிரி ரேஸ்ற்!"

என்று கூறிக்கொண்டு அம்மாவின் முகத்தை ஒரு வழிந்த சிரிப்புடன் பார்த்தான்.

அருளின் சிரிப்பிலும் அவனுடைய பார்வையிலுமிருந்து பையன் என்னத்தை அறிய விரும்புகிறான் என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்தின் அம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது.... வந்து... தம்பி விளை மீன். இது உங்களுக்குத் தெரியாமலிருக்கக் காரணமில்லை. ஆனால் நெடுந்தீவுக் கடல் மீனுக்கு ஒரு தனிச்சுவை உண்டு என்று எல்லோரும் கூறுவார்கள். அத்தோடு இது உடன் மீன் தம்பி. துடிக்கத் துடிக்க வாங்குவம். அவைதான் இந்தச் சுவைக்கான முக்கிய காரணங்கள். அடுத்து மரக்கறியைப் பற்றிச் சொன்னீங்கள். இவற்றுள் ஒன்று தும்பை. மற்றையது தாளி. இவைகளும் உடனே பிடுங்கிச் சமைத்தவை. இருந்தபோதும் இந்த மண்ணில் வளரும் இயற்கையான மரக்கறி வகைகளுக்கு ஒரு தனிச்சுவை உண்டு என்று பலரும் கூறுவார்கள். உதாரணத்திற்குச் சொன்னால் இந்த... காளான் இருக்கே...! இது உங்களுடைய ஊரிலும் நிச்சயமாயிருக்கும். எல்லா ஊர்களிலும் காளான்கள் உண்டு. ஆனால் நெடுந்தீவு மண் ணில் வளரும் காளானுக்கு ஒரு தனிச்சுவையும் மணமும் உண்டு. இதை நாங்கள் மட்டுமல்ல உங்களைப் போன்ற வெளியூரிலிருந்து வந்தவர்கள்கூட ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அதிகம் நான் சொல்ல விரும்பவில்லை. நாளைக்கு காளானில் ஒரு சாப்பாடு சமைத்துத் தருகிறேன். அதைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லுங்கோ நான் சொல்வதில் அர்த்தம் உண்டா என்று,"

எனச் சொல்லி முடித்தாள் அம்மா. இவற்றையெல்லாம் கேட்டு மகிழச்சியடைந்த அருள்."

"அம்மா, நீங்கள் கூறுபவையெல்லாம் முத்துப்போன்ற உண்மைகள் அம்மா. இவற்றை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அப்படிச் செய்ய வேண்டிய தேவையும் யாருக்கும் வராது. இன்னும் எத்தனையோ விடயங்களை நான் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது,"

என்று சொன்னதும்,

"உண்மைதான் தம்பி, திரும்பி ஊருக்குப் போவதற்குள் இயன்றவரை எல்லாவற்றையும் அறிந்துகொள்ள முயற்சி பண்ணுங்கோ. அப்போதான் மற்றைய ஊர்களிலுள்ள நான்கு பேருக்கு எங்களுடைய இடத்தைப் பற்றிச் சொல்ல முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது மற்றையவர்களும் நெடுந்தீவு மக்களையும் அவர்களுடைய வாழ்க்கை முறைபற்றியும் தெரிந்துகொள்ள வாய்ப்புக் கிடைக்கும்,"

என்று சொல்லி முடிக்க அவற்றையெல்லாம் ஆமோதிப்பவர் போன்று புன்சிரிப்புடன் சாப்பிட்டு முடித்த அருள் இரவு ஒன்பது மணியளவிற் படுக்கைக்குச் சென்றான்.

இரவு பன்னிரண்டு மணியளவில்,

"ஐயோ! என்னைக் காப்பாற்றுங்க! காப்பாற்றுங்க!"

என்று சத்தமிட்டுக் கேட்டது. திடீரென்று விழித்துக்கொண்ட கோவிந், அருள்தான் நித்திரையில் குளறுகிறான் என்பதைப் புரிந்து கொண்டதும், உடனே அவனைத் தட்டியெழுப்பினான். அரைகுறை நித்திரையுடன் விழித்துக்கொண்ட அருள் பரக்கப் பரக்கப் பார்த்தான். அப்பொழுது,

"என்ன அருள், நித்திரையில் குளறுகிறாய், என்ன நடந்தது? கெட்ட கனவேதும் கண்டியா?"

என்று கேட்டதும்,

"ஓம் மச்சான், அந்த சண்டை போட்ட குதிரைகளில் ஒன்று என்னைக் கடிக்க வந்தது மச்சான். அப்பொழுது நான் அழுதழுது ஓடுகிறேன் என்பது போலக் கனவு கண்டேன்,"

என்று சொன்னதும் விழுந்து விழுந்து சிரித்த கோவிந்,

"அந்தப் பயம் இன்னும் உன்னுடைய மனதைவிட்டுப் போகவில்லை. சரி, சரி அப்படியொன்றும் நடக்காது. நீ மற்றப்பக்கம் திரும்பிப் படு,"

என்று கூற, வெட்கமும் சிரிப்பும் கலந்த நிலையில் மெதுவாகத் திரும்பிப் படுத்தான் அருள். அன்றைய பொழுது அவ்வாறு கழிந்து சென்றது.

மறு நாட்காலை நெடுந்தீவின் மேற்குப் பகுதிக்கு அருளை அழைத்துச் செல்ல விரும்பிய கோவிந் முதலில் சாறாப்பிட்டியை நோக்கிப் புறப்பட்டான். நடந்து கொண்டிருந்த பொழுது ஆங்காங்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரகு, சாமை, மொண்டி ஆகிய சிறுதானியப் பயிர்கள் குடலைப் பருவத்திற் செழிப்புடன் காணப்பட்டன.

எந்தவொரு மெலிந்த, வாடிய பெண்ணும்கூட நிறைமாதக் கற்பிணியாயிருக்கும் பொழுது அவளிலே ஒரு மினுமினுப்பும் தழதழப்பும் காணப்படும். அதுபோன்ற ஒரு மினுமினுப்பையும் தழதழப்பையும் அவற்றின் குடலைப் பருவம் அந்தப் பயிர்களுக்கு அவ்வேளையில் வழங்கியிருந்தது என்றால் மிகையாகாது. அவற்றைக் காட்டிக் கோவிந் விளக்கம் கொடுத்துக் கொண்டிருந்தபொழுது ஒவ்வொரு காணித் துண்டையும் அவற்றைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த வேலிகளையும் நன்கு உற்று நோக்கிய அருள்,

"டேய் மச்சான், இந்தக் கல்லு வேலிகளையும் இந்தக் கற்களின் தொகையையும் எண்ணிப் பார்க்கும்போது உண் மையிலேயே பெரும் ஆச்சரியமாயிருக்கின்றது. நெடுந்தீவு மாவலித்துறையிலிருந்து இப்பொழுது வரை நான் போன இடங்களிலெல்லாம் இருக்கும் வேலிகளைப் பார்க்கும் பொழுதும் இவ்வளவு தொகையான கற்களைப் பார்க்கும் பொழுதும் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. இவ்வளவு தொகையான கற்கள் முழுவதும் இந்தப் பூமியிலிருந்துதான் பெறப்பட்டவையா? அன்றி வேறு எங்காவது இருந்து கொண்டு வரப்பட்டவையா? என்று கூட எண்ணத் தோன்றுகின்றது. உண்மையிலே என்ன மச்சான் நடந்தது?"

என்று கேட்டதும், ஒரு புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டு,

"அருள், நீ இவற்றைப் பார்த்து ஆச்சரியப்படுவது ஏற்புடைத்துத்தான். அதில் எந்தச் சந்தேகமுமில்லை. நீ மட்டுமல்ல இந்தத் தீவிற்கு வந்துபோகும் உன்னைப் போன்ற எல்லோரும் எங்களுடைய இந்தக் கல்வேலிகளைப் பார்த்து ஆச்சரியமடையத்தான் செய்கின்றனர்,"

என்று சொல்லிக் கொண்டுபோகக் குறுக்கிட்ட அருள்,

"இந்தக் கல்வேலிகளைப் பெற்றுள்ளதில் இந்தத் தீவு மக்கள் உண்மையிலேயே கொடுத்து வைத்தவர்கள் என்று தான் சொல்ல வேண்டும். ஏன் இவ்வாறு சொல்லுகிறேன் என்றால், இந்த வேலியை முதலில் அமைப்பதென்பது மிகுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரமமும் செலவும் கூடிய விடயம்தான். இதை யாரும் மறுக்க முடியாது. இருந்தபோதும் இதை ஒரு தடவை அமைத்த பிற்பாடு இதன் பிரயோசனம் பல தலைமுறைக ளுக்கு, ஏன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கக்கூடியவை. இதனுடைய பெறுமதியை எண்ணிப் பார் கோவிந். இதன் காரணமாய்த்தான் இந்தத் தீவு மக்கள் இந்த விடயத்தில் கொடுத்து வைத்தவர்கள் என்று சுருக்கமாய்ச் சொன்னேன்," என்று கூறியதுடன் நின்று விடாமல் தொடர்நது,

"எங்களுடைய ஊர் வசாவிளானில், ஏன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் என்ன நடக் கின்றது? வருடா வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை வேலிகளைப் புதுப்பிக்க வேண்டும். இதனால் ஏற்படும் செலவு குறிப்பிடத்தக்கது. வேலிகளைப் புதுப்பிக்கும் போது ஏற்படும் எல்லைப் பிரச்சினையில் உலகத்திலேயே முதலிடம் வகிப்பது யாழ்ப்பாணக் குடாநாடு தான். இந்தப் பிரச்சினைகள் ஒன்றும் உங்களுக்கு இல்லையே! யோசித்துப் பார்! நீங்கள் எவ்வளவு கொடுத்து வைத்தனீங்களென்று! பேரனோ, பூட்டனோ, கொப்பாட்டனோ, அன்றி அதற்கு முந்தியவனோ போட்டவேலி இன்றும் உங்களுக்குக் கைகொடுக்கின்றது. இதன் பெறுமதி உனக்குப் புரிகின்றதா? யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்கும் நம்மவர்கள் காணி எல்லைப் பிரச்சினை தொடர்பான வழக்குகளுக்கு மட்டும் எத்தனை லட்சம் ரூபாய் பணத்தை செலவீடு செய்கிறார்கள், தெரியுமா? எல்லைப் பிரச்சினையில் இருந்து ஆரம்பிக்கும் அடிதடி குத்துவெட்டுப் பிரச்சனைகளுடன் கூடிய கிரிமினல் வழக்குகளுக்கு எத்தனை லட்சம் பணம் செலவிடப்படுகிறது, தெரியுமா? அதனால் ஏற்படும் பகைமை, வெறுப்பு என்பன சமூகத்தில் எப்படிப்பட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்று தெரியுமா? இவையொன்றும் உங்களுக்கு இல்லையே! உண்மையிலேயே நீங்கள் கொடுத்து வைத்தனீங்கள் மச்சான்," என்று கூறியவன் தொடர்ந்து,

"இப்பொழுது அந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க மதில் கட்டுகிறார்கள். மதில் கட்டுவதன் பாதக விளைவு என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்று உனக்குத் தெரியுமா, கோவிந்? மாரி காலத்தில் வடிந்து செல்லவேண்டிய மேலதிக மழைநீர் தடைப்படுகிறது. இதனால் தேவையற்ற வெள்ளம். அத்தோடு காற்றோட்டம் தடைப்படுகின்றது, இதனால் தேவையற்ற வெப்பம். இவை வாழ்விடங்களின் சுவாத்தியத்தை நாசமாக்கின்றன. இவற்றை யாழ்ப்பாணத் தமிழன் உணர்வதில்லை. உணர்ந்தாலும் சுயநலம் காரணமாய் அவற்றைப்பற்றிக் கவலைப் படுவதில்லை,"

என்று சொல்லி முடித்ததும், எல்லாவற்றையும் நன்கு கிரகித்துக் கொண்ட கோவிந்,

"அருள், நீ சொல்வதெல்லாம் உண்மைதான் மச்சான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் கல்வேலிகளுக்கு ஒரு கதையுண்டு. நான் சொல்லுவதை சற்று கவனமாய்க் கேள்,"

என்று கூறிய கோவிந், தொடர்ந்து,

"நீ பல தடவை இவற்றைக் கல்வேலி கல்வேலி என்று உனது கதையின்போது சொன்னாயே! அது சரியான பதம் அல்ல இந்த வேலிக்கு. இவற்றை நாங்கள் பகிர் என்று அழைப்போம். சிலவேளைகளில் இவை விழுந்துவிட்டால் பகிர் விழுந்துவிட்டது, அந்தப் பகிரை திரும்பக் கட்டவேணும், இன்று நான் பகிர் கட்டப் போனனான், இப்படித்தான் நாங்கள் பேசுவோம்.

பகிர் என்ற சொல்லிற்குப் பல கருத்துக்களுண்டு. பொது வாக எல்லோரும் அறிந்த கருத்து 'பகிர்' என்றால் பகிர்ந்து கொள்வது என்பதைக் குறிக்கும். இந்த வேலிக்கும் இந்தக் கருத்திற்தான் இந்தப் பெயர் வந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதற்கான காரணங்கள் பல. நீ இப்போது பார்க்கும் இந்த பல்வேறு காணிகளிலுள்ள சிறுதானியப் பயிர்கள் தனித்தனியாக ஒவ்வொருவருக்கும் உரியதல்ல. ஒவ்வொரு காணியிலும் காணப்படும் இப்பயிர்கள் நாலு ஐந்து பேருக்குரியது. இதை அறுவடை செய்யும்போது அந்த நான்கு அல்லது ஐந்து பேரும் விளைச்சலைப் பகிர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வார்கள். காரணம் இந்தக் காணியை உழும்பொழுது, பகிர் கட்டிப் பயிரைப் பாதுகாக்கும் பொழுது, அருவி வெட்டும் பொழுது, சூடு அடிக்கும்பொழுது, தூற்றும்பொழுது, அந்தப் பங்காளிகள் தமது உழைப்பைப் பகிர்ந்து வழங்குவர். அதனால் விளைச்சல்களையும் பகிர்ந்து கொள்கின்றனர். இது ஒரு வகையான கூட்டு முயற்சி. இதுபோன்று இங்கு காணப்படும் பனைமரங்களிலிருந்து பெறப்படும் பனங்காயை அதன் பங்காளர்கள் பகிர்ந்து கொள்வார்கள். இத்தீவில் ஒரு காணித்துண்டிற்குப் பல பங்காளார்கள் இருப்பார்கள். இதனால் அதிலிருந்து பெறப்படும் பிரயோசனங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகின்றது. இது போன்று நான்கு பெண்கள் சேர்ந்து குறவை வடிக்கப் போனால் வடித்த குறவையை நான்காகப் பகிர்ந்து கொள்வார்கள். நான்கு பேர் சேர்ந்து கடலுக்கு மீன்பிடிக்கப் போகும்பொழுது பிடித்த மீனை தங்களுக்குள் பகிர்ந்து கொள்வார்கள். கிணறு வெட்டும்போது, வீடு கட்டும்போது, வீடுவேயும் போது, தோட்டம் இணைக்கும்போது பலர் சேர்ந்து தமது உழைப்பைப் பகிர்ந்தளிப்பர். பண்டைய காலத்திற் பணப் பரிமாற்றம் மிகமிக குறைவாயே காணப்பட்டது. இவ்வகை யான கூட்டு முயற்சியே இங்கு முக்கியம் பெற்றிருந்தது.

நீ பார்த்து ஆச்சரியப்பட்ட இந்தக் கல்வேலிகள் இருக்கே! இவையெல்லாம் பணம் கொடுத்துக் கட்டப் பட்டவையல்ல. மக்களின் உழைப்பைப் பகிர்ந்து கட்டப்பட்ட வைதான் இவைகள். நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால் இந்தத் தீவு மக்களின் வாழ்க்கைக்கும் "பகிர்" என்ற செயற்பாட்டிற்கும் நிறையவே தொடர்புண்டு. எல்லா வற்றுக்கும் மேலாக இயற்கையின் அன்பளிப்பான இந்த நிலத்தைப் பிரச்சினைகளின்றி மக்களிடையே பகிர்ந்துகொள் ளுவதற்கு உதவியதுதான் இந்த கல்வேலி. இதன் காரண மாகத்தான் என்னவோ இதற்குப் 'பகிர்' என்று பெயர் வந்திருக்க வேண்டும் என்பது எனது கருத்து,"

என்று சொல்லி முடிப்பதற்குள், இதைக் கேட்டு அதிர்ந்து போன அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ! அப்படியா! இதற்குள் இத்தனை விடயங்கள் இருக்கா? அற்புதமான விளக்கம்! இதற்கு யாரும் மறுப்புத் தெரிவிக்க முடியாது. இந்தப் பகிர் என்ற சொல்லு இத்தீவின் மக்களுடைய கூட்டு முயற்சியையும் கூட்டு வாழ்க்கையையும் தெட்டத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. இதற்கு மேல் நீ ஒன்றும் சொல்ல வேண்டியதில்ல. எல்லாம் எனக்கு நன்கு புரிகின்றது,"

என்று சொல்ல, சாறாப்பிட்டியை நோக்கி கோவிந் நடந்தான். சாறாப்பிட்டியை அடைந்ததும் புதிய நீர் விநியோகக் கிணற்றடியில் நின்றுகொண்டு,

"இந்த இடந்தான் அருள், இத்தீவின் நல்ல தண்ணீர்ப் பகுதி, இதன் பெயர் சாறாப்பிட்டி. இந்த இரண்டு கிணறுகளி லிருந்து நன்னீர் கிடைக்காத நடுக்குறிச்சி, கிழக்கூர்ப் பகுதிக ளுக்கு குழாய் மூலம் குடிநீர் அனுப்பப்படுகின்றது,"

என்று கூறிய கோவிந் தொடர்ந்து மற்றைய கிணறுகளையும் இடத்தையும் காட்டினான். அப்பொழுது நல்ல தண்ணீர்க் கிணற்றிற்கு அருளை அழைத்துச் சென்ற கோவிந்,

"இந்தக் கிணற்றுத் தண்ணீரைக் குடித்துப் பார் மச்சான்,"

என்று கூறிவிட்டு தண்ணீரை அள்ளி ஊற்றினான். கை மண்டையில் ஏந்திக் குடித்த அருள் நன்கு குடித்துவிட்டு,

"போதும் மச்சான், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நான் போன இடங்களிலெல்லாம் தண்ணீர் குடிக்கத் தவறவில்லை. ஆனால் இப்படி ஒரு நல்ல தண்ணீரை எங்கும் குடித்திருக்க வில்லை. இப்படியான ஓர் அற்புத தண்ணீரைக் கொண்டி ருக்கும் நெடுந்தீவைப் பார்த்து தண்ணீரற்ற ஊரென்று சொல்லுறாங்களே!"

என்று கூறிவிட்டுக் கேள்விக்குறி கலந்த பார்வை பார்த்தான். அருளினுடைய பார்வையிலிருந்து அவனுடைய எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"அப்படிக் கூறுவதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கின் றது. ஏனென்றால் ஏறக்குறைய முப்பத்தைந்து சதுர மைல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைக் கொண்ட இத்தீவிற்கு இந்த ஒரு கிணறுமட்டும் எப்படி மச்சான் தண்ணீர் வழங்க முடியும்? முடியாது. எனினும் இது ஓர் அற்புதமான தண்ணீர். இந்த தண்ணீரைக் குடித்தால் ஒருசில மணித்தியாலத்திற்குப் பசியே எடுக்காது. இதை நான் மட்டுமல்ல இத்தீவின் பெரும்பாலான மக்களே சொல்லுகிறார்கள். ஆனால் அயலிலுள்ள மற்றைய கிணறுக ளிருக்கே, அவற்றிலிருந்து கிடைக்கும் தண்ணீர் இவ்வளவு தரமானதல்ல. இருந்த போதும் அவையும் நல்ல தண்ணீர்தான்,"

என்று கூறிவிட்டு எல்லா இடத்தையும் காட்டினான். எல்லாவற் றையும் நன்கு கூர்ந்து அவதானித்த அருள் ஆச்சரியத்தோடு,

"இந்தக் கிணறுகளைக் கிண்டியவர்கள் யார்? மேல் மட்டத்திலிருந்து கீழ் மட்டம் வரை ஒரே கோழாங்கற் பாறையாயிருக்கே மச்சான்!"

என்று கேட்டதும்,

" நல்ல கேள்வி மச்சான். இத்தீவில் பிறந்து வளர்ந்த என்னுடைய மனதிலேயேயும் இந்தக் கேள்வி ஏற்பட்டது. நான், என்னுடைய வயதினர் சிறுவர்களாக இருந்தபொழுது, இதே கேள்வியைக் கேட்டோம். எங்களுடைய வயதினருக்குப் பெற்றோர் சொன்ன பதில் என்ன தெரியுமா? அவற்றைப் பூதங்கள் பொழிந்தனவாம் என்பதாகும். அந்தப் பூதங்களை யார் வைத்திருந்தினர்? என்ற கேள்விக்கு அவர்கள் கூறிய பதில் அந்தக் காலத்து இராசாக்கள் என்பதாகும். தற்காலம் போன்று வெடிமருந்து எதுவுமில்லாத அந்த காலத்தில் எப்படி இந்தக் கிணறுகளைக் கிண்டினார்கள் என்று யோசித்தபொழுது, அவர்கள் கூறியது சரிபோன்று தான் அந்தச் சிறிய வயதிற் தென்பட்டது. இப்பொழுதுதான் தெரிகின்றது எங்களுடைய மக்களிடையே சில பூதங்களும் இருந்திருக்கின்றனவென்று,"

எனச் சொன்னதும் விழுந்துவிழுந்து சிரித்தான் அருள். தான் கூறியதன் அர்த்தத்தைச் சரியாகப் புரிந்துகொண்டுதான் அருள் சிரிக் கிறான் என்பதை உணர்ந்த பொழுது ஏற்பட்ட சிரிப்பைக் கோவிந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தமுடியவில்லை. அப்புறம் ஒருவாறு வலிந்து நிறுத்திக்கொண்டு சிறிது தூரம் மேற்குத் திசையாக அருளை அழைத்துச் சென்ற கோவிந் அங்கு அழிந்த நிலையிற் காணப்பட்ட சில கால்வாய்களையும், தொட்டிகளையும், கேணியையும் காட்டி,

"இவைதான் ஒல்லாந்தர் தமது குதிரைகளுக்குத் தண்ணீர் வழங்கிய இடங்கள். இவை குதிரைகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்கென்றே கட்டப்பட்டிருக்க வேண்டும். குதிரைகளுக்குத் தண்ணீர் கொடுப்பதற்குச் சிறந்த வசதிகளைச் செய்திருக்கின்றனர் என்பது இவற்றிலிருந்து புலனாகிறது. இருந்த போதும் இவற்றை மட்டும்தான் எம்மால் இப்போது பார்க்க முடிகிறது,"

என்று கூறிவிட்டு மேலும் சிறிது தூரம் மேற்குப் பக்கமாகச் சென்ற கோவிந் அங்கு காணப்பட்ட சில பெரிய தூண்களைக் காட்டி,

"இந்த இடத்தின் பெயர் தூண்காலை. இது ஒல்லாந்தர் காலத்தில் அவர்களுடைய குதிரை லயம்களாக இருந்தன. காலகதியில் இவை அழிந்துபோக இந்தத் தூண்களை மட்டும் இப்போது எம்மால் பார்க்க முடிகின்றது. இவைதான் இன்று வரையுள்ள ஒல்லாந்தரின் வரலாற்றுச் சின்னங்கள். ஒல்லாந்தர் குதிரைகளுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக சில கிணறுகளையும் கிண்டியிருக்கிறார்கள் போலும் என்று எண்ணத் தோன்றுகின்றது. எனக்கு எல்லாம் வடிவாய்த் தெரியாது. அறிந்தவற்றை மட்டும் சொல்லுகிறேன், பிரதான குதிரை லயம் இங்குதான் இருந்திருக்க வேண்டும். தில்லை மதவுக்கு வடக்குப் பக்கமாய், வட கடலுக் கரைப்பகுதியிலும் ஒரு தூண்காலை இருந்தது, அது பெருமளவு அழிந்துவிட்டது. எனக்குத் தெரியக் கூடியதாகப் பல தூண்கள் அங்கு இருந்தன. அவை இப்போது நன்கு சிதைவடைந்து காணப்படுகின்றன. நீ விரும்பினால் அதையும் ஒரு நாளைக்குப் போய் பார்க்கலாம்," என்று கூறிய கோவிந் தொடர்ந்து சிறிது தூரம் வடமேற்குத் திசையாய் அருளை அழைத்துச் சென்று ஒரு தோட்டத்தினுள் நுழைந்ததும்,

"நாம் இப்போது பார்க்கவிருப்பது நாற்பதடி மனிதனுடைய பாதச் சுவடு,"


என்றான். இதைக் கேட்டதும் அருளுக்குப் பெரும் ஆச்சரியமாகப் போய்விட்டது. உடனே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(38) சாறாப்பிட்டி நன்னீர்க் கிணறு, நெடுந்தீவு.



(39) சாறாப்பிட்டி நீர் விநியோகக் கிணறு, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(40) ஒல்லாந்தர் குதிரைகளின் குடிநீரக் கால்வாய்.
(அழிந்த நிலையில்) சாறாப்பிட்டி, நெடுந்தீவு.



(41) ஒல்லாந்தர் குதிரைகளின் குடிநீரக் கால்வாய்.
(அழிந்த நிலையில்) சாறாப்பிட்டி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மச்சான் சொல்லுகிறாய்! நாற்பதடி மனிதனுடைய பாதச்சுவடே! என்ன, பகிடியா விடுகிறாய்? நாற்பதடி மனிதன் இந்த ஊரில் இருந்தவனே?"

என்று ஒரு சந்தேகப் பாணியிற் கேட்டான் அருள். நண்பன் அவ்வாறு எண்ணுவதிலும் தவறில்லை என்று கருதிய கோவிந்,

"நாற்பதடி மனிதன் இந்த ஊரில் இருந்தானோ? அல்லது இருக்கவில்லையோ? என்பதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆனால் நாற்பதடி மனிதனுடைய பாதச் சுவடு ஒரு கோளாங்கல்லில் பதிந்துள்ளது என்று மக்கள் சொல்லு கிறார்கள். நானும் அதைப் பல தடவை பார்த்தேன். பாதச்சுவடு இருப்பது மட்டும் உண்மை. முதலில் அங்கு போய் அதைப் பார்ப்பம். அதைப் பார்த்த பிற்பாடு வேண்டு மென்றால் நீ அதைப்பற்றி ஆராட்சி செய், அது உன்னைப் பொறுத்தது,"

என்று கூறிக்கொண்டு முன் நடந்தான். அருள் பின் தொடர்ந்தான். முன் சென்ற கோவிந் அந்தத் தோட்டத்தின் தென்மெற்குப் பக்கமாய் உள்ள ஒரு கோளாங்கற் பாறையிற் பதிந்திருந்த பாதச்சுவடுகளைக் காட்டி,

"இதைத்தான் அருள் நாற்பதடி மனிதனுடைய பாதச் சுவடுகள் என்கிறார்கள். பாதச் சுவடுகளில் சிதைவுகள் ஏற்பட்டிருப்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய விடயம்தான். பல்லாயிரம் வருடங்களைக் கொண்ட பாதச் சுவடுகளிற் சிதைவு ஏற்படுவது என்பது புதினமல்ல. இருந்தபோதும் நல்லவடிவாய்ப் பார், தேவைப்பட்டால் அப்புறம் ஆராட்சி செய்யலாம்,"

என்றான் ஒரு புன்சிரிப்போடு. பலதடவை பல கோணங்களில் நின்று நன்கு உற்றுப் பார்த்த அருள் சிறிது ஆழமாக யோசித்துவிட்டுச் சற்று வியப்புடன்,

"இதில் உண்மை இல்லை என்றும் சொல்ல முடியாது மச்சான். பாதச் சுவடுகள் போன்றுதான் தென்படுகின்றன. சிதைவுகள் ஏற்பட்டிருப்பதை நாம் பெரிதுபடுத்த முடியாது. நீ கூறியதுபோன்று பல்லாயிரம் வருடங்களுக்கு முந்திய பாதச் சுவடுகளிற் சிதைவுகள் ஏற்படுவது விசித்திரமல்ல. உலகத்திலே இது போன்று பல புதினங்கள் உண்டு. அவற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுள் ஒன்றாக இதையும் ஏற்றுக்கொள்வதென்பது முடியாத விடயமல்ல,"

என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட கோவிந்,

"சிவனொளிபாத மலையில் சிவனுடைய பாதம் பதிந்துள்ளது என்பதை மக்கள் நம்பிக்கொண்டு அங்கு போய் வருகின்றனர். அவற்றையெல்லாம் விஞ்ஞான ஆராட்சிக் கெடுத்தால் சர்ச்சைக்குரிய விடயமாய் மாறிவிடும். நம்பிக்கை என்ற அடிப்படையில் அது ஒரு புனிதஸ்தலம். அதனாற் பயன் பெறுவோர் அநேகர். மனித வாழ்க்கையே நம்பிக்கை என்ற சக்தியிற்தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. ஆனபடியால், இதை விஞ்ஞான ஆராட்சிக்கு எடுக்காமல் நம்பிக்கொள்ளுவம். அதனாற் பெரிய பிரயோசனங்கள் ஏற்படா விட்டாலும் சிறிய மனநிறைவாவது ஏற்படட்டுமேன்! எப்படி இருக்கு நான் சொல்வது?"

என்று கூறிவிட்டு விழித்துப்பார்த்தான் அருளை. தன்னிடமிருந்து நண்பன் என்னத்தை எதிர்பார்க்கிறான் என்பதை உணர்ந்து கொண்ட அருள்.

"எதையும் நுனுக்கமாக ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டால், முடிவு பூச்சியமாகத்தானிருக்கும். ஆனபடியாற் தேவையற்ற ஆராட்சியை விட்டுவிட்டு மக்கள் சொல்லுவதை நம்புவம். நாற்பதடி மனிதனுடைய பாதச் சுவடுகளை நானும் நெடுந்தீவிற் பார்த்தேன் என்று சந்தோஷப்பட்டுக் கொள்கிறேன். அதில் எமக்கு என்ன குறையப் போகிறது. ஒன்றும் குறையாது. எமது பிரயாணத்துக்கு ஓர் அர்த்தம் கிடைத்தது என்ற திருப்தியுடன் போகலாமல்லே! அப்படியே எண்ணிக் கொள்ளுவம்,"

என்று கூறிவிட்டு,

"கிளம்புவமா?"

என்றான் அருள். "கிளம்புவம்," என்று கூறிய கோவிந்,

"அடுத்ததாக நெடுந்தீவு தென்மேற்குக் கரையில் அமைந்துள்ள ஒரு சேச்சைப் பார்க்க வேண்டும். அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(42) சாறாப்பிட்டிக் கேணி, நெடுந்தீவு.



(43) ஒல்லாந்தர் தூண்காலை, (அழிந்த நிலையில்)
சாறாப்பிட்டி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(44) ஒல்லாந்தர் தூண்காலை(அழிந்த நிலையில்)
சாறாப்பிட்டி, நெடுந்தீவு.



(45) ஒல்லாந்தர் தூண்காலை(அழிந்த நிலையில்)
சாறாப்பிட்டி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மக்கள் லோறஞ்சியார் கோயில் என்று அழைப்பர். அது ஒரு றோமன் கத்தோலிக்க தேவாலயம், அது இருக்கு மிடம் அவ்வளவு தூரமில்லை, கிட்டத்தானிருக்கு. இங்கிருந்து பத்துப் பதினைந்து நிமிடத்தில் நடந்து போய்விடலாம்,"

என்று கூறிக்கொண்டு சிறிது வேகமாக நடந்தான். தேவாலயத்தை அடைந்ததும் முகப்பில் நின்றுகொண்டு,

"இதுதான் அருள் நான் சொன்ன லோறஞ்சியார் கோயில். இது றோமன் கத்தோலிக்கருடைய தேவாலயமாக இருந்த போதும், சைவ சமயத்தவரும் நம்பிக்கையுடன் வழிபடும் வழக்கம் உண்டு. நெடுந்தீவு மேற்கில் கிறிஸ்தவர் கள் மிக மிகக் குறைவு. பெரும்பாலான கிறிஸ்தவர்கள் நடுக்குறிச்சி யிற்தான் இருக்கிறார்கள். சிறிதளவு கிறிஸ்தவர் கள் கிழக் கூரிலும் இருக்கின்றார்கள். இங்கு வருடாந்த உற்சவம் பத்து நாட்களுக்கு நடைபெறும். அந்நாட்களில் விசேடமாய் அவர்கள் வந்து லோறஞ்சியாரை வழிபடுவது வழக்கம். இந்தத் தேவால யத்தில் ஓர் அதிசயம் நிகழ்வதுண்டு. அதாவது வருடாந்த உற்சவத்தின் பத்தாவது நாளில் மதியம் பன்னிரண்டு மணிக்குத் திருப்பலிப் பூசை நிறைவுறும் வேளையில் எல்லோரும் நிலத்தில் சிறிய கிடங்கு தோண்டு வார்கள். அப்பொழுது அந்தக் கிடங்குகளிலிருந்து கரித்தூள் கிடைக்கும். அதை எடுத்து சிலுவை போன்று நெற்றியில் இட்டுக் கொள்வார்கள். அந்தப் பன்னிரண்டு மணியிலிருந்து சில நிமிடங்களுக்குப் பிற்பாடு அந்தக் கரித்தூளை நாங்கள் பெறமுடியாது. எக்காரணம் கொண்டும் பெற முடியாது. பலர் வேறு நாட்களில் வேறு வேறு நேரங் களில் பலமுறை முயற்சி செய்து பார்த்தனர், அது கிடைக் கவில்லை. அதனால் அந்தக் கரித்தூள் கிடைக்கும் நிகழ்வு ஓர் அற்புதமாகவே எல்லோராலும் கரு தப்படுகின்றது. இதை லோறஞ்சியாரால் நிகழ்த்தப்படும் ஓர் அற்புதமாகவே மக்கள் கருதுகின்றனர்.

லோறஞ்சியாரின் அருளால் பலருடைய வாழ்க்கையில் சில ஆச்சரியப்படத்தக்க நிகழ்வுகள் நடந்துள்ளதாகவும் மக்கள் பேசிக்கொள்கின்றனர். இதனால் இத்தேவாலயத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு இவ்வூர் மக்களிடையே ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு என்றால் மிகையாகாது,"

என்று சொல்லிக்கொண்டு போகக் கரித்தூள் வரும் கதையைக் கேட்டு ஆச்சரியமடைந்த அருள்,

"நீ சொல்வதைப் பார்த்தால் வருடாந்த உற்சவத்தின் போது பத்தாவது நாளில் மதியம் பன்னிரண்டு மணிக்கு நடக்கும் திருப்பலிப் பூசையைத் தொடர்ந்து சில நிமிட இடைவெளியிற்தான் அந்தக் கரித்தூள் கிடைக்கிறது, அப்படித்தானே?"

என்று விழித்துக் கேட்டான்.

"ஆமா! அப்படியேதான்!! அதன்பிற்பாடு எக்காரணம் கொண்டும் அதைப் பெறமுடியாது," என்றதும்,

"அப்படியா! அப்படியானால் அது ஆச்சரியப்பட வேண்டிய விடயந்தான். அது இறைவனால் நிகழ்த்தப்படும் அற்புதம் என்று மக்கள் நம்புவதிற் தப்பொன்றுமில்லை. கதையைக் கேட்கவே ஆச்சரியமாயிருக்கு. அப்படியானால் கரித்தூளைப் பார்ப்பவர்களுக்கு அது அற்புதமாய்த் தென்படுவதிற் தப்பொன்றுமில்லை. இவ்வாறு எத்தனையோ அற்புதங்கள், அதிசயங்கள் எங்கெங்கோவெல்லாம் பரந்து கிடக்கின்றன,"

என்று அருள் சொல்லிக் கொண்டு போகக் குறுகிக்கிட்ட கோவிந்,

"இந்தத் தேவாலயம் சம்பந்தமாய் நான் அறிந்த இன்னொரு அற்புதம் : அதாவது எனது பெரியப்பாவிற்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. பிறந்து சில மணித்தியாலத்தில் அக்குழந்தை இறந்து விட்டது. அதைப் புதைப்பதற்கு எடுத்துச் சென்ற பொழுது, அதாவது இத்தேவா லயத்தின் முன்னால் சென்று கொண்டிருந்தபொழுது, அந்தக் குழந்தை அசைந்து அழுததாம், அதாவது அக்குழந்தை மறுபடியும் உயிர்த்து விட்டது.

எனது பெரியப்பா குடும்பத்தினர் சைவசமயத்தைச் சேர்ந்தவர்கள். அப்படியிருந்தபோதும் அவர்கள் அந்த அற்புதத்தால் ஈர்க்கப்பட்டு அற்புதக் குழந்தையை மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(46) ஒல்லாந்தர் தூண்காலை (அழிந்த நிலையில்)
சிறாப்பிட்டி, நெடுந்தீவு.


(47) ஒல்லாந்தர் தூண்காலை (அழிந்த நிலையில்)
சிறாப்பிட்டி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(48) நாற்பதடி மனிதன் பாதச்சுவடு, சாறாப்பிட்டி, நெடுந்தீவு.



(49) நாற்பதடி மனிதன் பாதச்சுவடு, சாறாப்பிட்டி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தோலிக்க மதத்திற் சேர்த்து, பிற்காலத்தில் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த ஒரு மாப்பிள்ளைக்கே தமது மகளைத் திருமணம் செய்தும் கொடுத்தனர்,"

என்றதும்,

"அப்படியா விசயம்! கேட்பதற்கு இதுவும் சுவாரஸ்யமும் அற்புதமும் நிறைந்த கதைதான். அற்புதம் என்பது ஒவ்வொருவருக்கும் கிடைக்கும் தனிப்பட்ட அனுபவம் தானே! ஆனபடியால் உங்கள் பெரியப்பா செய்ததில் தப்பொன்றுமில்லை,"

என்று கூறிய அருள் சிறிது யோசித்துவிட்டு,

"அதுசரி.... கரித்தூள் வருகின்ற கதை சொன்னாயே?"

என்றதும்,

"ஆமா!"

என்றான் கோவிந். கதையைத் தொடர்ந்த அருள்,

"நீ எப்பொழுதாவது அந்தக் கரித்தூளைப் பெற்று நெற்றியிற் பூசியிருக்கிறாயா?"

என்று ஒரு நக்கற் சிரிப்புடன் கேட்டான்.

"நீ இந்தக் கேள்வி கேட்பாய் என்று ஏற்கனவே யோசித்தேன். நீ இதை தாமதமாய்க் கேட்கிறாய். எப்படி இருந்தபோதும் நான் பதில் சொல்லித்தானே ஆகவேண்டும். உண்மைச் சொன்னால், நான் கிண்டி எடுத்துப் பூசவில்லை. மற்றயவர்கள் எடுத்துத் தந்த கரியைப் பூசியிருக்கிறேன்,"

என்றான்.

"அப்படியா?"

என்று கேட்ட அருள் தொடர்ந்து, மேலும் யோசித்துவிட்டு,

"அப்போது உனக்கு எத்தனை வயது?"

என்று கேட்டான்.

"பன்னிரண்டு வயது. அப்பொழுது அந்த அற்புதத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் எனக்குப் புரிந்திருக்கவில்லை. அதன் காரணமாய் கிடங்கு தோண்டிக் கரித்தூள் எடுத்துப் பூசும் அளவிற்கு நான் முயற்சிக்கவில்லை. அத்தோடு சைவ சமயத்தவர்கள் அதை எடுத்துப் பூசுவதில் ஆர்வம் காட்டுவது குறைவாயிருந்ததையும் நான் அவதானித்திருக்கிறேன்,"

என்று சொல்லி முடித்த வேளையில்,

"அந்த உற்சவ தினத்தன்று நானும் இங்கு வந்து அந்த அற்புதத்தை நேரிற் பார்க்க வேண்டும்போற் தோணுது,"

என்று சொல்லிவிட்டு,

"என்ன மாதத்தில் அந்த வருடாந்த உற்சவம் நிகழ்வது?"

என்று கேட்டான் அருள்,

"ஆவணி மாதத்தில்,"

என்று கோவிந் பதில் கூற,

"சரி.... முடிந்தால் ஒரு தடவை முயற்சி பண்ணிப் பார்ப்பம்,"

என்று கூறிவிட்டு,

"வேறு ஏதும் அற்புதங்கள் உண்டா?"

என்று ஆர்வத்தோடு கேட்டான் அருள். அப்பொழுது கோவிந்தின் அம்மா கோவிந்திற்குச் சொன்ன கதையொன்று ஞாபகத்திற்கு வந்தது. உடனே,

"ஓம் மச்சான், அற்புதம் ஒன்று இருக்கு மச்சான்,"

என்று கூறிய கோவிந் தொடர்ந்து,

"எனது அம்மா எனக்குச் சொன்ன கதை: நான் அம்மாவின் வயிற்றில் இருந்த காலத்தில் சில நாட்கள் துடிக்கவில்லையாம். பிள்ளை வயிற்றுக்குள் இறந்து விட்டதோ என்று அஞ்சிய அம்மா உடனே 'லோறஞ்சியாரே எனது பிள்ளையைக் காப்பாற்று, பிள்ளை பிறந்தபின் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(50) லோறஞ்சியார் தேவாலயம், நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.



(51) சாறாப்பிட்டி அரசினர் பாடசாலை, நெடுந்தீவு மேற்கு, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(52) கரமத்தைக் கந்தசுவாமி கோயில்,நெடுந்தீவு



(53) கரமத்தைக் கந்தசுவாமி கோயில்,நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையும் உன் தேவாலயத்தில் ஐந்து நாட்கள் அடைக்கலம் இருக்கிறோம்,' என்று நேத்தி வைச்சாவாம். மறுநாள் பிள்ளை வழமைபோன்று துடிக்கத் தொடங்கியது. அப்புறம் குழந்தை உரிய நேரத்தில் நலமே பிறந்தது,"

என்று கூறி முடிக்க இதைக் கேட்ட அருள் ஒரு புன்சிரிப்புடன்,

"நம்பிக்கைதான் கடவுள். வேதம், சைவம், இஸ்லாம் என்று இறைவன் ஒருபோதும் யாரையும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. மனிதன் தான் அவ்வாறு வேறுபடுத்திப் பார்க்கிறான். தூய்மையான வாழ்க்கை வாழ்ந்து ஆத்மசுத்தியோடு, முழு நம்பிக்கையோடு வழிபடுபவனுக்கு, வேண்டுபவனுக்கு இறைவன் அருள் பாலிக்கிறான். இறைவன் ஒருவனே, அவன் யாருக்கும் எந்தப் பாகுபாடும் காட்டுவதில்லை. இதுதான் உண்மை. இதைப் புரிந்தவர்கள் சிலர். புரியாதவர்கள் பலர். புரிந்தும் புரியாதவன்போல் நடிப்பவர்கள் இன்னும் சிலர். எது எப்படியிருப்பினும் இந்தத் தேவாலயத்தைப் பற்றி நீ கூறிய விடயங்கள் அற்புதமானவை, மனதிற்கு இதமானவை. லோறஞ்சியார் என்னையும் அழைத்து தன்னுடைய அற்புதங்களை அறியப் பண்ணியுள்ளார் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. அதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்,"

என்று கூறிமுடித்த அருள்,

"அடுத்த அற்புதம் எங்குண்டு?"

என்று ஆர்வத்தோடு கேட்டான்.

"வா காட்டுகிறேன் அடுத்த அற்புதத்தை," என்று கூறிய கோவிந் தொடர்ந்து நடந்தான். அந்த வேளையிற் கந்தசுவாமி கோவிலை அடைந்ததும் திடீரென்று விழுந்து வணங்கிய கோவிந் எழுந்து,

"இது எங்களுடைய முருகன் கோவில். இதன் பெயர் "கரமத்தைக் கந்தசுவாமி கோவில்" என்பதாகும். கரமத்தை என்பது இந்த இடத்தின் பெயர். அதன் அடிப்படையிற் தான் இந்தப் பெயர் இந்தக் கோவிலுக்கு அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவில் முதன்முதலிற் கட்டப்பட்டு மஹோற்சவம் நடைபெற்ற கோயில் இந்த முருகன் கோயில்தான் என்று சொல்லப்படுகின்றது,"

என்று கூறியதும் உடனே விழுந்து வணங்கிய அருள் எழுந்து,

"முருகன் என்றால் எனக்கு ரொம்பப் பிரியம். அவன் எங்கிருந்தாலென்ன அவன் அவனே! அவனே பிரம்மம், அவனே சத்தியம், அவனே தர்மம் என்பதுதான் எனது நம்பிக்கை,"

என்றதும் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்த கோவிந்,

"டேய், இதற்குள்ளேயே உனக்கு ஆன்மீகம் வந்து விட்டதா?"

என்றான்.

"இதை ஆன்மீக வளர்ச்சியென்று சொல்லிவிட முடியாது. இறைவன் மீது கொண்டிருக்கும் ஓர் இனம் தெரியாத பற்றுத்தான்,"

என்றான் அருள்.

"சரி..... எது என்னவானாலும் இறை நம்பிக்கை, இறைபக்தி வரவேற்கப்பட வேண்டிய விடயம்தானே!"

என்று சொல்லிக்கொண்டு தொடர்ந்து நடந்தான் கோவிந். பிள்ளையார் கோயிலை அடைந்ததும் அதைக்காட்டி,

"இதுதான் அருள், நெடுந்தீவு மேற்கில் அமைந்துள்ள பிள்ளையார் கோவில். இதன் பெயர் நெழுவினிச் சித்தி விநாயகர் ஆலயம். இந்த இடத்திற்குப் பெயர் நெழுவினி. அதன் அடிப்படையிற்தான் இந்தப் பெயர் கிடைத்துள்ளது. இத்தீவில் தவறாது கிரமமாய் வருடாந்த மகோற்சவம் நடைபெறும் கோவில்களில் இக்கோவில் முதன்மை வாய்ந்தது. இதில் குடிகொண்டுள்ள சித்திவிநாயகர் மிக அற்புதம் வாய்ந்தவர் என்று எமது மக்கள் நம்புகிறார்கள். நான் மக்களிடமிருந்து கேள்விப்பட்ட ஓர் அற்புதம்: (இரவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநிசியில் வெளிச்சம், மணி ஓசையுடன் பூசை நடைபெற்ற நிகழ்வுகளைச் சிலர் பார்த்து ஆச்சரியம் அடைந்ததுடன் அவர்கள் வீழ்ந்து வணங்கியதாயும் கூறினார்கள்,"

என்று சொன்னதும்,

"நீ சொல்லும் கதையைக் கேட்கும்போது எனது உடம்பெல்லாம் புல்லரிக்கின்றது,"

என்று கூறிய அருள். உடனே கோபுர வாசலுக்குச் சென்று வீழ்ந்து வணங்கினான். அவனைத் தொடர்ந்து கோவிந்தும் வீழ்ந்து வணங்கிவிட்டு மேற்குப் பக்கமாய் நடக்கத் தொடங்கினான். அப்பொழுது அருகிலிருந்த பாடசாலையைக் காட்டி,

"இது இத்தீவின் மிகப் பழமைவாய்ந்த பாடசாலை. இதன் பெயர் சைவப்பிரகாச வித்தியாசாலை. சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பொழுது எனக்கு இன்னுமோர் விடயமும் ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது, ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சைவசமயத்திற்கு யாழ்ப்பாணத்தில் பேராபத்து வந்தபோது சைவ சமயத்தைக் காப்பாற்ற ஆறுமுகநாவலர் எடுத்த பெருமுயற்சிகளில் ஒன்றுதான் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள். அந்தப் பெயரைத் தாங்கியதுதான் இந்தப்பாடசாலையும்,"

என்று கூறியபொழுது

"அப்படியா!"

என்று சொன்ன அருள், நான்கு திசைகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு,

"இது ஓர் அழகான இடம் கோவிந், பார்ப்பதற்கு மிகவும் ரம்மியமாய் இருக்கின்றது,"

என்று கூறியதும்,

"நீ கூறுவதில் அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது. நானும் பல தடவை இந்த இடத்தைப் பார்த்து ரசித்திருக்கிறேன்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறிவிட்டு தொடர்ந்து நடந்தான் கோவிந். அப்பொழுது நெழுவினி நீர்த்தேக்கத்தைப் பார்த்த அருள் கோவிந்தை முந்திக்கொண்டு,

"மறுபடியும் ஒரு நீர்த்தேக்கமா!"

என்றான். நண்பனுடைய கூற்றிலிருந்து அவனுடைய மனோநிலையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"ஓம் மச்சான், இதன் பெயர் நெழுவினி. இது ஆடி, ஆவணி மாதங்களில் முற்றாக நீர் வற்றி வரண்டு போய்விடும். அப்பொழுது இதன் நடுவில் உள்ள கிணறுகளும், கேணிகளும் பெரும் பிரயோசனமாய்க் காணப்படும்,"

என்று கூறிக்கொண்டு தொடர்ந்து நடக்க, அந்தவேளையில் ஐந்து வட்டுப் பனையைப் பார்த்த அருள் கோவிந்தை முந்திக்கொண்டு,

"அங்கபார் கோவிந், ஐந்து வட்டுப் பனையை! என்ன அற்புதம்!! என்னுடைய வாழ்க்கையில் இதுதான் மச்சான் முதல் முறையாக இப்படி ஓர் அற்புதப் பனையைப் பார்ப்பது,"

என்று சொல்லிக்கொண்டு அதன் அருகிற் சென்றான். அதை ஏற இறங்க நன்கு பார்த்து இரசித்தான். அப்புறம் நடையைத் தொடர்ந்த கோவிந், தபாற் கட்டைச் சந்தியால் தெற்குப் பக்கமாய்த் திரும்பி அண்மையிலிருந்த வயிரவர் கோவிலுக்கு அருளை அழைத்துச் சென்றான். அங்கு காணப்பட்ட அரசமரத்தைக் காட்டி,

"அங்க பார் அருள் அந்த அரசமரத்தை,"

என்றதும் அதைப் பார்த்து ஆச்சரியமடைந்த அருள் வாயில் கையை வைத்துக்கொண்டு,

"என்ன கோவிந், எப்படி இந்த அரசமரம் இப்படி வளர்ந்திருக்கு! பார்க்க ரொம்ப ஆச்சரியமாயிருக்கே!! இப்படி ஒரு அரசமரத்தை இதுவரை நான் பார்த்ததேயில்லை! இதைச் சிங்களப் பிக்குகள் பார்த்தால் புத்தர் சிலையைக் கொண்டு வந்து வைத்து விடுவாங்களே! மை கோட்!!"

என்று ஆச்சரியப்பட, அருளின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(54) கரமத்தைக் கந்தசுவாமி கோயில், நெடுந்தீவு.



(55) கரமத்தைக் கந்தசுவாமி கோயில், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(56) கரமத்தைக் கந்தசுவாமி கோயில் முன்றல், நெடுந்தீவு



(57) நெழுவினிப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ நினைப்பது சரிதான் அருள். இது கடவுளின் அருள்தான். இந்த அரசமரத்திற்குக் கீழ் அமர்ந்திருப்பவர் ஞானவயிரவர். இதைப் புக்காட்டு வயிரவர் கோவில் என்று மக்கள் அழைப்பார்கள். புக்காடு என்பது இந்த இடத்தின் பெயர். அதனால் இவரைப் புக்காட்டு வயிரவர் என்று அழைக்கின்றனர். நீ சொன்னது போன்று பிக்குகள் புத்தர் சிலையை வைக்க முயற்சித்தார்கள். ஆனால், அவன்களுடைய முயற்சி ஏற்கனவே அமர்ந்திருக்கின்ற ஞானவயிரவரின் அருளால் கைகூடவில்லை. அதுகும் ஓர் அற்புதம்தான்,"

என்று சொன்ன பிற்பாடும், எப்படி அவரை வணங்காது போக முடியும் அருளால்! விழுந்தான் எதிர்பாராதவிதமாய். சில விநாடிகள் கழித்து எழுந்த அருள்,

"இத்தீவில் இத்தனை அற்புதங்களா! கேட்கவும் பார்க்கவும் பிரமிப்பாயிருக்கின்றதே!"

என்று பேசிக்கொண்ட அருள்,

"அடுத்த அற்புதம் எங்க?"

என்று கேட்டுக்கொண்டு கோவிந்தை விழித்துப் பார்த்தான். நண்பனுடைய பார்வையிலிருந்து அவனின் ஆர்வத்தையும் எதிர்பார்க்கையையும் உணர்ந்துகொண்ட கோவிந் திரும்பப் பிரதான வீதிக்குச் சென்று மேற்குத் திசைநோக்கித் தொடர்ந்து நடந்தான். அருளும் சுறுசுறுப்புடன் நடந்தான். மேற்குக் கரையை அடைந்ததும்,

"இதுதான் அருள் இத்தீவின் மேற்குக்கரை. இந்த இடத்தின் பெயர் பெரியதுறை. இது இத்தீவின் மேற்குக் கரையில் அமைந்துள்ள இயற்கையான நுழைவாயில். பண்டைக்காலத்தில் இந்த நுழைவாயிலைப் பயன்படுத்தித்தான் பல கடற்போக்குவரத்துக்கள் நடைபெற்றுள்ளன. அதனால் இதற்குப் பெரியதுறை என்ற பெயர் கிடைத்துள்ளது. இது இத்தீவின் ஒரு முக்கிய மீன்பிடித் துறையாகவும் பயன்படுகின்றது,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியபொழுது கடலில் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பலைப் பார்த்த அருள்,

"அங்கபார் மச்சான், கப்பலொன்று போய்க் கொண்டிருக் கிறது!"

என்று சிறிது ஆச்சரியம் கலந்த தொனியிற் சொன்னான். நண்பனின் தொனியிலிருந்து அவனது மகிழ்ச்சியை அவதானித்த கோவிந்,

"ஓம் மச்சான், நீ சொல்வது சரிதான். ஆனால் இது சரக்குக் கப்பலில்லை. இது சிலோன் நேவி. அதாவது இது இலங்கைக் கடற்படைக் கலம். கடற்பிராந்திய காவற் சுற்றுக் கடமையின் ஓர் அம்சமாகப் போய்க் கொண்டிருக்கி றாங்கள். அடிக்கடி இவ்வாறு வந்து போவான்கள்,"

என்றதும்,

"ஓ! அப்படியா விசயம்!! சரி... சரி... நம்மளை ஒன்றும் செய்யமாட்டாங்களே?"

என்று பயம் கலந்த தொனியில் கேட்டான். நண்பனின் கேள்வியின் தொனியிலிருந்து அவன் பயப்படுகிறான் என்பதை அறிந்து கொண்ட கோவிந்,

"நோ...நோ... அப்படியொன்றும் செய்யமாட்டாங்கள். ஆனால் இது ஒரு பயங்கரமான பீரங்கிப்படகு. அங்கபார், மேற்தட்டில் பல பீரங்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் இணைக் கப்பட்டிருக்கின்றன. இது சீனாக்காரன் கொடுத்த பீரங்கிக் கடற்கலன். மிகவும் சக்தி வாய்ந்தது. தற்போதைய கடல் ரோந்து நடவடிக்கையில் இக்கடற்கலன் அதிமுக்கிய பங்கு வகிக்கின்றது. இதுபோன்ற பல கடற்கலன்கள் இலங்கை அரசாங்கத்திடம் உண்டு,"

என்று கூறிவிட்டு தொடர்ந்து வடக்குப் பக்கமாய் நடந்தான் கோவிந். ஏறக்குறைய அரை மைல் சென்றபிற்பாடு ஒரு இடத்தில் நின்று கொண்டு ஒரு பழைய கட்டிடத்தின் சிதைந்த பகுதியைக் காட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(58) நெழுவினிப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு.



(59) நெழுவினிப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(௬௦) நெழுவினிப் பிள்ளையார் கோயில் நெடுந்தீவு.



(௬௧) நெழுவினிப் பிள்ளையார் கோயில் நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் அருள், வெடியரசன் கோட்டையின் சிதைந்து காணப்படும் எச்சம். நான் உனக்கு மீகாமன் கோட்டையைக் கட்டியபொழுது வெடியரசன் என்ற பெயரை பிரஸ்தாபித்தது ஞாபகமருக்கா?"

என்றதும்,

"ஓம் மச்சான், ஞாபகமிருக்கு, மீகாமனை அந்தக் கோட்டையில் வீட்டுக்காவலில் வைத்துக் கண்காணித்து வந்தான் வெடியரசன் என்று சொன்னாயே,"

என்று சொல்லி வாய்மூடுவதனுள்,

"அப்படிப்போடு! நான் சொல்லும் ஒவ்வொன்றையும் நீ நன்கு கிரகித்துக் கொண்டிருக்கிறாய் என்பதற்கு இது ஓர் உறுதியான அத்தாட்சி, நல்லது. நான் இப்போது சொல்வதையும் நன்கு கேள்,"

என்று கூறிய கோவிந் தொடர்ந்து,

"வெடியரசனின் கோட்டை நன்கு சிதைந்து, ஒரு மண் மேடு போன்று காட்சியளிக்குமளவிற்குப் பராமரிப்பு இல்லாமல் போய்விட்டது. சோழசாம்பிராட்சிய ஆட்சியின் இறுதிக் காலப் பகுதியில் யாழ். குடாநாட்டுப் பிராந்தியத்தில் ஆட்சி செய்த சிற்றரசர்களில் வெடியரசனும் ஒருவனாய் இருந்திருக்க வேண்டும். இந்தச் சிற்றரசனைப் பற்றிய பல செய்திகள் இன்றும் எமது மக்களிடையே பேசப்படுகின்றன. அவற்றுள் நான் கேள்விப்பட்ட ஒன்று, வெடியரசனிடம் பல நாகரத்தினங்கள் இருந்தனவாம் என்பதாகும்,"

என்றதும் இதைக் கேட்டுச் சற்று பரபரப்படைந்த அருள்,

"அதென்ன மச்சான், நாகரத்தினம்? நாகரத்தினம் என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருக்கிறேன். நாகரத்தினம் என்று சிலருக்குப் பெயர்களுமுண்டு. அதற்குமேல் அதைப்பற்றி எனக்கொன்றும் தெரியாது. ஆனால் நீ சொல்ல வாற கதையைப் பார்த்தால் அவற்றிற்கு மேலால் ஏதோ சொல்லப் போகிறாய் என்பது மட்டும் புரிகின்றது,"

என்று கூறி முடிப்பதற்குள் கதையைத் தொடர்ந்த கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஊகிப்பது சரிதான் அருள். நாகரத்தினம் என்பது நாகபாம்பின் தலையில் இருக்கும் ஒருவகை இரத்தினம். இது மிக்க ஒளியுடையதாகும். இதற்கு ஒப்பான இரத்தினம் பூமியில் காணப்படுவதில்லை. ஆகையால் நாகரத்தினம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த இரத்தினம். நாக பாம்புகளிலும் பல இனமுண்டாம். அவை எல்லாவற்றிற்கும் இரத்தினம் கிடையாது. ஒரு குறிப்பிட்ட வகை நாகத்திற்குத்தான் இந்த இரத்தினம் உண்டாம். அந்த வகை நாகபாம்பு இரவு வேளைகளிற்தான் இரைதேடப் புறப்படுமாம். இவை இரைதேடும் பொழுது தனது தலையிலுள்ள இரத்தினத்தை அகற்றி ஒரு இடத்தில் வைத்துவிட்டு, அதன் ஒளி வீசும் சுற்று வட்டாரத்தில் இரைதேடுமாம். அந்த அளவிற்கு அதன் ஒளி பிரகாசம் உடையதாம். இதன் பெறுமதியை யாராலும் மதிப்பிட முடியாது. இதை யாரும் இலகுவாய்ப் பெறவும் முடியாது. இவ்வாறு பெறுமதி மதிப்பீடு செய்யமுடியாத பல நாகரத்தினங்கள் வெடியரசனிடம் இருந்தனவாம். இவை இவனது முடிமீது சூட்டப்பட்டிருந்திருக்கலாம் அல்லது மனைவியின் நகைமீதும் பொருத்தப்பட்டிருந்திருக்கலாம். எது எவ்வாறானாலும், இவற்றை வெடியரசன் எப்படிப் பெற்றுக் கொண்டான்? என்பதுதான் முக்கிய கேள்வியும், சுவாரசியமான கதையும் கூட.

நெடுந்தீவில் இந்தவகை நாகரத்தினத்தைக் கொண்ட நாகபாம்புகள் அதிகம் காணப்பட்டனவாம். மிகக் கொடிய விசத்தைக் கொண்ட இந்த வகை நாகபாம்புகளிடமிருந்து எப்படி அவற்றின் இரத்தினங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்? என்பது மிகப்பெரிய கேள்வி. அந்த வகை நாகபாம்புகள் இரைதேடும்போது மட்டும்தான் அவற்றின் இரத்தினங்களைத் தலையிலிருந்து அகற்றி வைக்குமாம். மற்றும்படி அவற்றைப் பார்க்கவே முடியாதாம். அப்படிப்பட்ட இரத்தினத்தை எப்படி வெடியரசன் பெற்றான்? ஒன்றல்ல! பல இரத்தினங்களை!!

இங்குதான் அந்த சுவாரஸ்யமான கதை ஆரம்பமாகிறது. இதெல்லாம் எம்முன்னோர் சொன்ன கதை. புத்தகங்களிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(62) நெழுவினிப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு.



(63) நெழுவினிப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(64) நெழுவினிச் சனசமூக நிலையம், நெடுந்தீவு.



(65) சைவப்பிரகாச வித்தியாசாலை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த கதையல்ல. எனது பாட்டி எனக்குச் சொன்ன கதையை அப்படியே சொல்கிறேன்.

இரைதேட வரும் நாகபாம்பு தனது நாகரத்தினத்தைக் கழற்றி ஒரு இடத்தில் வைத்துவிட்டு அதன் ஒளியில் இரை தேடுமாம். அந்த வேளையில் அதன் நாகரத்தினத்தைப் பெற விரும்புபவர்கள் அந்த நாகம் அந்த இடத்தைவிட்டு சற்று விலகிச் செல்லும் சந்தர்ப்பம் பார்த்து அந்த நாக ரத்தினத்தை மாட்டுச் சாணத்தால் மூடவேண்டுமாம். அந்த நாகபாம்பிற்குப் பாய்ந்து கொத்தும் வல்லமை மட்டுமல்ல பறந்து கொத்தும் வல்லமையும் உண்டாம். அப்படிப்பட்ட நாகபாம்பு அதன் நாகரத்தினத்தின் ஒளியில் இரைதேடும் போது எப்படி அதை சாணத்தால் மூடமுடியும்? அதற்கு யாரிடம் துணிவுண்டு?

அந்தச் செயலைச் செய்யப்போபவன் தன்னைத் தானே தற்கொலை செய்வதற்கு ஒப்பாவான். இந்தச் செயலுக்கு யார் துணிவான்? இது ஒரு சிக்கலான கேள்வி. இதற்கு சிலர் பின்வருமாறு பதில் கூறுகின்றனர்.

அந்த வகை நாகபாம்பு இரைதேட வரும் பகுதியில் உள்ள மரங்களில் நாகரத்தின வேட்டைக்காரன் ஏறியிருந்து கொண்டு, ஏற்கனவே மேற்கொண்ட நல்ல பயிற்சியின் மூலம், நாகரத்தினத்தை மூடும்படி சாணாகத்தைப் போட வேண்டும். அந்த வகை நாகபாம்பு இரைதேட வரும் பகுதியில் மரங்கள் இல்லாவிட்டால் செயற்கையாக மரங்களை உருவாக்கி இந்த முயற்சியை மேற்கொள்ளலாம். நாகரத்தினத்தைச் சாணாகத்தால் மூடிவிட்டால் அந்த நாகரத்தினத்தை அந்தப் பாம்பினால் எக்காரணம் கொண்டும் எடுத்துக்கொள்ள முடியாதாம். அதனால் அந்த நாகம் தன் தலையை தரை யிலே அடித்து இறந்துவிடுமாம். அப்புறம் அந்த நாகரத்தி னத்தை எடுக்க முடியுமாம். இந்த வகையிற்தான் அந்த நாகரத்தினங்கள் பெறப்பட்டிருக்க வேண்டும்,"

என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட அருள்,

"அப்படியா! ரொம்பச் சுவாரஸ்யமான கதையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கே!! அது சரி .......இப்பொழுதும் அந்த வகை நாகபாம்புகள் இங்கு உண்டா?"

என்று கேட்டுவிட்டு திரும்பிச் சுற்றும்முற்றும் பார்த்தான். அவனின் பார்வையிலிருந்து அவனின் மனோநிலையைப் தெரிந்துகொண்ட கோவிந் ஒரு புன்சிரிப்போடு,

"என்ன மச்சான், ஒரு மாதிரிச் சுற்றும்முற்றும் பார்க்கிறாய்?"

என்றான். முகத்திலே சிறிய அச்சம் வெளிப்பட,

"இங்க... அந்தப்... பாம்பு... இப்ப... வரமாட்டாதுதானே?"

என்று கேட்டதும் விழுந்து விழுந்து சிரித்த கோவிந்,

"பயப்படாத மச்சான், இப்ப அது வராது. அது நடுநிசி யிற்தான் இரைதேடப் புறப்படுமாம். அதுகும் பௌர்ணமி தினத்திற்தான் இரைதேடுமாம். இன்று முழு அமாவாசை, ஆனபடியாற் பயப்படாத, ஒழுங்காய் வீடு போய்ச் சேரலாம்,"

என்று கூறிவிட்டுத் தொடர்ந்தும் சிரித்தான். சேர்ந்து சிரித்த அருள்,

"இல்லை..... மச்சான்... கதை சுவாரஸ்யமாயிருந்த பொழுதும் அவை கொடிய நச்சுப் பாம்புகள் என்றதும் சற்றுப் பயந்துவிட்டேன். இன்று அமாவாசை என்று சொன் னாயே! அத்துடன் பயம் போய்விட்டது,"

என்று வழிந்த சிரிப்புடன் சொல்லிவிட்டு,

"போவமா?"

என்று கேட்டான். உடனே,


"பொறு, பொறு வெடியரசன் கோட்டையைப் பற்றி இன்னும் நிறையக் கதையுண்டு,"

என்று சொன்ன கோவிந் தொடர்ந்து,

"இந்தக் கோட்டைக்கும் நாம் முந்தநாள் பார்த்த மீகாமன் கோட்டைக்கும் இடையில் சுரங்கப்பாதை இருந்ததாம். மீகாகமனைக் கண்காணிப்பதற்காக அது அமைக்கப்பட்டதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(66) சைவப்பிரகாச வித்தியாசாலை,நெடுந்தீவு




(67) சைவப்பிரகாச வித்தியாசாலை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(68) புக்காட்டு வயிரவர் கோயில் அரசமரம், நெடுந்தீவு.



(69) புக்காட்டு வயிரவர் கோயில் அரசமரம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு, இந்த அயலிலுள்ள மக்கள் கூறுகிறார்கள். இந்தக் கோட்டையினுள் தற்போதும் அம்மியில் அரைப்பது, உரலில் இடிப்பது, ஈட்டிகளைத் தீட்டுவது, இரவில் ஒளி தோன்றுவது என்பவற்றைத் தாங்கள் கேட்டும் பார்த்துமிருக்கின்றார்கள் என்று,"

கதையைச் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட அருள்,

"அப்படியானால், நீ சொன்ன நாகரத்தினங்கள் இப்பவும் இந்தக் கோட்டையினுள் இருக்கின்றன, அப்படித்தானே?"

என்று வியப்போடு கேட்டான். அவனுடைய கேள்வியிலிருந்து நண்பனுடைய எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"அப்படியும் இருக்கலாம்.... அதை அறுதியாய் உறுதியாய் என்னாற் சொல்ல முடியாது. காரணம் நான் அவற்றைக் கேட்டவனுமல்ல, பார்த்தவனுமல்ல. இதெல்லாம் சொல்லக் கேள்விதான். அவற்றை வைத்துக்கொண்டு, கன்னாபின்னா என்று சொல்லுவது நல்லாயிருக்காது,"

என்று சொல்லிக் கொண்டுபோக, மேலும் ஏதோ கேட்க விளைபவன் போன்று குறிக்கிட்ட அருள்,

"அப்படியானால் ஒருக்கால் கிண்டிப் பார்த்....."

என்று சொல்ல வந்ததைச் சொல்லி முடிப்பதற்குட் குறுக்கிட்ட கோவிந்,

"அந்த அளவிற்கு நெடுந்தீவு மக்கள் முட்டாள்களுமல்ல மூடநம்பிக்கை கொண்டவர்களுமல்ல. எமது மக்கள் ரொம்பப் புத்திசாலிகள், பகுத்தறிவு படைத்தவர்கள். நான் என்ன சொல்ல வருகிறேனென்றால், சில கட்டுக்கதைகள், மூட நம்பிக்கைகள், கற்பனைக் கதைகள் என்பவற்றிற் கூறப்படுவன போன்று புராதன திரவியத்தை அகழ்ந்தெடுக்க நரபலி கொடுப்பதுபோன்ற செயற்பாடுகளில் நெடுந்தீவு மக்களுக்கு அறவே நம்பிக்கையில்லை. ஏனென்றால் நெடுந்தீவு மக்கள் எப்பொழுதும் புத்திசாலிகள். பகுத்தறி வாளர்களும் கூட. இதை நான் நெடுந்தீவான் என்பதற்காகச் சொல்லவில்லை. நான் அறிந்த அளவில் இப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராதன திரவியங்களை அகழ்ந்து எடுப்பதற்கு நரபலி கொடுக்கும் முயற்சிகளில் பல்வேறு நாடுகளில், மேற்கத்தைய நாடுகள் உட்பட, சிலர் ஈடுபட்டதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அப்படியான எந்த ஒரு நிகழ்வும் இத்தீவில் இடம்பெறவில்லை. அதனாற்தான் நான் சொல்லுகிறேன் நெடுந்தீவான் புத்திசாலி என்று. அதற்காக நாகரத்தினக் கதையெல்லாம் கட்டுக்கதையென்று நான் சொல்ல வரவில்லை. அவற்றில் உண்மைகள் இருக்கலாம். அதற்கு நாம் ஏன் தேவையற்று ஆசைப்படுவான். அந்த வகையில் நெடுந்தீவான் புத்திசாலி, பகுத்தறிவாளன் என் பதை மட்டும் சொல்லுகிறேன். அவ்வளவுதான், அதற்குமேல் எந்தவொரு வித்தியாசமான கருத்தும் எடுக்க வேண்டாம் மச்சான்,"

என்று கூறியவன் தொடர்ந்து,

" சோழசாம்ராட்சியம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து பாண்டியர் அந்த நாகரத்தினங்களை வெடியரசனின் தம்பியிடம் இருந்து பறித்துச் சென்று விட்டார்கள் என்றும் சிலர் கூறுகின்றனர். வெடியரசனின் தம்பி அப்பொழுது நயினாதீவை நிர்வகித்ததாயும், பாண்டியர் அவனிடம் சென்று நாகராத்தினங்களைக் கண்ணகி சிலைக்குப் பதிப்தற்காகக் கேட்தாகவும், அவன் மறுக்கவே பாண்டியர் பலவந்தமாய் பறிக்க முயன்றதாகவும் அப்போழுது வெடியரசனின் தம்பி 'அழிந்துபோங்கள்,' என்று சாபம் போட்டுக் கொண்டு கவட்டுக்குக் கீழாக எறிந்ததாயும் பாண்டியர் அதை எடுத்துச் சென்றதாயும், காலகதியில் பாண்டிய சாம்ராட்சியம் அழிய அவனுடைய சாபம்தான் காரணமாக இருந்ததாயும் கதைகள் உண்டு. இவை யெல்லாம் கர்ண பரம்பரைக் கதைகள், இவற்றை நான் புத்தகங்களில் படிக்கவில்லை,"

என்றதும், கதையைக் கேட்ட அருள்,

"எல்லாம் சுவாரஸ்யமான வரலாறாகத்தான் உண்டு. கேட்பதற்கு மிக்க புதுமையானதாயுமிருக்கு. உண்மை இருக்கோ! இல்லையோ! அது ஒரு புறம் இருக்கட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(70) புக்காட்டு வயிரவர் கோயில் அரசமரம், நெடுந்தீவு.



(71) புக்காட்டு வயிரவர் கோயில் அரசமரம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(72) புக்காட்டு வயிரவர் கோயில் வீதி, நெடுந்தீவு.



(73) புக்காட்டு வயிரவர் கோயில், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூறு வீதம் உண்மை இல்லாவிட்டாலும் இருபத்தைந்து வீதமாவது உண்மை இருக்கத்தான் செய்யும். ஆனபடியால் நீ கேள்விப்பட்டவற்றையெல்லாம் சொல்லு, நான் கேட்கிறேன்,''

என்று அருள் கூற, அருளின் ஆர்வத்தைப் புரிந்துகொண்ட கோவிந் தொடர்ந்து.

சோழசாம்ராட்சியமும், பாண்டிய சாம்ராட்சியமும், நாகரத்தினங்களை இழந்த நாகபாம்புகள், தங்கள் தலைகளை நிலத்தில் அடித்து இறந்தபோது இட்ட சாபத்தினாற் தான் அழிந்து போயின என்றும் வேறு சிலர் கூறுகின்றனர். அதாவது அந்த நாகபாம்புகள் தங்களது மரணத் தறுவாயில் இட்ட சாபங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவையாய் இருந்தன என்றும், அதன் காரணமாய்த் தான் அந்த நாகரத்தினங்களை வைத்திருந்த இரண்டு சாம்ராட்சியங்களும் காலகதியில் அழிந்தொழிந்து போனவை என்றும் சொல்லப்படுகின்றன. யோசிக்கும்போது அவற்றிலும் உண்மைகள் இருக்கலாமென்று எண்ணத் தோன்றுகிறது,''

என்று கூறிய கோவிந் ஒரு நக்கற் சிரிப்பை உதிர்த்துவிட்டு, மேலும் தொடர்ந்து,

"சிங்களவன் வெடியரசன் கோட்டையைப் பார்த்துவிட்டுத் தனக்குச் சார்பான கண்ணோடு விளக்கம் கொடுக்கின்றான். அதாவது, தற்போது நாம் பார்க்கும் வெடியரசன் கோட்டையின் எச்சம் ஒரு புத்தவிகாரைத் தூபியின் அடித்தளம் போன்று காட்சி கொடுக்கிறது. அதை அடிப்படையாய் வைத்துக் கொண்டு சிங்களவன், 'இது ஓர் அழிந்துபோன பௌத்த விகாரை,' என்கிறான். அழிந்த நிலையிலுள்ள அடித்தளத்தைப் பார்க்கும்போது சிங்களவன் கூறுவதிலும் அர்த்தமிருக்கத்தான் செய்கிறது,''

என்று கூறிய கோவிந், சிறிது யோசித்துவிட்டு,

"சிங்களவனுடைய கூற்றைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய் அருள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்டான். திரும்பத் திரும்ப அந்த அடித்தளத்தை நன்கு பார்த்துவிட்டு,

"நீ சொல்லுவதுபோன்று சிங்களவனுடைய கூற்றிலும் அர்த்தம் இருக்கத்தான் செய்கிறது. கோட்டைக்குரிய அமைப்பைவிட விகாரைக்குரிய அமைப்புத்தான் அதிகம் காணப்படுகிறது. இருந்தபோதும் உண்மையைச் சரியாகத் தெரிந்துகொள்ளாமல், எந்தக் கருத்தையும் கன்னாபின்னா வென்று தெரிவிப்பது சரியல்ல. ஆனபடியால் இந்த விடயத்தை இத்துடன் விட்டுவிடுவம்,"

என்று கூறிய அருள்,

"அடுத்த அதிசயம் என்ன?"

என்றான் சிரித்துக்கொண்டே.

"அடுத்தது என்னவென்று காட்டுகிறேன் வா,"

என்று சொல்லிவிட்டு மேலும் வடக்கு நோக்கி நடந்த கோவிந் ஐயனார் கோவிலை அடைந்ததும் அதைக்காட்டி,

"இது அருள், எங்களுடைய ஊர் ஐயனார் கோவில். இந்த ஐயனார் மேற்குக் கடற்கரையில் அமர்ந்திருந்து இத்தீவைக் காவல் புரிகின்றார் என்று எமது மக்கள் நம்புகிறார்கள். அற்புதம் நிறைந்த தெய்வமென்று எம்மக்கள் பேசிக்கொள்வதையும் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்தப் பகுதியிலும் ஓரளவிற்கு நல்ல தண்ணீர் உண்டு,"

என்று கூறியபின் இருவரும் ஐயனாரை வணங்கிவிட்டுக் கிழக்கு நோக்கிப் புறப்பட்டனர். அப்போ எதிரில் வந்த ஓர் இளைஞன்,

"என்ன கோவிந், இந்தப் பக்கம் ஒரு புது முகத்தோட?"

என்று கேட்டதும்,

"ஓம் மச்சான், இவர் ஊருக்குப் புதியவர்தான். இவருடைய பெயர் அருள்,"

என்றதும், இருவரும் கைகளைக் குலுக்கிக் கொண்டனர். அப்புறம் கதையைத் தொடர்ந்த கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(74) புக்காட்டு வயிரவர் கோயில், நெடுந்தீவு.



(75) புக்காட்டு வயிரவர் கோயில் காண்டா மணிக்கோபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(76) புக்காட்டு வயிரவர் கோயில் தெற்கு வீதி.


(77) பெரியதுறை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர் என்னோடு சுண்ணாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் எனது வகுப்பிலேயே படிக்கிறார். நம்ம ஊரைப் பார்க்கவேண்டுமென்று ஆசைப்பட்டார். வாடா என்றேன், வந்திட்டார். அதுதான் ஒருக்கால் ஊரைச் சுற்றிக்காட்டுவம் என்று புறப்பட்டேன். நம்ம ஊரைப் பற்றி நாலுபேர் தெரிந்து வைத்திருப்பது நல்லம்தானே!"

என்றதும்,

"சரியாய்ச் சொன்னாய் கோவிந், இப்படி நாலுபத்துப் பேர் எமது ஊரைப் பார்த்து உண்மை நிலையைச் சொன்னாற் தான் இந்த ஊரைப்பற்றி அறியாத சிலர் கொண்டிருக்கும் தப்பான அபிப்பிராயங்கள் இல்லாமற்போகும்,"

என்றதுதான் தாமதம்,

"அச்சொட்டாய்ச் சொன்னாய் மச்சான், நீ சொல்லத்தான் எனக்கொரு விடயம் ஞாபகத்திற்கு வருகின்றது. நான் ஒரு தடவை கொழும்பிற்குச் சென்றிருந்தபொழுது ஒரு நபருடன், அதாவது ஒரு தமிழனோடு பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது நான் நெடுந்தீவைச் சேர்ந்தனான் என்று சொன்னேன். உடனே அந்த மனுசன் என்ன கேட்டான் தெரியுமே? 'நெடுந்தீவில் வேடர்கள் இருக்கிறார்களா?' என்று கேட்டான். அப்படிப்பட்ட வேடர்களும் இலங்கைத்தீவில் இருக்கிறார்கள்,"

என்று கூறியதும், அருளும் அந்த இளைஞனும் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினர். கோவிந்தும் சேர்ந்து சிரித்துவிட்டுப் புறப்பட ஆயத்தமான பொழுது அருள்,

"தண்ணீர் விடாய்க்கிது கோவிந், இங்கு நல்ல தண்ணீர் எடுக்கலாமா?"

என்று கேட்டதுதான் தாமதம், அந்த இளைஞன்,

"எடுக்கலாமா என்றா கேட்கிறீங்கள்? ஏன், நெடுந்தீவார் தண்ணீருக்குப் பதிலாக கள்ளுத்தான் குடிக்கிறார்கள் என்ற கட்டுக்கதையை நீங்களும் கேள்விப்பட்டிருக்கிறீங்களோ?"

எனச் சிரித்துக் கொண்டே கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியில்லை ...."

என்று அருள் கதையைச் சொல்லி முடிப்பதற்குள் மறுபடியும் அந்த இளைஞன்,

"உலகத்தில் எங்கும் கிடைக்கப்பெறாத அதிசிறந்த நல்ல தண்ணீர் நெடுந்தீவிற்தான் உண்டு. அதாவது சாறாப்பிட்டி என்ற இடத்தில,"

என்று சொன்னதும் உடனே கோவிந்,

"நான் அவருக்கு அந்த இடமெல்லாம் ஏற்கனவே காட்டி அந்தத் தண்ணீரையும் குடிக்கப் பண்ணிப்போட்டுத்தான் கூட்டி வந்திருக்கிறேன்,"

என்றான்.

"ஓ! அப்படியா!! நல்லது நல்லது,"

என்று கூறிய இளைஞன் தொடர்ந்து,

"வாருங்கள் என்னுடைய வீடு கிட்டத்தானிருக்கு, அங்கு போய்க் குடிக்கலாம்,"

என்று கூறி அவர்களை அழைத்துச் சென்றவன், வளவிற்குட் சென்றதும் கோவிந்தைப் பார்த்து,

"உங்களுடைய நண்பருக்கு இளநீர் பிடிக்குமா?"

என்று கேட்க, கோவிந் அருளைப் பார்த்தான், உடனே அருள்,

"இளநீர் எனக்கு ரொம்பப் பிடிக்கும்,"

என்றான்.

"கொஞ்சம் நில்லுங்கள்,"

என்று கூறுவிட்டுச் சென்ற அந்த இளைஞன் சில நிமிடங்கள் கழித்து மூன்று பெரிய இளநீருடனும் அருவாளுடனும் வந்தான். உடனே பக்குவமாய் வெட்டி முதலில் ஒன்றை அருளுக்கும் அப்புறம் அடுத்ததைக் கோவிந்திற்கும் கொடுத்துவிட்டு மூன்றாவதைத் தானும் குடித்தான். இளநீரைக் குடித்து முடித்த அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(78) பெரியதுறை, நெடுந்தீவு.



(79) பெரியதுறை மீன்பிடித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(80) பெரியதுறை மீன்வாடிகள்


(81) பெரியதுறை மீன்வாடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரொம்பச் சுவையாயும் நல்ல இனிப்பாயும் இருக்கு மச்சான். எங்களுடைய ஊரிலும் பல தடவைகள் இளநீர் குடித்திருக்கிறேன். அவை இவ்வளவு சுவையாயும் இனிப் பாயும் இருக்கவில்லை. என்ன காரணம்?"

என்று கேட்டுவிட்டுக் கோவிந்தின் முகத்தைப் பார்த்தான். அவனுடைய பார்வையிலிருந்து அருளின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட கோவிந்,

"இந்த மண்ணிலிருந்து பெறப்படும் இளநீர் மட்டுமல்ல, கள்ளு, பனங்காய், பழங்கள், மரக்கறிகள் எல்லாமே ஒரு தனி மகிமை கொண்டவை. நான் மட்டும் இப்படிச் சொல்ல வில்லை உன்னைப்போன்ற வெளியூர்களிலிருந்து வந்து சென்ற பலர் இவ்வாறு கூறியுள்ளார்கள். இந்த ஊர்ப் பனங் கள்ளின் சுவைக்கு அடிமைப்பட்ட பல வெளியூர்க் காரர்கள் மாசி, பங்குனி மாதங்களிற் கள்ளுக் குடிப்பதற்கென்றே இங்கு வந்துபோகும் வழக்கமும் உண்டு,"

என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட அந்த இளைஞன்,

"இத்தீவு மந்திர மலையை அனுமான் தூக்கிச் சென்றபோது அதிலிருந்து உடைந்து விழுந்த ஒரு துண்டி னால் உருவானதென்று ஒரு கதையுண்டு. அதன் காரண மாய்த்தான் இத்தீவில் நிறைய மூலிகைகள் காணப்படுவ துடன், இம்மண்ணில் விளையும் விளை பொருட்களுக்கு அவற்றின் சுவையிலும் தரத்திலும் தனி மகிமை உண்டு எனச் சொல்லப் படுகின்றது. அந்தக் கதையில் உண்மை யிருக்கலாமோ என்று எண்ணக்கூடிய அளவிற்கு இவ்விளை பொருட்களுக்குரிய தனிச் சிறப்பை யாரும் மறுக்க முடியாது,"

என்று சொல்லி முடிக்க,

"அப்படியா விசயம்! ரொம்பச் சுவாரஸ்யமான விடய மாயிருக்கு. இத்தீவிற்குள் இன்னும் எத்தனையோ சுவாரஸ்ய மான விடயங்கள் அடங்கிக் கிடக்கின்றனவென்று நம்பு கிறேன்"

என்றதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான் அருள், போகப் போக எல்லாவற்றையும் தெரிந்து கொள்வாய்,"

என்று கூறிய கோவிந் தொடர்ந்து,

"இதோ இந்த வழுக்கலைச் சாப்பிட்டுப்பார், என்ன சொல்லுதென்று,"

எனக்கூறிக்கொண்டு அந்த இளைஞன் வெட்டிக்கொடுத்த இரண்டு கோம்பைகளையும் கொடுத்தான். வழுக்கலின் முதற்துண்டைச் சாப்பிட்ட அருள் உடனே,

"அற்புதமான சுவை மச்சான், நீங்கள் சொன்ன அந்த மந்திரமலைக் கதை உண்மை போலத்தான் தோணுகின்றது,"

என்று சிறிது ஆச்சரியம் கலந்த தொனியிற் சொன்னான், உடனே அந்த இளைஞன் அருளைப் பார்த்து,

"அதனாற்தான் பாருங்கோ இத்தீவிற்கு மூலிகைத்தீவு என்ற ஒரு பெயரும் உண்டு. மந்திரமலை மூலிகைகள் நிறைந்த மலை. அதிலிருந்து உடைந்து விழுந்த துண்டினால் இது உருவானபடியாற்தான் இத்தீவில் அரும்பெரும் மூலிகைகள் எல்லாம் கிடைக்கின்றன. இது புராணக் கதையாயிருந்தாலும் இங்குள்ளவற்றை நாம் பார்க்கும்போது நம்பித்தான் ஆகவேண்டியிருக்கின்றது,"

என்று சொல்லிக் கொண்டுபோக இடையிற் புகுந்த கோவிந்,

"இரண்டு கோம்பையிலுமுள்ள வழுக்கல்களை முழுமையாகச் சாப்பிடு அருள். இனி வீடு போகும்வரை இதுதான் சாப்பாடு,"

என்றான் சிரித்தபடியே.

"அப்படியா! சரி மச்சான்,"

என்று கூறிக்கொண்டு நன்கு இரசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது, அதை நன்கு அவதானித்த அந்த இளைஞன் கோவிந்தைப் பார்த்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(82) பெரியதுறையில் ஒரு கற்றாழைக் கட்டம்



(83) பெரியதுறை தீர்த்தக்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(84) பெரியதுறை தீர்த்தக்கரை



(85) பெரியதுறை தீர்த்தக்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் கோவிந், மதியச் சாப்பாட்டை எங்களுடைய வீட்டிற் சாப்பிட்டாலென்ன?"

என்று கேட்டதுதான் தாமதம்,

"கேட்டதற்கு ரொம்ப நன்றி! ரொம்ப ரொம்ப நன்றி கண்ணன். இன்று எனது அம்மா எங்களுக்கென்று அதிவிசேடமாய்ச் சமைத்து வைத்துவிட்டுக் காத்துக் கொண்டிருப்பா. அந்தப் பெத்த மனத்தினுடைய மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் எந்தக் குந்தகமும் ஏற்படுத்தப்படாது,"

என்று சொன்னதுதான் தாமதம்,

"புரியுது கோவிந், புரியுது, தண்ணீர் ஏதும் போத்தலிற் கொண்டு போகப் போறீங்களோ? நண்பனுக்குப் போகும் வழியில் விடாய்த்தாற் கொடுக்கலாம்,"

என்று கேட்டு விட்டு விழித்துப் பார்த்தான் கோவிந்தை. உடனே கோவிந்,

"மெதுமெதுவாய் நடந்தாற்கூட ஒரு மணித்தியாலத் திற்குள் எங்களுடைய வீட்டிற்குப் போய்விடலாம்,"

என்றதும், அருள் அந்த இளைஞனைப் பார்த்து,

"அப்படியானால் எனக்குத் தண்ணீர் தேவையில்லை. கேட்டதற்கு ரொம் ரொம்ப நன்றி,"

என்று கூறிக்கொண்டு கையைக் கொடுத்தான். பதிலுக்கு அந்த இளைஞனும் கையைக் கொடுத்தான். இருவரும் கைகளைக் குலுக்கிவிட்டு விடைபெற்ற வேளையில் கோவிந் அருளிடம்,

"இவர் என்னுடைய நண்பன். இவருடைய பெயர் கண்ணன். இவரும் நானும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தனாங்கள்,"

என்று அறிமுகப்படுத்தியதும்,

"ஓ! மை கோட்!! ஏன் கோவிந் இதுவரை சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. நீ சரியான ஆளப்பா!''

என்று கூறிய அருள் உடனே கண்ணனைக் கட்டித்தழுவி முதுகிற் தட்டித் தனது நன்றியையும் பாசத்தையும் வெளிப்படுத்தி விட்டுக் கோவிந்தைப் பார்த்து,

''புறப்படுவமா?''

என்றான்.

''சரி புறப்படுவோம்,''

என்று சொன்ன கோவிந் நண்பன் கண்ணனின் கையைப் பிடித்துக்கொண்டு,

''டேய் மச்சான், நான் நினைக்கிறேன் ஏறக்குறைய இரண்டு வருடங்களின் பின் மறுபடியும் சந்திக்கிறமென்று. நெடுந்தீவு மகாவித்தியாலயத்தை விட்டு நான் விலகிய பிற்பாடு இன்றுதான் நான் உன்னை மறுபடியும் சந்திக்கிறேன். அப்படியிருந்தும் என்னை நீ கண்டவுடன் எவ்வளவு பாசமாய் என்னுடன் நடந்து கொண்டாய்! இதுதான் மச்சான் நட்பு. பாசத்தின் வெளிப்பாடு என்ன என்பதைத் தத்ரூபமாய்க் காட்டியுள்ளாய். ரொம்பச் சந்தோசம். ரொம்ப நன்றியும் கூட. 'பள்ளிக் கூடச் சிநேகிதம் படலைமட்டும்,' என்று ஒரு பழமொழி உண்டு. அது சரியல்ல. சுடலை மட்டும்கூட வரலாம் என்று சொல்லுமளவிற்கு உன்னுடைய செயற்பாடு இருந்தது. இதையிட்டு ரொம்ப மகிழ்ச்சியடைவது மட்டுமல்ல ரொம்பப் பெருமையும் அடைகிறேன்,''


என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட கண்ணன்,

''என்ன கோவிந், பெரிய பெரிய வார்த்தையெல்லாம் பேசுகிறாய்? சாப்பிடுவமா? என்று கேட்டேன், அதற்கும் மறுத்துவிட்டாய், இந்த மூன்று இளநீருக்கா?''

என்று சொல்லி முடிப்பதற்குள்,

''டேய் கண்ணன், அன்பு, பாசத்தின் வெளிப்பாடு கொடுக்கின்ற பொருட்களின் அளவையும் தரத்தையும் பொறுத்த விடயமல்ல. அது கொடுக்கப்படுகின்ற விதத்தையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(86) சுகாதார நிலையம், பெரியதுறை, நெடுந்தீவு.



(87) வெடியரசன் கோட்டை (சிதைந்த நிலையில்), நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(88) வெடியரசன் கோட்டை (சிதைந்த நிலையில்)
நெடுந்தீவு.



(89) வெடியரசன் கோட்டை (சிதைந்த நிலையில்)
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தையும் பொறுத்தது., சந்தர்ப்பம், சூழ்நிலை, தேவை கருதிச் செய்யப்படுகின்ற உதவியிருக்கே! அது பண ரீதியில் ஒரு சதம் பெறுமதியாயிருந்தாலும், அதன் மனித நேயப் பெறுமதி ஒருகோடி ரூபாய்! தெரியுமா!! அதனாற்தான் சொல்லி வைத்தார்கள். 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள் என்று,'

மறுபடியும் குறுக்கிட்ட கண்ணன்,

"உன்னோடு கதைத்து வெல்ல முடியாது மச்சான். உன்னுடைய தமிழ்மொழி வல்லமை நான் உன்னோடு படித்த நாட்களிலேயே பார்த்த விடயம்தானே! உனக்கு ஞாபகமிருக்கா கோவிந்: பத்தாம் வகுப்பில் நமக்கு இலக்கியம் படிப்பித்த மிஸ் பராசக்தி ரீச்சர் கம்பராமாயணப் பாடலொன்றிற்கு நயம் விளக்கிக் கொண்டிருந்தபொழுது, நீ போட்ட போடலொன்றிற்கு விளக்கம் தரமுடியாமல் ஆட்டங் கண்டு தடம்புரண்ட வேளையில், மாணவர்கள் சிரிக்க அவ, 'ஆத்தா நண்டு தணலைக் காவியது போன்று,' உன்னில பாய்ந்தது,"

என்று சொன்னதுதான் தாமதம்,

"என்ன கண்ணன் சொல்லுகிறாய்! இவையெல்லாம் இன்னும் உன்னுடைய மனதில் இருக்கின்றனவா?"

என்று கேட்டுவிட்டு விழித்துப் பார்த்தான் கண்ணனை. தொடர்ந்து,

"சரி...சரி.... அதெல்லாம் ஒரு காலம். அப்ப.... நாங்கள் போயிட்டு வாறம் கண்ணன்,"

என்று கூறிவிட்டுப் புறப்படக் கையை அசைத்து விடை கொடுத்தான் கண்ணன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் - 04

கோவிந்தும் அருளும் வீட்டை அடைந்து விட்டனர். நேரம் இப்போது பி.ப. மூன்று மணி. மகனுக்காகவும் அவருடைய நண்பனுக் காகவும் விசேடமாய்ச் சமைத்து வைத்துவிட்டுக் காத்திருந்த கோவிந் தின் அம்மா மகனைக் கண்டதும்,

"என்ன மணி, இவ்வளவு நேரம் தாழ்த்தி வாறீங்கள், உனக்குத்தான் பசிக்கவில்லை என்று வைத்துக் கொள்வம். உன்னுடைய நண்பனுக்குமா பசிக்கவில்லை! மேலும் தாமதிக்காமற் கால் கை முகத்தைக் கழுவிக் கொண்டு வாருங்கோ நான் சாப்பாடு போடுகிறேன்,"

என்றாள் அம்மா. தங்களுக்காகக் காத்திருந்து சலிப்படைந்து விட்டா அம்மா என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்,

"என்ன அம்மா, இடங்களைச் சுற்றிப் பார்க்கப் போவது என்பது இலகுவான காரியமே! அதுதான் கொஞ்சம் தாமத மாகிவிட்டது. நீங்கள் சாப்பாட்டைத் தயார் பண்ணுங்கள் அம்மா, நாங்கள் கைகால் முகங்களைக் கழுவிக்கொண்டு வாறம்,"

என்று கூறிவிட்டு நண்பனை அழைத்துக் கொண்டு கிணற்றடிக்குச் சென்றான் கோவிந். அப்புறம் சாப்பிடுவதற்கு வந்து தயாராயிருந்த இருவரையும் பார்த்து,

"தம்பி, மீன் குழம்பு மரக்கறியுடன் சேர்ந்த வழமையான மதியச் சாப்பாடுமுண்டு. அத்துடன் காளான் சோறுமுண்டு. எது உங்களுக்கு முதலில் விருப்பம்? விசேடமாக உங்களு டைய நண்பனுக்கு எது முதலிற் பிடிக்கும்?"

என்று ஒரு கேள்வியைப் போட்டாள் அம்மா. உடனே கோவிந் நண்பன் அருளினுடைய முகத்தைப் பார்த்தான். அப்பொழுது எதுகும் புரியாதவன் போன்று பரக்கப் பரக்கப் பார்த்தான் அருள். உடனே நண்பனுடைய நிலமையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"அம்மா, முதலிற் காளான் சோற்றைப் போடுங்கோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




(90) வெடியரசன் கோட்டை (சிதைந்த நிலையில்),நெடுந்தீவு



(91) ஐயனார் கோயில் (அழிந்த நிலையில்), நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எனக்கு ரொம்பப் பிடிக்கும் என்பது நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டுமென்றல்ல. நண்பன் முதலில் காளான் சோற்றைச் சாப்பிட்டுப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லட்டும் எது வேண்டுமென்று. முதலில் அவருக்கும் கொஞ்சமாய்ப் போடுங்கோ,"

என்று சொல்லியதும் மகன் கேட்டுக்கொண்டபடியே முதலிற் காளான் சோற்றைப் பரிமாறினாள் அம்மா. முதலில் மெதுவாகச் சாப்பிட ஆரம்பித்த அருள் சில நிமிடங்களுக்குப் பிற்பாடு இரசித்து ருசித்துச் சாப்பிடுவதை அவதானித்த கோவிந்தின் அம்மா மகனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினாள். அம்மாவின் கண்சிமிட்டலின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட கோவிந் சரியான நேரம் பார்த்து,

"இன்னும் கொஞ்சம் போடுங்கோ அவருக்கு,"

என்றான். நிலமையைப் புரிந்துகொண்ட அம்மா முன்னைய அளவை விட மேலும் சற்று அதிகமாய்ப் போட்டாள். எந்தவித ஆட்சேபனையும் இல்லாமற் தொடர்ந்து சாப்பிட்டான் அருள். நிலமையை நன்கு கூர்ந்து அவதானித்துக் கொண்டிருந்த அம்மா முடிவுறும் தறுவாயைப் பார்த்து மேலும் கொஞ்சம் போட்டாள். எந்தவித ஆட்சேபனையுமில்லாமல் அதையும் சாப்பிட்டு முடித்த அருள் அப்புறம் தலையை நிமிர்த்தி,

"அம்மா, இன்னும் இருக்கா? முடிந்துவிட்டதா?"

என்று கேட்டான். மெதுவாய்ச் சிரித்துவிட்டு,

"தம்பி இன்னும் நிறைய இருக்கு, பயப்படாமற் சாப்பிடுங்கோ. ஆனால் ஒன்று அப்புறம் சற்று வயிற்றைப் பொருமும், பெரிசாய்ப் பயப்பட வேண்டியதில்லை"

என்றாள் அம்மா. உடனே அருள்,

"பரவாயில்லை இன்னும் கொஞ்சம் போடுங்கோ அம்மா,"

என்றான். பையனின் ஆசையையும் நிலமையையும் நன்கு தெரிந்துகொண்ட அம்மா கடைசித்தரமாக மேலும் கொஞ்சம் போட்டாள். அதையும் சாப்பிட்டு முடித்த அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா, வயிறு முட்டிவிட்டது. ஏதோ அறியாத ஆசை யிற் சாப்பிட்டுவிட்டேன் போற் தோணுது. ஒரு பிரச்சினையும் வராதுதானே அம்மா?"

என்று சற்றுப் பயம் கலந்த தொனியிற் கேட்டான். பையனின் நிலமையைப் புரிந்து கொண்ட அம்மா,

"ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம் தம்பி, எது நடந்தாலும் அவற்றிற்கு என்னிடம் மருந்துண்டு. நீங்கள் நின்மதியாய்ப் போய்ப் படுத்துறங்குங்கோ, பல மைல்கள் தூரம் நடந்து களைப்படைந்த உடலுக்கு ஓய்வு வேண்டும். அப்புறம் எழும்பும்போது மிகுதியைப் பற்றிப் பேசிக்கொள்ளலாம்,"

என்று சொன்னதும் நண்பனைக் கூட்டிச் சென்று படுக்கவைத்தான் கோவிந். மாலை ஆறுமணியளவில் நித்திரையால் எழுந்த வேளையில் அம்மா கொடுத்த தேனீரைக் குடித்துவிட்டு அவவைப் பார்த்து,

"அம்மா, எப்படி அம்மா இந்தக் காளான்சோறு இவ் வளவு சுவையாயும் மணமாயும் இருக்கின்றது?"

என்று ஆச்சரியமும் அதை மறக்கமுடியாதிருப்பதும் போன்ற பாணியிற் கேட்டான். அருளினுடைய கேள்வியிலும் அவரது முக பாவனையிலுமிருந்து பையனின் எதிர்பார்க்கையைப் புரிந்து கொண்ட அம்மா,

"இதற்குச் சுருக்கமாய்ப் பதில் சொன்னால், இத்தீவின் மண்ணில் விளையும் எந்தப் பொருளுக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அந்த வகையில் இந்த மண்ணில் விளையும் காளா னுக்கும் ஒரு விசேட சுவையும் மணமும் உண்டு. அத்தோடு விசேட மணத்திற்காகவும் உடல் நலத்திற்காகவும் காண்டை இலை போட்டு நீண்ட நேரம் காளானை அவிப்போம். நன்கு அவிந்து வாசம் பெயரும் பொழுது சாமை அரிசியைப் போட்டுக் கிண்டுவம். அப்புறம் மிளகாய், மஞ்சள், உள்ளி, சீரகம், வெண்காயம் என்பவற்றைச் சேர்த்து அரைத்த கூட்டைப் போட்டு மேலும் கிண்டுவம். அப்புறமென்ன? நீங்கள் சாப்பிட்டதுதான்," என்று சொல்லி முடித்ததும்,

"ஓ! அப்படியா!! நீங்கள் சொல்லும்பொழுதே சுவையாயி ருக்கம்மா,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(94) ஐயனார் கோயில் முன்வீதியும் கிணறும்



(95) மங்கையற்கரசி வித்தியாசாலை, கோட்டைக்காடு, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(96) பெருக்குமரம், நெடுந்தீவு.



(97) பெருக்குமரம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிரித்துக்கொண்டே சொன்னான் அருள். பதிலுக்குச் சிரித்துவிட்டுக் கதையைத் தொடர்ந்த அம்மா,

"தம்பி, கூதிர் காலத்தில் இங்கு நிறையவே காளான் கிடைக்கும். சிலவேளைகளில் மிதமிஞ்சிய காளான்கூடக் கிடைக்கும். அப்போதெல்லாம் பலவகையான உணவுகளை அவற்றைக் கொண்டு தயாரித்துச் சாப்பிடுவோம்,"

என்றதும் குறுக்கிட்ட அருள்,

"இவை யாவும் உங்களுக்குச் சும்மாதானே கிடைக்கின்றன?"

என்று கேட்டுவிட்டு ஒரு மாதிரி விழித்துப் பார்த்தான். உடனே அம்மா சிரித்துவிட்டு,

"ஆம் தம்பி,"

என்றார்.

"கொடுத்து வைத்தனீங்கள்,"

என்று கூறிவிட்டு எழுந்து சென்ற வேளையில் அவனைக் கூட்டிச் சென்ற கோவிந், வளவைக் கடந்து வெளியே சென்றான். அது மாலைக் கருக்கல் நேரம். அப்பொழுது எதிர்பாராத விதமாக அருள்,

"விமானம் ஒன்று வருகிது போல மச்சான், அது கீழால வருகிது போல. நல்லாய்க் கீழால வருகிதுபோல,"

என்று கூறிக்கொண்டு காதிரண்டையும் பொத்தினான். உடனே கோவிந்,

"அங்கபார் மச்சான் விமானத்தை,"

என்று கூறிக்கொண்டு கையாற் காட்டினான். உடனே அதைப் பார்த்த அருள்,

"ஓ! மை கோட்!! இதென்ன மச்சான்?"

என்று ஆச்சரியத்தோடு கேட்டான். உடனே கோவிந்,

"அது விமானமுமல்ல, விண்வெளி ஓடமுமல்ல. அது தாராக் கூட்டம். அதைப் பார் அருள், அவை என்ன அழகாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் ஒழுங்காகவும் பறந்து செல்கின்றனவென்று,"

எனச் சொன்னதும் முக்கோணவடிவிற் சென்ற தாராக் கூட்டத்தைப் பார்த்த அருள் ஆச்சரியத்தோடு வாயிற் கையை வைத்துக்கொண்டு,

"எப்படிக் கோவிந், அதிலிருந்து இந்த இரைச்சற் சத்தம் வருகிறது"

என்று மேலும் ஆச்சரியத்தோடு கேட்டான், உடனே கோவிந்,

"டேய்! என்ன அருள், குழந்தைப்பிள்ளை மாதிரிக் கேட்கிறாய்? அங்க பார்! எத்தனை தாராக்கள் கூட்டமாய்ப் பறந்து போகின்றனவென்று. ஏறக்குறைய நூறு தாராக்கள் இருக்கும், அனைத்துத் தாராக்களினதும், அதாவது இருநூறு இறக்கைகளிலுமிருந்து வருகின்ற ஓசைதான் நீ சொன்ன விமானத்தின் ஓசை. அத்தோடு அவை நல்லாய்த் தாழப் பறந்து செல்கின்றன. அதுகும் ஒரு காரணம் அவற்றின் ஓசையை நாம் நன்கு உணருவதற்கு. அத்தோடு அவை ஐந்நூறு மைல் வேகத்திற் பறந்து செல்கின்றன. அந்த வேகமும் இந்த ஓசைக்கு ஒரு முக்கிய காரணம்,"

என்று சொல்லிக் கொண்டு போக மறுபடியும் குறுக்கிட்ட அருள்,

"இவை எங்க மச்சான் போகின்றன?"

என்று வியப்போடு கேட்டான். புதிய அனுபவம் நண்பனைப் பேசவைக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட கோவிந்,

"இவை நான் உனக்குக் காட்டிய நீர்த்தேக்கங்கள் ஒன்றினுள் போய் இறங்கும். இவை மட்டுமல்ல, இதைப் போன்ற தாராக் கூட்டங்கள் பல கூதிர்காலத்தில் இத்தீவிற்கு இரைதேடுமுகமாயும் இன்பம் அனுபவிக்குமுகமாயும் வருவது வழக்கம். இது எங்களுக்குப் பழக்கப்பட்ட விடயம். பெரும்பாலும் இத்தாராக் கூட்டங்களை மாலைக் கருக்கல் அல்லது காலைக்கருக்கல் வேளைகளிற்தான் பார்க்க முடியும். வேளை பார்த்து இவற்றை வேட்டையாடும் மனிதர்களும் இங்கு இருக்கிறார்கள். நேற்றுப் பார்த்தா யல்லே! தாராக்களோடு வந்த இருவரை,"

என்றதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் மச்சான், இப்ப எனக்கு எல்லாம் புரியுது, இப்படி எத்தனை விசேட விடயங்கள் இத்தீவிற்குள் அடங்கிக் கிடக்கின்றன,"

என்றதும், கதையைத் தொடர்ந்த கோவிந்,

"இந்தத் தாராக்கள் மட்டுமல்ல, கூதிர்காலம் ஆரம்பித்த வுடன் தாராக்கள், கூளக்கடா, புள், பவளக்காலி, நாரை, கொக்கு, கோட்டான், பொட்டுக்குருவி போன்ற பறவைகள் இந்தியாவிலிருந்து இங்கு இரைதேடுமுகமாயும் இன்பமனு பவிக்குமுகமாயும் வருகின்றன. ஆனால் இவற்றில் எவையும் இங்கு முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது கிடையாது. கூதிர் காலத்தின் ஆரம்பத்திலிருந்து முன்பனிக்காலம் முற்பகுதி வரை இவற்றை இங்கு காணலாம். முன்பனிக் கால இறுதிப் பகுதியில் இவற்றில் எவற்றையும் இங்கு பார்க்க முடியாது. இது ஒரு பருவகால வருகை என்று கூறலாம்,"

என்று கூறிமுடித்தான்.

இன்றைய பொழுது இவ்வாறு போக, விடிந்தால் வீடுநோக்கிய பிரயாணம் என்ற திட்டத்துடன் படுக்கைக்குச் சென்ற அருள் உறங்குவதற்கு முன் கோவிந்தைப் பார்த்து,

"நாளை பன்னிரண்டு மணிக்கு லோஞ்சில் ஏறுவதற்குள் ஏதாவது முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள் இன்னும் இருக்கா?"

என்று கேட்டான். கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி முடிந்தவரை எல்லாவற்றையும் நன்கு பார்த்துவிட்டுப் போகவேண்டுமென்று நண்பன் நினைக்கின்றான் என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்,

"ஓம் மச்சான், நாளை காலை ஒன்பது மணிக்கெல்லாம் புறப்பட்டுச் செல்லுவம், பன்னிரண்டு மணிக்கு லோஞ்சில் ஏறுவதற்கு முன் நீ வரும்போது பார்த்த மீகாமன் கோட்டை யின் உட்பகுதிக்குச் சென்று பார்ப்பம். அப்புறம் நெடுந்தீவு கிழக்கிலுள்ள ஓர் அற்புதமான ஆலமரத்தையும் ஓர் அபூர்வ மான பெருக்கு மரத்தையும் பார்க்க வேண்டும். அவைகளைப் பார்த்து முடிக்க நேரமும் பன்னிரண்டு மணியாகும். அப்புற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ன, நீ வந்த இராஜேஸ்வரியில் ஏறவேண்டியதுதான். இப்போ நீ நன்றாய்ப் படுத்துத் தூங்கு நடந்த களைப்பு எடுபடக் கூடியதாய்,"

என்று கூறிவிட்டுத் தானும் அயர்ந்து தூங்கினான்.

திட்டமிட்படியே மறுநாட் காலை ஒன்பது மணிக்குக் கோவிந்தின் அப்பா, அம்மா சகோதரங்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டான் அருள். முதலில் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற கோவிந் அவ்வைத்தியசாலையைக் காட்டிய பிற்பாடு மீகாமன் கோட்டைக்குள் நுழைந்தான். கோட்டையின் உட்புறத்தை நன்கு பார்த்து ரசித்த அருள்,

"டேய் கோவிந், அந்தக் காலத்தில் ஒரு சோனாதிபதியைச் சிறைவைப்பதற்கு அதாவது வீட்டுக் காவலில் வைப்பதற்கு இந்தப் பெரிய கோட்டையைக் கட்டியிருக்கிறார்கள் என்று எண்ணும்போது ஆச்சரியப்படாமலிருக்க முடியாது. நான் நினைக்கிறேன் மச்சான், தனிய மீகாமனை வீட்டுக் காவலில் வைப்பதற்காக மட்டும் இந்தப் பெரிய கோட்டையைக் கட்டியிருக்க மாட்டார்கள். அவனோடு சேர்த்து இத்தீவைப் பாதுகாக்கும் கோட்டையாயும் இது பயன்பட்டிருக்க வேண்டும். காரணம் இது அமைந்திருக்கும் கடற்கரையை உற்று நோக்கும்போது அப்படித்தான் எண்ணத் தோணுது. நீ என்ன நினைக்கிறாய் மச்சான்?"

என்று கேட்டுவிட்டுப் புன்சிரிப்புடன் கோவிந்தின் முகத்தைப் பார்த்தான். அருளினுடைய சிரிப்பிலிருந்து எல்லாவற்றையும் நன்கு ரசித்துப் பார்க்கிறான் என்பதை உணர்ந்துகொண்ட கோவிந்,

"நீ சொல்லுவதிலும், உண்மையிருக்கத்தான் செய்கிறது. நானும் அவ்வாறு சிந்தித்த வேளைகளுமுண்டு,"

என்று சொன்னதும் கதையைத் தொடர்ந்த அருள்,

"எது என்னவானாலும், பண்டைத் தமிழனுடைய திறமையையும் அன்று அவனிடமிருந்த கட்டிடக் கலையின் பெருமையையும் இது பறைசாற்றி நிற்கின்றது என்றால் யாரும் மறுக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பார்க்கும்பொழுது பண்டைய தமிழனை எண்ணிப் பெருமைப்படாமலிருக்கவும் முடியாது"

என்றான்.

"உண்மைதான் மச்சான், தற்போதைய நமது பல்கலைக் கழகப் பொறியியற் பட்டதாரிகளை அன்றைய நிபுணர்களோடு ஒப்பிடும்போது, இவர்கள் எந்த மூலைக்கு!"

என்று கூறிய வேளையில் ஏதோ அதிசயமான ஒன்றைக் கண்டவன் போன்று,

"இங்க பாரன் மச்சான் கிணற்றை! இதுக்குள்ளேயே கிணறு, குளிப்பதற்கான வசதிகள் எல்லாம் செய்து வைத்திருக்கிறார்கள். அது சரிதான், ராசாக்கள் ராணிகள் எம்மைப் போன்று வெளிய போயே குளிப்பார்கள், இல்லைத்தானே! எல்லா விதமான வசதிவாய்ப்புகளும் இதனுள்ளேயே செய்யப்பட்டுள்ளன,"

என்று அருள் கூற இதைக் கேட்ட கோவிந்,

"இராசாவின் கோட்டை என்றால் வேறெப்படி இருக்கும்! எமது கொட்டில் வீடுகள் போன்றா இருக்கும்? இல்லைத் தானே!" என்றான் சிரித்துக்கொண்டே.

அந்த வேளையில் மேற்குப்பக்கமாக இருந்த அரண் மேட்டுக்குச் சென்ற அருள் அதில் நின்று கொண்டு கடலை நன்கு உற்று நோக்கினான். சில விநாடிகளால்,

"நிச்சயமாக இது பாதுகாப்புக்காகவும் கட்டப்பட்ட கோட்டையாகத்தான் இருக்க வேண்டும், அதில் சந்தேகமில்லை,"

என்று அழுத்திக் கூறினான். அதைக் கேட்ட கோவிந்

" நீ சொல்லுவதையும் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்,"

என்றுகூறிக் கொண்டு கோட்டையை விட்டு வெளியேறி நெடுந்தீவு கிழக்கிலுள்ள பெருக்கு மரத்தை இலக்கு வைத்து நடந்தான். பெருக்கு மரத்தடியை அடைந்ததும், மரத்தைக் காட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதான் அருள், நான் சொன்ன பெருக்கு மரம்,"

என்றதும், அதைப் பார்த்து ஆச்சரியப்பட்ட அருள்,

"உவா! இதென்ன மச்சான்! இந்த மரத்தின், அதாவது அடிமரத்தின் பருமன்! இந்தப் பெரிதாய் இருக்கின்றது! எப்படி?"

என்று சொல்லிக்கொண்டு ஆச்சரியத்துடன் கவனமாய்ப் பார்த்தான். நண்பனின் ஆச்சரியத்துக்குச் சிறிய விளக்கம் கொடுக்குமுகமாய்,

"இந்த மரத்தின் விஷேடம் இதன் அடிப்பாகத்தின் பருமன்தான் அருள். அடிமரத்தின் பருமனோடு ஒப்பிடும்போது கிளைகள் அந்தளவிற்குப் பெருதாயில்லை, பார்த்தியே?"

என்றான் கோவிந்.

"நீ சொல்வது சரிதான் கோவிந், இந்த மரத்தின் விசேட அம்சம் அடிமரத்தின் பருமன்தான்,"

என்று கூறிக்கொண்டு மரத்தைச் சுற்றிப் பார்த்த வேளையில் எதையோ விஷேடமாய்ப் பார்த்துவிட்டவன் போன்று,

"அங்க பார் மச்சான், பெரிய கோறையை! மிகப் பெரிய கோறை!!"

என்று ஆச்சரியத்தோடு கூற, நண்பனின் மகிழ்ச்சிக்கு வலுவூட்டுவது போன்று,

"இது ஓர் ஆள் உள்ளுக்குப்போய் நின்றுவிட்டு வரக்கூடிய கோறை மச்சான்,"

என்றான் கோவிந். மேலும் நன்கு கூர்ந்து அவதானித்த அருள்,

"மரத்தையும் கோறையையும் பார்க்க ஆச்சரியமாய்த் தானிருக்கு. இதுக்கு என்ன பெயர் மச்சனான் சொன்னனீ?"

என்று பெயரை மறந்துவிட்டவன் போன்று கேட்டதும்,

"இதன் பெயர் பெருக்கு மரம்,"

என்று மறுபடியும் கூறிய கோவிந், தொடர்ந்து,

"இந்த மரத்திற்குரிய இன்னொரு முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவென்றால், இந்த மரம் இலங்கையில் இரண்டு இடங் களிற்தான் உண்டு. ஒன்று நெடுந்தீவில். மற்றையது மன்னாரில். மன்னாரில் உள்ள பெருக்கு மரம் இதனைவிடப் பெரியது என்று சொல்லுகிறார்கள். அதை நான் பார்க்காத படியால் பெரிது சிறிது வித்தியாசத்தை என்னால் சொல்ல முடியாது,"

என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட அருள்,

"இலங்கைத் தீவிலேயே இரண்டு மரங்கள்தான் உண்டு என்கிறாய்! இரண்டே இரண்டு!! ம்...... கேட்பதற்குச் சுவாரஸ்யமாய்த்தான் இருக்கிறது,"

என்று ஆச்சரியத்துடன் கூற,

"நானும் மற்றையவர்கள் சொன்னதைக் கேள்விப்பட்டது தான், அதற்கு மேலால் நான் இலங்கை முழுவதும் சென்று ஆராட்சியே செய்தனான்? இல்லைத்தானே! நான் கேள்விப் பட்ட அளவில் இரண்டே இரண்டு பெருக்கு மரங்கள்தான் இலங்கையில் உண்டாம்,"

என்று மறுபடியும் கோவிந் கூறியதும்,

"அப்படியானால் மச்சான், இது இத்தீவிற்கு கிடைத்த ஓர் அரும்பெரும் பொக்கிசம், இதை அழியாமற் பாதுகாக்க வேண்டியது உங்களுடைய தலையாய கடமை,"

என்று கூறிய அருள், சிறிது யோசித்து விட்டு,

"இதற்கு வயது என்னவாயிருக்கும்?"

என்ற கேள்வியைப் போட்டான். உடனே கோவிந் புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டு,

"நல்ல கேள்விதான் மச்சான், ஆனால் கேள்விக்குரிய பதில் என்னிடமும் இல்லை. பொது அறிவைக் கொண்டு யோசித்துப் பார்த்தால் பல நூற்றாண்டுகள் கொண்டதாய் இருக்கலாம்," என்று சொல்லிவிட்டு,

"நீ என்ன நினைக்கிறாய் அருள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். தானும் தனது பொது அறிவிற்கேற்ப ஒன்றைச் சொல்லுவம் என்று எண்ணிய அருள்,

"நான் நினைக்கிறேன்.... இது ஏறக்குறைய ஐந்நூறு வருடங்களுக்கு மேற்பட்டதாய் இருக்க வேண்டும் என்று. எது எப்படியானாலும் இது ஓர் அரும்பெரும் பொக்கிசம். இதைப் பார்ப்பதற்கு வாய்ப்பளித்த உனக்கு விசேடமாய் நன்றி சொல்ல வேண்டும்,"

என்று சொல்லிவிட்டு,

"கிளம்புவமா?"

என்றான்.

"கிளம்பலாமே!"

என்றான் கோவிந்.

"அடுத்த அதிசயம் என்ன?"

என்று கேட்டுக்கொண்டு நடந்த அருளுக்கு,

"அடுத்தது ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம்,"

என்று சொல்லிக் கொண்டு சற்று வேகமாய் நடந்து சென்றான் கோவிந்.

போன பாதையிற் தென்பட்ட எல்லாவற்றையும் பற்றி விளக்கம் கொடுத்துக் கொண்டு சென்ற கோவிந் கந்தசுவாமி கோவிலடியை அடைந்ததும்,

"இதுதான் நெடுந்தீவு கிழக்கில் அமைந்துள்ள முருகன் ஆலயம்,"

என்று சொன்னதும், தான் ஒரு முருக பக்தன் என்பதை நிரூபிப்பது போன்று உடனே கோபுரவாசலுக்குச் சென்று வீழ்ந்து வணங்கிய அருள் அப்புறம் எழுந்து கோயிலின் முன்நின்ற நிறைந்த அலரிச் செடிகளையும் பார்த்து ரசித்துக்கொண்டு தொடர்ந்து நடந்தான் கோவிந்தைப் பின் தொடர்ந்து, கிழக்குக் கடற்கரையோரமாய் நடந்து கொண்டிருந்த பொழுது கடல் அரிப்பால் நிலம் படிப்படியாகக் காவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(98) பெருக்குமரம், நெடுந்தீவு.



(99) பெருக்குமரம் நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(௱) கந்தசுவாமி கோயில், நெடுந்தீவு கிழக்கு,
நெடுந்தீவு.



(௱௧) சுப்பிரமணிய வித்தியாசாலை, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்படுவதை அவதானித்த அருள்,

"அங்க பார் மச்சான், கடல் செய்திருக்கின்ற வேலையை! இப்படியே தொடர்ந்து அரித்துக் கொண்டு போனால் வெகுவிரைவில் இந்த வீதி கடலாற் காவுகொள் ளப்பட்டுவிடும். என்ன கோவிந், அப்படித்தானே?

என்று அக்கறையோடு கேட்டதும், அதற்குக் கோவிந்,

" நீ சொல்வது உண்மைதான் அருள். நாமள் பௌதிகப் புவியியலில் படித்துக் கொண்டிருக்கிறோமல்லே! மண் அரிப்பைப் பற்றி, அதில் ஒருவகை மண் அரிப்புத்தான் இது,"

என்றதும், கதையைத் தொடர்ந்த அருள்,

"இதுநாள் வரை நான் புத்தகங்களிற் தான் படித்தேன் மண் அரிப்பைப் பற்றி. இப்போ அதை நேரிற் பார்க்கும் பொழுது ஒரு முக்கிய அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட உணர்வு ஏற்படுகின்றது,"

என்றான். உடனே கோவிந்,

"உணர்வென்ன உணர்வு! உண்மையான அனுபவத் தைப் பெற்றுள்ளாய் என்று சொல்லு," என்று சற்று அழுத்திச் சொன்னான். உடனே அருள்,

"நீ சொல்லுவது உண்மைதான் மச்சான். உண்மையான ஓர் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதில் றொம்ப மகிழ்ச்சி,"

என்று கூறிக்கொண்டு மேலும் உசாராய் நடந்த அருள்,

"நீ எனக்குக் காட்டப்போகும் ஆலமாவனப் பிள்ளையார் கோவிலுக்கு இன்னும் கனதூரம் நடக்க வேண்டுமே கோவிந்?"

என்று கேட்டான். நண்பனுக்கு கொஞ்சம் கால்கடுக்கிது போலும் என்று எண்ணிய கோவிந்,

"கனதூரமென்று சொல்வதற்கில்லை. அதற்காகக் கொஞ்சத் தூரம்தான் என்றும் சொல்ல முடியாது. கொஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாராய் நடந்துபோனால் அரை மணித்தியாலத்திற்குட் போய்விடலாம்,"

என்று சொன்னதுதான் தாமதம் உசாராக நடக்கத் தொடங்கினான் அருள். அதன் பெறுபேறாக இருபத்தைந்து நிமிடத்திலேயே ஆலமா வனப் பிள்ளையார் கோவிலை அடைந்த கோவிந் கோவிலின் முகப்பில் நின்றுகொண்டு,

"இதுதான் அருள் ஆலமாவனப் பிள்ளையார் கோவில். யாழ்ப்பாணக் குடாநாட்டில் எத்தனையோ மிகப் பெரிய கோவில்களைப் பார்த்த உனக்கு, இது அவற்றைவிடப் பெரிய கோவிலென்று காட்டுவதற்காக இவ்வளவு தூரம் கால்கடுக்க நடந்து நான் உன்னைக் கூட்டி வரவில்லை. நான் உன்னை இங்கு இவ்வளவு தூரம் நடந்து கூட்டி வந்ததற்கு ஒரு காரணமுண்டு. அதைப் பிறகு சொல்லு கிறேன். இப்போ நீ விநாயகனைக் கும்பிடு,"

என்று சொல்லிவிட்டுக் கோபுர வாசலின் முன் விழுந்து கும்பிட்டான் கோவிந். அவனுடன் சேர்ந்து விழுந்து கும்பிட்டுவிட்டு எழுந்த அருளைப் பார்த்து,

"வா நான் காட்ட வந்த அதிசயத்தைப் பார்ப்பம்,"

என்று கூறிவிட்டுக் கோவிலின் பின்புறம் நோக்கி நடந்தான் கோவிந். அவனைத் தொடர்ந்து நடந்தான் அருள். பின் வீதியை அடைந்ததும் அதில் நின்றுகொண்டு

"அங்க பார் மச்சான் அந்த ஆலமரத்தை,"

என்றதும் அதைப் பார்த்து ஆச்சரியமடைந்த அருள்,

"இதென்ன கோவிந்! இப்படி ஓர் ஆலமரமா? என்னால் நம்பவே முடியாமலிருக்கே!!"

என்று சொல்லிக் கொண்டு வாயிற் கையை வைத்த நண்பனைப் பார்த்து,

"வா, அதனருகிற் போய் நின்று பார்ப்பம்,"

என்று கூறிக்கொண்டு முன்சென்றான் கோவிந், பின் தொடர்ந்தான் அருள். முன் சென்ற கோவிந் ஆலமரத்தின் கீழ் நின்றுகொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதன் அடிமரத்தை உன்னாற் காட்ட முடியுமா?"

என்று கேட்டான். ஆச்சரியத்தோடு மேலும் கீழும் பக்கவாட்டிலும் திரும்பத் திரும்பப் பலதடவை பார்த்த அருள் வியப்புடன்,

"என்ன மச்சான்! இதைச் சுற்றிப் பார்ப்பதென்றாலே பதினைந்து இருபது நிமிடம் பிடிக்கும் போற் தெரியுது. எப்படியாயினும் இதை ஒருக்காற் சுற்றிப் பார்க்கத்தான் வேண்டும்,"

என்று கூறிவிட்டுச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டான் அருள். பின் தொடர்ந்தான் கோவிந். மெதுமெதுவாக அதைப் பார்த்து இரசித்துக் கொண்டு சென்ற அருள் ஒரு தடவை சுற்றி வருவதற்கு அரை மணித்தியாலம் பிடித்தது. நண்பனுடைய ஆவலுக்கு எந்த இடையூறும் செய்ய விரும்பாத கோவிந்தும் மெதுமெதுவாக அவனைப் பின்தொடர்ந்தான். இறுதியில் ஆலமரத்தைப் பார்த்துக்கொண்டு விறைத்துப் போனவன்போல் நின்றுகொண்டிருந்த நண்பனை நோக்கி,

"என்ன மச்சான், இதன் அடிமரத்தைக் கண்டு பிடித்தாயே?"

என்று புன்சிரிப்புடன் கேட்டான். கோவிந்தின் சிரிப்பிலிருந்து அவனின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட அருள் கேள்விக்குப் பதில் செல்லுவதற்கு முன் ஆச்சரியத்தோடு,

"இதன் வயது என்ன மச்சான்?"

என்று கேட்டுவிட்டுக் கோவிந்தை விழித்துப் பார்த்தான். கோவிந் மறுபடியும் ஒரு புன்முறுவலை உதிர்த்துக் கொண்டு,

"அங்க பார், அந்த விநாயகனிடம் கேள் இந்தக் கேள்வியை, அவனால் மட்டும்தான் உனது கேள்விக்குப் பதில் சொல்ல முடியும். இங்கு குடிகொண்டிருக்கும் விநாயகப் பெருமானின் அற்புதத்தின் வெளிப்பாடுதான் இந்த ஆலமரமென்று எமது மக்கள் நம்புகிறார்கள். அந்த வகையிற் தான் ஆலமாவனப் பிள்ளையார் என்ற பெயரும் இந்த விநாயகனுக்குச் சூட்டப் பட்டது. இந்த ஆலமரத்தின் வயது எனக்குத் தெரியாது. ஆனால், இந்த ஆலமரத்தில் இதுவரை யாரும் கைவைக் காமலிருப்பதற்கு முக்கிய காரணம் இந்த விநாயகனில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பக்தியும்தான். ஆனபடியால் எமது மக்கள் இந்த விநாயகனில் வைத்திருக்கும் நம்பிக்கையினதும் பக்தியினதும் வயதுதான் இதன் வயது என்பது எனது புரிந்துணர்வு,"

என்று இலாவகமாய்ச் சொன்னான். சிறிது நேரம் எதுவும் பேசாமல் நின்ற அருள், அப்புறம் மௌனத்தைக் கலைத்துக் கொண்டு,

"எது என்னவானாலும், இதன் அற்புதத்தையும் அதிசயத்தையும் என்னால் மறுக்கவோ மறக்கவோ முடியாது. ஆண்டவனின் படைப்புக்களில் எத்தனை அற்புதம்!!"

என்று சொல்லிக் கொண்டு மணிக்கூட்டைப் பார்த்தவன். உடனே,

"டேய் மச்சான், நேரம் பதினொரு மணிக்கு மேலாகிவிட்டது. நாமள் நடந்துபோய் பன்னிரண்டு மணி லோஞ்சைப் பிடிக்க முடியுமே?"

என்று ஏக்கத்துடன் கேட்டான். இதைக் கேட்டுச் சற்றுப் பதட்டமடைந்த கோவிந் பன்னிரண்டு மணி லோஞ்சைப் பிடிப்பது கொஞ்சம் கஸ்டமான காரியந்தான் என்பதை உணர்ந்துகொண்டு சிறிது கவலையுடன்,

"வா மச்சான், வேகமாய் அதாவது ஓட்டமும் நடையுமாய்ப் போவம். அப்போதுதான் லோஞ்சைப் பிடிக்க முடியும்,"

என்று சொல்லிவிட்டு வேகமாய் நடக்க ஆரம்பித்தான். அந்த வேளையிற் 'கோவிந்' என்று யாரோ கூப்பிடும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான், வேறுயாருமல்ல கோவிந்தின் மகாவித்தியாலய சகபாடி மகேந்திரன்தான் அது. சைக்கிளில் வந்துகொண்டிருந்த மகேந்திரன் கோவிந்தை அண்மித்ததும்,

"எங்க கோவிந், இந்தப் பக்கம் இந்தக் கூதிர் காலத்தில்?"

என்று கேட்டதும், கோவிந்திற்கு ஏற்பட்ட எதிர்பாராத மகிழ்ச்சியுடன்,

"ஓம் மச்சான், இவர் என்னுடைய நண்பன், இவர் வசாவிளானைச் சேர்ந்தவர். என்னோடு ஸ்கந்தரோதயக் கல்லூரியிற் படிக்கிறார். இவர் நெடுந்தீவைப் பார்க்கவேண்டுமென்று சொன்னார். வாடா என்று சொன்னேன், வந்துவிட்டார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(102) ஆலமாவனப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு



(103) ஆலமாவனப் பிள்ளையார் கோயில், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(104) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம், நெடுந்தீவு.



(105) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூதிர்காலம் என்றும் பார்க்காமல். ஒவ்வொரு பருவ காலத் திலும் இந்தத் தீவிற்கு வேறுபட்ட சிறப்பம்சங்கள் இருப்பது போன்று இக்கூதிர் காலத்திலும் அதற்குரிய சிறப்பம்சங்கள் இருக்கத்தானே செய்கின்றன. குறிப்பாக இந்தக் காலம் பச்சப் பசேலென்று இத்தீவு காட்சி கொடுக்கும் சிறப்பம்சத் தைக் கொண்டதல்லே!'' என்றதும் மகேந்திரன்,

"நீ சொல்லுவது உண்மைதான் மச்சான். அது சரி, இந்தப் பக்கம் முக்கிய காரணமில்லாமல் வந்திருக்க மாட்டாயே?"

என்றதும்,

"உண்மையான உண்மை நீ சொல்வது. நெடுந்தீவைச் சுற்றிக்கொண்டு வந்த வேளையில் உங்களுடைய பிள்ளையார் கோவிலுக்குப் பின்புறமாய் அமைந்துள்ள ஆல மரத்தையும் காட்டவேண்டுமென்று விரும்பினேன். அழைத்து வந்து விட்டேன்,"

என்று சொல்லிக் கொண்டுபோகக் குறுக்கிட்ட மகேந்திரன்,

"நண்பன் என்ன சொன்னார் ஆலமரத்தைப் பார்த்து விட்டு?"

என்று கேட்டதுதான் தாமதம்,

"ஆலமரத்தைப் பார்த்து அதிர்ந்துபோன நண்பனிடம் 'அடிமரத்தைக் கண்டுபிடி பார்ப்பம்,' என்றேன். ஆர்வத்தோடும் ஆச்சரியத்தோடும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் லோஞ்சைப் பிடிக்கவேண்டிய நேரத்தைக் கவனிக்கத் தவறிவிட்டோம். இனி வேகமாய் நடந்துபோனா லும் லோஞ்சைப் பிடிக்க முடியுமா? என்பது கேள்விக் குறியாயிருக்கு,"

என்று சற்றுக் கவலையுடன் கூறினான். கோவிந்தின் நிலமையைப் புரிந்துகொண்ட மகேந்திரன்,

"போறதைப் பற்றிக் கவலைப்படாத, நான் சைக்கிளில் கொண்டுபோய் விடுகிறேன் பத்து நிமிடத்தில். அது சரி நண்பன் அடிமரத்தைக் கண்டுபிடித்தாரோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று ஒரு புன்சிரிப்போடு கேட்டான். மகேந்திரனின் சிரிப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட கோவிந் பதிலுக்கு சிரித்தபடியே,

"இதற்குப் பதில் நானோ அல்லது எனது நண்பனோ சொல்ல வேண்டியதில்ல. ஏனென்றால் அதற்குரிய பதில் ஏற்கனவே உனக்கு...."

என்று வசனத்தைச் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட மகேந்திரன்,

"இந்தக் கிராமத்திற் பிறந்து வளர்ந்த எங்களாலேயே இதுவரை கண்டு கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலமையில் நீங்கள்...."

என்று சொல்லிக் கொண்டுபோக,

"புரியுது மச்சான் புரியுது நீ என்ன சொல்ல வாறாய் என்பது. அது சரி... இதன் நீளம் ஒரு அரைக்கால் மைல் இருக்குமா? இதன் வயதையும் ஊகிக்கமுடியாமலிருக்கு!"

என்று கோவிந் அக்கறையோடு கேட்க, நண்பனின் ஆர்வத்தையும் கரிசனையையும் புரிந்துகொண்ட மகேந்திரன்,

"அதன் நீளம் அரைக்கால் மைல் இருக்கமாட்டாது மச்சான். அதிலும் சற்று குறைவாய்த்தானிருக்கும். அதே வேளையில் அதன் வயது எனக்கும் புரியவில்லை. பல நூறு ஆண்டுகள் இருக்குமென்று நினைக்கிறேன். அதன் வயதைச் சரியாய்க் கணிக்க வேண்டுமாயிருந்தால் அது தாவரவியல் நிபுணர்களாற்தான் முடியும். அதிலும் ஒரு சிக்கலுண்டு. அதாவது, இந்த ஆலமரத்தின் அடிமரம் ஏற்கனவே பட்டழிந்து விட்து போலும். பிற்பட்ட மூத்த விழுதுகளும் பட்டழிந்து விட்டன போலும். தற்போது காணப் படும் விழுதுகள் பிற்பட்ட காலத்தில் வளர்ந்தவையாக இருக்கவேண்டும். இந்த ஆலமரம் இப்போது காணப் படுவதை விடப் பெரியதாய் இருந்திருக்கலாம். இது தற்போது அதன் அந்திமகாலத்தை நோக்கிப் போய்கொண்டிருப்பதாய்க் கருதவேண்டி உள்ளது. புதிய விழுதுகள் தொடர்ந்து வளர்ந்தால் இதன் இருப்பு நீடிக்கும். தவறும் பட்சத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் எதிர்காலம் கேள்விக்குறிதான். இதை விநாயகனும் மக்களும்தான் காப்பாற்றவேண்டும்,"

என்று கூறிக்கொண்டு சயிக்கிளைச் சற்று வேகமாய் ஓட்டினான் நேரத்தைக் கவனித்தவன் போல். அந்தவேளையிற் கோவிந்,

"நீயும் மாவலிக்குத்தானா போய்க் கொண்டிருக்கிறாய் மச்சான்,"

என்று கேட்டதும்,

"இல்லை கோவிந், நான் வேறொரு இடத்திற்குப் போக வேண்டும். உங்களுடைய நிலமையைச் சொன்ன பிற்பாடும் எப்படி உங்களுக்கு உதவாமற் போகமுடியும்!"

என்று சொன்னதும்,

"ரொம்ப நன்றி மச்சான், ரொம்ப நன்றி,"

என்றான் கோவிந்.

"இதென்ன கோவிந், இதெல்லாம் பெரிய விடயமே! வந்த பாதையில ஒரு பத்து நிமிடம் ஒரு நண்பனுக்கு உதவவில்லையென்றால் நான் என்ன மனிதன்!"

என்று சொல்லி முடிக்கச் சைக்கிள் மாவலியை அடைந்தது. மகிழ்ச்சியோடு இறங்கிய இருவரும் மறுபடியும் நன்றியைத் தெரிவித்து வழியனுப்பிவிட்டு நின்றபொழுது,

"பசிக்கிது மச்சான்,"

என்றான் அருள். உடனே கோவிந்,

"மறுபடியும் இன்று பொன்னம்மா ஹோட்டலுக்குப் போவமா?"

என்று கேட்டுவிட்டு விழுந்து விழுந்து சிரித்தான், சேர்ந்து சிரித்த அருள் சிரிப்பை ஒருவாறு அடக்கிக்கொண்டு,

"வேறு வழியில்லாவிட்டால் அங்கு தானே..."

என்று சொல்லிக்கொண்டு போகக் குறுக்கிட்ட கோவிந்,

"அம்மா மதியச் சாப்பாடு இருவருக்கும் தந்துவிட்டிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறா, அதுதான் இந்தப் பையில் இருப்பது. வா அந்த நூலகத்திலிருந்து சாப்பிடுவம்,"

என்று கூறிக்கொண்டு முன்சென்றான் கோவிந், பின் தொடர்ந்த அருள்,

"நூலகத்திற்குள்ளிருந்து சாப்பிட்டால் யாரும் ஏசமாட்டாங்களா? "

என்று கேட்டதும்,

"அதற்குள் சனங்கள் அதிகம் இருக்கமாட்டினம். அதால ஒரு பிரச்சினையும் வராது. நீ பயப்படாமல் வா,"

என்று சொல்லிக்கொண்டு உட்சென்றான் கோவிந். சாப்பிட்டு முடிக்க நேரம் பன்னிரண்டை அண்மித்துக் கொண்டிருந்தது. மாவலித் துறையை நோக்கிச் சென்ற இருவரும் கொந்தளிக்கும் கடலையும் குமுறும் அலைகளையும் சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டு நின்றனர். அப்பொழுது அருளைப் பார்த்து,


"போகும்பொழுது மலையடியிற் கொஞ்சம் உக்கிரமாய் ஆட்டும். நீ ஒன்றுக்கும் பயப்படாத. இந்த லோஞ்சியை எந்தக் கடலும் காற்றும் எதுவும் பண்ணமுடியாது. மலையடி கடந்து நயினாதீவிற்குள் போகும்வரை உள்ளுக்குப் போயிரு. அப்புறம் மேற்தட்டிலிருந்து பார்க்கலாம் காட்சிகளை. நீ வந்தபொழுது அலைகளோடு சேர்ந்து வந்தது லோஞ்சி, போகும்போது அலைகளை எதிர்த்துப் போகப்போகிறது. அதனால் மலையடி கழியும்வரை ஆட்டம் கொஞ்சம் கூடுதலாயிருக்கும். அதொன்றும் செய்யாது"

என்று சொல்லி முடிக்கப் பிரயாணிகள் லோஞ்சில் ஏற ஆரம்பித்தனர். அவர்களுடன் சேர்ந்து அருளும் ஏறி மேற்தட்டில் உட்கார்ந்து கொண்டான். வாசல் சங்கிலி கொழுவப்பட்டது. லோஞ் பாலத்துடன் இணைக்கப்பட்டிருந்த கயிறுகளைக் கழற்றத் தயாரானார்கள். அப்பொழுது கோவிந் அருளைப் பார்த்து,

"வீட்டபோய் நித்திரையில் குதிரை கடிக்க வருகிற தென்று கத்திறதில்லை...."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(106) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம், நெடுந்தீவு.



(107) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம், நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(108) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம்,
நெடுந்தீவு.



(109) ஆலமாவனப் பிள்ளையார் கோயில் ஆலமரம்,
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிவிட்டுச் சிரிக்க, வெட்கமும் மகிழ்ச்சியும் ஒன்று சேரச் சிரித்த அருள்,

"அப்படியொன்றும் நடக்காதென்று நினைக்கிறேன்,"

என்று சொல்ல, பதிலுக்கு,

"நான் பகிடிக்குச் சொன்னான்,"

என்று சொன்ன கோவிந் தொடர்ந்து,

"லோஞ் ஆத்துக் கட்டையைக் கடந்ததும் உள்ளுக்குப் போயிரு, அப்புறம் தண்ணீர் அடிக்கும்,"

என்று சற்று அழுத்திச் சொன்னான்.

"ஓம் மச்சான், அப்ப....நான் போயிட்டு வாறன், ரொம்பச் சந்தோசம்! ரொம்ப நன்றியும் கூட!!"

என்று கூறிக்கொண்டு கையை அசைத்து விடைபெற்றான். லோஞ்சு மெதுவான சத்தத்துடன் புறப்பட்டது. கோவிந்தும் பதிலுக்கு கையை அசைத்து விடைகொடுத்து மகிழ்ச்சியோடு நண்பனை வழியனுப்பி வைத்தான். ஆற்றுக்கட்டை கழியும்வரை இருவரதும் கைகள் அசைக்கப்பட்டன. அப்புறம்.... இரட்டை இயந்திரங்களின் வேகம் முடுக்கிவிடப்பட்டது. கர்ச்சிக்கும் சத்தத்துடன் இராஜேஸ்வரி எதிர்த்து வந்த மலைபோன்ற அலைகளைப் பிளந்துகொண்டு பாய்ந்து சென்றாள். ஆட்டத்தை அவதானித்த அருள் நண்பனின் வேண்டு கோளின்படி உள்ளுக்குச் சென்று ஓர் இருக்கையில் அமர்ந்து கொண்டான்.

கூதிர் காலத்தில் அருள் மேற்கொண்ட நெடுந்தீவுப் பிரயாணம் அவனின் வாழ்க்கையில் நீக்காத நினைவுகளையும் பொது அறிவையும் அனுபவத்தையும் அளித்திருந்தது என்றால் யாரும் மறுப்பதற்கில்லை.

முற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்பனிக் காலம்

## அங்கம் - 01

ஆயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்தியாறாம் ஆண்டு மார்கழி மாதம் இருபத்தைந்தாம் திகதி கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பரீட்சை எழுதி முடித்த கோவிந்தும் அருளும், தமது வாழ்க்கையில் ஏதோவொன்றைச் சாதித்துள்ளோம் என்ற மனத்திருப் தியோடு ஸ்கந்தவரோதயா கல்லூரியிலிருந்து சுன்னாகம் நோக்கி நடந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அருள் கோவிந்தைப் பார்த்து,

"என்ன கோவிந், பரீட்சை எழுதி முடித்துவிட்டோம். இதன் பெறுபேறு யூலை அல்லது ஆகஸ்டிற் தான் வரும். அதுவரை நீ பாடசாலைக்கு வருவியோ அல்லது....?"

என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள் நண்பன் என்னத்தைக் கேட்கப் போகிறான் என்பதைப் புரிந்துகொண்ட கோவிந்,

"அருள், நீ என்னத்தைப் பற்றிக் கேட்கப் போகிறாய் என்பது எனக்கு நன்கு புரிகின்றது. நான் என்னுடைய முழுச் சக்தியையும் பயன்படுத்தித்தான் படித்தனான். அதேமாதிரித்தான் பரீட்சையும் செய்துள்ளேன். பரீட்சையிற் சித்தியடைவேன் என்ற நம்பிக்கையுண்டு.

பல்கலைக் கழகம் போகின்ற அளவிற்குப் புள்ளிகள் கிடைக்குமோ என்பதை என்னால் இப்பொழுது சொல்ல முடியாது. அதற்குப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை இதற்குமேற் படிப்பதற்கு ஒன்று மில்லை. ஆனபடியால், பெறுபேறு வரும்வரை நான் பாட சாலைக்கு வரப்போவதில்லை. நீ மஞ்சான் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வந்து போகிறாய். நான் அப்படியே? நெடுந் தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து, அங்கிருந்துதான் பாடசா லைக்கு வந்து போகிறேன். பொருளாதாரக் கஸ்டமுடைய எனது குடும்பத்திற்கு இது ஒரு பெரிய பாரம் மச்சான். ஆகையினால், இங்குள்ள மாணவர்கள் போன்று பொழுது போக்கிற்காக நான் பாடசாலைக்கு வந்து போக முடியாது,"

என்று சொல்லிக்கொண்டு போக குறுக்கிட்ட அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனக்கு எல்லாம் புரியுது கோவிந். நானும் உன்னைப் போலத்தான். எனது குடும்பமும் பொருளாதார வளம் படைத்த குடும்பமல்ல. ஏற்கனவே ஓரளவிற்கு உனக்குத் தெரியுந் தானே! அத்தோடு நானும் என்னாலியன்ற அளவிற்கு பரீட்சை யில் நன்றாகச் செய்துள்ளேன். பெறுபேறு நீ சொன்னது போல பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். எது என்னவோ, நானும் பரீட்சைப் பெறுபேறு வரும்வரை பாடசாலைக்கு வரப் போவதில்லை. மேலும் படிப்பதற்கு என்ன மச்சான் கிடக்கு? சும்மா பொழுது போக்க வழியில்லாதவங்கள் வந்து போறாங் களென்று நாமளும் வந்து போகமுடியுமே! சரியாய்ச் சொன்னாய் மச்சான். இந்த விடயத்தில் நானும் உன்பக்கந் தான்,"

என்று சொல்லி முடிக்க கதையைத் தொடர்ந்த கோவிந்,

"அப்ப...... இந்த ஏழெட்டு மாதமும் என்ன செய்வதாய் உத்தேசம்?"

என்று கேட்டுவிட்டு விழித்துப் பார்த்தான். அப்பொழுது ஒரு சிறிய புன்சிரிப்பை வரவழைத்துக் கொண்டு,

"என்ன கோவிந், விவசாயக் குடும்பத்தில் வேலைக் கென்ன குறைச்சல்! அப்பா, அம்மாவிற்கு தோட்ட வேலை களில் நிறையவே உதவி செய்யலாம்,"

என்றதும், அதை ஆமோதிப்பவன் போன்று,

"நீ சொல்வது உண்மைதான் அருள். விவசாயக் குடும்பத்தில் வேலைக்கு ஒருபோதும் குறைச்சல் இல்லை. இருந்தபோதும், ஓய்வு நேரம் பொழுது போக்கென்று மன ஆறுதலுக்காக ஏதாவது இடைக்கிடையாவது செய்யத்தானே வேண்டும் ஏன் அருள், நமது முன்னோர் சாமானியமான ஆட்களே? அவர்கள் உழைத்ததோடு மட்டும் நின்றுவிடாமல் தங்களு டைய சந்தோசமான பொழுது போக்கிற்காக, மனத் திருப்திக் காக எத்தனை கலை நிகழ்ச்சிகள், நாட்டுக் கூத்துக்கள், பண்டிகைகள், கொண்டாட்டங்கள் என்று அனுபவிக்கா மலேயே இருந்தவர்கள்!"

என்று சொன்ன கதையை முடிப்பதற்குள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சொட்டாய்ச் சொன்னாய் மச்சான். வாழ்க்கையை நன்கு அனுபவித்து வாழ்ந்தவர்கள்தான் நம்முன்னோர். அதை யாரும் மறக்கவோ மறைக்கவோ முடியாது,"

என்று சொல்லிக்கொண்டுபோக, ஏதோ ஐடியாத் தோன்றிய வன் போன்று,

"ஏன் அருள், இப்டிச் செய்தால் என்ன?"

என்றதும், சிறிய ஆச்சரியத்தோடு,

"எப்படி?"

என்றான் அருள். உடனே கோவிந் சிறிய புன்முறுவலுடன்,

"டேய் அருள், நீ இந்த ஏழெட்டு மாத இடைவெளியில் மறுபடியும் ஒரு தடவை எங்களுடைய ஊருக்கு வந்தா லென்ன?"

என்று கேட்டு வாய் மூடுவதற்குள் திடீரென்று ஓர் இதமான மென்சிரிப்புடன் கோவிந்தின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தான். நண்பனின் பார்வையிலிருந்து அவனின் மனோநிலையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"அருள், நீ நினைக்கிறாய் மறுபடியும் நெடுந்தீவிற்கு வந்து எனக்குச் சிரமத்தைக் கொடுக்கப்படாது என்று, அப்படித்தானே?"

என்று கேட்டதும், அருள் மசிந்துகொண்டு ஒரு வழிந்த சிரிப்புச் சிரித்தான். அவனின் அந்தக் காட்சி 'நீ நினைப்பது சரிதான் கோவிந்' என்று சொல்லுவதுபோற் பட்டது கோவிந்திற்கு. எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொண்ட கோவிந்,

"அருள், நீ ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். இது ஏதோ மலையைத் தூக்கி தலையில் வைக்கிற வேலை யில்லை. இது ஒரு சாதாரண விடயந்தான். இதில் எனக் கொரு கஸ்டமும் இல்லை. உண்மையைச் சொன்னால் இதில் எனக்குப் பெரு மகிழ்ச்சியும் ஆத்மதிருப்தியும் ஏற்படவிருக்கு. ஆனபடியால், நீ மார்ச் மாதம் 14ந் திகதி நெடுந்தீவிற்கு மறுபடியும் வருகிறாய். அன்று வரப்போகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஏப்ரல் மாதம் 14ந் திகதி வரை நின்றுவிட்டு 15ந் திகதி மறுபடியும் உனது வீடு நோக்கிய பிரயாணத்தை நெடுந்தீவு மாவலித் துறையிலிருந்து ஆரம்பிக்கிறாய். சரியா? வேறெந்தக் கதையோ விளக்கமோ சொல்லவேண்டாம்''

என்று அன்பும் நட்பும் கலந்தாற்போல் சொல்லி முடித்த வேளையில் இருவரும் சுன்னாகம் பேரூந்து நிலையத்தை அடைந்தனர். அப்பொழுது வயாவிளானுக் கூடாக புன்னாலைக்கட்டுவன் செல்லும் பேரூந்து புறப்படுவதற்கு தயார் நிலையில் நின்றதைப் பார்த்த அருள்,

''என்னுடைய பேரூந்து புறப்படுவதற்கு ஆயத்தமாய் நிற்கிது. சனங்கள் ஏறிக்கொண்டிருக்கினம். அப்ப.... நான் போயிட்டு வரட்டுமே கோவிந்? இதை விட்டால் இன்னொரு மணித்தியாலம் காத்திருக்க வேண்டும்,''

என்று கூறியதும் நண்பனின் அவசியத்தையும் அவசரத்தையும் புரிந்துகொண்ட கோவிந் உடனே நண்பனின் கையைப் பிடித்துக் குலுக்கி பிரியாவிடை பெற்றுக் கொண்ட நிலையில்,

''நான் வீட்டிற்குப் போய் எல்லாவற்றிற்கும் விபரமாய்க் கடிதம் போடுகிறேன். அப்ப... நீ போயிட்டு வா,''

என்று கூறி வழியனுப்பி வைத்துவிட்டு யாழ்பாணம் நோக்கிச் சென்றான் கோவிந்.

இன்று மார்ச் 14ந் திகதி. கோவிந் கேட்டுக் கொண்டபடியே பிரயாணத்திற்காகப் புறப்பட்ட அருள் காலை 9 மணியளவில் ஊர்காவற்றுறை சென்று அங்கு நின்ற இராஜேஸ்வரி லோஞ்சில் ஏறி மற்றைய பிரயாணிகளுடன் மேற்தட்டில் அமர்ந்து கொண்டான். லோஞ் சரியாக ஒன்பது மணிக்குப் புறப்பட்டது. அருகில் இருந்த இளைஞனிடம் கதையைக் கொடுத்த அருள் சிறிது நேரத்தின் பின் தனது முன்னைய நெடுந்தீவுப் பிரயாணத்தின் போது தான் லோஞ்சில் பெற்ற அனுபவத்தை எடுத்துக்கூறி, மலையடி வரும்போது தனக்குத் தெரியப்படுத்தும்படி வேண்டிக் கொண்டான். அருளின் கதையைக் கேட்ட அந்த இளைஞன் முன்னைய கடற்பிரயாணம் ஆளை நன்கு பயப்படுத்தி விட்டதுபோலும் என்பதைப் புரிந்துகொண்டு, ஆறுதல் கூறுவதுபோன்று,

''நீங்கள் இதற்குமுன் நெடுந்தீவிற்கு வந்தது கார்த்திகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில். அது கூதிர்காலம். கூதிர்காலம் என்றால் வானிலை மப்பும் மந்தாரமும் காற்றும் மழையும் நிறைந்ததாயிருக்கும். கூதிர்காலத்தில் நெடுந்தீவுக் கடல் குமுறிக் கொந்தளித்துக் காணப்படும். அதனால் அலைகள் மலைபோன்று எழுந்து வந்து ஓடங்களைச் சக்கபோடு போடுங்கள். இதெல்லாம் நெடுந்தீவு மக்களுக்குப் பழக்கப்பட்ட விடயம். உங்களைப் போன்று புதிதாக வருபவர்களுக்கு மறக்க முடியாத அனுபவ மாயிருக்கும். சிலவேளை சமாளிக்கமுடியாத அனுபவமாயும் அமையலாம்.

ஆனால் இன்று அப்படியிராது. காரணம், இது பின்பனிக் காலம். இக்காலத்தில் வானிலை வெளிப்பாயும் காற்று மந்தமாயுமே காணப்படும். அதனால் கடல் இன்றுபோன்று அமைதியாகவே இருக்கும். இருந்தபோதும் நெடுந்தீவுக் கடல் கொஞ்சம் அலைகள் நிறைந்ததாய்த்தான் இருக்கும். அதி லும் மலையடியில் சிறிய ஆட்டம் கொடுக்கத்தான் செய்யும். எனினும் கூதிர் காலத்தோடு ஒப்பிடும்போது பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அதாவது உள்ளுக்குப் போகவேண்டிய தேவை வராது. நாங்கள் மேலே இருந்தபடியே நெடுந்தீவிற் குப் போகலாம். என்ன..... வெய்யிற்தான் கொஞ்சம் சுடப்பாக் கும். மூன்று மணித்தியாலப் பிரயாணமல்லே! கடற்காற்று அதைத் தணித்துவிடும். வெய்யிற் கடுமையாய்ச் சுட்டால் நீங்கள் உள்ளுக்குப் போயிருக்கலாம். பிரச்சனையில்லை,"

என்றதும்,

"இல்லை, எனக்கும் மேல இருந்து போவதுதான் விருப் பம். இடங்களை, காட்சிகளைப் பார்க்கலாமல்லே! நீங்களும் இருக்கின்றபடியால் கதைத்துப் பேசிக்கொண்டு போகலாந் தானே! பிறகேன் உள்ளுக்குப் போவான். நிலமை பிழைச் சால் உள்ளுக்குப் போகலாம்,"

என்று சிரித்துக் கொண்டே கூறிய அருள், தொடர்ந்து,

"உங்களுக்கு கோவிந்தைத் தெரியுமே?"

என்று கேட்டதுதான் தாமதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தெரியுமாவா? அவன் எனது நண்பன் மட்டுமல்ல நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் எனது சகபாடியுங்கூட. ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தனாங்கள். அவன் படிப்பில் உண்மையிலேயே கெட்டிக் காரன். அவன் முதற்தடவையிலேயே G.C.E. (O/L) பரீட்சையிற் சித்திபெற்று இப்போது சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் A/L படிக்கிறான்,"

என்றதும்,

"நானும் அவனோடு ஸ்கந்தாவில் A/L படிக்கிறேன். இரண்டுபேரும் ஒரே வகுப்பிற்தான் படிக்கிறோம்,"

என்றான் அருள்.

"ஓ! அப்படியா விசயம். அப்ப.... நீர்.... இப்ப... அவரிடந்தான் போகிறீர்?"

என்று கேட்டதும்,

"சரியாகச் சொன்னீங்கள். அவனுடைய வேண்டுகோளின் பேரிற்தான் போய்க் கொண்டிருக்கிறேன்,"

என்று சொல்ல, சிறிது யோசித்துவிட்டு,

"என்ன பிளானோடு போய்க் கொண்டிருக்கிறீங்கள் என்று அறியலாமோ?"

என்று கேட்டவன் அருளின் பதில் வருவதற்குள்,

"உங்களுடைய பெயர் என்னவென்று சொல்லுங்கோ வேன். இவ்வளவு நேரமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆனால், உங்களுடைய பெயரைக் கேட்க மறந்துவிட்டேன்,"

என்றதும்,

"எனது பெயர் அருள்,"

என்றான். உடனே அந்த இளைஞன்,

"எனது பெயர் பசுபதி, கோவிந்திடம் எனது பெயரைச் சொன்னால் அவருக்குத் தெரியும்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிவிட்டு தனது கேள்விக்குப் பதிலை எதிர்பார்ப்பவன் போற் பார்த்தான். அதைப் புரிந்துகொண்ட அருள்,

"பெரிய பிளானோடு போவதற்கு நான் என்ன M.P. ஆ? அல்லது அமைச்சரா? இல்லைத்தானே! ஒரு மாணவன் என்ற ரீதியில் நண்பனுடைய ஊரைப் பார்க்கலாமென்று போகிறேன்,"

என்றான். சிறிது சிரித்துவிட்டு,

"ரொம்பச் சுவாரஸ்யமாய்ப் பேசுகிறீங்கள்,"

என்று சொன்ன பசுபதி தொடர்ந்து,

"இரண்டாம் தடவையாய் இந்த மாதத்தில் ஏன் உங்களை அழைத்தார் என்பதற்கான காரணம் இப்பதான் புரியுது. கோவிந் ஒரு லேசான ஆளில்லை. எதையும் அறிவுபூர்வமாய்ச் சிந்திப்பவன். நான் என்ன சொல்ல வாறேனென்றால் கூதிர்காலம் நெடுந்தீவைப் பொறுத்த மட்டில் வெள்ளமும் தண்ணியும் நிறைந்த மந்தமான பொருளாதாரத்தைக் கொண்ட காலம். ஆனால் பூமி பச்சப்பசேல் என்று காட்சியளிக்கும். பின்பனிக்காலம், அதாவது மாசி பங்குனி மாதங்களில் பசுமை குறைந்து காணப்பட்டாலும், பொருளாதார ரீதியாகச் செளிப்பான காலமெனலாம். காரணம், சிறுதானிய அறுவடை, தோட்டம் துரவு, பனங்கிளங்கு, ஒடியல், பனங்கள்ளு, பால், மோர், ஆடு, மாடு, மீன்பிடி என்று மக்களின் முயற்சிகளுக்குப் பயனைப் பெற்று அனுபவிக்கின்ற காலம். நெடுந்தீவு மொத்தத்தில் பொருளாதார வளம் குன்றிய பூமியாயிருக்கின்ற போதும், மாசி, பங்குனி, சித்திரை மாதங்கள் ஓரளவிற்குச் சிறப்பான மாதங்களென்றால் நெடுந்தீவைப் பற்றித் தெரிந்தவர்கள் எவரும் மறுக்கமாட்டார்கள். அதன் அடிப்படையிற்தான் கோவிந் உங்களை இந்த மாதத்தில் அழைத்திருக்க வேண்டும்,"

என்றான்.

"அச்சொட்டாய்ச் சொல்லுகிறீங்கள், எப்படி?"

என்று கேட்டு விட்டு புன்முறுவலுடன் விழித்துப் பார்த்தான் அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதுதானே முதலிற் சொன்னேன் கோவிந் லேசான ஆளில்லை என்று, அவன் எதையும் அறிவுபூர்வமாய்ச் சிந்திப்பவன். அவனோடு ஐந்து வருடங்கள் ஒன்றாய்ப் படித்திருக்கிறேன். அவனைப்பற்றித் தெரியாதா? என்ன? அவன் படித்த காலத்தில் சிலவேளைகளில் வகுப்பில் தர்க்கரீதியான கேள்விகளைக் கேட்டு ரீச்சர்மாரையே திணறடிக்கப் பண்ணியிருக்கிறான். சில ரீச்சர்மார் சமாளித்து விடுவார்கள். சில ரீச்சர்மார் 'ஆத்தாத நண்டு தணலைக் காவியது போன்று' அவன் மீதே பாய்ந்திருக்கினம். அவன் ஒரு கெட்டிக்காரன் மட்டுமல்ல, ஒரு சுவாரஸ்யமான பேர்வழியுங்கூட,"

என்று சொல்லிக் கொண்டு போக லோஞ் சிறிது ஆட்டங் கொடுக்கத் தொடங்கியது. இதை அவதானித்த அருள் சிறிது பயப்பட்டவன் போன்று,

"என்ன, மலையடி வந்துவிட்டதோ?" என்று கேட்டான்.

உடனே பசுபதி,

"சரியாய்ச் சொன்னீங்க, மலையடியை லோஞ் நெருங்கிவிட்டது,"

என்றதும்,

"அப்ப.... உள்ளுக்குப் போவமா? அப்புறம் தண்ணி அடிச்சாலும்,"

என்று கதையை இழுக்க - சூடுகண்ட பூனை அடுப்பங் கரைக்குப் போகாதென்பது போல் - பழைய அனுபவம் ஆளுக்கு வேலை செய்யுது போலும் என்பதை உணர்ந்த பசுபதி,

"அதொன்றும் நடக்காது, நீர் சும்மாயிரும். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளுகிறேன்,"

என்று கூற, பசுபதியின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்ட அருள் மனதைத் திடப்படுத்திக் கொண்டு கடலையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான் பெரிய மலை போன்ற அலைகள் வருகின்றனவா என்பதை அவதானிப்பவன் போன்று. மலையடியின் நடுப்பகுதியில் லோஞ் சென்றுகொண்டிருந்த வேளை பெரிய அலையொன்று லோஞ்சை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதை அவதானித்த பசுபதி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரிய அலையொன்று வருகிது. அது லோஞ்சில் மோதும்போது சிறிது தண்ணீர் அடிக்கலாம்,"

என்று சொல்லி வாய் மூடுவதற்குள் அள்ளிச் சொரிந்தது. அச்சமும் பதட்டமும் அடைந்த அருள்,

"என்னண்ண, உங்களுடைய கதையைக் கேட்டு.... எல்லாம் நனைஞ்சு போய்ச்சு,"

என்று புறுபுறுக்க,

"இதென்ன அருள்! தண்ணீர் அடிச்சாற் போல நாம கரைந்தா போவம். இதுகும் ஒரு புதிய அனுபவம் என்று நினையும். இப்படியான பிரயாணத்திலும் ஒரு திறில் இருக் கல்லே! மனோதைரியத்தை ஏற்படுத்தும் அனுபவமல்லே, இது? நீர் உங்களுடைய ஊருக்குத் திரும்பிப்போகும்போது திறில் நிறைந்த இந்தப் பிரயாணத்தைப் பற்றிச் சொல்லிச் சந்தோசப் படலாமல்லே? பேசாமலிரும், இந்த வெய்யிலுக்கு இதெல்லாம் பத்து நிமிடத்தில் காய்ந்து போகும்,"

என்று சொல்லி வாய்மூட அடுத்த சொரியல் முகத்தைக் கழு வியது. ஒரு கணம் திணறிய அருள் மறுகணம் புத்துணர்ச்சி பெற்றான். கண்களிற் பட்ட உப்பு நீர் சிறிது எரிவை ஏற்படுத்திய போதும், முகத்தைக் கழுவிய கடல்நீர் உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்வை ஏற்படுத்தியது. பசுபதியின் ஆலோசனையும் சேர்ந்து அருளைப் புது மனிதனாக்கியது. இனி எப்படித் தண்ணீர் சொரிந்தாலும் உள்ளுக்குப் போவதில்லை என்று தீர்மானித்தான். நெடுந்தீவுக் கடற்பிரயாணம், இடர் நிறைந்த வாழ்க்கையிலும் ஒருவகை இன்பம் இருக்கின்றது, மனோதைரிய வளர்ச்சிக்கு வாய்ப்புக் கொடுக்கிறது என்ற உண்மை களைப் புரிய வைத்தது அருளுக்கு. இது மனித வாழ்க்கைத் தத்து வத்தை விளக்கி நிற்கிறது என்றாலும் சாலவும் பொருந்தும். வாழ்க்கை முதலிற் சாதாரணமாய் ஓடும், அப்புறம் இடி, மின்னல், காற்று, சூறா வளி என்ற சில சவால்களை எதிர்கொள்ள வேண்டி வரலாம். அப்புறம் அமைதி வரும். இந்த வாழ்க்கை உண்மையை நெடுந்தீவு கடற் பிரயாணம் வெளிப்படுத்தி நிற்கிறதென்றால் சாலவும் பொருந்தும்.

மலையடியைக் கடந்ததும் லோஞ் சாதாரண ஆட்டத்தோடு இத மாய்ப் பிரயாணித்துக் கொண்டிருந்தது. நனைந்தவை எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாய்க் காய்ந்துவிட்டன. அருளுக்கு இனம் தெரியாத ஒரு மகிழ்ச்சி. எல்லா வகையான வாழ்க்கையிலும் இன்பமும் சில அசௌகரியங் களும் இருக்கத்தான் செய்கின்றன என்ற உண்மையை உணர்ந்த நிலையில் மாவலித் துறையை அடைந்தான் அருள்.

காத்திருந்த கோவிந்திற்கு அருளையும் கூடவே பசுபதியையும் கண்டது மட்டற்ற மகிழ்ச்சி. கட்டித்தழுவி மகிழ்ச்சியையும் நட்பையும் வெளிப்படுத்தியபின்,

"எப்படியிருந்தது இம்முறைக் கடற் பிரயாணம்?"

என்று கேட்டதும், மகிழ்ச்சி பொங்க,

"அற்புதம்! பயமெல்லாம் பறந்து போய்விட்டது. நாம் மென்மையான வாழ்க்கை வாழ்வதோடு மட்டும் நின்று விடா மல் கரடு முரடான வாழ்க்கையையும் அனுபவிக்க வேண்டும். அதிலும் ஒருவகை இன்பமும் சுகமும் இருக்கு என்ற உண் மையை இந்தக் கடற்பிரயாணம் எனக்கு உணர்த்தியுள்ளது. அதனால் இப்போ ரொம்பச் சந்தோசமா யிருக்கிறேன். இதற்கு உனது நண்பன் பசுபதியும் முக்கிய காரணம்,"

என்றான் அருள். அப்பொழுது பசுபதியின் முகத்தைப் பார்த்த கோவிந் புன்சிரிப்புடன்,

"என்ன மச்சான் நடந்தது?"

என்று கேட்டுவிட்டு பதிலுக்காக முகத்தைப் பார்த்து நிற்க, கோவிந்தின் எதிர்பார்க்கையைப் புரிந்துகொண்ட பசுபதி,

"லோஞ் ஊர்காவற்றுறையிலிருந்து புறப்பட்ட நேரம் முதல் எனக்கருகிற்தான் உனது நண்பன் இருந்தார். சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண்டு வந்தோம். மலையடிக்குள் லோஞ் வந்ததும் ஓர் அலை அள்ளிச் சொரிந்தது. அப் பொழுது உனது நண்பன் சிறிது ஆட்டங்கண்டு உள்ளுக்குப் போகத் தயாரானார். நான் ஒரு சில கதைகளைச் சொல்லி ஆளை நிறுத்தி வைச்சேன். அப்புறம்,"

என்று கதையைத் தொடர முந்திக் கொண்ட அருள்,

"மிகுதியை நான் சொல்லுகிறேன். அடுத்த அலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிச் சொரிந்த தண்ணியில் எனது முகம் கழுவப்பட்டது. ஒரு கணம் திணறிப் போனன்,"

என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள் விழுந்து விழுந்து சிரிக்கத் தொடங்கினான் கோவிந். கோவிந்துடன் பசுபதியும் சேர்ந்து கொண்டான். இதைப் பார்த்த அருள் உடனே,

"நீங்கள் ஏன் சிரிக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியும். இது உங்களுக்குப் பழக்கப்பட்ட பிரயாணம். இதையே சவாலாக ஏற்று மனோதைரியத்தை வளர்த்துக் கொண்டவர்கள் நீங்கள். உங்களுக்குச் சிரிப்பு வருவதிற் தப்பொன்றுமில்லை. நான் சொல்ல வருவதென்னவென்றால், இரண்டாம் தண்ணியடியோட நானும் உங்களுடைய நிலையை அடைந்துவிட்டேன். ஆனபடியால் இப்ப நானும் உங்களோடு சேர்ந்து சிரிக்கிறேன்,"

என்று கூறிவிட்டு அருளும் சேர்ந்து சிரித்தான். அப்புறம் ஆனந்தம் பொங்க மாட்டு வண்டியில் வீடுவந்து சேர்ந்தனர் கோவிந்தும் அருளும்.

## அங்கம் -02

**ம**றுநாள் வெல்லைக்கு அருளைக் கூட்டிச் செல்லத் தீர்மானித்திருந்த கோவிந், விடிந்ததும் தனது திட்டத்தை அருளிடம் கூறியதைத் தொடர்ந்து ஒன்பது மணியளவில் இருவரும் வெல்லையை நோக்கிப் புறப்பட்டனர். போகும் வழியில் எதிர்பாராத விதமாக பொன்னன் தனது வேட்டை நாயுடன் சென்று கொண்டிருப்பதைப் பார்த்த கோவிந், ஓர் இனந்தெரியாத உவகை நிறைந்த உள்ளுணர்வோடு,

"பொன்னண்ணா! பொன்னண்ணா!! கொஞ்சம் மெதுவாய் நடவுங்கோ நானும் வாறன்,"

என்று குரல் கொடுத்ததும் இதைக் கேட்டுத் தனது நடையை நிறுத்திய பொன்னன் திரும்பிப் பார்த்தான். கோவிந்தைக் கண்டதும் மட்டற்ற மகிழ்ச்சி பொங்கியவனாய்,

"டேய்! மணி! நீயா? வாவா, எப்ப வந்தனீ? யார் பையன்?"

என்று புன்சிரிப்போடு கேட்டான். நண்பனின் அன்பிற்கு அடிபணிந்தாற் போன்று பதிலுக்குச் சிரித்தபடியே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இப்ப ஒரு மாசமாய் இங்கதான் நிற்கிறன். என்னுடைய யாழ்ப்பாணப் படிப்பு மார்கழி மாதத்துடன் முடிந்து பரீட்சையும் எழுதிவிட்டேன். இனிப் பரீட்சைப் பெறுபேறு வந்தபிற்பாடுதான் தெரியும் மேற்கொண்டு படிப்பதா இல்லையாவென்று, அதுவரையும் இங்குதான் நிற்பேன்,"

என்றதும்,

"அப்ப..... அடிக்கடி சந்திக்கலாமென்று சொல்லுறாய்,"

என்றான் பொன்னன். அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த நிலையில்,

"உண்மைதான் பொன்னண்ண, நான் ஒரு நாளைக்கு உங்கட வீட்டிற்கு வாறன்,"

என்று சொன்ன கோவிந் தொடர்ந்து,

"அதுசரி பொன்னண்ண, என்ன இந்தப் பக்கம் வேட்டை நாயோட போறீங்க, இது வேட்டைக்குரிய காலமில்லையே!... கையில் இரண்டு போத்தல், அடுத்த கையில நாலு தேங்காய்.... என்ன விசேடம்?"

என்று கேட்டு முடிப்பதற்குள்,

"என்ன மணி கேட்கிறாய்? எல்லாவற்றையும் மறந்து போனாயே? பங்குனி மாதம் தெற்கு நோக்கி இரண்டு போத்தலுடனும் நாலு தேங்காயுடனும் பொன்னன் போறா னென்றால், ஏனென்று நான் சொல்லித்தானா உனக்குத் தெரிய வேண்டும் மணி?"

என்று கேட்டதும் கொஞ்சம் ஆழமாய்ச் சிந்திக்கத் தொடங்கிய கோவிந் சில வினாடிகளின் பின் திடீரென்று,

"புரியுது! புரியுது! எல்லாம் புரியுது. நானும் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்தவன் தானே. இது புரியாட்டி நான் என்ன நெடுந்தீவான்! வெல்லைக்குத்தானே போறீங்க?"

என்றான்.

"அப்படிப் போடு அருவாளை, மீனுக்குஞ்சுக்கு முக்குளிச்சா காட்டவேணும். வெல்லையைத் தெரியாத நெடுந்தீவான் ஒருவன் இருக்க முடியுமே!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பொன்னன் சொல்ல, அதை ஆமோதிப்பவன் போன்று

"சரியாய்ச் சொன்னீங்க பொன்னண்ண! நான் ஆரம் பத்தில் சற்று தடுமாறியதற்குக் காரணம் நீங்கள் வேட்டை நாயோடு போனதுதான்,"

என்றதும், கோவிந்தின் எண்ணத்தைப் புரிந்துகொண்ட பொன்னன்,

"நான் வீட்டைவிட்டு படலையால் வெளிக்கிட்டவுடன் எனக்கு முன்னுக்கெல்லோ வேட்டைக்காரன் புறப்பட்டு விடுகி றான். அது வேட்டைக் காலமாய் இருந்தாலென்ன வேட்டை யல்லாத காலமாயிருந்தாலென்ன. நானும் அதற்குத் தடை போடுவதில்லை. ஏன் என்று உனக்கு நான் சொல்லவேண்டி யதில்லை,"

என்று சொன்னதும்,

"என்ன பொன்னண்ண சொல்லுகிறீங்க? நானும் ஒரு காலத்தில் வேட்டை நாயின் சொந்தக்காரனாய் இருந்தவன் தானே! எனக்கு எல்லாம் புரியும். நாயின் உணர்வும் புரியும், மனிதனின் உணர்வும் புரியும். என்னுடைய பண்டுவனைப் பற்றி உங்களுக்குத் தெரியும்தானே? அது இறந்து போனாலும் அதன் நினைவுகள் என் மனத்தை விட்டு மறைந்து போகவில்லை பொன்னண்ண, மறைந்து போகவும் மாட்டாது,"

என்று பழையனவற்றை ஞாபகப்படுத்த, எல்லாவற்றையும் புரிந்து கொண்டவன் போன்று பொன்னன்,

"இதென்ன மணி சொல்லுகிறாய்? நீ சொல்லியே இதெல்லாம் எனக்குப் புரியவேண்டும். அது பிடித்துத் தந்த உடும்பில அரைவாசியை நானும் சாப்பிட்டவன் தானே. அந்த நன்றியை மறப்பேனா? சரி.... சரி அது ஒரு பக்கம் இருக்கட்டும். நீ இப்ப எங்க போகிறாய் ஒரு பையனோடு?" என்று கேட்டதும்,

"பையனை உங்களுக்கு முன்பு பார்த்த ஞாபக மிருக்கே?"என்று கேட்டான். ஏற இறங்கப்பார்த்த பொன்னன் சில விநாடிகளின் பின் ஆச்சரியம் கலந்த சிரிப்புடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" போனவருசம் குயிந்தாக் கோபுரத்தடியில் உன்னை எதிர்பாராதவிதமாய்ச் சந்தித்த போது.......," என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,

"அப்படிப்போடுங்க பொன்னண்! அவரேதான். மறுபடியும் வந்திருக்கிறார் நம்ம ஊரைப் பார்ப்பதற்கு," என்றான்.

"அப்டியா? நல்லது! நல்லது! அப்ப...... எங்க போறீங்கள்?"

என்று மறுபடியும் கேட்டதும், பிராக்காய்க் கதைத்துக்கொண்டு போகலா மென்று எண்ணி உள்ளூர மகிழ்ச்சியடைந்த கோவிந்,

"நானும் வெல்லைக்குத்தான் போகிறேன். கூதிர் காலத்தில் ஒரு தடவை நெடுந்தீவைப் பார்த்துவிட்டுப் போன நண்பனுக்குப் பின்பனிக்காலத்தில் நெடுந்தீவு எப்படி இருக்கும் என்பதைக் காட்டக் கூட்டிக்கொண்டு போறன். முதலில் வெல்லையையும் அங்கு பிடிக்கின்ற மீன்களையும் காட்டுவமென்று இப்ப புறப்பட்டிருக்கிறேன். நெடுந்தீவைப் பொறுத்தமட்டில் வெல்லை ஒரு முக்கிய இடமல்லே! நான் சொல்லுவது சரிதானே பொன்னண்ண?"

என்றதும்,

"சரியாய்ச் சொன்னாய் மணி. அங்க பிடிக்கின்ற மீன்களை உங்கள் நண்பன் நேரிற் பார்த்தாற்தான் எமது கடல் வளத்தைப் பற்றிச் சரியாய்த் தெரிந்துகொள்ள முடியும். நாமள் வாயால் சொன்னால் விளங்காது,"

என்று சொன்ன பொன்னன் அருளைப் பார்த்து,

"தம்பி, அங்கு பிடிக்கின்ற மீனைப் பார்த்தால் நீர் அதிர்ந்து போவாய் தம்பி! கொண்டு வந்து குவிப்பாங்கள். என்ன மீன்! எத்தனை வகையான மீன்கள்!! சொன்னாற் புரியாது. நீர் இப்ப நேரிற் பார்க்கத்தானே போகிறீர். பார்த்திட்டு அப்புறம் சொல்லும் நெடுந்தீவையும் அதன் கடல் வளத்தையும் பற்றி,"

என்று சொல்லிக்கொண்டு போக, தானும் கொஞ்சம் சொல்லுவம் என்று எண்ணிய கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சொல்வதெல்லாம் உண்மைதான் பொன் னண்ண. இருந்தபோதும் எனக்கு ஒரு கவலை. அதுகும் பெரிய கவலை,"

என்றதும், உடனே பொன்னன்,

"என்ன மணி, சொல்லவாறாய்? பெருந்தொகையாய் மீன் பிடிப்பது கவலைக்குரிய விடயமா? அதில என்ன கிடக்கு கவலைப் படுவதற்கு! அதுவும் பெரிய கவலை என்கிறாய்!" என்று கேட்டுவிட்டு கோவிந்தை விழித்துப் பார்த்தான். பொன்னன் தனது கவலையைப் புரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்பதை உணர்ந்துகொண்ட கோவிந் மெதுவாக,

"அதில்லைப் பொன்னண்ண, நான் சொல்லவாறது என்னவென்றால், அதாவது எனது கவலை என்னவென்றால், இவ்வளவு தொகையான மீன்களைப் பிடிக்கிறாங்கள். இவன்கள் யார்? எங்கிருந்து வந்தவன்கள்?"

என்ற கேள்விகளைக் கேட்க, மணி என்னத்தைக் கருதுகிறான் என்பதை ஊகித்துக் கொண்ட பொன்னன்,

"மணி, உன்னுடைய கவலை என்னவென்று எனக்குப் புரிகின்றது. அதாவது வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, மயிலிட்டி, ஊரணி, கரையூர், பாசையூர், செம்பியன்பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் நமது கடலுக்கு வந்து இவ்வளவு தொகையான மீன்களைப் பிடித்துக்கொண்டு போறாங்களே! நமது ஊரைச் சேர்ந்த மீனவர்கள் எமது கடல்வளத்தை அனுபவிக்க முடியாது தவிக்கிறாங்களே! என்று ஏங்குகிறாய், அப்படித்தானே?" என்றதும்,

"அச்சொட்டாய் சொன்னீங்க பொன்னண்ண! நான் நினைச்சதை அப்படியே சொல்லுகிறீங்க பொன்னண்ண!! அப்படியானால், நீங்களும் இதைப்பற்றிக் கவலைப்பட்டிருக் கிறீங்கள், அப்படித்தானே?"

என்றான் கோவிந்.

"இதென்ன மணி, கவலைப்படாமல் இருக்க முடியுமே! நானும் நெடுந்தீவான்தானே!!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொன்னதும், அதை ஆமோதிப்பவன் போன்று கதையைத் தொடர்ந்த கோவிந்,

"பாருங்க பொன்னண்ண, நம்ம மீனவர்கள் இரவு முழுக்க கடலில் கிடந்திட்டு விடிய இரண்டு மூன்று திருக்கைகளோடு கரைக்கு வருகிதுகள். இவன்கள், வந்தான் வரத்தான் கொண்டு வந்து மலையாய்க் குவிக்கிறாங்கள். இதைப் பார்க்க கவலை வராமல் வேறென்ன வரும் பொன்னண்ண?"

என்றதும்,

"ஊர்ப்பற்றுள்ள ஒவ்வொருவருக்கும் வரும் கவலை தான் உனக்கும் வந்திருக்கு. உனது கவலை வாஸ்தவந் தான். நாம் என்ன செய்யமுடியும்? வெறுங்கை முளம் போடாது என்பார்கள். நம்ம மீனவரிட்ட நூறு வருடத்திற்கு முந்திய திருக்கை வலைதானுண்டு. நவீன நைலோன் வலை கள் இல்லை. இயந்திரப் படகுகளில்லை. கட்டுமரத் தையும் சாக்குத் தும்பாலான திருக்கை வலையை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பண்ண்முடியும்?"

என்று சொல்லிக் கொண்டு போக தெற்காட்டு அம்மன் கோவில் வந்தது. உடனே பொன்னன்,

"மணி, நம்ம தெற்காட்டு அம்மனை ஒரு தடவை வணங்கிவிட்டுப் போனாற்தான் நாமள் போற காரியம் நல்ல படியாய் அமையும்,"

என்று கூறிவிட்டு தேங்காயையும் போத்திலையும் நிலத்தில் வைத்து விட்டு கும்பிடுவதற்குத் தயாரானபொழுது அருளைப் பார்த்த கோவிந்.

"நாமளும் கும்பிடுவம்",

என்று கூற, மூவருமாக அம்மனைக் கும்பிட்டுவிட்டு நடையைத் தொடர்ந்தனர். அப்பொழுது கோவிந் நண்பனைப் பார்த்து,

"அருள், இந்தக் கோயிலை நாங்கள் தெற்காட்டு அம்மன் கோயில் என்று அழைக்கின்றோம். நெடுந்தீவின் தெற்குக் கடற்கரையை அண்மித்து காட்டிற்குள் இந்தக் கோயில் அமைந்திருப்பதனால் இந்தப் பெயர் ஏற்பட்டது"

என்று சொன்னதுதான் தாமதம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மச்சான்! காட்டிற்குள் அமைந்திருப்பதனால் என்கிறாய். இங்க காட்டைக் காணவில்லையே!"

என்று கேட்டு முடிப்பதற்குள், கோவிந் ஒரு வழிந்த சிரிப்புடன்,

"நினைச்சேன் இந்தக் கேள்வி வருமென்று, நீ கேட்பதில் அர்த்தமிருக்குத்தான் அருள். ஒரு நூறு, நூற்றியம்பது, அல்லது இருநூறு வருடங்களுக்கு முன் இந்தப் பகுதி யெல்லாம் காடு நிறைந்திருந்தது. அப்புறம் காலநிலை மாற்றத்தாலும் மனிதர்களின் எதிர்காலம் பற்றிய சிந்தனையற்ற செயற் பாடுகளாலும் காடெல்லாம் அழிந்து இந்தக் கேள்விக்கு இடமாய்ப் போய்ச்சு. இருந்தபோதும், அங்கபார்! கோயிலைச் சுற்றியிருக்கின்ற பற்றைகளையும் பாலை மரங்களையும். இவைதான் எஞ்சியிருக்கும் எச்சங்கள். தெற்காட்டு அம்மன் என்று அந்தக் காலத்தில் வழங்கப்பட்ட பெயர்தான் இது. அற்புதமான அருள் மிகுந்த தெய்வம். தெற்குக் கரையோரமாய் அமர்ந்திருந்து இத்தீவைப் பாதுகாக் கிறாள் இந்த அம்மன் என்று எமது மக்கள் நம்புகின்றார்கள். ஆனி உத்தரத் திலன்று ஒருநாள் விசேட திருவிழா நடை பெறுவது வழக்கம். அது பொங்கற் திருவிழா வாய் அமையும். மக்களெல்லாம் பொங்கிப்படைப்பார்கள். அப்புறம் அம்மன் சிங்கவாகனத்தில் வீதிவலம் வந்து அருள் பாலிப்பாள். மூன்று குறிச்சியிலிருந்தும் மக்கள் அம்மனின் அருளைப் பெறுவதற்காக அன்றய தினம் இங்கு வந்து சேர்வார்கள்,"

என்று சொல்ல பரவசமடைந்த அருள்,

"வற்றாப்பளை அம்மன் பொங்கற்திருவிழா போன்று எனச் சொல்லுகிறாய்?"

என்று ஒப்பிட்டதும்,

"நல்ல ஒப்பீடாய்ச் சொன்னாய் அருள். ஆனால் அந்த அளவுக்குச் சனங்கள் பெருந்தொகையாய் வராயினம். அங்கு வந்து.... இலங்கை பூராகவும் இருந்து மக்கள் போவது வழக்கம். இங்க எங்களுடைய ஊர்மக்கள் தானே! விரலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்ற வீக்கம் என்பார்களே! அந்த மாதிரி என்று வைத்துக் கொள்," என்றதும்,

"விளங்கிது, விளங்கிது எல்லாம் விளங்கிது, நூற்றுக் கணக்கான மக்கள் என்று சொல்லுகிறாய்,"

என்று அருள் கூற,

" சிரியாய்ச் சொன்னாய் அருள்,"

என்று கூறிய கோவிந் திடீரென்று ஏதோ ஞாபகத்திற்கு வந்தவன் போன்று,

" இந்தப்பகுதியிலும் நன்நீர் உண்டு. கோயில் கிணறும் குடிக்கக்கூடிய நன்நீர் கொண்டது,"

என்று சொல்லிக்கொண்டு போக வெல்லை வந்தது.

உடனே பொன்னன் கோவிந்தைப் பார்த்து,

"மணி, நான் பொருட்களைக் கொடுத்து மீன் வாங்க வேண்டும். நான் அப்ப..... பிரியப் போறன். நீ நண்பனுக்கு வடிவாய் இடத்தைக் காட்டிக்கொண்டு போ. ஒரு நாளைக்குச் சந்திப்பம். நேரம் கிடைத்தால் வீட்டுப்பக்கம் நண்பனையும் கூட்டிக்கொணடடு வா. நான் நல்லபடியாய் கவனிப்பேன். தெரியுந்தானே என்னைப்பற்றி,"

என்று சொல்லி வாய் மூடியதுதான் தாமதம்,

"என்ன பொன்னண்ண சொல்லுகிறீங்க! இதெல்லாம் நீங்கள் சொல்லித்தானா எனக்குத் தெரியவேண்டும். நான் கட்டாயம் ஒரு நாளைக்கு உங்க வீட்டுப்பக்கம் வாறன்,"

என்று கூறியதும்,

"அப்ப ..... சந்திப்பம்,"

என்று சொல்லிக்கொண்டு வேகமாக விலகிச்சென்றான் பொன்னன்.

இவ்வளவு நேரமும் மனதிற்குள் எதையோ அடக்கி வைத்திருந்தவன் போன்று பொன்னன் விலகியதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மச்சான், உனது நண்பன் பொன்னண்ண போத்தலுக்குள்ள கொண்டு போறார்?"

என்று கேட்டுவிட்டு ஆர்வத்தோடு கோவிந்தின் முகத்தைப் பார்த்தான் அருள். அவனின் பார்வையிலிருந்து நண்பனின் எதிர்பார்க்கையைப் புரிந்துகோண்ட கோவிந்.

"அப்ப... இவ்வளவு நேரமும் இதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருந்திருக்கிறாய். நீ சரியான ஆளப்பா! நல்ல ஆராட்சியோடுதான் வந்து கொண்டிருக்கிறாய்?"

என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

"நெடுந்தீவிற்கு வந்ததே அதற்காகத்தானே! ஊருக்குத் திரும்பிப் போகும்பொழுது 'கப்பல் பார்க்கப்போன சேவகன் மாதிரியே,' போகலாம்? ஏதாவது கொண்டல்லே போக வேண்டும்,"

என்றதும்,

"நீ சொல்வது வாஸ்தவந்தான் அருள். நீ திரும்பிப் போகும்பொழுது நிறையவே கொண்டு போனாற்தான் எங்களுடைய ஊரைப்பற்றி நான்கு பேருக்குச் சொல்ல முடியும்,"

என்று மகிழ்ச்சியோடு கூறிய கோவிந் தொடர்ந்து,

"அது வந்து.... மச்சான், போத்தலில் இருப்பது கள்ளு. அதாவது பனங்கள்ளு, இந்த இடத்தில் கடைத்தெரு வசதி யொன்றும் கிடையாது. நீ வரும்பொழுது பார்த்தனீயல்லே? நாம வந்த பாதை முழுவதும் குடிமனையற்ற பகுதி. அதன் காரணமாய் இந்த மீனவர்கள் தங்களுடைய ஊர்களிலிருந்து வரும்பொழுது உணவுப் பொருட்களைக் கொண்டு வரு வினம். மேற்கொண்டு அவர்களுக்குத் தேவையான பொருட் களை எங்களுடைய மக்கள் நாளாந்தம் கொண்டு போய்க் கொடுப்பினம். அதற்குப் பதிலாக அவர்கள் மீன் கொடுப்பினம். இது ஒரு பண்டமாற்றுக் கொடுக்கல் வாங்கல். நாம் தற்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டமாற்றுப் பொருளாதாரம் பற்றிப் படிக்கிறோமல்லே! அதை எமது மக்கள் இங்கு நேரில் கைக்கொள்கிறார்கள்,"

என்றதும்,

"ஓ! அப்படியா விசயம்! என்னென்ன பொருட்கள் மச்சான் கொடுத்து மீன் வாங்குவீர்கள்?"

என்று ரொம்ப ஆர்வத்தோடு கேட்டான். புன்சிரிப்புடன் கதையைத் தொடர்ந்த கோவிந்,

"முக்கியமாக அவர்களுக்குத் தேவைப்படுவது சமைப்ப தற்கு விறகு,"

என்று கதையைத் தொடங்க குறுக்கிட்ட அருள்,

"தண்ணீர் எப்படி?"

என்றான்.

"இங்கு தண்ணீருக்குப் பிரச்சினை இல்லை. கடற்கரை யில் நன்னீர்க் கிணறுகள் உண்டு. அவற்றைக் குடிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்தலாம். குளிப்பதற்கும் பயன்படுத்து கிறார்கள். அக்கிணறுகள் ஆண்டவன் கொடுத்த கொடை எனலாம்,"

என்று சொன்னதும் இதைக்கேட்டு சிறிது ஆச்சரியம் அடைந்த அருள் வியப்போடு,

"அப்ப... நெடுந்தீவில் தண்ணீரில்லை தண்ணீர் இல்லை என்று மற்றயை ஊரவர்கள் எல்லாம் கதைப்பது ஓர் அர்த்தமற்ற பேச்சு. அப்படித்தானே?"

என்று கேட்டுவிட்டு, விழித்துப் பார்த்தான். நண்பனின் பார்வை யிலிருந்து அவனுடைய மனோநிலையைக் கிரகித்துக் கொண்ட கோவிந்,

"அவ்வாறு கதைப்பதில் ஓரளவிற்கு அர்த்தமிருக்கத்தான் செய்கின்றது. இத்தீவின் வடக்குப் பகுதி, மத்திய பகுதிக ளில் நன்னீர் இல்லைத்தான். அதுகும் கோடை காலத்தில் அதன் தாக்கம் மிக அதிகமாயிருக்கும். அதைச் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதுபடுத்திக் கதையைப்பரப்ப வேண்டியதுதானே! அதிருக் கட்டும்," என்று கூறிய பின் வெல்லையுக் கேணிகளைக் காட்டி,

"அங்கபார் அருள், இரண்டு கேணிகள் உண்டு. பார்த்தியே?"

என்றதும், அருள் அவற்றைப் பாாத்துக்கொண்டு,

"சரி, பார்க்கிறேன், அதற்கென்ன?"

என்று கூறியதும், கோவிந் அவற்றின் அருகில் அருளை அழைத்துச் சென்று,

"இது மச்சான், நன்னீர்க் கேணி, அது உவர் நீர்க்கேணி,"

என்றதும். நண்பன் கூறியவற்றின் உண்மையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வத்தில் விரைந்து சென்ற அருள் இரண்டு கேணிகளினதும் தண்ணீரை கையாலள்ளி வாயில் ருசித்துப் பார்த்தான். அப்புறம் கேணியின் வாசலில் நின்று கொண்டு தலையை நிமிர்த்தி,

"டேய் மச்சான், நீ சொன்ன நன்னீர்க் கேணித் தண்ணீர் உண்மையாகவே நல்ல தண்ணீர் தான். ஆனால் உவர் நீர் என்று சொன்னாயே! அதில பெரிய வித்தியாசம் இல்லை,"

என்று சொல்லி முடிப்பதற்குள்,

"நீ சொல்வது சரியான சரி மச்சான். இது மார்ச் மாதம், இன்னும் மழை நீர் நிலத்தைவிட்டு முற்றாக அகன்று போக வில்லை. அதனாற்தான் உவர்நீர்க் பேணி நன்னீராக இருக் கின்றது. ஆனி, ஆடி மாதங்களில் மழைநீர் நிலத்தை விட்டு முற்றாக நீங்கும்பொழுது அந்த உவர்நீர்க் கேணியின் நீர் உவர்நீராக மாறிவிடும், அதுதான் உண்மை. ஆனபடியாற் தான் அப்படி உண்மையைச் சொன்னேன்"

என்றதும்.

"அதுசரி மச்சான், நீ சொல்வதை நான் நம்புகிறேன்"

என்று கூறிய அருள் தொடர்ந்து,

"அதிருக்கட்டும், இந்தக் கேணிகளைப் யார் வெட்டி னாங்கள்? ஏன் இங்கு வெட்டினாங்கள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மிகுந்த அக்கறையோடு கேட்டான். இப்படியான கேள்விகள் வருமென்று ஏற்கனவே தீர்மானித்திருந்த கோவிந்,

"நல்ல கேள்வி கேட்டாய் மச்சான். உனது கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டியது எனது கடமையுங் கூட,"

என்று கூறியபின் தொடர்ந்து,

"அருள், இவை எப்பொழுது வெட்டப்பட்டன என்று எனக்குத் தெரியாது. இது எங்களுடைய கிராமச் சங்கத்தினாற்தான் வெட்டப்பட்டிருக்க வேண்டும். இத்தீவு முழுவதும் பரந்துபட்ட ரீதியிற் பல கேணிகள் வெட்டப்பட்டுள்ளன. அவை எல்லாவற்றையும் எமது கிராமச் சங்கமே பராபரித்து வருகின்றது. இவை வெட்டப்பட்டு பராபரிக்கப்பட்டு வருவதற்கான முக்கிய காரணம் எமது கால்நடைகள். அதாவது ஆடு, மாடு, எருமை, குதிரை என்பன தண்ணீர் குடிப்பதற்காகவே ஆகும். எமது கால் நடைகளிற் பெரும் பாலானவை தரவைகளிலேயே வாழுகின்றபடியினால் இவை அவற்றின் தேவையின் அடிப்படையில் முக்கியமானவை யாய்க் கருதப்பட்டு ஒழுங்காய்ப் பேணப்பட்டு வருகின்றன,"

என்று சொன்னதும், மிக அக்கறையோடு கேட்டுக் கொண்டிருந்த அருள்,

"கேட்பதற்கு ரொம்பச் சுவாரஸ்யமாயிருக்கு. சூழலுக்கேற்றபடி அவற்றின் தேவைக்கேற்றபடி ஒவ்வொரு ஊரிலும் வேறுபட்ட அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை இவை வெளிப்படுத்தி நிற்கின்றன,"

என்று சொன்னான். தொடர்ந்து வெல்லையுக் கிணற்றடிக்கு அருளைக் கூட்டிச்சென்று,

"இதுதான் அருள், வெல்லையுக் குடிநீர்க் கிணறு. இது பல நூற்றாண்டுகளுக்கு முன் வெட்டப்பட்டிருக்க வேண்டும். அண்மைக் காலங்களில் வெட்டப்பட்ட நன்னீர்க் கிணறுகளும் கிழக்குப் பக்கமாய்ச் சிறிது தூரத்திலுண்டு. போகும் பொழுது அவற்றையும் பார்த்துக் கொண்டு போகலாம்"

என்று கூறவே, கிணற்றை எட்டிப்பார்த்த அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தண்ணீர் நல்லா மேல கிடக்கு மச்சான். இங்கு மட்டு மல்ல சாறாப்பிட்டி, ஐயனார் கோவிலடி, உங்களுடைய வீட்டுக் கிணறு எல்லாவற்றிலும் தண்ணீர் நல்லா மேலதான் கிடக்கு. எங்களுடைய ஊரோடு ஒப்பிடும்போது இங்குள்ள கிணறுகளில் தண்ணீர் நல்லா மேலகிடக்கு,"

என்று சொல்லிக்கொண்டு போக, நண்பன் எல்லாவற்றையும் நன்கு அவதானிக்கிறான் எனக் கருதிக்கொண்டு,

" நீ கூறுவது உண்மைதான் அருள். இத்தீவில் கிணறு வெட்டும்பொழுது ஐந்து அல்லது ஆறு அடியிற்குள் தண்ணீர் வந்துவிடும். அதன் அர்த்தம் இத்தீவு கடல் மட்டத்திலிருந்து ஆறடி உயரத்திற்தான் அமைந்துள்ளது என்பதைக் காட்டு கின்றது,"

என்று கூற,

"ஓ! அப்படியா விசயம்! சரி.... அது இருக்கட்டும்... இத்தண்ணீரை ஒருக்காற் குடித்துப் பார்க்கலாமா?"

என்று கேட்டான். உடனே கோவிந் வாளியினாற் தண்ணீரை அள்ளி ஊற்றினான். அதைக் கைமண்டையில் ஏந்திக் குடித்த அருள் நன்கு குடித்துவிட்டு,

"போதும் மச்சான்,"

என்றவன் தொடர்ந்து.

"பறவாயில்லை.... தண்ணீர் நல்லாயிருக்கு! இந்தக் கடற்கரையில் இப்படித் தண்ணீர் இருப்பதற்கு நீங்கள் கொடுத்து வைத்திருக்க வேண்டும்,"

என்றதும்,

"நீ சொல்வது சரிதான்,"

என்று கூறிய கோவிந், தொடர்ந்து,

"தண்ணீர் பற்றி ஆராய்ந்தது போதும் வா! போய் மீன் பிடியைப் பற்றிப் பார்ப்போம்,"

என்று கூறிக்கொண்டு முன்னகர்ந்தான். சிறிது தூரம் சென்றன் கோவிந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அங்கம் - 03

சிறிது தூரம் சென்ற பின் அதில் நின்றுகொண்டு,

"அங்கபார் மச்சான்! இதுதான் வெல்லை மீன்பிடித்துறை,"

என்றதும், பெரிய ஆச்சரியத்தோடு சில நிமிடங்கள் எல்லா வற்றையும் நன்கு அவதானித்துவிட்டு,

"ஓ மை கோட்! இந்தப் பெரிய மீன் பிடித்துறை ஒன்று இங்கு உண்டா? என்னால் நம்பவே முடியவில்லையே!!"

என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"நீ இன்னும் முழுவதாய்ப் பார்த்து முடிக்கவில்லை. அதற்குள்ள பெரிது சிறிது பற்றிச் சொல்லத் தொடங்காத.

இங்க வா,"

எனக்கேட்டு விட்டு கடற்கரையிற் குவித்து வைக்கப்பட்டிருந்த மீன்களைக் காட்டி,

"இவற்றை நன்கு பார்த்துக்கொண்டு வா,"

என்று கூறிக்கொண்டு கிழக்கு நோக்கி நடந்தான் கோவிந். கொக்குறுப் பிட்டியின் கிழக்கு எல்லையை அடைந்ததும் அதில் நின்று கொண்டு,

"இத்துடன் முடிகின்றது மீன்பிடித்துறை,"

என்று கூறிய கோவிந்,

"இப்ப சொல்லு நீ பார்த்தவைகள் பற்றி,"

என்று கேட்டுவிட்டு ஒரு பெருமூச்சு விட்டான். கோவிந்தினுடைய பெருமூச்சின் அர்தத்தைப் புரிந்துகொண்ட அருள், அவனுடைய எதிர் பர்க்கைக்குரிய முறையிற் பதிலைக் கொடுப்பதற்கு கட்டியம் கூறுவது போன்று,

"இந்த மீன்பிடித்துறையின் நீளம் எவ்வளவு இருக்கும் மச்சான்?"

என்ற கேள்வியைக் போட்டான். உடனே வாயில் சுட்டு விரலை வைத்துக்கொண்டு சில வினாடிகள் யோசித்த கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(1) வெல்லைக் கடற்கரை



(2) வெல்லைக் கடற்கரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(3) தெற்காட்டு அம்மன் கோயில்



(4) தெற்காட்டு அம்மன் கோயில் காண்டாமணிக் கோபுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிட்டத்தட்ட முக்கால் மைல் இருக்குமென்று நினைக்கிறேன்" என்றான்.

"அப்படியா!" என்று கூறிய அருள் தொடர்ந்து,

"இப்படியான ஒரு மிகப் பெரிய மீன்பிடித்துறையை நான் என்னுடைய வாழ்க்கையிற் பார்த்ததில்லை. அதற்காக இப்படியான ஒரு பெரிய மீன்பிடித்துறை இந்த நாட்டில் இல்லை என்பது அர்த்தமில்லை. இருக்கலாம். ஆனால் நான் இதுவரை பார்த்ததில்லை. ஓ! மை கோட்!! என்ன மீனப்பா!!! இவற்றின் பெயர்களே என்னவென்று எனக்குத் தெரியவில்லையே!!"

என்று கூறிக்கொண்டு தலையிற் கையை வைத்தான். நண்பனின் உணர்வுகளைப் புரிந்துகொண்ட கோவிந்.

"நீ ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை அருள். நானே எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லுகிறேன். நீ எல்லா வற்றையும் நன்கு கேட்டுக்கொண்டும் அவதானித்துக் கொண்டும் வா,"

என்று கூறிவிட்டு திரும்பி மேற்குப் பக்கமாய் நடக்கத் தொடங்கிய கோவிந் அங்கிருந்த ஒவ்வொரு மீன்குவியல்களையும் காட்டி,

"இது மச்சான் அறக்குளா, அது அறவஞ்சுலன், அடுத்தது கொடுவாய்,"

என்று கூறிய கோவிந் திடீரென்று நின்றுகொண்டு,

"இவையெல்லாம் உனக்குத் தெரியாது என்று எண்ணிக் கொண்டு நான் சொல்லவில்லை. சில பல உனக்கு ஏற்கனவே தெரிந்திருக்கலாம். சிலபல தெரியாமலுமிருக் கலாம்,"

என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்ட அருள்,

"மச்சான், நீ என்ன நினைக்கிறாய் என்று எனக்குப் புரியுது. எனக்குத் தெரிந்ததா அன்றித் தெரியவில்லையா என்பதைப் பற்றி நீ கவலைப்படாமல் நீ எல்லாவற்றையும் பற்றி விபரமாய்ச் சொல்லிக்கொண்டு போ. நான் வேண்டிய மாதிரிக்குக் கிரகித்துக் கொள்ளுகிறேன், சரியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றதும் நண்பனின் ஆற்றலைப் புரிந்துகொண்ட கோவிந் சிறிய புன்சிரிப்புடன்,

"அப்படிப் போடு மச்சான்,"

என்று சொல்லிக்கொண்டு சிறிது தூரம் சென்றதும், கையாற் காட்டி,

"அது மச்சான் சுறாக்குவியல், அதன் பக்கத்திற் கிடக்குது, பார்த்தியே! அது கொம்பன் சுறா, அடுத்தது கடியன் சுறா,"

என்றதும் வாயிற் கையை வைத்த அருள்,

"என்ன மச்சான்! இந்தப் பெரிய சுறாக்களா!! என்னால் நம்பவே முடியவில்லையே!!! ஓர் ஆளிலும் பெரியதாயிருக்கு மச்சான்,"

என்றதும் மறுபடியும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்துக் கொண்டு,

"ஆளென்ன ஆள் மச்சான்! ஓர் ஆளைப் போன்ற பன் மடங்கு பெரிய உயிரினங்கள் சமுத்திரத்தில் உண்டு. இதென்ன பெரிது!! வா இன்னும் காட்டிறேன்"

என்று கூறிய கோவிந் சிறிது தூரம் சென்றதும் விரலால் சுட்டிக் காட்டி,

"அங்கபார் மச்சான், அதுதான வேளாச் சுறா, அதனு டைய கொம்பைப் பார்த்தியே! அதனுடைய அளவைப் பார்த்தியே!"

என்று கூற அதை மிக அக்கறையோடு பார்த்துக்கொண்டு நின்றான் அருள். அந்த வேளையில் அவ்விடத்திற்கு ஒருவர் தராசுடன் வந்தார். அவருடைய கையில் கொப்பி போன்ற ஒரு சிட்டைப் புத்தகமும் பென்சிலும் இருந்தன. அவருடைய உடை நடை சாதாரண மீனவரி லிருந்து சற்று வித்தியாசமாயிருந்தது. வேட்டி சேட்டு நேர்த்தியாக அணிந்திருந்தார். அவர் வந்தபொழுது அவருக்குப் பின்னால் இருவர் ஒரு நீண்ட தடியில் மிகப் பெரிய மீன் கூடையைத் (பிரப்பங்கூடை) தமது தோள்களில் தூக்கி வந்தனர். அவர் வந்தவுடன் அங்கு நின்ற ஒருவன் மிகப்பெரிய வெட்டுக் கத்தியுடன் வந்து அந்த வேளாச் சுறாவின் வயிறைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழித்து அதன் குடல், முட்டை எல்லாவற்றையும் வெளியே எடுத்து ஓர் ஓரமாய்ப் போட்டுவிட்டு, அப்புறம் அதன் கொம்பையும் அதன் சிறகுகளையும் வாலையும் வெட்டினான். தொடர்ந்து அந்த வேளாச் சுறாவை மூன்று துண்டாக வெட்டினான். அப்புறம் தடியோடும் கூடை யோடும் வந்த இருவரும் தராசைக் கொழுவி ஒவ்வொரு துண்டையும் நிறுக்க, சிட்டையோடும் பென்சிலோடும் வந்தவர் அதன் எடையைப் பார்த்துக் குறித்துக்கொண்டார். அவ்வாறு மூன்று துண்டுகளும் நிறுக்கப்பட்டன. எல்லாவற்றையும் குறித்துக் கொண்டபின் அங்கு கிடந்த அறக்குளா, அறவஞ்சுலன், சுறாக்கள், கட்டா ஆகிய மீன்களை கூடையிற் தனித்தனியாகப் போட்டு நிறுத்தனர். எல்லாவற்றின் எடை யையும் அந்த நேர்த்தியான மனிதன் குறித்துக் கொண்டான். அப்புறம் அந்தச் சிட்டையின் ஒரு பிரதியை கிளித்து நீட்டினார். உடனே அங்கு நின்ற ஒருவர் அதைப் பெற்றுக் கொண்டார். அதைத் தொடர்ந்து அந்த நேர்த்தியான மனிதரும் கூடையைத் தூக்கும் இருவரும் அடுத்த வானுக்குச் சென்றனர். இவ்வளவும் நடந்து முடியும் வரை எதுவுமே பேசாது நின்ற கோவிந் இப்பொழுது அருளைப் பார்த்து,

"பார்த்தியே அருள் என்ன நடந்தது என்று?"

கேட்டதும், அருள் சிரித்தபடியே,

"எல்லாம் புரியுது, புரியுது. அந்த நேர்த்தியாய் உடையணிந்திருந்தவர்தான் கணக்குப்பிள்ளை. தான் பெற்றுக் கொண்ட மீன்களினதும் அவற்றின் எடைகளினதும் விபரம் அடங்கிய சிட்டையை மீனவர்க்குக் கொடுத்துவிட்டு போகிறார், அப்படித்தானே?"

என்றதும், நண்பனின் விவேகத்தையும் அக்கறையையும் புரிந்து கொண்ட கோவிந்,

"சரியாய்ச் சொன்னாய் மச்சான்,"

என்று கூறிவிட்டு,

"உன்னில எனக்குப் பிடித்துக்கொண்ட விடயம் என்ன வென்றால், நீ ஒவ்வொரு நிகழ்வையும் மிகமிக அக்கறை யோடு அவதானிக்கிறாய் என்பதுதான்," என்றதும், தனது பிரயாணத்தின் நோக்கத்தை உறுதிப்படுத்துபவன் போன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்க வந்ததே அதற்காகத்தானே! நான் திரும்பிப் போகும்பொழுது கப்பல் பார்க்கப்போன சேவகன் மாதிரிப் போகப்படாது, கப்பல் பார்க்கப்போன மந்திரி மாதிரிப் போக வேண்டும், சரிதானே! நான் சொல்வது சரிதானே!!",

என்றதும்,

"அப்படிப் போடு, இதற்குமேல் சொல்லுவதற்கு என்னிடம் ஒன்றுமில்லை, தேவையுமில்லை,"

என்று கூறிய கோவிந் தொடர்ந்து,

"நீ பெரும்பாலானவற்றை நீயாகவே புரிந்துகொண்ட போதும் சில விடயங்களைப் பற்றி விளக்கம் தரவேண்டிய கடமை எனக்கு உண்டு," என்றதும்

"நீ சொல்ல வேண்டிய எல்லாவற்றையும் சொல்லு மச்சான். அதைப் பற்றி நான் ஒன்றும் தப்பாகக் கருதமாட் டேன். உன்னுடைய கடமை உனது ஊரைப் பற்றிச் சொல்லு வது, என்னுடைய கடமை எல்லாவற்றையும் கிரகித்துக் கொள்வது. நான் என்னுடைய வேலையைச் செய்கிறேன். நீ உன்னு டைய வேலையைச் செய். அதற்கு ஒரு தடையு மில்லை,"

என்றான் அருள். நண்பனின் கதையைக் கேட்டு மகிழ்ச்சியடைந்த கோவிந் தொடர்ந்து,

"அந்த வேளாச் சுறாவின் எடை என்னவென்று தெரியுமா அருள்?"

எனக் கேட்டான்.

"எனக்கெப்படித் தெரியும்? நான் என்ன கணக்குப் பிள்ளையா?"என்றான் அருள்.

"நீயும் கணக்குப்பிள்ளை அல்ல நானும் கணக்குப் பிள்ளை அல்ல, ஆனால் நான் பார்த்துவிட்டேன் எடையை.

என்று கோவிந் சொல்ல, ஆச்சரியப்பட்ட அருள்.

"நீ சரியான ஆள் மச்சான். விசயத்தோடுதான் நின்றிருக் கிறாய்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பெரும் சிரிப்போடு கூறினான். பதிலுக்குச் சிரித்தபடியே,

"விசயமில்லாமல் ஒரு காரியத்தில் இறங்கலாமே! நான் வடிவாய் அவன் எழுதியதை அவதானித்துக் கொண்டு தான் நின்றனான். அந்த வேளாச்சுறாவின் மூன்று துண்டு களினதும் மொத்த எடை 900 இறாத்தல். மற்ற அறக் குளா, அறவஞ்சுலன், சுறா, கட்டா மீன்களெல்லாம் சேர்த்தால் அந்த மீனவருக்கு இன்று நல்ல புளைப்பு. இப்படி ஒவ்வொரு நாட்களும் கிடைக்காது. இருந்தாலும் மாதத்தில் இரண்டு தடவை இப்படி ஆப்பிட்டால் அவங்க ளுடைய முயற்சிக்குப் போதும்,"

என்று கோவிந் கூற, அதை ஆமோதிப்பது போன்று,

"நீ சொல்வது சரிதான் மச்சான், இவற்றின் பெறுமதி யைப் பார்த்தால் இது நல்ல வருமானந்தான். அது சரி.... நாமள் இப்ப பார்த்த கிழக்குத் தொங்கலில் இருந்து.... அதுதான் என்ன பெயர் சொன்னாய் மச்சான்?"

"ஓ அதுவா.... கொக்குறுப்பிட்டி," "சரி... கொக்குறுப்பிட் டியிலிருந்து மேற்கெல்லை..... அதற்கென்ன பெயர்?"

"சுடுகாட்டடி,"

"அதுதான்... சுடுகாட்டடி வரை பார்த்தமட்டில் இன்று ஒரு நாளில் மட்டும் அந்தர்க்கணக்கென்று சொல்வது பொருத் தமல்ல. தொன் கணக்கில் மீன்கள் பிடிக்கப்பட் டுள்ளன என்பதுதான் உண்மை. இந்த மீன் வகைகளைப் பார்த்தால் நீ சொன்னது போன்று வேளாச்சுறா, கொம் பன் சுறா, கடி யன்சுறா, அறக்குளா, அறவஞ்சுலன் போன்ற பெரிய மீன்க ளும், கட்டா, வாளை, கடல் விராய், கொடுவாய் போன்ற நடுத்தர மீன்களும், திருக்கை, அதள், உல்லன், வாவல், பாரை, கண்ணாடிப்பாரை போன்ற சிறிய வகை மீன்களும் பிடிக்கப்படுகின்றன. இவையெல்லாம் ஆழ் கடல் மீன்கள் என்பது எனக்குப் புரிகின்றது. இவ்வளவு தொகையான மீன்களையும் எங்கு சந்தைப்படுத்திப் பணம் பெற்றுக் கொள்கிறார்கள்? நிச்சயமாக உங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளுடைய தீவாயிருக்க முடியாது,''

என்று சொல்லி முடிப்பதற்குள் "கக்கக்'' என்று பெரிதாகச் சிரித்த கோவிந்,

"எங்களுடைய மக்களே? எங்களுடைய மக்களால் ஓர் அறக்குளா தானும் வாங்க முடியுமே? இவையெல்லாம் நேரே கொழும்புக்குத்தான் போகின்றன. ஆனால் எங்களு டைய மக்களும் பண்டமாற்று முறையில் வாளை, அதள், வாவல், வெள்ளைவாவல், உல்லன், கும்பளா, சிறிய திருக்கை, நாய்ப்பொந்தன், மீன் முட்டை, மீன் சினை, ஈரல், குடல் என்று வாங்கிச் சாப்பிடுகிறார்கள். இவர்கள் பிற இடங்களைச் சேர்ந்த மீனவர்கள் என்பதற்காக இவர்களைக் குறை சொல் லப்படாது. அதாவது, தங்களுக்கு வேண்டிய பொருட்களைப் பெற்றுக்கொண்டு அந்தப் பொருட்களின் பணப் பெறுமதியைப் போல நாலைந்து மடங்கு பெறுமதியான மீன் கொடுப் பாங்கள்,''

என்றதும் இதைக் கூர்மையாகக் கேட்டுக்கொண்டு நின்ற அருள் சிறிது யோசித்துவிட்டு,

"அப்படிக் கொடுக்கத்தானே வேணும் மச்சான். ஏன் இப்படிக் கூறுகிறேனென்றால்... நாமள் இப்ப வந்த தூரத்தைப் பார்த்தேனே...! இவ்வளவு தூரம் பொருட்களைச் சுமந்து வந்து கொடுப்தென்றால் அதற்கும் ஒரு பெறுமதி இருக் கல்லே? அதற்காகத்தான் அந்தளவு மீன்,''

என்றதும்,

"இதுதான் அருள், உன்னிடம் எனக்குப் பிடித்துக் கொண்ட விடயம். அதாவது எதையும் நான் சொல்லி முடிப்பதற்குள் நீயே கிரகித்துக் கொள்கிறாயே! இது எல்லோராலும் இயலாது,''

என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னான் கோவிந். மறுபடியும் தனது பிரயானத்தின் நோக்கத்தை ஞாபகப்படுத்துபவன் போன்று,

"இவ்வளவு தூரம் மினக்கெட்டு வந்திருக்கிறேன் என்றால் வேறு வேலை எங்கள் ஊரில் இல்லாமலே வந்தனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது நண்பனின் ஊரைப் பற்றித் தெரிந்து கொண்டு போக வேண்டுமென்றுதானே வந்துள்ளேன். வந்த வேலையை ஒழுங்காய்ச் செய்யாவிட்டால் நாமள் படித்துத்தான் என்ன பிரயோசனம். புத்தகப்படிப்பில வேலையில்லை மச்சான். அனுபவந்தான் மனிதனுக்கு வேண்டிய முக்கிய படிப்பு. அதைத்தான் இப்ப செய்து கொண்டிருக்கிறேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும்...... நீ என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசுவதை விட்டிட்டு என்னென்ன பொருட்கள் கொடுத்து மீன் பெற்றுக்கொள்வீர்கள் என்பதைக் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லு,''

என்று கேட்டுவிட்டு மிக அக்கறையோடு செவிமடுத்தான் அருள். நண்பனின் ஆர்வத்தைப் புரிந்துகொண்ட கோவிந் தொடர்ந்து,

''நான் முன்பு கூறியதுபோன்று சமைப்பதற்கு விறகு மற்றும் தேங்காய், இளநீர், பனங்கிழங்கு, மீன்பறி இளைப்பதற்கு பனங் குருத்தோலை, பனங்கள்ளு, மோர், நெய், மிளகாய்த்தூள் போன்றவற்றை முக்கியமாகக் குறிப்பிடலாம். இவைகளில் நாளாந்தம் அவர்களுக்கு முக்கியமாய்த் தேவைப்படுவது சமைப்பதற்கு வேண்டிய விறகு. அவற்றைப் பதினைந்துக்கும் பதினெட்டுக்கும் இடைப்பட்ட வயதுப் பெடியன்கள் கொண்டுவந்து கொடுத்துவிட்டு மீனைப் பெற்றுச் செல்லுவாங்கள்,''

என்று சொல்லி முடிக்க அவற்றை நன்கு கிரகித்துக் கொண்ட அருள் திடீரென்று,

''அது சரி....இந்தக் கொட்டில்கள் எல்லாம், யார் போட்டுக் கொடுப்பான்கள்,''

என்ற கேள்வியைப் போட்டான். சிரித்தபடியே கோவிந்,

''அடுத்தபடியாய் அதைப் பற்றிச் சொல்லுவம் என்று நினைச்சேன். நான் நினைச்சபடியே நீயும் கேட்டுவிட்டாய். அது வந்து அருள்... இங்கு சில முதலாளிகள் இருக்கிறார் கள். வெளியூர் மீனவ முதலாளிகள் இவர்களுடன் தொடர்பு கொண்டு தங்களுக்கு வேண்டிய வாடிகளைப் போட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரும்படி கேட்டு முற்பணத்தைக் கொடுத்துவிட்டுப் போய் விடுவார்கள். இவர்கள் அவற்றை அமைத்துக் கொடுத்து விட்டு மீன்பிடிக்க வந்ததும், மிகுதிப் பணத்தைப் பெற்றுக் கொள்வார்கள். கருவாடு காயப்போடுவதற்கான தென் னோலை, கருவாட்டுச் சிற்பம் கட்டுவதற்கான கிடுகு என்பவற்றையும் உள்ளூர் முதலாளிகளே கொடுத்துப் பணம் பெற்றுக் கொள்ளுவார்கள்," என்றதும்

"ஓ! அப்படியா விசயம்! அப்படியானால் உள்ளூர் முதலாளிமாரும் வெளியூர் முதலாளிமாரும் சேர்ந்து செய்யும் ஒரு கூட்டு முயற்சிதான். அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனென்றால உள்ளூரவனுடைய உதவி, ஆதரவு, ஒத்து ழைப்பு இல்லாமல் வெளியூரவன் இங்குவந்து தொழிற்செய்ய முடியாது, அப்படித்தானே? நான் சொல்லுவது சரிதானே?"

என்று கேட்டதுதான் தாமதம்,

"அப்படியேதான்! நீ சொல்லுவது முழுக்க முழுக்கச் சரி. எனக்கு வேலையில்லை. நீயே பெரும்பாலானவற்றைக் கிரகித்துக் கொள்ளுகிறாய். ரொம்பச் சந்தோசமாயிருக்கு,"

என்று சென்னான் கோவிந். அப்புறம் கடலில் கவனத்தைச் செலுத்திய அருள் சில நிமிடங்களின் பின் கோவிந்தைப் பார்த்து,

"கோவிந், நான் பார்த்தமட்டில் ஏறக்குறைய ஐம்பது மீன்பிடி வள்ளங்கள் காணப்படுகின்றன. நாளாந்தம் பல தொன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன என்பது தெளிவாகத் தெரிகின்றது. இவ்வளவு மீன்களும் எவ்வாறு சந்தைப்படுத்தப் படுகின்றன என்பதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாயச் சொல்ல முடியுமா?"

என்று கேட்டதும், நண்பனின் கேள்வியையிட்டு மகிழ்ச்சியடைந்த கோவிந்,

"நல்ல கேள்வி மட்டுமல்ல முக்கியமான கேள்வியுங் கூட. எந்தவொரு பொருளாதார நடவடிக்கையிலும் முக்கிய பங்கு வகிப்பது சந்தைப்படுத்தல். சந்தை வாய்ப்பு இல்லை என்றால் பொருளாதார முயற்சிக்கே இடமில்லை. அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் இங்கு பிடிக்கப்படும் மீன்கள் அனைத்தும் இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு அவற்றுள் ஒரு பிரிவான எல்லா வகையான சுறாக்களும், கட்டா, பாரை, சுங்கன், திருக்கை என்பன கருவாடாக்கப்பட்டு அப்புறம் ஒவ்வொரு அந்தர்ச் சிற்பங்களாகக் கட்டி கொழும்பிற்கு அனுப்பப்படுகின்றன. மிகுதியான மீன் வகைகள் எல்லாம் ஐஸ்ப் பெட்டியில் அடைத்து நாளாந்தம் கொழும்பிற்கு அனுப்பப்படுகின்றன,'' என்று சொல்லி விட்டு...... தொடர்ந்து கையாற் காட்டி,

“அங்கபார் அந்த மீன்பிடி வள்ளங்களுக்கு மத்தியில் இரண்டு பெரிய வள்ளங்கள் நிற்கின்றன. அவை இரண்டும் ஐஸ் கட்டிகளைக் கொண்டுவந்து இங்கு கொடுத்துவிட்டு பதிலாக ஐஸ்போட்ட மீன்பெட்டிகளை ஏற்றிச் செல்வதற்குப் பயன்படுத்தப் படுகின்றன. இந்த வகையாக சந்தைப்படுத்தும் வேலையை இங்குள்ள முதலாளிகளும் கொழும்பிலுள்ள முதலாளிகளும் சேர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். சாதாரண மீனவர்கள் மீன்களைப் பிடித்து முதலாளிமாரிடம் கொடுத்துவிடுகின்றனர். இந்த விதமாய்த்தான் இந்த மீன்கள் முழுவதும் சந்தைப்படுத்தப்படுகின்றன,'' என்று சொல்லி முடிக்க,

கேட்பதற்கு ரொம்பச் சுவராஸ்யமாயும் அர்த்தமுள் ளதாயும் இருக்கின்றது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் பொழுது இலங்கையிலுள்ள பெரிய மீன்பிடித்துறை களில் இதுகும் ஒரு முக்கிய துறையாகக் காணப்படுகின்றது என்றால் பொருத்தமாய் இருக்குமென்று நினைக்கிறேன். அப்படித்தானே?'' என்று கேட்டுவிட்டு கோவிந்தை விழித்துப் பார்த்தான். உடனே கோவிந்,

“நினைக்கிறதென்ன! நினைக்கிறது!! இது ஒரு பெரிய மீன்பிடித்துறைதான். அதிலும் முக்கியமாய் நாம் கவனிக்க வேண்டியது, இது ஓர் ஆழ்கடல் மீன்பிடித்துறை. பார்த்தா யல்லே! எந்தளவு மீன்களென்று! இவற்றிலும் பார்க்கப் பெரிய மீன்கள் இலங்கையில் வேறெங்கு பிடிக்கப்படு கின்றன?'' என்று கேட்டு அருளின் கூற்றை உறுதிப்படுத் தினான். கோவிந்தின் அழுத்தமான கூற்றை மேலும் வலுப்படுத்துவது போன்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வடமாகாணத்தில் வெல்லையை அடிக்கக்கூடிய வேறு ஓர் இடம் இருக்குமென்று நான் கருதவில்லை,"என்று கூறிய அருள் தொடர்ந்து, "அது சரி... எத்தனை பேர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் என்று சொல்ல முடியுமே?" என்று கேட்டான்.

"இதுகும் நல்லதோர் கேள்விதான். நீ பார்த்த மட்டில் ஏறக்குறைய ஐம்பது வள்ளங்கள் நிற்கின்றனவென்று சொன்னாய். அதன் அடிப்படையிற் பார்த்தால் ஐந்நூறு பேர் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள் என்று உறுதியாய்ச் சொல்லலாம். மூன்றரை மாதத்திற்கு இத்தொழில் நீடிக்கும். அந்த வகையில் வெல்லை மீன்பிடித்துறையின் பங்கு இலங்கை மீன்பிடித்துறையில் முக்கிய ஒரு பங்கை வகிக் கின்றது என்று சொல்லுவது சாலவும் பொருந்தும். அதுமட்டு மல்ல நெடுந்தீவு மக்களுடைய வாழ்க்கையிலும் இந்த மூன்றரை மாதங்கள் ஓரளவு செளிப்பான காலமென்று சொல் லலாம்," என்று பேசிக்கொண்டு போன வேளையில் பொன் னன் மீனுடன் வந்துகொண்டிருந்தான். அதைப் பார்த்த கோவிந்.

"என்ன பொன்னண்ண, மீன் வாங்கியாச்சுப் போலிருக்கு! அப்ப.... இனியென்ன! நேர வீடுதான்?" என்றதும்,

"சரியாய்ச் சொன்னாய் மணி, நேரத்திற்குக் கொண்டு போய்க் கொ டுத்தாற்தானே சமையல் சப்பாடு விசேடமாய் நடக்கும்,"என்றான் பொன்னன்.

"இதென்ன பொன்னண்ண! எனக்குத் தெரியாத விசயமே? வெல்லையுத் துறையில் மீன்பிடி தொடங்கினால் நமக்கும் கொண்டாட்டந்தானே! நீங்கள் கெதிப்பண்ணிப் போங்கோ! மீன்கெட்டுப்போக முந்தி. நாங்கள் இன்னும் கொஞ்சநேரம் நின்று எல்லாவற்றையும் பார்த்துவிட்டு வாறம்," என்று கோவிந் சொல்ல,

"அப்ப.... நான் போயிட்டு வாறன் மணி. நேரம் கிடைக்கும் போது வீட்டுப் பக்கம் வா," என்று கூறிவிட்டுக் கிளம்பினான் பொன்னன். உடனே கோவிந் அருளைப் பார்த்து,

"பார்த்தியே அருள், பொன்னண்ணா கொண்டுபோகும் மீனின் அளவை?" என்றதும்,

ஆச்சரியத்தோடு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் மச்சான்," நான்கு தேங்காய்க்கும் இரண்டு போத்தல் பனங்கள்ளுக்கும் இவ்வளவு மீன் கொடுத்திருக் கிறாங்கள்! எங்களுடைய ஊரில் இந்த மீன்களில் பெறுமதியைப் பார்த்தால், பொருட்களின் பெறுமதியைப் போல் நாலைந்து மடங்கிற்கு மேலாக இருக்கும். இப்பதான் தெரியுது நீ சொன்னதெல்லாம் உண்மையென்று. இந்த மீனவர்களால் இந்த ஊர் மக்களுக்கும் நிறையப் பிரயோசனம் உண்டு என்பது இப்பொழுது நன்றாகவே புரிகின்றது. எனவே வெல்லை மீன்பிடித்துறை நெடுந்தீவு மக்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமென்று சொல்லலாம்," என்று கூறிவிட்டுக் கோவிந்தை விழித்துப் பார்த்தான் அருள்.

"அப்படியேதான்! பிறகென்ன நான் சொல்லக் கிடக்கு? எல்லாவற்றையும் நியே நன்கு புரிந்து கொள்ளுகிறாய். அப்புறம் எனக்கென்ன வேலை இருக்கு? என்ற கோவிந் நேரத்தைப் பார்த்துவிட்டு, "அப்ப... இனிக் கிளம்புவமா?" என்று கேட்டான்.

"ஓம் மச்சான், எல்லாவற்றையும் நன்கு பார்த்துக் கிரகித்துக் கொண்டேன். இனிக்கிழம்புவம்," என்றதும் கூட்டுப்புளி அம்மன் கோயிலை நோக்கி நடையை ஆரம்பித்தான் கோவிந்.

## அங்கம் - 04

கூட்டுப்புளி அம்மன் கோயிலை அடைந்ததும், அச்சிறிய ஆலயத்தைக் காட்டி,

"இது எங்களுடைய ஊரில் அமைந்துள்ள அம்மன் கோவில்களில் ஒன்று. இங்கு பெரிதாய் ஒரு விழாவும் நடைபெறுவதில்லை. இருந்த போதும், அயலில் உள்ள மக்கள் மிக்க நம்பிக்கையுடனும் பக்தியுடனும் இவ்வம்மனை வழிபட்டு வருகின்றார்கள். சித்திரா பௌர்ணமி அன்று சித்திரபுத்திரனார் கதை படித்து சித்திரைக் கஞ்சி வழங்குவார்கள். சிலர் இடையிடையே பொங்கல் செய்து அம்மனுக்குப் படைத்து வணங்குவார்கள்," என்று கூறிய கோவிந் தொடர்ந்து, "இப்பகுதியிலும் ஓரளவிற்கு நன்னீர் உண்டு. இக்கோயிலைச் சுற்றியுள்ள மரங்களையும் பற்றைகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும்போது, இங்கும் காடு இருந்ததற்கான ஆதாரமாய் இவற்றைக் கொள்ளலாம். இப்பகுதியை முருக்கிச்சிக்காடு என்று அழைப்பார்கள்," என்று சொன்னதும், அருள் ஏதோ ஒன்றைக் கண்டு பிடித்தவன் போன்று சிரித்துவிட்டு,

"நீ இதுவரை காட்டிய இடங்களையும் அவற்றின் பெயர்களையும் பார்க்கும்போது, அநேகமான பெயர்கள் காடு என்று தான் முடிகின்றன. அது இத்தீவின் பெரும்பகுதியில் காடுகள் இருந்தன என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றது. அப்டித் தானே?" என்றதும், "அச்சொட்டாய்ச் சொன்னாய் மச்சான். இங்குள்ள இடங்களில் காடு என்று முடிகின்ற பெயர்களை மீட்டுப் பார்த்தால் எனது கிராமம் வெட்டாக்காட்டில் இருந்து: வெட்டாக்காடு கள்ளிக்காடு, ஓமலாக்காடு, சல்லிக்காடு, முருக்கிச்சிக்காடு, தெற்காடு, பற்றைக்காடு, பூவரசங்காடு, திணாக்கங்காடு, கரந்தைக்காடு, தொட்டாரக்காடு, ஈச்சங்காடு, பறைச்சேரிக்காடு இப்படி நீண்டு கொண்டு செல்கின்றன. நான் கேள்விப்பட்டமட்டில், இந்த இடங்களெல்லாம் ஏறக் குறைய முன்னூறு வருடங்களுக்கு முன் நிறைந்த பற்றைக் காடாகவும் பரட்டைக் காடாகவும் இருந்திருக்கின்றன. இடை யிடையே பெரிய மரங்களும் இருந்திருக்கின்றன. இங்கெல் லாம் மக்கள் அப்போது குடியிருக்கவில்லை. காலகதியில் மக்களுடைய எதிர்காலம் பற்றிய யோசனை அற்ற செயலும் காலநிலை மாற்றமும் சேர்ந்து இக்காடுகளை அழித்துள்ளன என்பதுதான் உண்மை.

எனக்கு ஒரு பெரியவர் சொன்னார்: 300 வருடங்களுக்கு முன் இத்தீவின் தென்கிழக்கு மூலையிலிருந்து அதாவது குயிந்தா கோபுரத்தடியில் இருந்து வடமேற்கு முனை வரை அதாவது பனங்காணிமுனைவரை ஒரு குரங்கு நிலத்தில் கால் வைக்காமற் போகமுடிந்தது என்று. அதன் அர்த்தம்," என்றதும் குறுக்கிட்ட அருள், "அதன் அர்த்தத்தை நான் கூறுகிறேன்." என்று சொல்லி கோவிந்தை நிறுத்திவிட்டு,

"அதாவது இத்தீவின் தென்கிழக்கு மூலையிலிருந்து வடமேற்கு மூலைவரை தொடர்காடு இருந்தது என்கிறாய்! அப்படித்தானே?" என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(5) கூட்டுப்புளி அம்மன் கோயில்


(6) கூட்டுப்புளி அம்மன் கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(07) கூட்டுப்புளி அம்மன் கோயில்


(08) கூட்டுப்புளி அம்மன் கோயிலின் முன்னுள்ள ஆலமரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னுடைய கிரகிக்கும் ஆற்றலை எப்படிச் சொல்லு வது? சரியாய்ச் சொன்னாய் அருள்," என்று கூறிய கோவிந் தொடர்ந்து.

"இரண்டு முனைகளுக்கும் இடைப்பட்ட தூரந்தான் இத் தீவின் ஆகக்கூடிய தூரம். ஏறக்குறைய பத்து மைல் நீளம் வரும். இந்தப் பெரிய காடு எப்படி அழிந்தது என்று எண்ணும் பொழுது, இப்பூமி காலகதியில் மரங்களில்லாத தரவையாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அன்றெல்லாம் எமது பெண்கள் பாலைப்பழம் பொறுக்கப் போவார்களாம். அதை இப்போது கதையிற்தான் கேட்க முடிகின்றது. நம்பமுடிவ தில்லை. நாங்கள் இப்போது பாலை யையும் காணம் சோலையையும் காணம்," என்று கூறிவிட்டு "புறப்படுவமா?" என்றான். உடனே அருள்,

"எனக்குத் தண்ணீர் விடாய்க்கிறது. இந்தத் தண்ணீர் நல்ல தண்ணீர் என்றும் சொல்லுகிறாய். ஒருக்கால் குடித்துப் பார்ப்பம்," என்று கூறவே, அங்கு இருந்த வாளியால் தண் ணீரை அள்ளி ஊற்றினான் கோவிந். தண்ணீரைக் குடித்து விட்டு,

"உண்மையில் நல்ல தண்ணீர்தான். நெடுந்தீவில் தண்ணீ இல்லை என்னும் கூற்றை என்னால் ஏற்றுக்கொள்ள முடி யாது," என்றான் அருள். நண்பனின் கூற்றைக் கேட்ட கோவிந் சிறிது யோசித்துவிட்டு,

"நீ கூறுவதிலும் ஓரளவிற்கு உண்மை இருக்கத்தான் செய்கின்றது. ஏனென்றால், இங்கு தண்ணீர் இல்லையென்று வேறு ஊரிலிருந்தா தண்ணீர் கொண்டு வாறம்? இல்லையே! ஆடி ஆவணி மாதங்களில் சில இடங்களில் தண்ணீர்த் தட்டுப்பாடுதான். இதுகாலவரையில் சமாளித்துக் கொண்டு தான் போறம். தோட்டம் துரவு செய்யும் விடயத்தில் போதிய தண்ணீரின்மை ஒரு முக்கிய குறைபாடுதான்" என்று கூறிக் கொண்டு தொடர்ந்து நடக்கத் தொடங்கினான். வீடு வந்து சேர்ந்த பொழுது நேரம் மதியம் பன்னிரண்டு மணி. இருவ ருக்கும் நல்ல பசியும் தாகமும். பக்கத்து வளவிற்கு அரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைக் கூட்டிச் சென்ற கோவிந் அங்கு நின்ற சீவற்கார னைப் பார்த்து,

"என்ன தம்பித்துரை அண்ண, நான் சொல்லிப்போட்டு போன விடயம் ஞாபகம் இருக்கே?" என்று கேட்டும், தான் எதையும் இலகுவில் மறக்கிற ஆளில்லை என்பதை நிரூபிப் பது போன்று,

"நீங்கள் மெனக்கெட்டு வந்து சொல்லிவிட்டுப் போனதை மறப்பேனா?" இத்திப்பனைக் கள்ளு ஒன்றுடனும் கலக்காமல் தனியனாய்க் கொண்டுவந்து வைத்திருக்கிறேன். நண்பனோடு குடிச்சுப் பார்த்திட்டுச் சொல்லுங்கோ," என்று சொன்ன தம்பித்துரை தொடர்ந்து,

"நண்பனுக்கு இதுதான் முதற்தடவையோ?" என்று கேட்டான்.

"இடைக்கிடை பெடியன்களோடு கூடிக்கொண்டு கீரிமலைக்குக் குளிக்கப்போன வேளைகளில், கூவிற்பக்கம் போயிருப்பார்," என்று கூறிவிட்டு அருளைப் பார்த்துச் சிரித் தான் கோவிந். அருளும் பதிலுக்குச் சிரித்துவிட்டு,

"இரண்டு மூன்று தடவை பாவிச்சிருக்கிறேன். ஆனால், நெடுந்தீவுக் கள்ளுக்குப் பிரத்தியேக சுவையும் மகிமையும் இருக்கென்று சொல்லுகிறாங்கள். அதை அறியவேண்டும் என்று கொஞ்சம் ஆர்வமாயிருக்கு," என்று சொல்லிக் கொண்டு போக கள்ளு நிரப்பிய இரண்டு கிளாசை முன் வைத்தான் சீவலாளி தம்பித்துரை. எடுத்த எடுப்பிலேயே முதற்கிளாஸ் சென்றுவிட்டது. வெற்றுக்கிளாசை வைத்த அருள் ஆச்சரியத் தோடு,

"உண்மையில் நெடுந்தீவுக் கள்ளுக்கு தனிச்சுவையும் மகிமையும் உண்டு என்பதில் அர்த்தம் இருக்கத்தான் செய் கின்றது," என்று சொன்னதும், இதைக் கேட்ட தம்பித்துரை.

"இது... வந்து.. தம்பி... ஒரு தனிப்பனையின் கள்ளு. அந்தப் பனையின் கள்ளுக்கு ஒரு தனிச்சுவை, மணம் மட்டுமல்ல வெறிக்கும் தன்மையும் உண்டு. இந்தப் பனையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளை நானும் முதலாளியுந்தான் குடிப்பது வழக்கம். இன்று மணித்தம்பியின் வேண்டுகோளுக்கிணங்க உங்களுக்கும் தருகிறேன்,'' என்று கூறிய பின் தொடர்ந்து,

"இன்னொரு கிளாஸ் தரட்டுமா தம்பி?" என்று கேட்டான். ஆம் என்று கூறுவதைப் போன்று தலையை ஆட்டினான் அருள். இரண்டாவது கிளாசும் சென்றுவிட்டது. அதாவது ஒன்றரைப் போத்தல் பாய்ந்துவிட்டது. சாதுவாகத் தலை சுற்றுவதை உணர்ந்தான் அருள். கள்ளு வெறிக்கத் தொடங்கி விட்டது என்பதை உணர்கிறான் அருள். இருந்தபோதும் இன்னொரு கிளாஸ் அடிக்க வேண்டும்போற் தோன்றியது. உடனே,

"இன்னொரு கிளாஸ் எடுக்கலாமா?" என்று கேட்டான். அருளின் ஆவலைப் புரிந்துகொண்ட தம்பித்துரை,

"இத்திப் பனயின் கள்ளு முடிஞ்சிது தம்பி, ஆனால் எல்லாப் பனையின் கள்ளும் கலந்த கள்ளு இருக்கு," என்றான்.

"பரவாயில்லை, அதில ஒரு கிளாஸ் தாருங்கள்," என்றான். வாங்கிய வேகத்தில் அரைக் கிளாசை அடித்துவிட்டு,

"இதுவும் பரவாயில்லை, நெடுந்தீவுக் கள்ளின் தரத்தில் எந்தக் குறையும் இல்லை. ஆனைக்கோட்டை, கூவில் கள்ளுகளுடன் ஒப்பிடும்போது இது எவ்வளவோ தரமானது," என்று சொல்லிக்கொண்டு மூன்றாவது கிளாசையும் வெறுமை ஆக்கினான். அருளின் கதையைக் கேட்ட தம்பித்துரை.

"இந்த உவர்நிலப் பூமியில் இருந்து கிடைக்கும் கள்ளு மட்டுமல்ல, எல்லாப் பொருட்களுக்கும் ஒருவகைத் தனிச் சுவையும் மணமும் குணமும் உண்டு. அனுமான் மந்திர மலையைத் தூக்கிவந்தபொழுது உடைந்து விழுந்த ஒரு துண்டிலிருந்து உருவாகிய பூமிதான் இத்தீவு என்று கூறுகி றார்கள். அதனாலோ என்னவோ இம்மண்ணின் விளைபொருட் களுக்கு ஒரு விசேட சுவை, மணம், குணம் உண்டு. அது மட்டுமல்ல, நாங்கள் எந்தக் கலப்படமும் செய்வதில்லை. ஆனைக்கோட்டை, கூவில் கள்ளில் கலப்படம் செய்யப்ப டுவதாய்க் கேள்விப்பட்டிருக்கிறேன்,'' என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சொல்லுவதில் உண்மையிருக்கத்தான் செய்கின்றது. பணத்திற்கு ஆசைப்பட்டு அந்த அநியா யத்தைச் செய்கிறாங்கள் மனச்சாட்சி இல்லாதவன்கள்," என்று அருள் சொல்லி முடிக்க, கதையைத்தொடர்ந்த தம்பித்துரை.

"பச்சிலைப்பள்ளிப் பிரதேசக் கள்ளும் சுத்தமானதும் சுவையானதும் என்பதை எனது சொந்த அனுபவத்தால் அறிந்திருக்கிறேன். உண்மையில் அதுகும் நல்ல கள்ளு," என்று சொல்லி முடிக்க நான்காவது கிளாசையும் முடித்தான் அருள். மூன்று போத்தல் குடித்துவிட்டான் என்பதை தெரிந்து கொண்ட கோவிந் இதற்கு மேலும் குடிக்கவிட்டால் ஓவராகிவிடும் என்பதை உணர்ந்துகொண்டு,

"போதுமென்று நினைக்கிறேன். கிளம்புவமே அருள்?" என்றான்.

"ஓம் மச்சான். நல்ல லோட், கிளம்புவம்," என்று கூறிக் கொண்டு எழுந்து இருவரும் வீடு சென்றனர். கள்ளுக் குடித்துவிட்டு வருகிறோம் என்பதை கோவிந்தின் அம்மா விற்குக் காட்டிகொள்ளப்படாதென்பதில் அருள் மிகுந்த கவனமாயிருந்தான். அதனால் வெறித்தபொழுதும் நிதானத்தை வலிந்து பேணிக்கொண்டான். இப்பொழுது நேரம் 1.30 மணி. நல்ல பசி. வீடு சென்றதும் கோவிந்.

"அம்மா, சாப்பிடலாமா? அருளுக்கு நல்ல பசி, எனக்குந்தான்," என்றான்.

"ஒன்றரை மணிக்கு சாப்பிட வந்தால், பசிக்காமல் வேறென்ன தம்பி செய்யும? நான் ஏற்கனவே சமைத்து முடித்துவிட்டேன். கையைக் கழுவிக்கொண்டு வாருங்கோ இருவரும்," என்று கூறிய அம்மா உணவு பரிமாற ஆயத்த மானாள். இருவரும் போய் அமர்ந்து கொண்டனர்.

"சுடச்சுட குறவைப்பிட்டு இருக்கு. அத்தோடு சோறு, மீன்கறி, மரக்கறிகளும் இருக்கு. எதை முதலில் சாப்பிட விரும்புகிறீர்கள்?" என்றாள் அம்மா. உடனே கோவிந், அருளைப் பார்த்தான். சோறும் கறியும் எப்பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடும் உணவுதானே என்பதை உணர்ந்த அருள், புதிய உணவைச் சாப்பிடுவம் என்று முடிவெடுத்துக் கொண்டு,

"முதலில் குறவைப் பிட்டைச் சாப்பிடுவம் அம்மா," என்றான். இரசித்து உருசித்து சாப்பிடத் தொடங்கிய அருளுக்கு, குறவைப் பிட்டில் கூர்க்க இருந்த உறைப்பும் உப்பும் கள்ளு வெறிக்கு உகந்ததாய் இருந்தது. அதனால் ஆர்வத்தோடும், வேகத்தோடும் சாப்பிட்டு முடித்தபின் மறுபடியும் போடும்படி கேட்டான். அருள் குறவைப் பிட்டை நன்கு விரும்பிச் சாப்பிடுகிறார் என்பதை தெரிந்துகொண்ட அம்மா மேலும் போட்டாள். அதையும் வேகமாய்ச் சாப்பிட்டு முடித்த அருள் முகத்தை நிமிர்த்தி அம்மாவின் முகத்தைப் பார்த்து ஒரு வழிந்த சிரிப்புச் சிரித்தான். அவனின் நிலமையைப் புரிந்துகொண்ட அம்மா,

"சோறும் கறியும் போடட்டா தம்பி?" என்று கேட்டாள். மறுபடியும் சிரித்துக்கொண்டு,

"சோறும் கறியும் வேண்டாம் அம்மா. இன்னும் கொஞ்சம் குறைவைப் பிட்டு போடுங்கோ" என்றான்.

"வயிற்றுக்குள் பொருமப் பார்க்கும் அதிகமாய்ச் சாப்பிட்டால். கொஞ்சம் கவனமாயிருக்க வேண்டும் தம்பி," என்று கூறிக்கொண்டு மேலும் போட்டாள்.

"அது ஒன்றும் செய்யமாட்டாது அம்மா எனக்கு," என்று சொல்லிக்கொண்டு அதையும் சாப்பிட்டு முடித்துவிட்டு தண்ணீரைக் குடித்தவன்,

"அப்பாடா!" என்று கூறி வயிற்றைத் தடவிக்கொண்டு மெதுவாக எழுந்தான். அப்புறம் கோவிந்தைப் பார்த்து,

"கொஞ்ச நேரம் படுத்து ஓய்வு எடுக்கவேண்டும்," என்றதும், அருளின் நிலமையைப் புரிந்துகொண்டு அவனைப் படுக்கவைத்தான் கோவிந். பி.ப. 5.00 மணிக்கு நித்திரையால் விழித்துக்கொண்ட அருள் கோவிந்தைப் பார்த்து,

"நெடுந்தீவுக் கள்ளும் குறவைப் பிட்டும் சேர்ந்து மடக்கிப்போட்டுது மச்சான். மூன்று மணித்தியாலம் நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திரை. இப்பொழுது உடம்பிலும் உள்ளத்திலும் ஒரு புத்துணர்வு தென்படுகின்றது," என்று கூறவே,

"அப்ப... வெளியிற் சென்று சுற்றிக்கொண்டு வருவமா? உடலுக்கு கொஞ்சம் அப்பியாசமாயிருக்கும்" என்றான் கோவிந். சில நிமிடங்களில் இருவரும் அம்மாவிடம் கூறிவிட்டு புறப்பட்டுச் சென்றனர். சென்றுகொண்டிருந்த பொழுது அருளைப் பார்த்து,

"நீ சாப்பிட்டுக் கொண்டிருந்தபொழுது குழப்பக்கூடாது என்று நான் ஒன்றும் பேசவில்லை. நல்லபிடி பிடித்ததை மட்டும் அவதானித்தேன். எப்படி இருந்தது குறவைப்பிட்டு? எனக்காகச் சொல்ல வேண்டாம். உண்மையைச் சொல்ல வேண்டும்," என்று கேட்டுவிட்டு, அருளினுடைய பதிலுக்காக அமைதியானான் கோவிந். தன்னுடைய உள்ளடக்கிடக் கையை யாரிடம் சொல்லலாம் என்று எதிர்பார்த்திருந்தவன் போன்று,

"உண்மையைச் சொன்னால் கோவிந், அந்தப் பசி நேரத்திற்கும், பனங்கள்ளு மூன்று போத்தல் அடித்த வாய்க்கும், வேறு வார்த்தையிற் சொன்னால் பசிக்கும் மப்பிற்கும் பொருந்தினாற் போன்று, குறவைப் பிட்டுக்கு கூர்க்கப் போட்டிருந்த உறைப்பும் உப்பும் அதிலிருந்து வந்த வாசமும் அந்த மாதிரி இருந்தது. என்னை அறியா மலேயே ஒரு பிடி பிடிக்கப் பண்ணிவிட்டது. நான் இதற்கு முன் ஒருபோதும் ஒரேயடியாய் மூன்று போத்தல் கள்ளு குடிக்கவில்லை. இந்தக் கள்ளின்ர ரேஸ்ரும் மணமும் மூன்று போத்தல் இழுக்கப்பண்ணிவிட்டது. கிளாசில் ஊத்தி ஊத்தித் தர எவ்வளவு குடிக்கிறேன் என்பது அப்போது எனக்குத் தெரியவில்லை. நீ நிலமையைப் புரிந்துகொண்டு கிளப்பிக் கொண்டு வந்திட்டாய், நல்ல காலம். வரும்போது கொஞ்சம் ஆட்டங்குடுத்ததுதான். அம்மாவிற்குத் தெரியப் படாது என்பதற்காக நிதானத்தைக் கைவிடவில்லை. நீ சாடமாட யாய்க் கவனித்திருப்பாயே?" என்று கேட்டுவிட்டு கோவிந்தின் முகத்தைப் பார்த்துச் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் நிலமையை அவதானித்தது மட்டுமல்ல, ஒவராய்ப் போய்விடக்கூடாது என்பதிலும் கவனமாய் இருந்தேன். மேலும் இருந்தால், நான்காவது போத்திலையும் அடிச்சுப்போட்டு அப்புறம் சத்திகித்தி எடுத்தால், எல்லாம் கேவலமாய்ப் போய்விடும் என்றுதான் கிளப்பிக்கொண்டு வந்தனான்," என்று கோவிந் கூற, நண்பனுடைய விவேகத்தைப் புரிந்துகொண்ட அருள்,

"சரியான நேரத்தில் சரியானபடி செயற்பட்டிருக்கிறாய் மச்சான். எனது ஆசையினால் நான்காவது போத்திலையும் அடிச்சிருந்தால், அதற்குத் தாக்குப்பிடித்திருப்பேனா என்பது கேள்விக்குரிய விடயந்தான்," என்று கதையைச் சொல்லி முடிப்பதற்குள்,

"இதெல்லாம் விவேகம் மட்டுமல்ல அனுபவமுந்தான்," என்று கூறிவிட்டுச் சிரித்தான் கோவிந். அருளும் சேர்ந்து சிரித்து விட்டு இருவரும் மகிழ்ச்சியோடு நடந்துகொண்டிருந்தனர்.

அப்பொழுது பட்டுவும் அவளது நண்பி கமலாவும் எதிரில் வந்து கொண்டிருந்தனர். கோவிந்தை நெருங்கியதும் பட்டு புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டு திடீரென்று,

"மணி, நீ என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளிறியா?" என்றாள். இதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த கோவிந்,

"இவளுக்கு என்ன நடந்தது? நல்லாய்த்தானே இருந்தாள். அதற்குள்ள பயித்தியம் பிடித்தவள் போன்று கதைக்கிறாள்," என்று தனக்குட் பேசிக்கொண்டு,

"என்ன பட்டு! என்ன உனக்கு நடந்தது? பயித்தியம் பிடித்தவள் போன்று கேள்வி கேட்கிறாய்," என்று சொல்லிவிட்டு ஒரு மாதிரிப் பார்த்தான். ஒரு கேலிச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு,

"நீ யாழ்ப்பாணம் படிக்கப்போனபிற்பாடு நல்லாய் மாறிவிட்டாய். அதனால் ஒரு பயந்தான். சிவந்த மேனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்சமான உடலமைப்பு, சுமாரான உயரம், மொத்தத்தில் கவர்ச்சியான ஒரு மாப்பிள்ளை. யாழ்ப்பாணத்தில் எந்தக் குமரியாகிலும் கொத்திக்கொண்டு போய்விடுவாளோ என்ற பயந்தான். அங்கும் குழுகுழு தோற்றத்தில் குமரிகள் படிப்பாளவ. உனக்கும் முறுக்கான வயது. காதல் கீதல் என்று வந்துவிட்டால் அப்புறம் கதைத்து என்ன பிரயோசனம்? அதுதான் எனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தி விட்டன்,'' என்று கூறிவிட்டு ஒரு மருண்ட பார்வை பார்த்துக்கொண்டு சிரித்தவள் தொடர்ந்து,

"உனக்கு ஓர் உண்மை தெரியுமா மணி?" என்று கேட்டாள். "அப்படி எனக்குத் தெரியாத உண்மை என்ன? சொல்லு பார்ப்பம்" என்றதும்,

"உனக்குத் தெரியாத உண்மை என்று நான் சொல்ல முனையவில்லை. உனக்கும் தெரிந்திருக்கும், உனது நண்பனுக்கும் தெரிந்திருக்கும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் வசிக்குந் தமிழனுக்கு ஓர் எண்ணம், தான் ஆசியாக் கண்டத்தின் மத்தியில் இருக்கிறேன் என்று. அதனால் எங்களைப் பார்த்து 'தீவர்' என்று கூப்பிடுவான். கூப்பிடுவதுடன் மட்டும் நின்றுவிடமாட்டான், தீவாரை தரம் குறைந்தவர் களாயும் தன் மனத்திற்குள் எண்ணிக்கொள்வான். அதனால் தீவுப் பெண்களை அந்த ஆசியாக்கண்ட ஆண்கள் கல்யா ணம் பண்ணிக்கொள்ள முன்வரமாட்டாங்கள். ஆனால் உன் னைப் போன்ற அழகான ஆண்கள் பெரி படிப்புப் படித்து பெரிய பதவிகளுக்கு வந்தவுடன் அந்த ஆசியாக் கண்டக் காரர் தங்களுடைய பெண்களுக்கு மாப்பிள்ளையாய் எடுத்துக்கொள்ளுவாங்கள். நீயும் ஓர் அழகான இளைஞன். பெரிய படிப்புப் படிக்கப் போகிறாய். அப்புறம் உன்னையும் அந்த ஆசியாக்கண்டக்காரர் கொண்டுபோய் விடுவாங்கள் என்ற பயந்தான். என்னுடைய பயம் நியாயமானதுதானே மணி? உன்னுடைய நண்பனைச் சாடுவதற்காக இப்படி இந்த இடத்திற் சொல்லுகிறேன் என்று தப்பாக எண்ண வேண்டாம் மணி. ஏதோவொரு ஆதங்கத்திற் சொல்லிப் போட்டன். தப்பிருந்தால் என்னை மன்னித்துக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலைச் சொல்லு," என்று கேட்டுவிட்டு பதிலுக்காக அணிலை ஏறவிட்ட நாய் மாதிரி கோவிந்தின் வாயைப் பார்த்துக் கொண்டு நின்றாள். சிறிது ஆழமாய் யோசித்து விட்டு,

"என்ன பட்டு! இந்த நேரத்தில் இடக்குமுடக்கான கேள்வியைக் கேட்டு என்னை வம்பில மாட்டப் பார்க்கிறாய். யாழ்ப்பாணக் குடாநாட்டுத் தமிழனைப் பற்றி நீ கூறியதில் உண்மைகள் இருக்கலாம். அதற்கு நான் என்ன பண்ண முடியும்?" என்றதும்,

"நீ அவங்களை ஒண்ணும் பண்ண முடியாது. ஆனால் நீ என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ள முடியும், புரியுதா?" என்றாள்.

"சீ போடீ, எப்போது, எங்க, எப்படிப் பகிடி விடுவதென்ற ஒரு விவஸ்த்தை இல்லாமல், ஒரு லூஸ் மாதிரிக் கதைக்கிறாய்," என்று கோவிந் சொன்னதும், சற்று பொறுமையை இழந்தவள் போன்று,

"இப்ப போறன், நீ படிச்சுப் பெரிய ஆளாய் வா. அப்ப பார்த்துக் கொள்ளுகிறேன். எந்த ஆசியாக் கண்ட குமரி கொண்டு போகிறாள் என்று," எனக் கூறியவள் சிறிது யோசித்துவிட்டு, தொடர்ந்து,

"இல்ல.... தெரியாமற்தான் கேட்கிறேன். படித்துப் பெரிய பதவிகள் பெற்ற தீவாரெல்லாம் ஆசியாக் கண்டக் குமரிகளைக் கட்டிக்கொண்டு போனால், எப்படி தீவார் மேலுக்கு வரமுடியும்? இதை நீ யோசித்துப் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் முன்னேற்பாடாகச் சொல்லிவைக்கிறேன். அப்புறம் அம்போ என்று என்னைக் கைவிட்டு விடப்படாது. அப்ப.... நான் போயிட்டு வரட்டுமா?" என்று கூறிவிட்டு ஒரு விசிறல் விசிறிக்கொண்டு கிளம்பினாள் நண்பியோடு.

நண்பன் ஏதும் தப்பாக எண்ணக்கூடும் என்று கருதிய கோவிந்,

"இவள் என்னுடைய வயதை ஒத்தவள். ஒன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்தனாங்கள். நல்ல தங்கமான பொண்ணு. ஏதோ ஒரு வேகத்தில் பகிடி விட்டிட்டுப் போறாள். நீ இதைப் பற்றி ஒன்றும் யோசிக்க வேண்டாம்," என்றதும், எல்லாம் புரிந்தவன் போன்று,

" என்ன கோவிந் சொல்லுகிறாய்! இதைப்பற்றி எல்லாம் யோசிப்பதற்கு அவ்வளவு விவஸ்த்தை இல்லாதவனா நான்? எல்லாம் வயதுக் கோளாறின் வெளிப்பாடுகள்தான்," என்று கூறி சமாளித்துக் கொண்டான் அருள்.

## அங்கம் - 05

நாளைக்கு எங்கு போகலாம் என்று யோசித்துக் கொண்டு போன கோவிந்திற்கு திடீரென்று ஈச்சம்பழம் ஞாபகத்திற்கு வந்தது. நண்பனுடைய விருப்பத்தை அறிவம் என்ற எண்ணத்தோடு,

"அருள், நாளைக்கு பற்றைக் காட்டுப்பக்கம் போகலா மென்று யோசிக்கிறேன். பற்றைக் காட்டை உனக்கு ஞாபக மிருக்கே?" என்று கேட்டதும் சிறிது நேரம் யோசித் துவிட்டு,

"வந்து..... ஈச்சம் பற்றைகள் நிறைந்த இடந்தானே?" என்றான்.

"சரியாய்ச் சொன்னாய். நாமள் போன முறை அந்தக் காட்டுக்கூடாக வந்தபொழுது பற்றைகளைப் பார்த்துவிட்டு இவை எப்போ பழம் பழுக்கும் என்று கேட்டது ஞாபக மிருக்கே?"

"நல்லாய் ஞாபகமிருக்கு. நீ அப்பொழுது பங்குனி சித்திரை மாதத்தில் அவைகளெல்லாம் பழம் பழுக்கும் என்று சொன்னதும் ஞாபகமிருக்கு. அப்படியானால், இப்ப பழுத்திருக்க வேண்டுமே! அப்படித்தானே?" என்று வாஞ்சை யோடு கேட்டான் அருள்.

"அப்படித்தான், அதுதான் நாளைக்கு அங்கு போவ தற்குப் பிளான் பண்ணியிருக்கிறேன். உனக்கும் விருப்பந் தானே?" என்று கேட்டதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல பிளான் மச்சான், நாளைக்குக் கட்டாயம் போகவேண்டும் பற்றைக்காட்டிற்கு. எவ்வளவு பழம் கிடைக்கும் என்பதை யோசிக்க இப்பவே போகவேண்டும் போற் தோனுது," என்று தனது அதீத அக்கறையை வெளிப்படுத்தினான் அருள்.

மறுநாட் காலை எட்டு மணிக்கு இரண்டு பனை ஒலைக் குட்டான்களுடன் புறப்பட்டனர் பற்றைக்காடு நோக்கி. போகும் வழியில் கோவிந்தின் நண்பனும் சகபாடியுமாகிய தம்பு சந்தித்தான். தம்பு கோவிந்துடன் ஆரம்ப பாடசாலையில், அதாவது பாரதி வித்தியாசாலையில் ஐந்தாம் வகுப்புவரை படித்தவன். சில வருடங்களுக்குப் பின் கோவிந்தைக் கண்ட ஆனந்தத்தில்,

"டேய் கோவிந், எங்கடா போறாய் ஒரு புதுமுகத்தோட? உன்னைப் பார்த்து எவ்வளவு காலமாச்சு! நீ யாழ்ப்பாணம் போய்விட்டாய். நான் வன்னிக்குப் போய்விட்டேன். எங்க சந்திக்க முடிந்தது.! அது சரி... நீ இப்ப எங்க போறாய் இந்த நேரம்?" என்று கேட்டதும் கையிலிருந்த குட்டானைக் காட்டினான் கோவிந்.

"ஓ! ஈச்சம்பழம் பிடுங்கப் பத்தைக் காட்டிற்குப் போறீங்கள்!. அப்படித்தானோ?" என்றதும்,

"அனுபவம் பேசுது. நான் மறைக்கவா முடியும்! சும்மா நின்றால் வாவேன் எங்களுடன் கூடிக்கொண்டு, பிராய்க்காய் கதைத்துக்கொண்டு போகலாம்," என்று கேட்டதும், சிறிது யோசித்துவிட்டு,

"சரி... நானும் வாறன் உங்களோடு," என்று கூறிச் சேர்ந்து கொண்டான். பற்றைக் காட்டை அடைந்ததும் ஈச்சம் குலைகளைப் பார்த்த அருளுக்குப் பெரிய ஆச்சரியமா யிருந்தது. ஒவ்வொருவரும் தனித்தனியே பழங்களைப் பிடுங்க ஆரம்பித்தனர். சில நிமிடங்களில்,

"ஆ! ஐயையோ! முள்ளுக் குத்திப் போட்டிது மச்சான்," என்று சத்தம் கேட்டதும் ஓடிப்போய்ப் பார்த்தான் கோவிந்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அருளின் புறவிரலில் இரத்தம் வடியிது. நல்லாய்க் குத்திப் போட்டிது என்பதைப் புரிந்துகொண்ட கோவிந் இரத்த வாசலை அமத்திப் பிடித்துக்கொண்டு தம்புவைக் கூப்பிட் டான். தம்பு இரத்தத்தைப் பார்த்துவிட்டு,

"ஈச்சம் ஓலையின் அடிக்கட்டை முள்ளு குத்தியிருக்கு. அதனாலதான் இவ்வளவு இரத்தம் வந்திருக்கு. இவர் அனுப வமில்லாதவர் தானே. முள்ளைக் கவனிக்காமல் பழத்தில் வேகமாய்க் கையை வைத்திருக்கிறார். அது ஒரே ஏறலாய் ஏறிவிட்டது." என்று கூறிக்கொண்டு ஒரு துணியைக் கிளித்துக் கட்டுப்போட்டுவிட்டான்.

"நல்லாய் வலிக்குது மச்சான்! இதன் விசம் ஒன்றும் செய்யாதே?" என்று பயந்த தொனியிற் கேட்டான் அருள்.

"ஒரு பத்து நிமிடம் வலிக்கும். அப்புறம் எல்லாம் பறந்து போய்விடும். எங்களுடைய உடம்பில் முள்ளுக் குத்தாத இடமே கிடையாது. ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். கொஞ்ச நேரத்தால் நீ பழத்தைப் பிடுங்கு. கையை வைக்கும் போது முள்ளைக் கவனித்துக்கொள்," என்று கூறிவிட்டு மறுபடியும் பழத்தைப் பிடுங்கினர். அரை மணித்தியாலம் கழிந்த நிலையில்,

"கோவிந், இங்க வா மச்சான்," என்று கூப்பிட்டான் தம்பு. 'என்ன விசயம்' என்று தனக்குள் நினைத்துக்கொண்டு வேகமாய்ச் சென்று, "என்ன மச்சான்? என்ன விசயம்?" என்று கேட்டதும்,

"அங்க குனிந்து பார் இந்த பற்றைக்குக் கீழ்," என்றான். குனிந்து பார்த்த கோவிந் ஆனந்தம் பொங்க,

"ஓம் மச்சான், பெரிய தேன்கூடு," என்று சொல்லிவிட்டு, அருளைக் கூப்பிட்டான்,

"அங்க பார் இந்தப் பற்றைக்குக் கீழ் பெரிய தேன்கூடு ஒன்று இருக்கு," என்றதும் அதைக் குனிந்து பார்த்த அருள்,

"ஓம் மச்சான், பெரிய தேன்கூடு! இந்தளவு பெரிய தேன்கூட்டை இதற்கு முன் நான் பார்த்ததில்லை. எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(13) ஈச்சம்பற்றை, பற்றைக்காடு, நெடுந்தீவு.



(14) பதினாறுவட்டுப் பனை, நெடுந்தீவு மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(15) பதினாறுவட்டுப் பனை, நெடுந்தீவு மேற்கு.



(16) பதினாறு வட்டுப் பனை, நெடுந்தீவு மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தேனை எடுப்பது கோவிந்?" என்று கேட்டுவிட்டு ஆர்வத்தோடு பார்த்தான் கோவிந்தையும் தம்புவையும். உடனே தம்பு அருகில் நின்ற வடலிப் பனையில் ஓலையைப் பிடுங்கி புளா ஒன்றைச் செய்துகொண்டு,

"தள்ளி எட்டத்தில் நில்லுங்கள், நான் தேனை எடுத்துக் கொண்டு வாறன்," என்று சொல்லிவிட்டு சறத்தினால் தலை யையும் உடம்பையும் மூடிக்கொண்டு போனான். ஆவரம் இலையால் தேனீக்களைக் கலைத்தபொழுது அவை இரைந்துகொண்டு மேலெழும்பி வட்டமிட்டுப் பறந்து கொண்டி ருந்தன. அப்பொழுது கோவிந் அருளைப் பார்த்து,

"விலத்தி நில் மச்சான், தேனீக்கள் கொட்டிப்போடும்," என்று சொல்லி வாய்மூடியதுதான் தாமதம்,

"ஆ! ஐயோ! கொட்டிப்போட்டிது மச்சான்," என்று கத்திக்கொண்டு தூர ஓடினான் அருள்.

"அங்கேயே நின்றுகொள், இங்கு வராத, வந்தால் மறுபடியும் கொட்டுங்கள்," என்றான் கொவிந். சிறிது நேரத்தால் தேன்கூட்டுடன் வந்தான் தம்பு. அந்த வேளையில் 'நல்லாய்க் கடுக்கிறது, மச்சான்' என்று சொல்லி வேத னைப்பட்ட அருளைக் குனியச் சொல்லிப் போட்டு இரண்டு கடிவாயிலுமிருந்த கொடுக்குகளை எடுத்துவிட்டான் கோவிந்,

"இதெல்லாம் தேன்குடிக்க மாறிப்போய்விடும், கவலைப் படாத. நெடுந்தீவை மறுபடியும் ஞாபகப்படுத் துவதற்கு இப்படியான அனுபவங்களும் வேண்டும். ஈச்சம் முள்ளும் தேனீக்களும் நெடுந்தீவு ஞாபகமாயிருக்கட்டும்," என்று காசிய மாய்ச் சொல்லிவிட்டு, மூவரும் தேனைப் பகுந்து குடித்தனர். இதற்கு முன் அருள் இவ்வளவு தேன் ஒரே தடவையிற் குடித்ததில்லை. அதனால் சாதுவான வெறித்தன்மையை உணர்ந்தான்.

"என்ன மச்சான், சாடயாய் தலை சுற்றுமாப்போலிருக்கு ஏதும் செய்யுமே? கனக்கக் குடிச்சிட்டேன் போல," என்று பயத்துடன் சொன்னான் அருள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒன்றுக்கும் பயப்படாத, அது ஒன்றும் செய்யாது. ஈச்சம் பழத்தையும் நிறையச் சாப்பிட்டுவிட்டாய். அத்தோடு தேனையும் கொஞ்சம் கூடக் குடித்துவிட்டாய். இரண்டும் சேர்ந்து வேலை செய்யிது. இது உனக்குப் புதுப்பழக்கந் தானே! அது கொஞ்ச நேரத்தில் போய்விடும்," என்று தென்பூட்டுமாப்போற் கூறினான் கோவிந்.

இப்பொழுது வீடு நோக்கி நடந்துகொண்டிருந்தனர். ஈச்சம் பழமும் தேனும் சேர்ந்து தண்ணீர்த் தாகத்தை ஏற்படுத் தியது. அருளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

"எங்க மச்சான் தண்ணீர் குடிக்கலாம்? பார்த்த இட மெல்லாம் பற்றைக் காடாயிருக்கு, குடிமனை ஒன்றையும் காணவில்லை," என்று சொல்லி அங்கலாய்த்துக் கொண்டான். அருளின் நிலைமையை உணர்ந்த கோவிந்,

"நீ சொல்லுவது உண்மைதான் அருள். நெடுந்தீவில் தண்ணீர் இல்லை என்னும் கூற்றுக்கு இன்றுதான் அர்த்தம் கிடைக்கப்போகின்றது. இப்பகுதியில் நன்னீர் கிடைக்கவே கிடையாது. ஈச்சம் பழமும் தேனும் சேர்ந்தால் எப்படி தண்ணீர் விடாய்க்கும் என்பதில் எங்களுக்கு ஏற்கனவே நல்ல அனுபவம் உண்டு. தாக்குப் பிடிப்பது கஸ்டந்தான்," என்று சொல்லிக் கொண்டு போக ஒரு தண்ணீர்ப் பீப்பா வண்டி வந்து கொண்டி ருந்ததை அவதானித்த கோவிந் அந்த வண்டியை அணுகி,

"எங்களுக்குச் சரியான தண்ணீர் விடாய் அண்ண, நீங்கள் கொண்டுபோவது குடிக்கக்கூடிய தண்ணீரா?" என்று கேட்டான். நிலைமையை உணர்ந்துகொண்ட வண்டிக்காரன்,

"இத்தண்ணீரை நான் எனது பட்டியில் நிற்கும் பசுக் கன்றுகளுக்குக் கொண்டு போறன். கிட்டத்தான் பட்டி இருக்கு. அங்கு வைத்துத் திறக்கும்போது நீங்கள் குடிக்க லாம். இது மணற்கிணத்துத் தண்ணீர். சவர்த் தண்ணிதான் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்த இடத்தில் வேறென்ன செய்ய முடியும்? குடித்துத் தான் ஆகவேண்டும்" என்று சொன்னவன் கூட்டிக்கொண்டு போய் பீப்பாவைத் திறந்தான். ஓடிக்கொண்டிருந்த தண்ணீரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவரும் கைமண்டையில் ஏந்திக் குடித்தனர். குடித்து முடிந்ததும், கோவிந்தை விழித்துப்பார்த்த அருள்,

“என்னென்று மச்சான் இதைப் பசுக்கன்றுகள் குடிக் கின்றன? படு சவர் மச்சான். ஓ! மை கோட். இதுகும் நெடுந்தீவை ஞாபகப்படுத்துவதற்கு நல்ல ஓர் அனுபவந் தான்,” என்றதும், கோவிந்தும் தம்புவும் விழுந்துவிழுந்து சிரித்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

வீடு வந்து சேர்ந்த பொழுது நேரம் பி.ப.2.00 மணி. தண்ணீர் விடாய், பசி, களைப்பு என்பன வாட்டியது. நேரே பக்கத்து வளவிற்குப் போய் தம்பித்துரை வைத்தி ருந்த இத்திப்பனை இரசத்தில் ஆளுக்கு இரண்டு போத்தல் அடிச்சிட்டுப் போனவர்களுக்கு மதியச் சாப்பாடு அந்த மாதிரிக் காத்திருந்தது. நல்ல பிடி பிடிச்சுவிட்டு ஒரு குட்டித் தூக்கம். ஐந்து மணிக்கு எழும்பி அயலைச் சுற்றிப் பார்ப்பம் என்று புறப்பட்டனர். சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண்டு சென்றபொழுது,

“எப்படி அருள், பற்றைக்காட்டு ஈச்சம்பழ அனுபவம் இருந்தது? எனக்காகச் சொல்ல வேண்டாம். உண்மையைச் சொல்லு,” கோவிந் சிரித்தபடியே கேட்டான். பதிலுக்குச் சிரித்தபடியே.

“உனக்காகச் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை கோவிந். உண்மையைச் சொன்னால், அது எனது வாழ்க்கையில் கிடைத்த ஒரு மகிழ்ச்சியான அனுபவம். ஈச்சம் முள்ளு குத்தியது, தேனீக்கள் கொட்டியது, சவர்த் தண்ணீர் குடித்தது, இவையெல்லாம் பெரிய பிரச்சினைகள் அல்ல. அதிலும் ஒரு மகிழ்ச்சி உண்டு. மனித வாழ்க்கை என்பது சௌகரியம் அசௌகரியம் இரண்டும் சேர்ந்தவை தான். அவை இரண்டையும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். உலகத்தில் மற்றைய மனிதர்கள் எப்படி வாழுகின் றார்கள் என்பதை அறிவதிலும் அதில் பங்குபற்றிக் கொள்வ திலும் பெரிய மகிழ்ச்சியும் அனுபவமும் கிடைக்கின்றது. நான் உனது ஊருக்கு வந்தது அதற்காகத்தானே! நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்ட ஈச்சம்பழங்களும் குடித்த தேனும் என் வாழ்நாளில் என்னால் மறக்க முடியாத அனுபவங்கள். எத்தனை வகை யான ஈச்சம்பழங்கள்! ஒவ்வொரு ஈச்சம் பற்றையிலுமிருந்த ஈச்சம் பழங்கள் வேறுபட்ட வடிவங்களையும் வேறுபட்ட அளவுகளையும் வேறுபட்ட உருசியையும் கொண்டிருந்ததை நான் நன்கு அறிய முடிந்தது. இதற்கு முன் தேன் குடித் திருக்கிறேன். ஆனால், தேன்கூட்டிலிருந்து தேன் எடுத்து இவ்வ ளவு அளவில் ஒருபோதும் நான் தேன் குடித்ததில்லை. தேனில் ஒருவகை வெறி இருப்பதை இன்றுதான் அனுபவித்தேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக, தேன் எடுக்கப்போன தம்பு எவ்வளவு துணிச்சலாய்ப் போனான். எட்டத்தில் நின்ற எனக்கு இரண்டு தேனீக்கள் கொட்டிப் போட்டுதென்று நான் அழுதால், ஆயிரக்கணக்கான தேனீக்களின் மத்தியில் துணிச்சலுடன் சென்று எப்படி தேன் எடுக்க முடிந்தது தம்புவால்! இதில் ஒரு மனித வாழ்க்கைத் தத்துவமே அடங்கியுள்ளது. அதாவது இன்பத்தை அடைய வேண்டுமாயிருந்தால் முதலில் அதற்கு முன்னிருக்கும் துன்பத்தைத் தாண்ட வேண்டும். முதலில் உள்ள துன்பத்தைக் கண்டு பயப்படுபவன் இன்பத்தை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. No gain without pain இதுதான் மனித வாழ்க்கையின் தத்துவம்.

இப்பொழுது எனக்கு, என்ன மனதில் தோன்றுகிறது தெரியுமா? எத்தனை தேனீக்கள் கொட்டினாலும் நானும் ஒருக்கால் அப்படி ஒரு தேன்கூட்டை எடுத்து தேன் குடிக்க வேண்டும், மற்றையவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று தோணுகின்றது. கரடுமுரடான வாழ்க்கையாய் இருந்தாலும் நெடுந்தீவு வாழ்க்கையிலும் எவ்வளவு இன்பம்! சுகம்! திருப்தி! அனுபவங்கள்! இருக்கின்றன என்பதை இன்றைய அனுபவம் எனக்கு நன்றாய் உணர்த்தியுள்ளது. உண்மை யைச் சொல்லப்போனால், நான் நெடுந்தீவிற் பிறந்து இப்படி ஒரு வாழ்க்கையை அனுபவிக்க எனக்கு வாய்ப்புக் கிடைக்க வில்லையே! என்று ஆதங்கப்படுகிறேன்," என்று சொன்னது தான் தாமதம், கோவிந் நண்பனைக் கட்டியணைத்து முதுகிற் தட்டி நண்பனுடைய அறிவையும் பண்பையும் மனித நேயத்தை யும் பாராட்டினான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மகிழ்ச்சியோடு தொடர்ந்து நடந்துகொண்டிருந்த பொழுது எதிரில் பட்டுவும் பொன்னியும் வந்துகொண்டிருந் தனர். பட்டுவையும் பொன்னியையும் ஒன்றாய்ப் பார்த்த கோவிந்திற்கு அரைக் காய்ச்சல் என்ன வம்பில மாட்டிவிடப் போறாளவயோ என்று. பொன்னி இயல்பாகவே வம்புக்காரி. பட்டு நல்லவள்தான், இருந்தாலும் பொன்னியோடு சேர்ந்துகொண்டு என்ன வம்புப் பகிடி விடப்போகின்றாளோ! என்று ஒரு பயம். பட்டுவும் பொன்னியும் கோவிந்தை அணுகி யதும்,

“எங்க மணி, நண்பனோடு போய்க்கொண்டிருக்கிறாய் என்று அறியலாமோ? அவசியம் அறிய வேண்டுமென்றில்லை, சும்மா கேட்டனான்,” என்றாள் பட்டு

“நான் செல்லத்தம்பி அத்தாருடைய பிச்சம்புட்டி பட்டிக்குப் போறன் நம்ம ஊர் மாடு, கன்று, பட்டி படலைக ளைக் காண்பித்து பால் கறக்கும் முறையை நண்பனுக்குக் காட்டுவம் என்று,” சொன்னதுதான் தாமதம்,

“பால் கறக்கிற வயதில, பால் கறக்கிறதைப் பார்க்கப் போகிறீங்கள் என்று சொல்லுகிறீங்கள். நீங்கள் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்!” என்று மெதுவாய் முணுமுணுத் தாள் பொன்னி. இதை அவதானித்த கோவிந்,

“என்னவாம், பொன்னி ஏதோ வாயிற்குள்ள முணு முணுக்கிறாள்?” என்று கேட்டான்.

“அது வஞ்சகம் இல்லாதது, மனதிற் பட்டதைச் சொல்லுது,” என்றாள் பட்டு,

“அதைத்தான் என்னென்று கேட்கிறேன்,” என்று சிறிது முறுக்கினான் கோவிந். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு மெதுவாக,

“பால் கறக்கிற வயதில, பால் கறப்பதைப் பார்க்கப் போகிதுகளாம், பாவம் என்கிறாள் பொன்னி,” என்று பட்டு சொன்னதும், சாதுவாய் முறாய்த்துப் பார்ததுகொண்டு,

“பொன்னி, உனக்கு இந்த வம்புக் கதையும் சிலேடைக் கதையும் போகாதே?” என்றான் கோவிந். உடனே பொன்னி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மணி சொல்லிறாய்? அப்படி என்ன பெரிய வம்புக்கதை சொன்னனான்! சிலேடைக் கதை என்றால் ஏற்றுக்கொள்ளுகிறேன். வம்புக்கதை என்றால் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது," என்றாள் கடுப்புடன்.

"வம்போ! சிலேடையோ! எதுவானாலும், குத்தற் கதை தானே வேண்டாமென்கிறது," என்று கோவிந் மறுதலிக்கவே, சிறிது கோபப்பட்டவளாய்,

"என்ன மணி, நீ யாழ்ப்பாணத்தில் பெரிய கல்லூரியில் படிக்கிறாய். உங்களுடைய கல்லூரியில் ஐந்நூறு ஆயிரம் குமரியள் படிப்பாளவ. உன்னைப்போல கவர்ச்சியான பெடியன்களைப் பார்த்து எத்தனை சிலேடைப் படிகிகள், ஏன்! வம்புப் பகிடிகளும் விடுவாளவ? இதெல்லாம் உனக்கோ அல்லது உனது நண்பனுக்கோ புதிசே? ஒன்றும் தெரியாத கிராமத்துப் பெட்டைகள் போன்று நடிக்காத மணி!" என்று பொன்னி போட்ட போடலைக் கேட்ட பட்டு,

"அப்படிப் போடடி அருவாளைப் பொன்னி," என்று சொல்லிவிட்டு கலகலவென்று சிரித்தாள். பொன்னியும் சேர்ந்து சிரித்தாள். அந்தக் கட்டத்தில் என்ன சொல்வது ஏது சொல்வதென்று கோவிந்திற்குப் புரியவில்லை. ஒரு வழிந்த சிரிப்போடு ஓர் அப்பாவி போன்று பொன்னியையும் பட்டுவையும் பார்த்துக்கொண்டு நின்றான். அதைஅவதானித்த பொன்னி.

"மணி, நான் சும்மா பகிடியாய்த்தான் எல்லாவற்றையும் சொன்னனான். நீ ஒன்றையும் சீரியசாய் எடுத்துக் கொள்ளாத. என்னைப்பற்றி உனக்குத் தெரியுந்தானே! என்னுடைய வாய் சும்மா இருக்கமாட்டாதென்று. நீ சந்தோசமாய் நண்பனோடு போய், நம்ம ஊர் மாடுகன்று, பட்டிபடலை, பால்பசு என்று நண்பனுக்குக் காட்டிக்கொண்டு வா. அப்பொழுதுதான் நம்ம ஊரைப் பற்றியும் நாலு பிற ஊரவர்களுக்குத் தெரியவரும்," என்று சொன்னதும் ஆச்சரியம் அடைந்த கோவிந்,

"பொன்னி, உன்னைப் பற்றி இதுவரை என்னவோ ஏதோவெல்லாம் நினைத்திருந்தேன். நீ இவ்வளவு அறிவு பூர்வமாய்க் கதைப்பதைப் பார்க்கும்போது என்னாலேயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பமுடியாமலிருக்கு. இனிமேலும் உன்னைத் தப்பாக எண்ணுவது ரொம்பரொம்பத் தப்பு. இனிமேல் அந்த தப்பை நான் செய்யமாட்டேன். அப்ப... நான்... போயிட்டு வரட்டுமா?" என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான் நண்பனுடன்.

செல்லத்தம்பி அத்தாரின் பட்டியை அடைந்தபொழுது நேரம் பி.ப. 6:00 மணி பால் கறப்பதற்குத் தயாராகிக் கொண்டிருக்கும் நேரம். பட்டியிற்குள் நான்கு பேர் நிற்கின் றனர். ஒரு பூவரசங் கதியாலில் நான்கு மூங்கிற் கடை யால்கள் தொங்குகின்றன. பட்டியிற்குள் ஏறக்குறைய பதி னைந்து பசுக்கள் நிற்கின்றன. கன்றுப் பட்டி பல ஏக்கர் பரப்பளவில் இருப்பதையும் பசுவின்பட்டி ஒரு தொழுவமாய் இருப்பதையும் அவதானித்த அருள், அங்கு நடக்கும் ஒவ் வொரு செயற்பாட்டிலும் நன்கு கவனம் செலுத்திக் கொண்டி ருந்தான். பாலைக் கறக்கும்பொழுது, கறப்பவன் கன்றைக் காலுக்குள் பிடித்து வைத்திருந்த செயல் அருளுக்குப் பெரிய ஆச்சரியத்தைக் கொடுத்தது. நான்குபேரும் மூங்கிற் கடையாலுக்குள் பாலைக் கறந்தனர். பால் கறந்த பிற்பாடு கன்றுகள் தத்தமது அம்மாக்களிடம் இருந்த மிகுதியான பாலை மகிழ்ச்சியோடு குடித்து முடித்தன. அப்புறம் அம்மாக்கள் தத்தமது பிள்ளைகளை நாவினால் நன்றாக நக்கி தத்தமது தாய்பிள்ளைப் பாசத்தை வெளிப்படுத்திக் கொண்டன. இப்பொழுது கன்றுகள் அம்மாக்களைவிட்டுப் பிரிந்து கன்றுப்பட்டிக்குள் போகவேண்டிய நேரம் வந்து விட்டது. கன்றுகளைப் பிரித்து அனுப்பியபொழுது சில கன்றுகள் அம்மாக்களை விட்டுப் பிரிந்துபோக மறுத்து குழப்படி செய்கின்றன. அவைகளும் இறுதியில் கன்றுப்பட்டிக் குள் அனுப்பப்பட்டு படலை சாத்தப்படுகின்றது. அதைத் தொடர்ந்து பசுக்கள் வெளியே செல்ல அனுமதிக்கப்படு கின்றன.

அப்பொழுது பசுக்கள் ஒன்றன்பின் ஒன்றாக வெளி யேறித் தங்கள் தங்கள் திசை நோக்கிச் செல்லுகின்றன. இவற்றையெல்லாம் பார்த்தபொழுது இவையெல்லாம் புதுமை யாயும் ஆனந்தமாயும் இருந்தன அருளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் அங்கு நின்ற நால்வரும் தத்தமது கடையால்களைத் தூக்கிக்கொண்டு புறப்படுகின்றனர். அப்பொழுது கோவிந் அவர்களிடம்,

"இவர் எனது நண்பர், வயாவிளானைச் சேர்ந்தவர். என்னோடு யாழ்ப்பாணத்திற் படிக்கிறார். நம்ம ஊரைப் பார்க்க வந்திருக்கிறார். அதன் ஓர் அம்சமாக எமது பட்டிபடலை, மாடுகன்று, பால்பசு என்பவற்றைக் காட்டுவம் என்று கூட்டி வந்திருக்கிறேன். இங்கு நடந்த எல்லாவற்றையும் நன்கு பார்த்துவிட்டார். இப்பொழுது உங்களுடைய பாலைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்," என்றதும், உடனே அவர்கள்,

"நன்றாகப் பார்க்கலாமே," என்று சொல்லிவிட்டு கடையால்களைக் காட்டினர். அருள் அவற்றை பார்த்த பிற்பாடு,

"ரொம்பநன்றி," எனக்கூறி வழியனுப்பி வைத்துவிட்டு கோவிந்தைப் பார்த்து,

"என்ன கோவிந், இவர்கள் நான்கு பேரும் கொண்டு போகும் பால், எப்படியும் ஆறுபோத்தலுக்குமேற் போகாது, ஆறு போத்தற்பாலுக்கு கீழ்ப்பட்டதாய்த்தான் இருக்கும். பதினைந்து பசுக்களிற் பெற்ற மொத்தப்பால் ஆறுபோத்தலுக்கும் குறைவென்றால், ஒரு பசுவிலிருந்து சராசரி அரைப் போத்தற் பால் தானும் கிடைக்கவில்லை. ரொம்ப ஆச்சரிய மாயிருக்கதே! இவர்களுடைய முயற்சிக்கு இது கட்டுபடியா குமா?" என்று கேட்டுவிட்டு ஒரு வெளுத்த பார்வை பார்த்தான். நண்பனுடைய பார்வையிலிருந்து அவன் கருதுவன வற்றையெல்லாம் புரிந்துகொண்ட கோவிந்,

"உன்னுடைய கேள்வி வாஸ்தவந்தான் அருள். இவர்கள் தமது பசுக்களுக்கோ அல்லது கன்றுகளுக்கோ எந்தவொரு செலவும் செய்வதில்லை. அத்தோடு இது தமது சுயதேவைக்கான முயற்சிதான். இதில் இலாபநட்டப் பேச்சுக்கே இடமில்லை. இலாபநட்டம் கருதாத இந்த வகை முயற்சி பசு, பால் விடையத்தில் மட்டுமல்ல சிறுதானி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே இந்த ஊர்மக்களும் ஒருவகையிற் கொடுத்து வைத்தவர்கள் தான்,'' என்று கூறி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டான் அருள்.

அப்புறம் படுக்கையால் எழும்பி வேப்பங்குச்சியாற் பல் துலக்கி முகம் கழுவி முடித்த வேளையில், இரண்டு பையன்கள் வந்து,

"மணி அண்ண, உங்களுக்கும் உங்களுடைய நண்ப னுக்குமாக ஒரு முக்கியமான சாமான் கொண்டு வந்திருக்கி றோம். அது உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும். ஏனென்றால் நீங்கள் எங்களைப் போன்ற பையனாக இருந்துபொழுது இதைச் சுவைத்துச் சாப்பிட்டிருந்தீர்கள்,'' என்றதும்,

"என்னடா புதிர் போடுகிறீங்கள்! என்னென்று சொல்லுங் களேன்,'' என்று ஆர்வத்தோடு கேட்டான் கோவிந். மேலும் கோவிந்தின் பொறுமையைச் சோதிக்க விரும்பாத பையன் கள் ஓர் ஓலைக் குட்டானுக்குள் இருந்ததைக் காட்டினார்கள். அதைப் பார்த்த கோவிந்,

"ஓ மை கோட்! இத்திப் பழமாடா?'' என்று கேட்டதும்,

"ஓம் மணி அண்ணா, இது உங்களுக்கு நன்கு பிடிக்கு மல்லோ?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டனர்.

"அது உங்களுக்கு எப்படியடா தெரியும்?'' என்று கேட்டான் கோவிந். இருவரும் சிரித்துக்கொண்டே,

"அது எங்களுக்குத் தெரியாது. ஆனால் இதை உங்களிடம் கொடுக்கும்படி தந்துவிட ஆளுக்குத் தெரியும்,'' என்று சொல்லிவிட்டு மேலும் கலகல என்று சிரித்தனர். இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த கோவிந்,

"என்னடா சொல்லுகிறீங்கள்? யாரடா அது?'' என்று கேட்டான்.

"சொல்லமாட்டோம்,'' என்று கூறிக்கொண்டு ஓட்டம் பிடித்தனர் இருவரும். பின் எட்டத்தில் நின்றுகொண்டு,

"அது பட்டு அக்கா,'' என்று சொல்லிவிட்டு சிரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைச்சல், பனங்காய், பனாட்டு, ஒடியல், தோட்டம் துரவு, கள்ளு என்பன சம்பந்தப்பட்ட எல்லா முயற்சிகளும் சுய தேவைப்பூர்த்தி என்பதை மையமாக வைத்துத்தான் நடை பெறுகின்றன.

இவர்களுடைய முயற்சியில் ஆடு வளர்ப்பு மட்டும்தான் பணத்திற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். சிறிய அளவிற் புகையிலைச் செய்கையும் பணத்திற்காக மேற் கொள்ளப்படுகின்றன. வளர்க்கப்படும் ஆடு, விளைவிக்கப்படும் புகையிலையில் நூறுவீதமும் வெளியே அனுப்பப்படுகின்றன. தொகுத்துச் சொன்னால் நெடுந்தீவுப் பொருளாதாரம் சுய தேவையை மையமாகக் கொண்ட ஒரு வரண்ட பொருளா தாரம் என்பது சாலவும் பொருந்தும்.

இதன் காரணமாய்த்தான் நெடுந்தீவு மக்கள் வடமாகாண வன்னிப் பகுதியில் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பித்ததைத் தொடர்ந்து பெரும் அளவிற் சென்று குடியேறியுள்ளனர். இன்றும் குடியேறி வருகின்றனர். ஒரு விடையத்தை என்னால் உறுதிபடக் கூறமுடியும். அதாவது நெடுந்தீவுப் பொருளா தாரம் சுயதேவைப் பூர்த்தியை மையமாகக் கொண்ட வரண்ட பொருளாதாரமாயிருந்த போதும் எங்களுடைய மக்களின் வாழ்க்கையில் மனத்திருப்தி, சந்தோசம், வறுமையின்மை நிலவுகின்றன. பிச்சைக்காரன் இல்லாத ஓர் ஊர் இருக்கிறது என்று சொன்னால் அது நெடுந்தீவுதான். அதேவேளையில் இங்கு கப்பற்காரனும் இல்லை. உள்ள தைக் கொண்டு இன்பமாய் வாழுகிறோம். நெடுந்தீவு மக்க ளுக்குப் பணப்பயித்தியம் கிடையாது. ஆனால், பண ஆசை இருக்கு. அது பணப்பயித்தியமாக ஒருபோதும் மாறவில்லை. காரணம் நெடுந்தீவு மக்கள் சுயதேவைப் பூர்த்தியை மைய மாகக் கொண்ட சாதாரண வாழ்க்கை வாழ்ந்து பழக்கப்பட்ட வர்கள். அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையில் இன்பத்தையும் சுகத்தையும் திருப்தியையும் அனுபவிப்பவர்கள்," என்று கூறிமுடித்தபொழுது,

"அப்பாடா! நெடுந்தீவைப் பற்றியும் இத்தீவின் வாழ்க்கைமுறை பற்றியும் இரத்தினச் சுருக்கமாய்ச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்துவிட்டாய் கோவிந்.. நான் எல்லாவற்றையும் நன்கு கிரகித்துக் கொண்டேன். ரொம்பரொம்பச் சந்தோசம்,'' என்று அருள் கூறிமுடிக்க வீடு வந்து சேர்ந்தனர்.

## அங்கம் - 06

மறுநாளுக்கான குறிப்பிடத்தக்க திட்டம் ஏதும் இல்லாமல் அன்று இரவு நித்திரைக்குச் சென்றுவிட்டனர் இருவரும். அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் விழித்துக் கொண்டான் அருள். வீட்டின் கூரைமீது படுத்திருந்த கோழிச்சேவல் இடையிடையே கூவிக்கொண்டிருந்தது. காகங்கள் கரைந்து கொண்டிருந்தன. கருக்குருவியும் மைனாக்களும் தமது ஓசையை எழுப்பிக் கொண்டிருந்தன குயில்களின் இனிய ஓசை காதுக்கு இன்பத்தை அளித்துக் கொண்டிருந்தன. நெழுவினிப் பிள்ளையார் கோயிலின் காண்டாமணிச் சத்தம் விநாயகனை நிகைக்கத் தூண்டியது. இவையெல்லாம் அருளின் காதுகளுக்கு ஏதோ ஒருவகையில் இன்பத்தை ஊட்டிக்கொண்டிருந்தன என்றால் மறுப்பதற்கில்லை. இவற்றின் மத்தியில் அருள் இதுவரை கேட்டிராத ஒரு பறவையின் ஒலியைக் கேட்க முடிந்தது. அது என்ன பறவையின் ஒலி என்பதை அறிய வேண்டும் என்பதில் ஆர்வம் கொணட அருள் அருகாமையிற் படுத்திருந்த கோவிந்திடம் மெதுவாக,

"அது என்ன பறவையின் சத்தம் மச்சான் 'கிணாங் கிணாங்' என்று கேட்கின்றது?" நண்பன் இயற்கையை நன்கு இரசிக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டு தனக்குள் மகிழ்ச்சி யடைந்த கோவிந்,

"அது அருள், கௌதாரியின் சத்தம், அவை அயலிலுள்ள சிறிய காடுகளில் வாழுகின்றன. காட்டுக் கோழி போன்றவை. அவற்றைவிட சற்று சிறியவை. அவற்றின் சத்தம்தான் நீ குறிப்பிடுவது,'' என்றான்.

"நெடுந்தீவுக் கிராமம் ஒன்றில் அதிகாலையில் பறவைகள் எழுப்பும் ஒலிகள் என்னை ஒரு தனி உலகத்திற்கு அழைத்துச் சென்றுள்ளன. இவற்றைக் கேட்கும்பொழுது காதிற்கு இனிமையாயும் மனத்திற்கு இதமாயும் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே ஓட்டம் எடுத்தனர். உடனே சொண்டிற்குள் சிரித்துக்கொண்ட கோவிந், அருளைப் பார்த்து,

"எனக்குப் பத்துப் பதினொரு வயதாயிருந்தபொழுது இத்திப்பழம் பிடுங்க நானும் பட்டுவும் காலையிற் போவது வழக்கம். அந்த அனுபவத்திலதான் எனக்குப் பிடிக்குமென்று கொடுத்தனுப்பியிருக்கிறாள்," என்று சொல்லியபின் சில பழங்களை எடுத்து அருளிடம் கொடுத்துவிட்டுத் தானும் சாப்பிட்டான். சில பழங்களைச் சாப்பிட்டு முடித்த அருள்,

"நல்லாய்த்தான் இருக்கு மச்சான். இப்பொழுதுதான் முதற்தடவையாய் நான் இத்திப்பழம் சாப்பிடுகிறேன். இத்திப் பழத்தைக் கேள்விப்பட்டிருக்கிறேனே ஒழிய ஒருபோதும் சாப்பிட்டதில்லை," என்று கூறிக்கொண்டு தொடர்ந்து இரசித்து உருசித்துச் சாப்பிட்டான். அப்பொழுது நெடுந்தீவு மக்களுடைய வாழ்க்கை முறையைப் பற்றி மேலும் கொஞ்சம் சொல்லவேண்டும் என்று எண்ணிய கோவிந்,

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலா, மா, வாழை போன்ற வீட்டுத் தோட்டப்பழங்களும், நாவற்பழம், கொய்யா, அன்ன முன்னா, விளாம்பழம், பாலைப்பழம், தோடம்பழம், மாதுளம் பழம் போன்றனவும் கிடைக்கக்கூடியதாயுண்டு. இவைகளை வாங்க வேண்டுமாயிருந்தால் நாங்கள் யாழ்ப்பாணத்துக்குத் தான் போகவேண்டும். காரணம் அவை இந்த உவர்நிலப் பூமியில் வளரமாட்டாதுகள். எங்களுக்கு இங்கு இயற்கை யாய்க் கிடைப்பன: ஆலம் பழம், இத்திப் பழம், இலந்தைப் பழம், காரைப்பழம், ஈச்சம்பழம், நாகதாளிப்பழம், புளிச்சாம் பழம், புளியம்பழம் என்பனதான். முந்நூறு வருடங்களுக்கு முன்பு பாலைப்பழம், விளாம்பழம் என்பன கிடைத்தன. தற்பொழுது அவைகள் அழிந்துவிட்டன. நாகதாளிகளும் 90%மானவை அழிக்கப்பட்டுவிட்டன. மேற்கூறப்பட்ட பழங்களை இளம் வயதில் நாங்கள் விரும்பிச் சர்ப்பிடுவம். பனம் பழத்தை எல்லா வயதினரும் சாப்பிடுவர். அந்தப் பழைய அனுபவத்திற்தான் இப்பொழுதும் இந்த இத்திப் பழத்தை விரும்பிச் சாப்பிடுகிறேன்," என்று கூறிமுடிக்க எல்லாவற்றையும் நன்கு கேட்டறிந்து கொண்ட அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வன்னிப் பிரதேசத்தில் ஒருவகையான பழங்கள், யாழ்ப் பாணக் குடாநாட்டில் இன்னொரு வகையான பழங்கள், தீவுப்பகுதியில் வேறு வகையான பழங்கள் கிடைக்கின்றன. இந்த ஒவ்வொரு வகையும் அந்தந்தப் பிரதேசத்தின் தனித் தன்மையை வெளிப்படுத்தி நிற்கின்றன என்பதுதான் நாம் இங்கு முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விடயம். தமிழில் ஒரு பழமொழி இருக்கல்லே: "பாம்பு தின்னிற ஊருக்குப் போனால் நடுமுறி நமக்கு," என்று. அதுபோன்று நெடுந்தீவிற்கு வந்தால் இத்திப்பழத்தையும் ஈச்சம்பழத்தையும் இரசித்துச் சாப்பிட வேண்டியது தானே!" என்றதும்,

"இதுதான் அருள், உன்னில எனக்குப் பிடித்துக்கொண்ட விடயம். எல்லாவற்றையும் அச்சொட்டாய்ப் புரிந்துகொள்ளு கிறாயே! சரி... பழம் சாப்பிட்டது போதும் வா போய்க் காலைச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு எங்காவது கிளம்பு வம்," என்று சொல்லிக்கொண்டு வீட்டிற்குள் போனதும்,

"அம்மா, சாப்பிடலாமா?" என்றான் கோவிந்.

"ஓம் தம்பி, சாப்பிடலாம்," என்று சொல்லிவிட்டு காலைச் சாப்பாட்டைப் பரிமாறினாள் அம்மா. சாப்பிட்டு முடிந்ததும் பசுப்பால் கலந்த தேனீரைக் கொடுத்தாள் அம்மா. அதை உருசித்துக் குடித்துக்கொண்டிருந்த அருள் இடையில்,

"அம்மா, நான் உங்கள் வீட்டில் பசுப்பால் தேனீர் குடித்த ஒவ்வொரு வேளையிலும் ஒன்றைச் சொல்லவேண்டும் என்று நினைத்தனான், அதை இப்பொழுதே சொல்லி விடுகி றேன். அதாவது எங்கள் வீடு உட்பட எல்லா இடங்களிலும் பசுப்பால் தேனீர், கோப்பி குடித்திருக்கிறேன். ஆனால் உங்களுடைய தேனீர், கோப்பியில் இருக்கும் சுவையும் மணமும் அவற்றில் இல்லை. நான் சும்மா முகமனுக்காகச் சொல்லவில்லை. உண்மையாகத்தான் சொல்லுகிறேன்," என்று கூறிவிட்டு ஒரு கேள்விக் குறியோடு பார்த்தான்.

அவனுடைய பார்வையிலிருந்து அருள் என்னத்தை எதிர்பார்க்கிறான் என்பதைப் புரிந்துகொண்ட அம்மா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் சொல்வதில் அர்த்தம் இருக்குத் தம்பி, இதே அனுபவம் எங்களுக்கும் உண்டு. இன்னும் பலருக்கும் உண்டு. அதற்கான முக்கிய காரணம் எங்களுடைய பசுக்களில் இருந்து பெறப்படும் பாலின் தரந்தான். எமது பசுக்கள் தரவையில் மேய்ந்து வாழ்பவை. சதா நடமாடித்திரிபவை. அதனால் அவை புல், இலைகுழைகள், பூண்டுகளைத் தின்றுதான் எங்களுக்குப் பால் தருகின்றன. நாங்கள் பசுக்க ளைக் கட்டி வளர்த்துக் கைத்தீனி போடுவதில்லை. அத்தோடு எங்களுடைய பசுக்களிலிருந்து குறைவாகத்தான் பால் எடுக்க முடியும். ஒரு பசு சராசரியாக அரைப்போத்தலுக்கும் ஒரு போத்தலுக்கும் இடையிற்தான் பால் கொடுக்கும். யாழ்ப்பா ணத்தில் கட்டி வளர்க்கப்படும் பசுக்கள் ஐந்து போத்தல், ஆறுபோத்தல், சில அதற்கு மேலாலும் கொடுக்கும்.

அந்தப் பால் எங்களுடைய பசுப்பாலின் தரத்திற்குக் கிட்டவும் நிற்கமுடியாது. சுருக்கமாய்ச் சொன்னால் பசுக்கள் உண்ணும் உணவு, அவற்றின் நடமாட்டம், அவை கொடுக் கும் பாலின் அளவு என்பனதான் இந்த வேறுபட்ட தரத்திற்கு முக்கிய காரணங்கள்.

நெடுந்தீவுப் பசுக்களிலிருந்து பெறப்படும் பால் உயர்ந்த தரமானதாயிருப்பதனால் பாலில் இருந்து பெறப்படும் தயிர், மோர், வெண்ணெய் என்பனவும் உயர்ந்த தரமுடையனவாய் உள்ளன. நெடுந்தீவு நெய்க்கு யாழ்ப்பாணத்தில் உள்ள பெரிய பணக்காரர்களிடத்தில் பெரிய கிராக்கி உண்டு. நெடுந்தீவு நெய்க்குமட்டும் அல்ல நெடுந்தீவு தேன், வரகு, ஆடு, மாடு போன்றவற்றிற்கும் வெளியூர்களில் நல்ல கிராக்கி உண்டு. காரணம் அவற்றின் தரம் உயர்வானது.

நெடுந்தீவு தேன் என்றதும், அருளுக்குத் தேன் குடித்த ஞாபகம் வந்தது. அதிலிருந்து அம்மா சொல்லுவது யாவும் உண்மை என்று எண்ணிக்கொண்டு போக, இத்திப்பனைக் கள்ளும் ஞாபகத்திற்கு வந்தது. இவற்றுடன் ஈச்சம் பழத் தையும் ஞாபகப்படுத்திக்கொண்ட அருள் மெதுவாய்ச் சிரித்துக்கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் சொல்வது யாவும் உண்மைதான் அம்மா. இந்த ஊரில் கொஞ்ச நாட்களில் நான் பெற்ற அனுபவங்களில் இருந்தே பல உண்மைகளை அறிய முடிந்துள்ளது. அப்படி இருக்கும்பொழுது, இந்த ஊரில் பரம்பரை பரம்பரையாய் வாழ்ந்துவரும் உங்களுக்கு எவ்வளவு விடயங்கள் தெரிந்திருக்கும்," என்றதும் இதுவரை அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்த கோவிந்துக்கு பால், தயிர், மோர், நெய் என்றதும் இன்னொரு வரலாற்று உண்மை ஞாபகத்திற்கு வந்தது. உடனே கோவிந்,

"இருநூறு முன்னூறு வருடங்களுக்கு முன் நெடுந்தீவில் இருந்து இராமேஸ்வரம் சிவன்கோயிலுக்கு பால், தயிர், நெய் என்பன அபிசேகத்திற்காகக் கொண்டு செல்லப் பட்டனவாம். அன்று இத்தீவு பசுந்தீவாக, அதாவது பசுமை நிறைந்த தீவாக இருந்தது. பசுக்களும் நிறைய இருந்தன. பசுக்களுக்கு உணவுப் பஞ்சம் கிடையாது. அவை நிறையவே பால் கொடுத்தன. சில முன்னோர் கூறியுள்ளார்கள்: 'மாலையில் பசுக்கள் பட்டிக்கு வரும்பொழுது சில பசுக்களின் முலையிலிருந்து பால் சொட்டுச்சொட்டாய் ஒழுகும்' என்று,

இன்று நிலமை தலைகீழாய்ப் போச்சு. பசுமையும் போச்சு, பசுக்களும் போச்சு, பாலும் போச்சு, அன்றைய பசுந்தீவு இன்று வரண்டதீவாக மாறிவிட்டது. நெடுந்தீவிற்கு பசுந்தீவு என்று பெயர் இருந்தது என்றால் 'உனக்கென்ன பயித்தியமா?' என்று கேட்கும் அளவிற்கு எல்லாம் மாறிவிட்டன. வரண்டதீவு என்று அழைப்பதுதான் பொருத்தம் என்கிறார்கள். என்ன செய்வது? இயற்கையின் கோலங்கள் இவ்வாறு ஆகிவிட்டன. முன்பெல்லாம் ஆவணி மாதத்தில் நிச்சயம் மழைவீழ்ச்சி ஆரம்பிக்கும். உழவர்கள் உழுது விதைக்கத் தொடங்கி விடுவார்கள். அதனாற்தான், ஆவணி புரட்டாதி மாதங்கள் கார்காலம் என்று அழைக்கப்பட்டன. பருவம் தவறாத மழைவீழ்ச்சிதான் அன்றைய செழிப்பிற்கு முக்கிய காரணமாய் இருந்தது. முன்பெல்லாம் உருவத்தில் பெரிதாயிருந்த பசுக்கள் இன்று அதன் அரைவாசி அளவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச் சிறிதாகிவிட்டன. பசுக்கள் மட்டுமல்ல ஆடுகள், மனிதர் கூடச் சிறிதாகிவிட்டார்கள் என்பது மறுக்கமுடியாத உண்மை.

ஏன்? முந்நூறு வருடங்களுக்கு முன் ஒல்லாந்தர் கொண்டுவந்து விட்ட குதிரைகளுக்கு என்ன நடந்துள்ளது? அவன்கள் குதிரைகளைக் கொண்டுவந்து விட்டபொழுது, அவை முழு அளவிலான மிகப்பெரிய அரபிக் குதிரை களாய்த்தான் இருந்தன. பூமி வரண்ட பூமியாக மாற்றமடைந்து உணவுப் பஞ்சம் உருவாக பிற்சந்ததி மட்டக் குதிரைகள் என்று சொல்லும் அளவிற்கு சிறிதாக மாறிவிட்டன. எதிர் காலத்தில் அவை கழுதைகள் அளவிற்கு மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மனிதர்கள்கூட இதே பாதிப்பிற்கு உட்பட்டிருக்கிறார்கள்.

முந்நூறு வருடங்களுக்கு முன் இருந்த மக்கள் அளவி லும் பலத்திலும் இன்றைய மக்களைவிட பெரிதாகத்தான் இருந்திருக்கின்றார்கள். இதை யாரும் மறுக்கவோ மறைக் கவோ இயலாது," என்று சொல்லிக்கொண்டு போக நெடுந்தீ வைப் பற்றி தான் அறிந்ததைச் சொல்லுவம் என்று எண்ணிய அருள்,

"நீங்கள் பலவற்றையும் சொல்லும்பொழுதுதான் எனக் கும் ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. அதாவது பேராசிரியர் கணபதிப்பிள்ளை எழுதிய 'சங்கலியன் நாடகத்தில்' மாவிட்ட புரம் கந்தசுவாமி கோயிலுக்கு மோர்ப்பந்தல் போடுவதற்கு தேவைப்பட்ட தயிர் நெடுந்தீவில் இருந்துகொண்டு வரப்பட்ட தாய்க் குறிப்பிட்டிருக்கிறார். இவ்வாறு இராமேஸ்வரம் மாவிட்டபுரம் போன்று நெடுந்தீவிற்கு வெளியே பால், தயிர், மோர், நெய் போயி ருக்குதென்றால், அந்தளவிற்கு நிறைய இருந்தபடியாற்தானே போகமுடிந்திருக்கின்றது. ஆன படியால் நீங்கள் சொல்லுவதில் நிறையவே உண்மைகள் இருக்கவேண்டும்," என்றதும் குறிக்கிட்ட கோவிந்,

"அன்று மச்சான், நிறையச் செல்வம், அதேவேளை மக்கள் குறைவு. பிற்காலத்தில் மக்கள் பெருகி இயற்கையை அழித்துவிட, செல்வம் குறைந்து மக்கள் கூடிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருக்கமாய்ச் சொன்னால் மக்கள் பெருக்கமும் காலநிலையில் ஏற்பட்ட மாற்றமுந்தான் இந்த நிலமை வந்ததிற்கு முக்கிய காரணங்கள்," என்று கூறி முடித்தான். அப்பொழுது,

"ஆராட்சி செய்வதை இத்துடன் தற்காலிகமாய் நிறுத்தி வைத்துக்கொண்டு, எங்காவது கிளம்புவமா?" என்றான் அருள். உடனே மணிக்கூட்டைப் பார்த்த கோவிந்,

"ஓம் மச்சான், நேரம் பதினொரு மணியாகப்போகின்றது. கதையின் இரசனையில் நான் நேரத்தைக் கவனிக்கவில்லை. கிளம்புவம்," என்று கூறிக்கொண்டு வீட்டுக்கு வெளியே வந்து,

"அம்மா போயிட்டு வாறம்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான். அப்பொழுது இத்திப்பனையின் ஞாபகம் வந்தது. நல்ல பொருத்தமான நேரம் என்று எண்ணிக்கொண்டு உசாராய் நடக்கத் தொடங்கினான். அந்தவேளையில் எதிரில் பட்டு வந்துகொண்டிருந்தாள். கோவிந்தைக் கண்டதும்,

"மணி எங்கடா போறாய்? அதிருக்கட்டும், நான் கொடுத்து விட்ட இத்திப்பழம் சாப்பிட்டியே? இத்திப்பழம் பிடுங்கிக் கொண்டிருந்த பொழுது பழைய ஞாபகம் வந்திது. அதுதான் கொடுத்தனுப்பினனான்," என்று சொல்லிவிட்டு மசிந்து கொண்டு சிரித்தாள். பட்டுவைப் பார்த்ததும் மணிக்கும் ஓர் இனந்தெரியாத பாசம், சிரித்தபடியே. "நான் பழைய ஞாபகத்தோடு நல்லாய் உருசித்துச் சாப்பிட்டேன். எனது நண்பன் என்னைவிட நன்கு உருசித்துச் சாப்பிட்டான். ரொம்ப நன்றி," என்றதும், 'அப்படியா? அப்ப... நாளைக்கும் கொஞ்சம் கொடுத்துவிடட்டா?" என்றாள் வாஞ்சையோடு,

"வேண்டாம்! வேண்டாம்! உனக்கேன் வீண் சிரமம் எங்களுக்காக, இதுபோதும், இது எனது நண்பனுக்கு முதல் அனுபவமாயிருந்தபடியால் அவரோடு சேர்ந்து நானும் சந்தோசப்பட்டேன். இனி உனக்குச் சிரமம் வேண்டாம்," என்றான் அன்பு ததும்ப,

"இதல என்ன மணி எனக்குச் சிரமம் இருக்கு? பெடியன் களிட்ட சொல்லிவிட்டால் பிடுங்கி வருவாங்கள். நான் இப்ப இத்திப்பழம் பிடுங்கவெல்லாம் போறதில்லை. நான் இப்ப பெரிய பொண்ணல்லே?" என்றதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமா! ஆமா! நீ இப்ப பெரிய பொண்ணுதான். நீ இனிமேல் இத்திப்பழம் பிடுங்கப்போவது தப்புத்தான்," என்றான் கோவிந்.

"எல்லாம் உனக்குப் புரியுது, ஆனால் என்னுடைய மனசுதான் உனக்குப் புரியமாட்டுதென்கிது," என்று கூறி விட்டு ஒரு மருண்ட பார்வை பார்த்துச் சிரித்தாள். சில வினாடிகளின் பின்,

"அது ஒரு புறம் இருக்கட்டும், நீ எப்படா யாழ்ப்பாணம் போகிறாய்?" என்று கேட்டுவிட்டு விழித்துப் பார்த்தாள். அவளது கேள்வியிலும் பார்வையிலும் ஏதோ அடங்கியுள்ளது என்று ஊகித்துக்கொண்ட கோவிந் சிரித்தபடியே,

"எங்களுடைய G.C.E.(A/L) பரீட்சை டிசம்பரோடு முடிந்து விட்டது. அதன் பெறுபேறு யூன் யூலையிற்தான் வரும். அதுவரை நான் கல்லூரிக்குப் போகும் திட்டம் இல்லை. அப்புறம் பெறுபேற்றைப் பார்த்தாற்தான் மேற்கொண்டு பல் கலைக்கழகம் சென்று படிப்பதா? என்பதைப் பற்றிச் சிந்திக்க முடியும்," என்று கூறிவிட்டு மேலே பார்த்தான். அதை நன்கு அவதானித்த பட்டு,

"என்ன மணி, கதையைச் சொல்லிவிட்டு ஆகாயத்தைப் பார்க்கிறாய். கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றா? கடவுள் ஒரு பக்கம் இருக்கட்டும். நீ கட்டாயம் பல்கலைக் கழகம் போய்ப் படிப்பாய். அது நிச்சயம். உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா? நீ எப்பேற்பட்ட கெட்டிக்காரன் என்று. நீ பல்கலைக்கழகம் போனால் கொழும்பு, கண்டி, பேராதனை என்று சுற்றித்திரிவாய். அப்புறம் என்னை மறந்துபோவியா மணி?" என்று கேட்டுவிட்டு ஓர் ஏக்கம் கலந்த பார்வை பார்த்தாள்.

"என்ன பட்டு, பயித்தியக்காரி போன்று பேசுகிறாய்! எப்படி நான் உன்னை மறக்க முடியும்? சும்மா மனதைப் போட்டுக் குழப்பிக்காத, சரியா?" என்றான்.

"சரி... அது இருக்கட்டும். இன்று மத்தியானம் எங்களுடைய வீட்டிற்கு வாவேன் மதியச் சாப்பாட்டிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பனையும் கூட்டிக்கொண்டு? நான் நல்லபடியாய்ச் சமைத்து வைக்கிறன்," என்று கூறிவிட்டு ஒரு வழிந்த சிரிப்பை உதிர்த்தாள்.

"ஏன் பட்டு உனக்கு வீண் சிரமம்" என்றதும்,

"என்னடா மணி, எடுத்ததெற்கெல்லாம் சிரமம் சிரமம் என்கிறாய். சிரமம் என்று பார்த்தால் உலகத்தில் மனிதன் வாழமுடியுமே? சும்மா கதையை விடு. நீ இன்று மதியம் உனது நண்பனோடு எங்க வீட்டிற்கு வாறாய், சாப்பிடுகிறாய்! சரியா? சமைத்து வைத்துவிட்டுப் பார்த்துக் கொண் டிருப்பேன்," என்று கண்டிப்பான தொனியிற் சொல்லிவிட்டுச் சுறுக்கெனப் புறப்பட்டாள். எட்டத்திற் போய்க் கொண்டிருந்த வளிடம் அவசரமாய்க் கோவிந்,

"பட்டு, எங்க அம்மாவிடம் சொல்லிப் போட்டுப் போ 'இன்று நாங்கள் உங்கட வீட்ட சாப்பிட வாறமென்று,' அல்லாவிட்டால் அம்மா சமைத்து வைத்துப்போட்டுக் காத்துக் கொண்டிருப்பா," என்று உரத்த குரலில் சொன்னான்.

"சரி.... நான் உங்கம்மாவிடம் சொல்லிவிட்டுப் போறன்," என்று சொன்னவள் வேகமாய்ப் போய் மறைந்தாள். இவ்வள வையும் பார்த்துக்கொண்டும் கேட்டுக்கொண்டும் நின்ற அருள்,

"உரிய நேரத்திற்குச் சமைத்து முடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் ஆள் வேகமாய்ப் போகிது. பாவம். அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்," என்று கூறிப் பெருமூச்சு விட்டுக்கொண்டான்.

நேரே சீவற்காரன் தம்பித்துரையிடம் சென்ற கோவிந்,

"என்ன தம்பித்துரை அண்ண, இத்திப்பனை இருக்கே? என்றான். தம்பித்துரைக்கும் சாதுவான கீறல் போலும், சற்று உசாராக,

"மணித்தம்பி, இத்திப்பனைச் சரக்கை நானும் முதலாளி யுமாய் முடிச்சுப்போட்டம். எல்லாம் கலந்த கள்ளு இருக்குத் தம்பி. அதுகும் நல்லதுதானே! என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் தம்பித்துரை அண்ண, அதுகும் நல்லதுதான். நாங்கள் இங்கால ஒதுக்குப்புறமாய் இருக்கிறம். இங்கு கொண்டுவாங்கோ," என்று சொல்லிவிட்டுப் போய் ஓரமாய் இருந்துகொண்டனர். முக்காற்போத்தல் கிளாஸ் இரண்டு வந்தது. எடுத்த எடுப்பிலேயே அது முடிய அப்பறம் மூன்று தடவை வந்தது. இப்போ ஆளுக்கு மூன்று போத்தல் பாய்ந்து விட்டது. இரண்டு பேருக்கும் நல்ல கீறல். இதற்குமேலும் பாவிச்சால் நிலமை பிழைச்சுப் போய்விடும் என்று கருதிய கோவிந், "கிளம்புவம் மச்சான். நேரமும் ஒரு மணி ஆச்சு. பட்டு சமைச்சு வைச்சுப்போட்டுக் காத்திருப்பாள்," என்றதும்,

"நீ சொல்லுவது சரிதான் மச்சான். நீ 'ஆம்' என்று சொன்ன உடனேயே ஆள் அவசரமாய்ப் புறப்பட்டுப்போனது. ஆனபடியால் நாம பிந்திப்போவது சரியில்லை," என்று சொல்லிக்கொண்டு கிளம்பினான் அருள். அப்பொழுது முன்னேற்பாடாக,

"நாமள் பாவிச்சிட்டுப் போறது பட்டுவுக்குத் தெரியாதபடி வலு நிதானமாய் நடந்துகொள்ள வெண்டும். தெரிஞ்சால் என்ன....? நம்மீது இருக்கின்ற மதிப்பும் மரியாதையும் கொஞ் சம் குறையப் பார்க்கும்," என்று கோவிந் சொல்ல அதை ஆமோதிப்பவன் போன்று,

"அந்த விசயத்தில் நானும் உன்பக்கந்தான் மச்சான். நிலமையைக் கெட்டித்தனமாய்ச் சமாளித்துக்கொண்டு வந்து விட வேண்டும்," என்று கூற, இருவரும் பட்டு வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

இப்பொழுது குசினியிற்குள் தடுக்குப் பாய்களில் இருவ ரும் உட்கார்ந்து கொண்டனர். இருவருக்கும் முன் கோப் பையை வைத்த பட்டுவின் அம்மா, தொடர்ந்து சோற் றைப் போட்டாள். அப்பொழுது அங்கு நின்ற பட்டு,

"திருக்கை மீன் வறையும் வெந்தயக் குழம்பும் குறவைக் குழம்பும் மரக்கறியும் உண்டு. திருக்கை மீன் வறையையும் குறவைக் குழம்பையும் ஒன்றாய்ச் சேர்த்துச் சாப்பிடுவது பொருத்தம் அல்ல. ஆனபடியால் குறவைக் குழம்பைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவதா அல்லது திருக்கைமீன் வறையைச் சாப்பிடுவதா என்பதை நீங்களே முடிவு செய்யவேண்டும்," என்று கேட்டுக் கொண்டாள். புதிய சாப்பாடுகளைச் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் என்பதில் அருள் ஆர்வமாயிருந்தபடியால் உடனே,

"எனக்கு குறவைப் குழம்பு விருப்பம்," என்றான். கோவிந்திற்கும் குறவைக் குழம்பு சாப்பிட்டு நீண்ட நாட்களாகிவிட்ட படியினால்,

"எனக்கும் குறவைக் குழம்பு விருப்பம்" என்றான். கள்ளுக் குடித்த வாய்க்கும் வயிற்றிற்கும் குறவைக் குழம்பு இதமாயிருந்தது. ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது

"அப்பாவிற்கு குறவைக் குழம்பு ரொம்பப் பிடிக்கும். எனக்கும் அம்மாவிற்கும் திருக்கைமீன் வறையும் வெந்தயக் குழம்பும் ரொம்பப் பிடிக்கும். அதனால் இரண்டையும் ஆக்கினோம் என்றாள் பட்டு. அப்பொழுது கையிற் கட்டியி ருந்த மணிக்கூட்டைப் பார்த்த அருள்,

"ஒன்றரை மணி ஆகிவிட்டது. அப்பா இன்னும் சாப்பிடவில்லையா?" என்று மெதுவாய்க் கேட்டான். சிறிய வெட்கத்தோடு,

"அப்பா தோட்டத்திற்குப் போனவர் மிளகாய்க் கன்றுக்கு தண்ணீர் இறைக்க. வரும்போது தம்பித்துரையின்ர வளவிற்குப் போய்விட்டு கொஞ்சம் தாமதித்துத்தான் வருவார். அந்த இடத்தைப்பற்றி உங்கள் நண்பனுக்கு விளங்கும்," என்றதும், இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர், நாங்களும் தம்பித்துரையின் வளவிற்குத்தான் போயிட்டு வந்திருக்கிறோம் என்ற உண்மை யாருக்குத் தெரியப்போகின் றது என்று தங்களுக்குள் கேட்பது போல் அவர்களுடைய சிரிப்பு இருந்தது. இந்த வேளையில் பட்டுவின் அம்மா,

"முசுட்டை இலை கலந்து அவித்த ஒடியற்பிட்டு இருக் கின்றது. உங்களுக்கு விருப்பம் என்றாற் தரலாம்," என்றாள். உடனே அருள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"போடுங்கம்மா நான் எல்லாம் சாப்பிடுவேன்," என்றதும் கோப்பையின் ஒரு பக்கத்தில் கொஞ்சமாய்ப்போட்டு அதன் மீது கொஞ்சக் குறவைக் குழம்பையும் ஊற்றினாள். உடனே அதைச் சாப்பிட்டுப் பார்த்த அருள்,

"ரொம்பப் பசுமையாயும் சுவையாயும் இருக்கு. இன்னும் கொஞ்சம் போடுங்கம்மா," என்றதும் மேலும் கொஞ்சம் போட்டுவிட்டு,

"இந்தப்பிட்டும் குறவைக் குழம்பும் எனது ஆத்துக் காரருக்கு ரொம்பப் பிடிக்கும். அதனால் இடைக்கிடை செய்து கொடுப்பேன். கஸ்டப்பட்டு வேலை செய்து களைத்துப்போய் வரும்போது சில வேளைகளில் இரண்டொரு போத்தல் பாவிச்சிட்டு வருவார். அப்படியான வேளைகளில் ஓடியற் பிட்டையும் குறவைக் குழம்பையும் நன்கு விரும்பிச் சாப்பிடு வார்," என்றதும் இரண்டு பேருக்கும் மறுபடியும் சிரிப்பு வந்தது. 'அதன் காரணமாய்த்தானோ என்னவோ நாங்களும் விரும்பிச் சாப்பிடுகிறோம். அதை வெளியிற் சொல்ல முடியாத நிலமை எங்களுடைய விதி' என்று எண்ணுவது போல் அவர்களுடைய சிரிப்புத் தென்பட்டது. 'பசியும் மப்பும்' சேர்ந்து மூக்குமுட்டச் சாப்பிடப் பண்ணிவிட்டது. இதை உணர்ந்த இருவரும்,

"போதும் அம்மா, கதைச்சுக் கதைச்சு நல்லாய்ச் சாப்பி டப் பண்ணிப் போட்டீங்கள். வயிறு முட்டிவிட்டது," என்று கூறிக்கொண்டு மெதுவாய் எழும்பி கைகளைக் கழுவிக் கொண்டு திரும்பிய வேளை, கை துடைப்பதற்காகத் துவாயை நீட்டிய பட்டு,

"வாழைப்பழம் வாங்கி வைத்திருக்கிறேன். சாப்பிடுகின்றீர் களா?" என்று கேட்டாள். கள்ளுக் குடித்த வயிற்றுக்கு வாழைப்பழம் ஒத்துவராது என்று எண்ணிய கோவிந்,

"இதற்கு மேலும் சாப்பிட்டால் சத்தி வந்தாலும் வந்து விடும். அந்த அளவுக்குச் சாப்பாடு மூக்கு முட்ட இருக்கு," என்று சொல்லி ஒருவாறு நிலமையைச் சமாளித்துக்கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிறையச் சாப்பிட்டதாக்கும் கொஞ்ச நேரமாவது படுத்துத் தூங்க வேண்டும்போல் இருக்கு. அப்ப... நாங்கள் போயிட்டு வாறம் பட்டு, போயிட்டு வாறம் அம்மா," என்று கோவிந் கூற, அதைத் தொடர்ந்து அருள் பட்டுவையும் அம்மாவையும் பார்த்து,

"புதுப்புதுச் சாப்பாடெல்லாம் போட்டுச் சந்தோசப் படுத்தியமைக்காக ரொம்ப நன்றி. உண்மையாகவே எல்லாவற்றையும் இரசித்து உருசித்து சாப்பிட்டேன். இது எனக்கு மறக்கமுடியாத அனுபவங்களில் ஒன்று. அப்ப .... நாங்கள் போயிட்டு வாறம்," என்று கூறி விடை பெற்றுச் சென்றனர்.

வெளியே வந்தபொழுது உள்ளம் மகிழ்ந்த சிரிப்பொன்றை அருளிடம் அவதானித்த கோவிந்,

"ஏதோ சொல்ல விளைகிறாய், அதை என்னென்று சொல்லேன் அருள், அப்பதான் நானும் சேர்ந்து சந்தோசப்படலாம்," என்றான். மேலும் சிறிது ஆழமாய் யோசித்துவிட்டு,

"அது வந்து மச்சான், இரகசியம் ஒன்றும் இல்லை. உனக்கும் தெரிந்திருக்கலாம். அதாவது பேராசிரியர் கலாநிதி சதாசிவம் தனது நூல் ஒன்றிற் சொல்லியிருக்கிறார், நூலின் பெயர் உடனே ஞாபகம் வருகுதில்லை. 'நெடுந்தீவு மக்கள் விருந்தோம்பலிற் சிறந்தவர்கள்' என்று. இப்பொழுது நான் அந்த அனுபவத்தைப் பெற்ற பிற்பாடுதான், அவருடைய கூற்று எவ்வளவு உண்மையானது, அர்த்தம் உள்ளது என்று சிந்திக்கத் தோணுது. அதுதான், ஆழமான சிந்தனையோடு கூடிய ஓர் ஆனந்தம் உள்ளத்தில் எழுந்தது.

இந்த ஊர்ப் பொருளாதாரம் ஒருவகையான வரண்ட அடைபட்ட சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம் என்பது எனக்கு நன்றாய் விளங்குகின்றது. அப்படி இருந்துங் கூட, வளமான பொருளாதாரம் உடைய ஊர் மக்களிடம் இல்லாத சிறந்த விருந்தோம்பற் பழக்கம் இவர்களிடம் இருக்கு தென்றால், அதற்கு மனந்தான் முக்கிய காரணம் என்பது தெளிவாகத் தெரிகின்றது," என்று சொல்லிக்கொண்டு போக, தனது கருத்தையும் இவ் வேளையிற் சொல்ல வேண்டும் என்று எண்ணிய கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அவ்வாறான மனம் எமது மக்களுக்கு வந்ததற்கான காரணம் உண்டு. மட்டமான சுயதேவைப் பூர்த்திப் பொருளா தாரத்தில் திருப்தியோடு, மகிழ்ச்சியோடு வாழ்ந்து பழக்கப் பட்ட படியால், இவர்களுடைய பொருள் ஆசை பேராசை யாக மாறவில்லை. அதாவது, உள்ளதைக் கொண்டு சந்தோ சமாய் வாழும் பண்பு வளர்ந்துவிட்டது. பேராசையின்மை யால், உள்ளதை மற்றையவர்களுக்கும் கொடுத்து மகிழ்ச்சி யோடு உண்ணும் பழக்கம், மனப்பாங்கு இவர்களிடம் அமைந்துவிட்டது," என்று சொன்னதுதான் தாமதம்,

"அச்சொட்டாய்ச் சொன்னாய் மச்சான், நான் என்னத் தைச் சொல்ல நினைத்தேனோ அதை நீ அப்படியே சொல்லி விட்டாய்," என்று சொன்னபொழுது அருளின் முகத்திற் தென்பட்ட மகிழ்ச்சி அவனின் உள்ளக் கிடக்கையை வெளிப் படுத்தியது. அந்த வேளையில் இன்னொரு உண்மையையும் சொல்ல விரும்பிய கோவிந்,

"பேராசை இல்லாத காரணத்தால், நெடுந்தீவு மக்க ளுக்கு ரோசம் கொஞ்சம் ஜாஸ்தி. அதாவது நெடுந்தீவு மக்கள் ரோசக்காரர். வளைந்து, நெளிந்து, குனிந்து கொடுக் கும் பண்பு மிகக் குறைவு. காரியத்தைப் பெறவேண்டும் என்பதற்காக ரோசத்தைச் சிறிதும் விட்டுக் கொடுக்கமாட்டார் கள். வேறு வார்த்தையிற் சொன்னால், பணத்திற்காக மானத்தை விற்று வாழ்க்கை நடத்தும் குணம் அறவே நெடுந்தீவு மக்களிடம் கிடையாது. இதன் பெறுபேறாக சில வேளைகளில் எடுத்த எடுப்பில் கையைக் காலை நீட்டிவிடு வார்கள். விபரம் தெரியாமல் மாட்டுப்பட்டுவர்கள் நல்ல பாடம் படித்த அனுபவங்களும் உண்டு. இதனால் நெடுந்தீவார் முரடர், அடிதடிக்காரர் என்ற பெயரும் நெடுந்தீவு மக்களுக்கு உண்டு," என்றதும் மெதுவான ஒரு புன்சிரிப்பை உதிர்த்த அருள்,

"நீ சொல்லத்தான் கோவிந் எனக்கும் ஞாபகம் வருகிது. அதாவது நெடுந்தீவு மக்கள் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் உடையவர்கள், குறுமுட்டுக் கோபக்காரர் என்பதைப் பற்றி ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன். நீ இப்ப சொன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்பாடுதான் அதற்கான காரணம் புரிகின்றது. நீ சொல்லுகின்ற காரணத்தை நான் ஏற்றுக்கொள்ளுகிறேன்," என்று சொல்லிக் கொண்டிருந்த வேளையில் கோவிந்தின் முகத்தை அவதானித்த அருள் ஏதோ மேலும் சொல்ல விளைகிறான் கோவிந் என்பதை உணர்ந்துகொண்டு,

"ஏதாவது சொல்லப்போறியா கோவிந்," என்று கேட்டதும்,

"ஓம் மச்சான், நெடுந்தீவு மக்கள் கொஞ்சம் முரட்டுச் சுபாவம் கொண்டவர்கள் என்பது ஒரு வரலாற்று விடயமே தவிர, அது தற்காலத்திற்குப் பொருந்தும் என்று நான் கருதவில்லை. வெளியூர்த் தொடர்புகள், போதிய கல்வி வளர்ச்சி என்பன இல்லாதிருந்த பண்டைய காலத்தில் அப்படி யான சுபாவம் இருந்தது என்பது உண்மையாய் இருக்கலாம். ஆனால், தற்போது எமது மக்கள் கொண்டிருக்கும் வெளியூர்த் தொடர்புகள், பெற்றிருக்கும் கல்வி வளர்ச்சி, குடியேற்றங்கள், வெளியூர்த் திருமண உறவுகள் என்பன அந்தச் சுபாவத்தைப் பெருமளவில் மாற்றியுள்ளன என்பது மறுக்கமுடியாத உண்மை. எதிர்காலத்தில் தமது சுபாவத்தை மேலும் மாற்றிக் கொள்வார்கள் என்பது எனது நம்பிக்கை," என்று ஒரு வழிந்த சிரிப்போடு சொல்லிமுடிக்க,

"நீ சொல்வது சரிதான் கோவிந். சூழல் மாறும்பொழுது எல்லாம் மாறத்தான் செய்யும். முந்நூறு வருடங்களுக்கு முன் நெடுந்தீவு மக்கள் வாழ்ந்த சூழல் வேறு. இன்று நிலவும் சூழல் அதிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. எனவே நீ சொல்வது போன்று எதிர்காலத்தில் மாற்றம் ஏற்படத்தான் செய்யும்," என்று சுவாரஸ்யமாய்ப் பேசிக்கொண்டிருந்த வேளையில்,

"மணி அண்ண," என்று கூப்பிடும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தபொழுது குதிரையில் கீசன் வந்துகொண்டி ருந்ததைக் கண்டதும்,

"என்ன கீசன், குதிரைச் சவாரி பண்ணுகிறீங்கள் போலும்," என்றான் கோவிந்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதென்ன மணியண்ண! இது எனது வழமையான சவாரிதானே! உங்களுக்குத் தெரியாத விடயமே, அந்தப் பழைய சவாரி தான். கன நாட்களாக என்னை நீங்கள் பார்க்காத படியினால் சின்ன மாற்றம் தெரியலாம். அது இருக்கட்டுங்க, எப்ப வந்தனீங்கள்? நீங்கள் யாழ்ப்பாணம் படிக்கப் போனபிற்பாடு உங்களைப் பார்ப்பதென்றால் கரடியாரைப் புறக்கண்டது போலிருக்கு," என்று சொல்லிக் கொண்டு போக,

"என்ன சொல்லிறாய் கீசன், நான் மூன்று நான்கு மாதமாய் இங்கதான் நிற்கிறேன். கல்லூரிப் படிப்பு முடிஞ்சிது. பரீட்சைப் பெறுபேற்றை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பெறுபேற்றைப் பொறுத்துத்தான் மிகுதி," என்றான் கோவிந்,

"ஓ! அப்படியே விசயம்! அப்ப... நான் இந்தப் பக்கம் வராதபடியாற்றான் உங்களைப் பார்க்க முடியவில்லை என்று சொல்லுகிறீங்கள். அதுவும் சரிதான். அதுசரி மணியண்ண, யாரு பையன்? புதுமுகமாய்க் கிடக்கு," என்று அருளை ஏற இறங்கப் பார்த்துவிட்டுக் கேட்டான் கீசன்.

"இவர் நான் படிக்கும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் எனது சகபாடி. நெடுந்தீவைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார். நெடுந்தீவுக் குதிரையென்றால் இவருக்கு நன்றாகப் பிடிக்கும். நண்பனுக்கு நல்லதோர் வாய்ப்பு வந்துள்ளது என்று நம்புகிறேன்," என்றதும் கோவிந்தின் எதிர்பார்க்கையைப் புரிந்து கொண்ட கீசன்,

"உங்களுடைய நண்பன் ஒருக்கால் குதிரைச் சவாரி பண்ணிப் பார்க்க விரும்புகிறார் என்று சொல்லுகிறீங்கள். அப்படித்தானே, மணியண்ண?" என்று கேட்டதும்,

"அறிந்தவன் அறிவானாம் அரியாலைப் பனாட்டுத் தட்டை! அப்படிப் போடு கீசன்! பிறகென்ன சவாரி பண்ணினது மாதிரித்தான்," என்று சொன்ன மறுகணமே கீசன் பாய்ந்திறங்கினான். அடுத்த நிமிடம் கோவிந் அருளைப் பார்த்து ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(17) வெட்டாக்காட்டில் ஒரு குதிரைக் கூட்டம்



(18) வெட்டாக்காட்டில் ஒரு சவாரிக் குதிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(19) வெட்டாக்காட்டில் ஒரு கடாவும் ஒரு மறியும்



(20) மணற்கடற்கரை, நடுக்குறிச்சி, நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏறிக்கொள் நண்பா," என்றான். அருளுக்கு ஆசையிருந்த போதும் பயம் அதற்கு மேலால் இருந்தது. சிறிது தயங்கிக் கொண்டு,

"கொஞ்சம் பயமாயிருக்கு மச்சான். இதற்கு முன் சவாரி பண்ணிப் பழக்கம் இல்லை. அதுதான் யோசிக்கிறேன் என்ன செய்வம் என்று," எனக் கூறியதும்

"என்ன அருள் சொல்லுகிறாய்! நெடுந்தீவுக் கடலைக் கடந்து இங்கு வந்துள்ள உனக்கு குதிரைச் சவாரி பண்ணுவதில் என்ன பயம்?

இது உனக்குக் கிடைச்சிருக்கின்ற நல்லதோர் சந்தர்ப்பம் என்று எண்ணிக்கொண்டு ஏறு, நாங்கள் உதவி பண்ணுகிறம்," என்று சொன்னதும் உசார் அடைந்த அருள் ஏறிக்கொண்டான் கீசனதும் கோவிந்தனதும் உதவியுடன். ஆரம்பத்தில் நடந்துசென்ற குதிரை அப்புறம் மெதுவாய் ஓடத்தொடங்கியது. தொடர்ந்து சற்று வேகமாய் ஓடப்பண்ணினான் கீசன். பத்து யார் அளவில் ஓடியதும் 'ஐயோ!' என்னும் சத்தம் கேட்டது. மறுகணம் உருண்டு விழுந்தான் அருள்.

உடனே கோவிந்தும் கீசனும் ஓடிச்சென்று ஆளைத் தூக்கி இருத்திக்கொண்டு,

"உனக்கு ஒன்றும் ஆகவில்லையே! தலைகிலை அடிபடவில்லையே?" என்று சற்று பதட்டத்துடன் கேட்டனர். உடனே ஒன்றும் பேசமுடியாதிருந்த அருள் சில நிமிடங்கள் கழித்து,

"தலை அடிபட்டதாய்த் தெரியவில்லை. வலது கை நல்லாய் உரசிப்பட்டுள்ளது. வேறு பெரிய பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளதாய்த் தெரியவில்லை. எதற்கும் பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்," என்று கூறிக்கொண்டு மெதுவாக எழும்பினான். அப்பொழுது கீசன்,

"நல்ல காலம், பாரதூரமாய் ஒன்றும் நிகழாமல் தப்பி விட்டீர்கள். குதிரையால் விழுபவன் இப்படித் தப்புவது அரிது. உங்களுடைய நல்லகாலம் என்பதைவிட எங்களு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய நல்லகாலம் என்றுதான் சொல்லவேண்டும். விசேடமாய் கோவிந்தினுடைய நல்லகாலம் என்றுதான் சொல்லவேண்டும். நீர் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நீர் ஊருக்குத் திரும்பிப் போவதற்கு முன் எல்லாம் சரியாய்ப் போய்விடும்," என்று கூற அதைக் கேட்ட அருள் மற்றையவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக புன்சிரிப்பை உதிர்த்துக்கொண்டு,

"நான் ஒன்றைப் பற்றியும் கவலைப்படவில்லை. காரணம் குதிரையால் விழுந்தாலும் குதிரைச் சவாரி பண்ணி எனது வாழ்நாளில் ஒரு சாதனை புரிந்திருக்கிறேன் என்ற ஒரு மனத்திருப்தி, சந்தோசம் ஏற்பட்டுள்ளது. விழுவதற்கு முன் ஆகாயத்தில் பறப்பது போன்ற ஓர் உணர்வை அனுபவிக்க முடிந்தது. அந்த உணர்வு நான் சவாரி பண்ணியுள்ளேன் என்பதற்குச் சாட்சி. அது போதும். வாழ்க்கையிற் பெரிய ஓர் அனுபவம், சாதனையும் கூட," என்று கூற, நண்பனின் உணர்வினைப் புரிந்துகொண்ட கோவிந்,

"நீ ஒரு சில விநாடிகள் நல்ல சவாரி பண்ணினாய் அருள். அதைப் பார்த்து நாங்களே சந்தோசப்பட்டோம். அது பெரிய சாதனை. நெடுந்தீவிற் பிறந்து வளர்ந்த எத்தனையோ பேர், அதாவது பெரும்பாலான மக்கள் குதிரைச் சவாரி பண்ணவில்லை. அப்படி இருக்கும்போது, நெடுந்தீவைப் பார்க்க வந்த நீ குதிரைச் சவாரி பண்ணியிருக்கிறாய் என்றால் அது ஒரு சாதனை தான்," என்று கூறினான். இதைக் கேட்டு மேலும் உசாரடைந்த அருள்,

"சரியாய்ச் சொன்னாய் கோவிந், இது எனது வாழ்நாளில் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு மட்டுமல்ல, இதை ஒரு சாதனையாகவும் கருதுகிறேன். இந்த ஊரில் ஏற்கனவே பெற்றுக் கொண்ட ஈச்சம்முள்ளு, தேனீக்கள், சவர்த்தண்ணீர் என்பவற்றுடன் குதிரைச் சவாரியும் சேர்ந்துகொள்ளட்டும். இந்த ஊர் வாழ்க்கையிலும் ஒரு திறிலும் சந்தோசமும் இருக்கத் தான் செய்கின்றன," என்று சொல்லிப் பெருமிதம் பட்டுக் கொண்டான், இதைப் கேட்ட கீசன்,

"இன்னொரு தடவை சவாரி பண்ணிப் பார்க்கப் போறீங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களா?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான். உடனே ஒரு வழிந்த சிரிப்போடு,

"வேண்டாம்! வேண்டாம்!, இவ்வளவு சாதனையும் போதும்," என்று கூற, அவனின் உள்ளக்கிடக்கையைப் புரிந்துகொண்ட கீசன் கோவிந்தைப் பார்த்து,

"அப்ப... போயிட்டு வாறன் மணியண்ண," என்று கூறிவிட்டு பாய்ந்து ஏறினான் குதிரையின் மீது, மறுகணம் புளுதி கிளம்பப் பறந்தது குதிரை. அதைப் பார்த்து நன்கு ரசித்துக்கொண்டு நின்றான் அருள்.

அப்பொழுது 'கிளம்புவமா அருள்,' என்றான் கோவிந், குதிரை போன போக்கைப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்ற அருளுக்கு கோவிந் சொன்னது கேட்கவில்லை. சில விநாடிகள் கழித்து,

"என்னமாதிரி மச்சான் உனது நண்பன் சவாரி பண்ணிக் கொண்டு போகிறான். பார்க்க ஆசையாய்த் தானிருக்கு," என்று சொல்லிக்கொண்டு கோவிந்தைப் பார்த்தான். உடனே கோவிந்,

"நீ சொல்லுவது உண்மைத்தான். அதற்கு நிறையப் பயிற்சி வேண்டும். அது சரி.... இப்ப நாமள் கிளம்புவமா?" என்றான் மறுபடியும். கிளம்பிச் சென்றுவிட்டனர். அன்றைய பொழுது இவ்வாறு கழிந்துவிட்டது.

## அங்கம் - 07

மறுநாட்காலை இருவரும் வெளியே கிளம்பிச் சென்று கொண்டிருந்த பொழுது, எதிரில் தம்பு வந்துகொண்டிருந்தான். அவனின் தலையில் ஒரு கடகம், கடகத்திற்குள் ஒரு புதிய மண்பானை, பானையிற்குள் ஓர் அகப்பை என்பன காணப்பட்டன. அவனோடு அவனுடைய அம்மா, ஒரு தம்பி ஒரு தங்கை. அவர்களுடைய கைகளில் ஓலைப் பைகளும் அவற்றுள் சில பொருட்களும் இருந்தன. அவர்களைப் பார்த்ததும் கோவிந்திற்கு அனுபவம் பேசியது. உடனே,

"எந்தக் கோயிலுக்குப் பொங்கல்? நேத்திக் கடனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றப் போய்க்கொண்டிருக்கிறீங்கள் போலும்?" என்று கேட்டதும், நண்பன் சரியாக ஊகித்துக் கொண்டான் என்பதைப் புரிந்துகொண்டு,

"எப்படி கோவிந், சரியாகக் கண்டுபிடிச்சாய்," என்றான் தம்பு. எனக்கொன்றும் விளங்காது என்பதைப் போல் கேட்கிறான் என்று எண்ணிக்கொண்டு,

"என்ன கேள்வி கேட்கிறாய் மச்சான்! நான் என்ன அமெரிக்காவிலிருந்தே வந்தனான்? இதைப் போல எத்தனை தடவை நான் காவியிருப்பேன். அதை விட்டிட்டு எந்தக் கோயிலுக்குப் போகிறாய் என்று சொல்லு, நானும் அப்புறம் வாறன்," என்று சொன்னதுதான் தாமதம்,

"வேறெங்க போறது? நம்ம நெடுங்குளம் வயிரவருக்குத் தான் பொங்கல்," என்றதும், அதை ஆமோதிப்பவர் போன்று தம்புவின் அம்மா,

"ஓம் மணித்தம்பி, நெடுங்குளம் வயிரவர் கோயிலுக் குத்தான் போகிறம். ஆறுமாதத்திற்குமுன் எனது கடைசி மகனுக்கு பொக்கிளிப்பான் வந்தது.

அப்பொழுது பிள்ளையைக் காப்பாற்றி விடும்படி வயிரவரிடம் வேண்டி நேத்தி வைச்சனான். வைச்ச நேத்திக் கடனை நிறைவேற்றினாற்தானே நம்ம மனத்திற்குத் திருப்தி, கடவுளுக்கும் சந்தோசம்," என்று சொல்லிக்கொண்டு போக, எல்லாவற்றையும் ஆமோதிப்பவன் போன்று,

"எல்லாம் விளங்கிது மாமி. இது நம்ம கிராம மக்களுடைய வழக்கந்தானே! நீங்கள் நடவுங்கோ நான் அப்புறம் வாறன்," என்று கூறினான் கோவிந்.

"தவறாமல் உங்களுடைய நண்பனையும் கூட்டிக் கொண்டு வந்திட வேண்டும் மணித்தம்பி. நாலுபேருக்கு கோயிலடியிற் பொங்கல் கொடுத்தாற்தான் புண்ணியம் கிடைக்குமென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். நீங்களும் அதிற் பங்குபற்ற வேண்டும்," என்று மாமி சற்று அழுத்திக்கூறியதை உணர்ந்து கொண்ட கோவிந்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமி, நீங்கள் பொங்கி முடிப்பதற்குள் நானும் எனது நண்பனும் அங்க நிற்பம். யோசிக்காமற் போங்கோ," என்று கூறிவிட்டு தொடர்ந்து நடந்தான். தனது நண்பனும் உறவின ருமான மருதயினான் வீட்டிற்குச் சென்றதும், கோவிந்தைக் கண்ட மருதயினான்,

"என்ன... மணி! உன்னைக் கண்டு எவ்வளவு காலம்! மகாவித்தியாலயத்தை விட்டு விலகியபின் உன்னைப் பார்ப்பதென்றால் ஆடிக்கொருக்கால் ஆவணிக்கொருக்கால் என்ற காலம்போய், இப்ப கார்காலத்திற்கொருக்கால் இளவேனிற்காலத்திற்கொருக்கால் பின்பனிக் காலத்திற் கொருக்கால் என்று பருவகாலத்திற்கொரு தடவையல்லோ காட்சி கொடுக்கிறாய். இருந்தாலும் எங்களையும் மறந்து விடவில்லை என்பதை நிரூபிப்பது போன்று வீடுதேடி வந்துவிட்டாயே! அதற்கொரு நன்றி சொல்லித்தான் ஆக வேண்டும்," என்று வாஞ்சையோடு கூற,

"என்ன... மருது சொல்லுறீங்க? இதெல்லாம் மறக்கிற விடயமே! உங்களை எல்லாம் எப்படி மறக்கமுடியும்? நானும் இங்க பிறந்து வளர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பவன்தானே! படிக்கிறதென்று யாழ்ப்பாணம் போனால் ஊரைவிட்டுப் போவ தென்றே அர்த்தம்? அல்லது உங்களையெல்லாம் மறந்து விட்டதென்றே அர்த்தம்? அதை விடுங்கோ மருது.

நீங்களெல்லாம் எப்படி இருக்கிறீங்கள்? அக்கா எப்படி இருக்கிறா? பாட்டி எப்படி இருக்கிறா?" என்று கேட்க, கோவிந் தின் அன்பையும் அக்கறையையும் புரிந்து கொண்ட மருது,

"எல்லோரும் ரொம்ப ரொம்ப நல்லாயிருக்கிறாங்க, எந்தக் குறையுமில்லை. வீட்டுக்குள்ள வாங்கோ அவங்களைப் பார்த்துப் பேசலாம்," என்று கூறி இருவரையும் வீட்டினுள் அழைத்துச் சென்றான். கோவிந்தைப் பார்த்த பாட்டி,

" மணிக்குட்டி! எப்படா வந்தனீ? உன்னைப் பார்த்து எவ்வளவு காலம்? இருந்தும் இந்தக் கிழவியைப் பார்க்க வந்திட்டியே! மறக்காமல்!" என்று அன்பு ததும்பச் சொல்லிக் கொண்டு கட்டித் தழுவி தனது பொக்குவாயால் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னத்திலும் முத்தமிட்ட பின் தொடர்ந்து,

"காலையென்றுமில்லாமல் மத்தியானமென்றுமில்லாமல் இரண்டுங் கெட்டான் நேரத்தில் வந்திருக்கிறீங்க. இருந்து மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுப் போக வேண்டும்," என்று அன்புக் கட்டளை பிறப்பித்த பாட்டி, மகளைப் பார்த்து,

"பிள்ளை, காலமை அவித்த பனங்கிழங்கில எடுத்துக் கொண்டு வந்து குடுங்கோ, அத்தோடு கொஞ்சம் உப்பும் மிளகும் சேர்த்துக் குடுபிள்ளை. அவர்களுக்கு வயிற்றுக் குத்து ஏதும் வராதிருப்பதற்கு. அது சுவையாயும் இருக்கும்," என்று சொன்னதுதான் தாமதம் எல்லாம் ஒரேயடியார் வந்து சேர்ந்தன. மூவரும் இரசித்து ருசித்து சாப்பிட்டுக் கொண்டி ருந்த பொழுது, மாமியின் பொங்கல் ஞாபகத்திற்கு வரவே,

"பாக்கியம் மாமி நம்ம வயிரவர் கோயிலுக்குப் பொங் கல் செய்யப் போய்க்கொண்டிருக்கிறா. என்னையும் கட்டா யம் வரச்சொல்லிப் போட்டு போறா. சரியில்லை, கட்டாயம் போகவேண்டும். நேரமாகிது மருது, நீயும் வாவேன் எல்லோரு மாய்ப் போய் சந்தோசமாய்ப் பொங்கல் சாப்பிட்டு வரலாம். அவர்களுக்கும் நாமெல்லோரும் போய்ச் சாப்பிடுவது மனத்திருப்தியைக் கொடுக்கும்," என்று கோவிந் சொன்னதும்,

"அப்படியயே விசயம்! பொங்கல் சாப்பிடுவதென்றால் எனக்கும் விருப்பந்தான். அப்ப கிளம்புவம்," என்று கூற மூவரும் எழுந்து பாட்டியிடமும் அக்காவிடமும் அன்பு விடை பெற்றுக்கொண்டு சென்றனர்.

நல்ல நேரம், பொங்கல் முடிந்து சாமிக்குப் படையல் நடந்து கொண்டிருந்தது. தேவாரம் புராணம் பாடி படையல் கலைக்கப்பட்ட பிற்பாடு, எல்லோருக்கும் வடலிப்பனை ஓலையில் செய்த தட்டுவத்தில் பொங்கல், வாழைப்பழம், வடை, தேங்காய்ச் சொட்டு வைத்து பரிமாறப்பட்டது. இதை இரசித்து ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்த அருள் ஏதோ வெளித்தவன் போன்று,

"பங்குனி மாத வெயிலில் ஆலமரத்து நிழலில் பலர் அமர்ந்து கொண்டு வடலிப்பனை பச்சை ஓலையில் செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(11) நெடுங்குளம், நெடுந்தீவு மேற்கு



(12) ஈச்சம்பற்றை, பற்றைக்காடு, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(9) நெடுங்குளம் வயிரவர் கோயில்.



(10) நெடுங்குளம் வயிரவர் கோயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டுவத்தில் இட்ட சுடுபொங்கலுடன், வடையும் வாழைப்பழமும் தேங்காய்ச் சொட்டும் ஒன்று சேர்ந்திருக்க, அதிலிருந்து வரும் வாசனையுடன் உண்ணும்போது ஏற்படும் இன்பத்தை எப்படி அழைப்பது? எப்படி வர்ணிப்பது? எனக்குப் புரியவில்லையே! ஆண்டவனின் படைப்பில் எத்தனை அற்புதம்!'' என்று சொன்னதும்,

“அப்படிப் போடு தம்பி! அச்சொட்டாய்ச் சொன்னாய். ஏதோ சொல்லுவமென்று எனது மனமும் ஏவியது. அதற்கு முன் நீர் அழகாகவும் அற்புதமாயும் சொல்லிவிட்டீர்,” என்று மருது சொல்லி வாய் மூடுவதற்குள்,

“இதுதான் அருள் எனக்கு உன்னில பிடிச்ச விடயம். ஒவ்வொன்றையும் இந்த ஊரிற்பிறந்து வளர்ந்த எங்களைவிட ஆழமாக ரசித்து அனுபவிக்கிறாயே! இதற்கு ஈடிணை உனக்கு நீயேதான்,'' என்றான் கோவிந்,

இவற்றையெல்லாம் நன்கு அவதானித்துக் கொண்டிருந்த ஒரு பெரியவர்,

“தம்பி எந்த ஊர்?” என்று கேட்கவே,

“இவரது ஊர் வயாவிளான். இவர் எனது நண்பன். சகபாடியும்கூட. நெடுந்தீவைப் பார்க்க வந்துள்ளார்,”

என்று கூறிய கோவிந் தொடர்ந்து பெரியவரை அருளுக்கு அறிமுகப்படுத்துபவர் போன்று,

“இவருடைய பெயர் நடுவிலார். எங்களுடைய ஊரில் ஒவ்வொருவரையும் பட்டம் வைத்து அழைப்பது வழக்கம். அதன்படி இவரை புழுகுநடுவிலார் என்று அழைப்போம். எந்த விசயத்தையும் கொஞ்சம் ஓவராய்ச் சொல்லுவார். ஆனால், அதனால் யாருக்கும் கெடுதல் ஏற்படுவதில்லை,''

என்றதும், அருளின் கவனம் பெரியவர் பக்கம் திரும்பியது. எழுபத்தைந்து அல்லது எண்பது வயது மதிக்கத்தக்க நல்லதோர் அனுபவசாலி போல் அவருடைய தோற்றம் அருளுக்குப் பட்டது. நெடுந்தீவைப் பற்றிய நல்ல பல விசயங்களை அவரிடமிருந்து அறிந்து கொள்ள முடியும். என்று அருளின் மனம் சொல்லவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரியவர், உங்களைப் பாாக்கும்போது நீங்கள் நல்ல வர் மட்டுமல்ல அனுபவசாலியாயும் இருப்பீர்கள் என்பது திண்ணம். இந்தத் தீவின் பண்டைய வரலாறு சம்பந்தமாய் உங்களுக்குத் தெரிந்த அளவிற் சொல்லமுடியுமா?"

என்ற கேள்வியை அருள் போட்டான். புழுகுநடுவிலாா் உடனே ஒரு புன்சிரிப்பை தனது பொக்குவாயில் வரவழைத்துக் கொண்டு,

"தம்பி உங்களுடைய கேள்வி நல்ல கேள்விதான். ஆனால், அதற்கு நிறைவான பதில் என்னாற் சொல்ல முடியாது. இருந்த போதும் எனக்குத் தெரிந்த அளவிற் சொல்லுகிறேன் கவனமாய்க் கேள் தம்பி,"

என்று ஆரம்பித்தவர் தொடர்ந்து,

" இத்தீவிற்கு எப்பொழுது மக்கள் இந்தியாவிலிருந்து வரத்தொடங்கினார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். அதாவது, இலங்கைத் தீவின் வடக்கிலுள்ள ஊர்களுக்கு, சிறப்பாக யாழ்.தீபகற்பம், மன்னாா்ப் பகுதிகளுக்கு, மக்கள் வரத்தொடங்கிய காலத்திலிருந்தே இத்தீவிற்கும் வந்திருப்பார்கள். காரணம், இத்தீவு இந்தியாவிற்கு மிக அருகாமையில் அமைந்துள்ளது.அத்தோடு, பண்டைக் காலத்தில், அதாவது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் காடுக ளும் புற்தரைகளும் கொண்ட பசுமை நிறைந்த பூமி யாய்த்தானிருந்தது. வேறு வார்த்தையிற் சொன்னால் பசுந் தீவாகத்தானிருந்தது. அதாவது மக்கள் குடியேறி வாழக்கூடிய இயற்கை வளத்தைக் கொண்டிருந்தது எனலாம். இங்கிருந்த மரம், செடிகொடி, புல் பூண்டு, மூலிகைகள் எண்ணிலடங்கா. அதனாலோ என்னவோ இத்தீவு அனுமான் மந்திரமலையைத் தூக்கிச் சென்றபொழுது அதிலிருந்து உடைந்து விழுந்த துண்டினால் உருவாகியது என்று சொல்லப்படுகின்றது.

எது எப்படியிருந்த போதும் இத்தீவு எமது முக்கிய உணவான நெற்செய்கைக்கு வேண்டிய நிலவளம் நீர்வளத் தைப் போதிய அளவில் கொண்டிருக்கவில்லை என்பதை ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். அதேவேளை சிறுதானி யச் செய்கைக்கும் ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ப்பிற்கும் உகந்த பூமியாயிருந்தது. அந்த வகையிற்தான், ஒல்லாந்தர் குதிரைகளைக் கொண்டுவந்து இங்கு வளர்த்தனர். தற்பொழுது அந்த வளமும் அழிந்துபோய்விட்டது என்பது கவலைக்குரிய விடயம். இதன் எதிர்விளைவுதான் எமது மக்களின் வன்னிநோக்கிய குடிபெயர்வு. உணவு அளிக்கவியலாத பூமியில் எப்படி மக்கள் வாழமுடியும்? சரி அது ஒருபுறம் இருக்கட்டும்

தற்பொழுது இங்கு வாழும் மக்கள் இராமனாத முதலி, தனிநாயக முதலி, கந்தப்பு முதலி, தாமனா முதலி என்று பத்து முதலிமாரின் தலைமையில் வந்து குடியேறியவர்களின் பிற்சந்ததி என்று சொல்லப்படுகின்றனர்.

இவர்கள் இந்தியாவில் அதாவது தமிழ் நாட்டில் பொன்னாபுரி என்னும் ஊரிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களாய் கருதப்படுகின்றனர். வேறு இடங்களில் இருந்தும் சிறு பகுதியினர் வந்திருக்கலாம். எனினும், பெரும்பாலான மக்கள் பொன்னாபுரி என்னும் ஊரிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்றே சொல்லப்படுகின்றது. இவர்கள் எந்த நூற்றாண்டில் வர ஆரம்பித்தார்கள், தொடர்ந்து எவ்வளவு காலம் குடியேறினார்கள் என்பதுபற்றி எனக்குச் சரியாகத் தெரியாது. ஆனால், முதலில் இத்தீவிற்கு வந்தவர்கள்தான் பின் மற்றைய தீவுகளுக்குச் சென்று குடியேறினார்கள் என்று சொல்லப்படுவது உண்மையாயிருக்கலாம். காரணம், இந்தீவுதான் இந்தியாவிற்கு மிக நெருக்கமாய் அமைந்துள்ளது.

வரலாற்றுச் சின்னங்களாக வெடியரசன் கோட்டையும் மீகாமன் கோட்டையும் உள்ளன. அத்தோடு நீர்த்தேக்கங்களும் காணப்படுகின்றன. இந்தக் கோட்டைகள் எந்த நூற்றாண்டில் கட்டப்பட்டன? இவற்றைப் பயன்படுத்தி எத்தனை சிற்றரசர்கள் நிர்வாகம் செய்தார்கள்? இந்த நீர்த்தேக்கங்கள் எந்த நூற்றாண்டில் வெட்டப்பட்டன? இவற்றை யார் வெட்டிவித்தான்? ஆகிய கேள்விகளுக்கு என்னிடம் பதில் இல்லை, மன்னிக்க வேண்டும்!

தமிழ்நாட்டில் மன்னர்களும் குறுநில மன்னர்களும் முதலிமாரும் நூற்றுக்கணக்கில் கோயில்களை நிர்மாணித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளார்கள். அதுபோன்று எந்தவொரு கோயிலும் அரசர்க ளாலோ, சிற்றரசர்களாலோ, அன்றி முதலிமாராலோ இங்கு நிறுவப்பட்டுள்ளதாய் நான் அறியவில்லை. இங்கு உள்ள சைவக் கோயில்களில் கரமத்தைக் கந்தசுவாமி கோயில்தான் முதன் முதலில் நிர்மாணிக்கப்பட்டு மகோற்சவம் நடைபெற்ற கோயிலென்று நான் அறிந்துள்ளேன். மேலும் இங்கு காணப்ப டும் நெழுவினிப் பிள்ளையார் கோயில், உயரப்புலம் ஐயனார் கோயில், கிழக்கூர் கந்தசுவாமி கோயில், ஆலமாவனப் பிள்ளையார்கோயில், நடுக்குறிச்சிப் பிள்ளையார் கோயில் எல்லாம் சாதாரண மக்களுடைய முயற்சியால் கட்டப்பட்டன என்பதுதான் நான் அறிந்த உண்மை.

எனினும், இராமேஸ்வரம் சிவன் ஆலயத்திற்கு அபிஷே கத்திற்காக இத்தீவிலிருந்து பால், தயிர், நெய், பூக்கள் கொண்டு செல்லப்பட்தாய் அறிகின்றோம். அதனால் இத்தீவை இராமேஸ்வர மக்கள் பால்த்தீவு என்று அழைத் தனர் என்றும் சொல்லப்படுகின்றது. அத்தோடு மாவட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கும் இதே அபிஷேகத் திரவியங்கள் கொண்டு செல்லப்பட்டதாயும் அறிகிறோம். இவற்றில் நிறை யவே உண்மைகள் இருக்கலாம். காரணம் அன்று இப்பூமி பசுமை நிறைந்த புற்தரைகளையும் பசுமையான காடுகளை யும் கொண்டடிருந்தது. அதனால் அன்றய பசுக்கள் உணவுப் பஞ்சமின்றி செழுமையோடு வாழ்ந்து நிறையவே பால் கொடுத்தன என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், இன்று நிலமை தலைகீழ்.

அப்புறம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் வந்த பிற்பாடு இலங்கைத் தீவில் ஏற்பட்ட மாற்றங்களை நீங்கள் பாடசாலைக் கல்வி மூலம் என்னைவிட நன்கு அறிந்திருப்பீர்கள். ஆகையினால், அவற்றைபற்றி எல்லாம் நான் சொல்லவேண்டி அவசியமில்லை," என்று சொல்லி முடிக்க,

"இவ்வளவும் போதும் பெரியவர். உங்களுக்குத் தெரிந்த வற்றை மிகத் தெளிவாகச் சொன்னீர்கள், மிக்க நன்றி. இந்த வாய்ப்பைக் கொடுத்த வைரவப் பெருமானுக்கும் நன்றி சொல்ல வேண்டும்," என்று கூறிய அருள் தொடர்ந்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வைரப்பெருமான் மிகவும் அருள் கொண்ட தெய் வமாக இருக்க வேண்டும். நான் இப்படி சொல்வதன் காரணம், இந்த ஆலமரத்தைப் பாருங்கோ! என்ன அற்புத மாய் வளர்ந்து நிற்கிறதென்று. ஆலமரமொன்று இப்படி வளர்ந்து நிற்பதை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. இந்த ஆலமரம் மிகப்பெரிய குடில் போன்ற அமைப்பில் வளர்ந்துள்ளது. நான்கு பக்கமும் தனது மிகப்பெரிய கிளை களைப் பரப்பி நிற்கின்றபோதும் விழுதுகள் போடவில்லை, பார்த்தீர்களா? இதுதான் இந்த வயிரவரின் அற்புதம். இதன் அடிமரமே அத்தனை கிளைகளையும் தாங்கி நிற்கின்றது. அப்படியிருந் தும் அத்தனை சூறாவளிகளுக்கும் தாக்குப் பிடித்து நிற்கிறதென்றால், சாதாரண ஆலமரத்தால் முடியாது. இதை நாங்கள் வைரவப் பெருமானுடைய அற்புதமாய்த்தான் கருத வேண்டியுள்ளது. அதனாற்தான் விழுதுகளின்றி இப்படி நிமிர்ந்து நிற்கின்றது. விழுதுகள் போட்டிருந்தால் இவ்வளவு நிலப்பரப்பு எமது பாவனைக்குக் கிடைத்திருக்குமா? எண்ணிப் பாருங் கள்! உண்மை புலப்படும். இறைவனின் அற்புதங்களில் இதுவும் ஒன்று,"

என்று சொல்லி முடிக்க, இதைக் கேட்டுக்கொண்டு நின்ற பெரிய வரும் கோவிந்தும் மருதுவும் வாயிற் கையை வைத்தனர். மறுகணம் பெரியவர் ஆச்சரியத்தோடு,

"தம்பி, என்னத்தைக் கடைசியாக நான் உங்களுக்குச் சொல்லவேண்டும் என நினைத்தேனோ, அதை நீங்கள் அப்படியே, இல்லை! இல்லை! அதற்கும் மேலாற் சொல்லி மிகப்பெரிய உண்மை ஒன்றை வெளிப்படுத்தியுள்ளீர்களே! உங்க ளுடைய அவதானிப்பை, கிரகிப்பை, வெளிப்படுத்தலை என் னென்று சொல்வது! இது உங்களிடமுள்ள மிகப்பெரிய திறன். நீங்கள் எதிர்காலத்தில் மிகப்பெரிய ஒரு மனிதனாய் வருவீர்கள். அப்பொழுது இந்தக் கிழவனையும் நினைத்துப் பாருங்கோ,"

என்று மகிழச்சி பொங்கச் சொன்னார். இதைக் கேட்டுக்கொண்டு நின்ற மருது அருளைப் பார்த்து,

"நீங்கள் இந்த ஊருக்கு வந்ததையிட்டும் நான் உங்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைச் சந்தித்ததையிட்டும் உண்மையாகவே பெருமைப்ப டுகிறேன். காரணம், ஒருவர் பிற ஊருக்குப் போனால் அங் குள்ள குற்றங்குறைகளைக் கண்டு, அதைப் பெரிதுபடுத்தி, கிண்டல் பண்ணிற இன்றைய உலகில், உம்மைப்போன்ற பெரிய உள்ளம் படைத்தவர்கள் இருப்பது அரிதிலுமரிது. பெரியவர் சொன்னது போன்று நீர் எதிர்காலத்தில் நிச்சயம் ஒரு பெரிய மனிதனாய் ஆகுவீர்,''

என்று அழுத்திச் சொன்னான். இவ்வேளையில் இவற்றையெல்லாம் கேட்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிநின்ற கோவிந்,

"டேய் மச்சான், உன்னைப் போன்ற பரந்த, பெருந் தன்மை கொண்ட உள்ளம் படைத்த ஒருவனை நண்பனாகப் பெற்றுள்ளதையிட்டு உண்மையிலேயே பெருமைப் படுகி றேன். அத்தோடு மகிழ்ச்சியும் அடைகிறேன்,'' என்று கூறிய துடன் நின்றுவிடாது, கைகுலுக்கி முதுகிற் தட்டி தனது மனவெழுச்சியை வெளிப்படுத்தினான்.

மூவரினதும் மனவெழுச்சியின் அர்த்தத்தைப் புரிந்து கொண்ட அருள் சிறிய புன்சிரிப்புடன்,

"யாழ்.குடாநாட்டு மக்கள் மத்தியில் தீவுப்பகுதி மக் களை ஏதோவொரு வகையிற் குறைந்தவர்கள் என்று கருதும் ஒருவகை மனப்பான்மை இருக்கின்றது என்பது உண்மை தான். இதற்கான அடிப்படைக் காரணம் தீவுப்பகுதி மக்களிட மிருக்கும் குறை அல்ல, அவர்களிடம் எந்தக் குறையு மில்லை. மறுக்க முடியாத ஓர் உண்மை என்னவென்றால், ஒட்டு மொத்தத் தமிழனுக்கும் இருக்கின்ற குறைபாடு: 'மற்றை யவர்களைச் சமமாக மதிக்கப்படாது'

எனும் மனப்பான்மை. இந்த மனப்பான்மை தீவுப்பகுதி மக்களுக் கும் உண்டு. இதுதான் தமிழனின் அழிவிற்கு வித்தாக அமையும் என்பதில் எந்தச் சந்தேகமுமில்லை.

இந்த மனப்பான்மையின் அடிப்படையில் நெடுந்தீவையும் நெடுந்தீவு மக்களையும் மேலும் குறைவாக எண்ணுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அந்த எண்ணம் எவ்வளவு தப்பானது என்று இங்கு வந்து பார்த்த பிற்பாடு எனக்குப் புரிகின்றது. என்போன்றவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சமூகத்தில் பலர் இருக்கிறார்கள். அவர்கள் மூலம் இந்தத் தப்பான எண்ணம் அழிந்துபோக வழிபிறக்கும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அதுவரை பொறுமையாய் இருங்கோ!" என்று சொல்லி முடித்து விட்டு, கோவிந்தைப் பார்த்து

'கிளம்புவமா?'

என்றான். " கிளம்புவம்," என்று கோவிந் கூறிய அந்த வேளையில், மருதுவும் நடுவிலாரும் மகிழ்ச்சியோடு கைகுலுக்கி வழியனுப்பி வைத்தனர்.

## அங்கம் - 08

அருள் தனது ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கான நாள் நெருங்கிக் கொண்டிருக்கின்றது என்பதை உணர்ந்த கோவிந்,

"அருள், நீ இந்த ஊருக்கு வந்தபிற்பாடு பல இடங்களைப் பார்த்துவிட்டாய், பல அம்சங்களை அனுபவித் துவிட்டாய், இருந்தபோதும் இந்த ஊருக்கென்றே உரிய ஒரு விசேட இடத்தை இன்னும் நீ பார்க்கவில்லை, அங்குள்ளதை நீ அனுபவிக்கவும் இல்லை. என்னவென்று உன்னால் ஊகிக்கமுடியுமா?"

என்று சிரித்துக்கொண்டே கேட்டான். இன்னும் பார்க்காத இடமும் அனுபவிக்காத விடயமும் இருக்கு என்று சொன்னதைக் கேட்டபொழுது அருளுக்கு உள்ளூர ஓர் ஆனந்தம், அதேவேளை அதைத் தன்னால் ஊகிக்க முடியவில்லையே என்ற ஓர் ஏக்கம். சில வினாடிகள் மேலும் கீழும் பார்த்து யோசித்துவிட்டு,

"நான் யோசித்துக் கண்டுபிடிப்பதென்பது நடக்கக்கூடிய காரியமல்ல. ஆனபடியால், நேரத்தைப் போக்காட்டாமல் நீயே சொல்லிவிடு கோவிந்,"

என்று இலாவகமாய்க் கேட்டான். அருள் இதை ஊகித்துக் கண்டுபிடிப்பது கஸ்டமான காரியந்தான் என்பதை உணர்ந்துகொண்ட கோவிந், சில விளக்கங்களைக் கொடுத்துப் பார்ப்பம் என்று எண்ணிக்கொண்டு,

"தீவு என்றால் அதன் அர்த்தம் என்ன?" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தீவு என்றால் கடலால் சூழப்பட்டது என்பதாகும்," என்று அருள் பதில் சொன்னதுதான் தாமதம்,

"கடலால் சூழப்பட்டிருந்தால் அங்கு என்ன இருக்கும்?" என்று அடுத்த கேள்வியைப் போட்டான் கோவிந்,

" கடற்கரை இருக்கும்," என்று பட்டென்று சொன்ன அருள், திடீரென்று ஏதோ வெளித்தவன் போன்று

"புரியுது! புரியுது! நீ என்னத்தைச் சொல்லவாறாய் என்பது புரியுது?" என்று ஆனந்தம் பொங்கக் கூறியவன் தொடர்ந்து,

"சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லு பார்ப்பம்," என்றான் கோவிந்.

வாய் நிறையச் சிரித்துக்கொண்டு,

" கடற்கரைக்குச் சென்று அங்கு குளிப்பதைத்தானே சொல்லப்போறாய?"என்றதும்,

சிறிது ஆச்சரியமும் அதேவேளை ஆனந்தமும் அடைந்த கோவிந்,

" அச்சொட்டாய்ச் சொன்னாய் மச்சான்! அதில உனக்கு ஆர்வம் இருக்குத்தானே? " என்று கேட்டதும்,

"நிச்சயமாய்! கட்டாயம் நெடுந்தீவுக் கடலில் குளிக்க வேண்டும். நல்லகாலமாய் நீ உரிய நேரத்தில் ஞாபகப்படுத்தி விட்டாய். இருந்தபோதும் குளிப்பதற்குப் பொருத்தமான இடத்தை இதுவரை நான் பார்க்கவில்லையே!"

என்று கேட்டுவிட்டு கேள்விக்குறியோடு கோவிந்தைப் பார்க்க, நண்பனின் ஆர்வத்தைப் புரிந்து கொண்ட கோவிந்,

"நாளைக்கு அங்குதான் போகப்போறம். இடத்தைப் பார்த்துவிட்டு அப்புறம் சொல்லு குளிப்பதற்குப் பொருத்த மான கடற்கரையா! இல்லையா! என்று. சொல்வதோடு மட்டும் நின்றுவிடப்படாது, நன்றாக ஆசைதீரக் குளித்து, நீந்திச் சுளியோடி உனது வாழ்க்கையில் மறக்கமுடியாத அனுபவமாக அதை ஆக்கிக்கொள்ள வேண்டும். கடலில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணம் செய்த அனுபவத்தைவிடக் கடலில் குளித்து, நீந்தி, களிப்படைவதுதான் பெரும் இன்பகரமான அனுபவ மாய் இருக்கமுடியும். தெரியுந்தானே! வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் எங்கு சென்று இன்பமாய் தமது நாட்களைக் கழிக்கிறார்க ளென்று! முக்கியமாய்க் கடற்கரைகள் (Beach). அப்புறந்தான் மலைநாட்டுப் பகுதி மற்றைய இடங்களென்று சென்று சுற்று லாவைக் கழிப்பார்கள்.

இலங்கையில் மட்டுமல்ல சுற்றுலாவுக்குப் பிரபல்யமான நாடுகளென்று பார்த்தால் அங்கெல்லாம் கடற்கரைகள் தான் முக்கியம் பெறுகின்றன. அந்தக் கண்ணோட்டத்திற் பார்க்கும்பொழுது நெடுந்தீவுக்கு நீ வந்திருப்பதும் ஒரு சுற்றுலாப் பயணம் போன்றதுதானே! சுற்றுலாப் பயணியாய் வந்திருக்கும் உன்னைக் கட்டாயம் நான் எங்களுடைய கடற்கரைக்குக் கூட்டிச்செல்ல வேண்டுமல்லவா!" என்று கூறிய கோவிந் தொடர்ந்து சிறிய புன்சிரிப்புடன்,

"அதுசரி..... கதையுக்கிள்ள கதையாய்க் கேட்கிறேன். உனக்கு நீந்தத் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு ஆர்வத்தோடு பதிலை எதிர்பார்த்தான். கோவிந்தைப் பார்த்துக் குழைந்து கொண்டு,

" பெரிதாய்த் தெரியுமென்றுமில்லை, முற்றாகத் தெரி யாது என்றுமில்லை, ஊருக்குள்ள குளங்கள் கேணிகளில் நீந்தி விளையாடிய அனுபவம் உண்டு. கடலிற் குளித்தோ நீந்தியோ பெற்ற அனுபவமில்லை. அதுதான் கொஞ்சம் யோசிக்கிறேன்,"

என்று இழுத்தான் அருள். இல்லாதது பொல்லாதது எல்லாவற்றை யும் சொல்லி நண்பனின் மனதில் அச்சத்தை ஏற்படுத்தப்படாது என்று எண்ணிய கோவிந்,

" அது போதும்! நானும் பெரிய நீச்சற்காரன் என்று சொல்வதற்கில்லை. உன்னைப்போல கேணிகள், குளங்கள் குண்டுகளில் பெற்ற நீச்சல் அனுபவந்தான். கடலிற் குளிப்ப தற்கு மனதில் துணிவு இருந்தாற்போதும். நாமள் ஆழத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்குப்போக வேண்டுமென்றில்லை. பாதுகாப்பான இடத்துள் நின்று குளிக்கலாம், நீந்தலாம். அது பெரிய விடயமல்ல. அப்ப..... நாளைக்குக் காலை பத்து மணியளவில் வீட்டிலிருந்து புறப்படுவம்," என்று கூறிவிட்டுப் படுக்கைக்குச் சென்றான்.

மறுநாட்காலை பத்து மணியளவில் அம்மா அப்பாவிடம் கூறிவிட்டு இருவரும் திட்டமிட்டபடி மணற்கடற்கரை நோக்கிப் புறப்பட்டனர். குறுக்குப் பாதைக்காக ஓமலாக்காடு ஊடாகச் சென்று வெட்டுக்களியின் மேற்குக் கரையைக் கடந்து, பிரதான வீதியில் ஏறி, அங்கிருந்து கிழக்கு நோக்கி நடந்தனர். வைத்தியசாலையடியை அடைந்ததும் வடக்குப் பக்கமாய்த் திரும்பிச் சென்று மணற்கிணற்றடியை அடைந்தனர். அவ்விடத்தில் நின்றுகொண்டு கடலைக்காட்டிய கோவிந்,

"இதுதான் அருள் நாமள் குளிக்கப்போகும் கடற்கரை, இதை மணற்கடற்கரை என்றும், இங்குள்ள கிணறுகளை மணற்கிணறுகள் என்றும் அழைப்பர்,"

என்று சொல்லிக்கொண்டுபோக குறுக்கிட்ட அருள்,

"இந்தக் கிணறுகளின் தண்ணீர் நல்ல தண்ணீர்தானே?" என்று கேட்டதும்,

" அந்தளவிற்கு நாங்கள் கொடுத்து வைத்தவர்கள் அல்லர். தண்ணீர் சவர்த் தண்ணீர்தான். அதுகும் ஆடி, ஆவணி மாதங்களில் மேலும் சவராகிவிடும். குளிப்பதற்காகத்தான் இவற்றை எமது மக்கள் பாவிக்கின்றனர்,"

என்றதும்,

" அப்படியா! நான் நினைச்சேன் வெல்லையுக் கிணற்றுத் தண்ணீர்போன்று நல்ல தண்ணீராக இருக்குமென்று. பரவாயில்லை குளிக்கிற அளவிற்காவது தண்ணீர் கிடைத்திருக்கே, அதையிட்டாவது திருப்திப்பட்டுக் கொள்ளுங்கள்," என்று ஆறுதல் வார்த்தை சொல்லுபவன் போன்று சொல்லி முடிக்க கடற்கரையை அடைந்தனர். உடனே கோவிந் கிழக்குப் பக்கமாயும் மேற்குப் பக்கமாயும் நீண்டுகிடந்த கடற் கரையைக்காட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த நீண்ட கடற்கரை முக்கியமாக மீன்பிடித்துறை யாகத்தான் பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கடற்கரை ஓரமாய்க் குடியிருப்பவர்கள் பெரும்பாலும் மீனவர்கள்,"

என்று விளக்கம் கொடுத்த வேளையில், கடற்கரையையும் அதன் ஓரமாய் நின்ற பனைமரங்கள், தென்னைமரங்கள் மற்றும் வேம்பு, பூவரசு போன்ற மரங்களையும் பார்த்துவிட்டு கடல் மீது கவனத்தைச் செலுத்தினான் அருள். இதை நன்கு அவதானித்த கோவிந் நண்பன் இயற்கைக் காட்சியை நன்கு ரசிக்கிறான் என்பதைப் புரிந்துகொண்டு எதுகும் பேசாமல் அமைதியாக நின்றான். அப்பொழுது கடல் அமைதி யாக இருந்தது. சிறிய அலைகள் மெதுவாக எழுந்துவந்து கரையை முத்த மிட்டுச் செல்வதுபோல் இடையறாது அடித்துக்கொடிருந்தன. மீன்கொத்திப் பறவைகள் வானில் பறந்துகொண்டிருந்தன. சில வினாடி களின் பின் கோவிந்தைக் கேள்விக்குறியோடு பார்த்த அருள்,

"என்ன கோவிந்! இந்தப் பெரிய ஒரு மணற்கடற்கரையை இத்தீவு கொண்டிருப்பதைப் பாாக்கும்பொழுது, இதைப் பார்க் கும் எவரும் ஆச்சரியப்படாமல் இருக்கமுடியாது. நான் நினைக்கிறேன், இதன் நீளம் ஏறக்குறைய ஒரு மைல் அளவில் இருக்குமென்று. என்ன அற்புதமான கடற்கரை! பார்க்க ஆசையாயும் ஆனந்தமாயும் இருக்கிறது! இத்தீவு பொருளாதார வளம் படைத்த ஒரு இடமாயிருந்தாலோ அல்லது இத்தீவு ஒரு சுற்றுலாத் தளமாயிருந்தாலோ இதன் பெறுமதி வேறு. ஆனால் தற்பொழுது இது ஒரு வறிய தாயின் பிள்ளை போன்று அல்லது அநாதைப் பிள்ளை போன்று காணப்படுகின்றது. சில மனிதர்களுடைய வாழ்க்கை போன்று இக்கடற்கரையின் நிலமையும் கவனிப்பாரற்றுக் கிடக்கிறது போலும். இவ்விடத்தை விருத்தி செய்ய அதாவது நவீனப்படுத்த யார் வரப்போயினம்? இது விடைகாண முடி யாத கேள்வியாகவே இருந்துபோகப் போகின்றது. சரி... நான் மட்டும் கவலைப்பட்டு என்ன நடக்கப் போகிறது! ஆனபடியால் அதை ஒருபக்கம் வைத்துவிட்டு வந்த காரியத் தைப் பற்றி யோசிப்பம்,"

என்று கூறியவன் தொடர்ந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இக்கடலைப் பார்க்கும்பொழுது இதிலிருந்து இடைவிடாது எழுந்துவரும் அலைகள் எம்மை வாவென்று அழைப்பதுபோற் தோணுகின்றது. ஆனபடியால் மேலும் நேரத்தைப் போக்காட்டாமல்,"

என்று சொல்லவந்ததை முடிப்பதற்குள் இருவரும் கடலில் பாய்ந்தனர். மிக்க மகிழ்ச்சியோடு நீந்திக் குளித்துக்கொண்டிருந்த அருளைப் பார்த்து,

"அருள், கழுத்துமட்டுத் தண்ணீருக்கு அப்பாற்போக வேண்டாம். அப்புறம் அலை தூக்கிப்போடும். எட்டாத ஆழத்தில் நீந்துவது கொஞ்சம் ஆபத்தான காரியம். சிலவேளைகளில் நீரோட்டம் இழுத்துச் சென்றுவிடும். அப்படியேதும் நடந்தால் ஆளுக்காள் உதவமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். இது நீரோட்டம் உள்ள கடல். கொஞ்சம் கவனமாய் நீந்தவேண்டும். உன்னைப் பயப்படுத்தி உனது சந்தோசத்தைக் குறைக்க வேண்டுமென்பதற்காக இப்படிச் சொல்லவில்லை. எதற்கும் முன்னெச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். நீ ஒன்றும் தப்பாக நினைக்க வேண்டாம்,"

என்றதும், நண்பனின் ஆலோசனையைக் கேட்ட அருள்,

"கோவிந், நீ சொல்லுவதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கின்றேன். கடலிற் குளிக்கப் போய் கடலிலேயே மாண்டுபோனவர்களுடைய கதைகள் பல உண்டு. ஆனபடியால், உன்னுடைய ஆலோசனை இந்தக் கட்டத்தில் அவசியமானதுதான்,"

என்று கூறியபின், தொடர்ந்து,

"இரண்டு பேரும் ஒருக்கால் போட்டிபோட்டு நீந்திப் பார்ப்பமா?"

என்று கேட்டான் அருள். உடனே கோவிந்,

"நான் ரெடி!" என்றான். போட்டி ஆரம்பமாகியது. ஏறக்குறைய ஐந்து நிமிட நீச்சலின் பின்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(21) மணற்கடற்கரை, நடுக்குறிச்சி, நெடுந்தீவு



(22) மணற்கடற்கரை, நடுக்குறிச்சி, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(23) தாளையடித்துறை, நெடுந்தீவு



(24) தாளையடித்துறை, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இதற்குமேல் இயலாது மச்சான்" என்றான் அருள். "வெற்றி யாருக்கு?" கோவிந் உரத்துக் கேட்டான். "அனுப வத்திற்கு வல்லமை அதிகந்தான்,"

என்று அருள் கூற,

"வாழ்க்கைத் தத்துவமே அதைத்தானே கூறுகின்றது. இருந்தபோதும் தோல்விதான் வாழ்க்கையில் வெற்றிக்கான படிக்கற்கள், அதுதான் அனுபவத்தைக் கொடுக்கிறது,"

என்று சொல்லி கோவிந் நிலமையைச் சமாளித்துக் கொண்டான். மேலும் சில நிமிடங்கள் குளித்தபிற்பாடு இருவரும் மகிழ்ச்சியோடு கரையேறினர். கரையேறியதும்,

"அருள், இந்த உப்புநீர் போவதற்கு மணல் கிணற்றுத் தண்ணீரில் குளிக்கவேண்டும். அல்லாவிட்டால் பிசுபிசுவென்று பெரிய அசௌகரியமாயிருக்கும். வா போய்க் குளிப்பம்,"

என்று கூறிவிட்டு முன் சென்றான் கோவிந். பின் தொடர்ந்தான் அருள். கிணற்றடியைக் கோவிந் அடைந்தபொழுது அதில் ஏற்கனவே குளித்துக்கொண்டு நின்ற ஒரு பெண் கோவிந்தைப் பார்த்து,

" ஊருக்குப் புதிசா?" என்றாள்.

"ஏன் அப்படிக் கேட்கிறீங்கள்?" என்றான்.

" வேறெப்படி கேட்பது? பெண்கள் மட்டும் குளிக்கிற கிணற்றுக்கு ஆண்கள் வந்தால், அதுவும் வயதுக்கு வந்த ஒரு பொண்ணு குளித்துக்கொண்டு நிற்கும்போது ஓர் அழகான வாலிபன் வருவது தப்பில்லையா!" என்றதும்,

"ஆமா, ஆமா, தப்புத்தான். நான் ஊருக்குப் புதிசுதான். சொறி! என்னை மன்னித்துக்கொள்ளுங்கோ,"

என்று கூறிக்கொண்டு போவதற்குத் திரும்பிய வேளையில்,

"பரவாயில்லை, கடற்தண்ணீரோடு நிற்கிறீங்கள். கண்கள் எரியும், பாவம், கிட்டவாங்கோ நாலுவாளி ஊத்திவிடுகிறேன். அப்புறம் போய் ஆண்கள் கிணற்றில் நன்கு குளியுங்கோ," என்றாள் மெதுவான சிரிப்போடு. குறுக்குக் கட்டோடு குளித்துக்கொண்டு நிற்கும் வாலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரி குளிப்பாட்டப் போறாளே என்று எண்ணிய பொழுது உள்ளூர ஒரு கிழுகிழுப்பு, உடனே போய்க் குந்திக்கொண்டான். எண்ணிக கொண்டே ஊற்றியவள் நாலு வாளி முடிந்ததும் நிறுத்திக் கொண்டு,

"உங்களுடைய நண்பனை வரச்சொல்லுங்கோ," என்றாள். உடனே அருள் போய்க் குந்திக்கொண்டான். "இவரும் புதிசா?"

என்றாள்

"ஆம்"

என்று கூறிய கோவிந்,

"நான் பழசு"

என்றான்.

"நீங்கள் பழசா......?"

என்று ஒரு கேலிச்சிரிப்புடன் இழுத்தாள். அவளினுடைய கேள்வியின் சிலேடையைப் புரிந்துகொண்ட கோவிந் உடனே,

" நான் ஊருக்குப் பழசு,"

என்று சற்று அழுத்திச் சொன்னதும், மறுபடியும் சிரித்துக்கொண்டு,

"புரியுது, புரியுது," என்றவள் தொடர்ந்து "உங்கள் நண்பன் ஊருக்குப் புதிசா?" என்றாள்.

"ஆமா" என்றான் கோவிந்.

"அப்ப... ஒரு வாளி கூட ஊத்திவிடுகிறேன்,"

என்று சொல்லியவள் ஐந்து வாளி தண்ணீரையும் ஊற்றிவிட்டு,

"இனி..... நீங்கள் போய் ஆண்கள் குளிக்கிற கிணற்றில் குளியுங்கோ," என்றதும் உடனே கோவிந்தும் அருளும் ஒரே நேரத்தில்,

"ரொம்பத் தாங்ஸ்!" என்று கூறிவிட்டுத் திரும்பிச் சென்றுகொண்டிருந்த வேளையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்ல பொண்ணு மச்சான்," என்றான் அருள்.

"தண்ணீர் ஊற்றியதற்காகச் சொல்லுகிறாயா? அல்லது அவளின்ர கவர்ச்சியில் மயங்கிச் சொல்லுகிறாயா?"

என்று சிறிதாய்க் கிண்டல் பண்ணினான் கோவிந்.

"இரண்டுந்தான், உண்மையாகவே நல்ல அழகான பொண்ணு மச்சான். இன்னுமொரு வாளி தண்ணீர் ஊத்த மாட்டாளா? என்று மனம் ஏங்கியது. அவள் சரியாக அஞ்சோட நிறுத்திப்போட்டாள்,"

என்று தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினான் அருள்.

"குறுக்குக் கட்டோட குளிச்சுக்கொண்டு நிற்கிற குரும்ப முலைக் குமரியளைப் பார்த்தால் நம்ப வயசுக்கு அப்படித்தான் தெரியும். அதற்காகத் திரும்பிக் கிரும்பிப் பார்த்திடாத. தற்சேல் கூச்சலிட்டு ஊரைக் கூட்டினாலும் கூட்டிவிடுவாள்,"

எனச் சிறிது எச்சரிக்குமாப்போற் சொல்லிக்கொண்டு சற்று முன்னுக்கு வேகமாக நடந்தான் கோவிந்.

"நீ சொல்வதும் சரிதான் மச்சான். பெண்களினுடைய மனதை இலகுவில் சரியாக புரிந்துகொள்ள முடியாது," என்று கூறிக்கொண்டு பின் தொடர்ந்தான் அருள். அப்புறம் குளித்து முடியப் பிற்பகல் ஒரு மணி ஆகிவிட்டது. இரண்டு பேருக்கும் நல்ல பசியும் தாகமும். வீடு நோக்கிப் பொடி நடையிற் புறப்பட்டனர். பிரதான வீதியாற் சென்றால் நேரம் எடுக்கும் என்று எண்ணிய கோவிந் வெட்டுக்கழிக்கரை ஓரமாய்ப் போவதற்காக குறுக்குப் பாதையைப் பிடித்தான் கோவிந். அப்பொழுது பாதை யோரமாய் நின்ற ஒரு பனையில் ஒரு சீவற்காரன் இருப்பதைக் கண்டதும் கோவிந்துக்கு தாகம் மேலும் அதிகரித்தது. உடனே மெதுவாய்ச் சென்று, அண்ணார்ந்து பார்த்துக் கொண்டு,

" எடுக்கலாமா இரண்டு?"

என்று கைவிரல்களைக் காட்டிக் கேட்டான்.

"கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கோ,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பதில் வந்தது. கோவிந்துக்கு நல்ல சந்தோசம் கடற்குளிப் பிற்கும் பங்குனி வெயிலுக்கும் இரண்டு போட்டால் உசாராய் வீட்டுக்கு நடந்து போகலாம் என்று. பத்து நிமிடம் கழித்து இறங்கிவந்த சீவகற் காரன் கோவிந்தைப் பார்த்தவுடன் ஆச்சிரியத்தோடு,

"மணித்தம்பி நீங்களா! மேலிருந்து பார்த்தபொழுது நான் உங்களை அடையாளம் கண்டுகொள்ளவில்லை," என்று சொல்லிமுடிப்பதற்குள்,

"நானுந்தான் உங்களை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. பனையிலிருந்த பொழுது வேறுயாரோ மாதி ரித் தெரிந்தது. சரி... அது போகட்டும், எப்படி அந்தோனிப் பிள்ளை அண்ண இருக்கிறீங்கள்?"

என்று வாஞ்சையோடு கேட்டான் கோவிந்.

"நான் நல்லாயிருக்கிறேன் மணித்தம்பி. நீங்கள் எப்படி இருக்கிறீங்கள்? இப்பொழுதும் படித்துக்கொண்டுதான் இருக் கின்றீர்களா? யார் பையன் புதுமுகமாய்க்கிடக்கு? இந்தப் பங்குனிமாத வெயிலில் மத்தியான வேளையில் எங்க குறுக்குப் பாதையால் போகிறீங்கள்?"

என்று சில கேள்விகளை ஒரேயடியாய்ப் போட்டான் அந்தோனிப்பிள்ளை.


"ஆம் அந்தோனிப்பிள்ளை அண்ண, இப்பவும் படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். பையன் என்னோடு யாழ்ப்பாணத் தில் படிக்கின்ற சகபாடி. நமது ஊரைப் பார்க்கவேண்டு மென்று வந்திருக்கிறார். இவர் வயாவிளானைச் சேர்ந்தவர். நம்ம ஊரைப் பார்க்க வந்தவருக்கு எல்லா இடங்களையும் காட்டவேண்டுமல்லே!"

என்றதும்.

"ஆமா, ஆமா, அப்பதானே நம்ம ஊரைப்பற்றியும் நாலு பிற ஊரவர்கள் அறியமுடியும். அறிந்து இன்னும் நாலு ஊரவர்களுக்கு எம்மைப் பற்றிச் சொல்ல முடியும். உண் மையை அறியாத ஒருசிலர் நெடுந்தீவார் அடிதடிக் காரர்க ளென்று கதையைக் கட்டிவிட, அதை நம்பிக்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(25) தாளையடித்துறை, நெடுந்தீவு



(26) மணற் கிணறு, நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(27) மணற்கிணறு, நெடுந்தீவு



(28) தொம்மையப்பர் கோயில், நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற பிற ஊரவர்கள் நம்மைப் பற்றி ஏதோ தப்பாக எண்ணிக்கொண்டு, ஒரு வித்தியாசமான கண்ணோட்டத் துடனல்லோ பார்க்கிறார்கள். ஆனபடியால் இப்படிப் படித்த பிள்ளைகளைக் கூட்டிவந்து எமது சிறப்பம்சங்களையும் உண்மை நிலையையும் தெரியப்படுத்த வேண்டும். என்ன மணித்தம்பி! நான் சொல்லுவது சரிதானே?"

என்றார் அந்தோனிப்பிள்ளை.

"அப்படிப் போடுங்க அந்தோனிப்பிள்ளை அண்ண! உங் களைப் போன்ற நாலு பேர் சொன்னாற்தான் நண்பன் உண்மையைப் புரிந்துகொள்ளுவான். நான் தனிய சொன் னால் அது பெரிதாய் எடுபடாது,"

என்று கோவிந் கூற, அருளைப் பார்த்த அந்தோனிப் பிள்ளை,

"தம்பி, என்னுடைய கள்ளைக் குடித்துப் பார்த்துவிட்டுச் சொல்லும் எங்கட ஊருக் கள்ளு எப்படி இருக்கென்று! ஒழிவு, மறைவு, கலப்படம் ஒன்றும் எங்களுடைய கள்ளில் கிடையாது. பனையிலிருந்து நேர இறக்கிவந்த புத்தம் புதிய அசல். பணத்துக்கு ஆசைப்பட்டு மனச்சாட்சிக்கு, உடல் நலத்துக்கு மாறாக எதையும் செய்யும் பழக்கம் எங்களிடம் கிடையாது. இந்த ஊரில் உங்களுக்குக் கிடைத்த அனுப வங்களை நீங்கள் ஊருக்குப் போனபின் மற்றையவர் களுக் கும் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லு கிறேன். பணத்துக்கு அதிகமாய் ஆசைப்படாமல் உள்ள தோடு சந்தோசமாய் வாழப் பழக்கப்பட்ட மக்கள் நாங்கள். அதற்காக நாங்கள் சோம்பேறிகள் அல்லர். பேராசைகொண்டு நியாயத்துக்குப் புறம்பாகப் பணம் சம்பாதிக்க முற்படமாட் டோம் என்பதுதான் எனது கதையின் அர்த்தம். நீங்கள் படித்தனீங்கள், இப்பொழுதும் படித்துக் கொண்டிருக்கிறீங்கள், உங்களால் எதையும் இலகுவாய்க் கிரகித்துக்கொள்ள முடியும். ஆனபடியால் நான் அதிகம் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை,"

என்று சொல்லி முடித்த வேளையில் ஆளுக்கு இவ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டு பாய்ந்துவிட்டது. இப்போ இருவருக்கும் தாகம் தண்ணி விடாய் எல்லாம் தீர்ந்து நல்ல உசார் வந்துவிட்டது. இதற்கு மேலும் பாவிச்சால் நிலமை பிழைச்சுப் போய்விடும் என்று எண்ணிய கோவிந்,

" இவ்வளவும் போதும் அந்தோனிப்பிள்ளை அண்ண. எங்களுடைய நிலமையை அறிந்து இதைத் தந்ததிற்கு மிக்க நன்றி!"

என்று சொல்லிக்கொண்டு பணத்தை நீட்டினான் கோவிந்.

"மணித்தம்பி, எனக்குப் பணம் வேண்டாம். சந்தோச மாகத் தந்ததென்று வைத்துக்கொள்ளுங்கோ. இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிற்பாடு மறுபடியும் உங்களைச் சந்தித்ததிற் பெரிய மகிழ்ச்சி. உங்களுடைய தோட்டத்தில் தொழிற் செய்த காலத்தில் எவ்வளவு அன்பாதரவாய்ப் பழகினனாங் கள். அதையெல்லாம் மறந்துபோகலாமா! எனது அன்புக்கும் ஓர் அர்த்தம் வேண்டுமல்லவா!"

என்று சொல்லிப் பணத்தை வாங்க அந்தோனிப்பிள்ளை மறுத்த பொழுது,

"அந்தோனிப்பிள்ளை அண்ண, உங்களுடைய அன்பின் ஆழத்தை நான் இப்பொழுதுதான் புரிந்துகொள்ள வேண்டு மென்ற அவசியமில்லை. அது எப்பவோ புரிந்துகொண்ட உண்மை. இப்பொழுது நீங்கள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் மறுபடியும் உங்களுடைய அன்புக்கு அர்த்தம் கொடுத் திருக்கிறீங்கள். அதுவே போதும். நீங்கள் பிள்ளை குட்டிக் காரன், பெரிய குடும்பம். இதெல்லாம் எனக்கு நன்கு தெரியும். என்னைப்போன்று நாலு பேருக்குத் தெரிந்தவன் அறிந்தவன் என்று சும்மா கொடுத்தால், உங்களுடைய வீட்டுச் சீவியம் எப்படிப் போவது? சும்மா கொடுத்தாற்தான் அன்பு உண்டு, அல்லாவிட்டால் அன்பு இல்லை என்று எண்ணுபவன் அல்ல நான். உங்களுடைய அன்புக்குத் தலை வணங்குகிறேன். அதே வேளையிற் பணத்தைப் பிடியுங்கோ,"

என்று சொல்லிக்கொண்டு பணத்தை நிட்டினான் மறுபடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிற பிற ஊரவர்கள் நம்மைப் பற்றி ஏதோ தப்பாக எண்ணிக்கொண்டு, ஒரு வித்தியாசமான கண்ணோட்டத் துடனல்லோ பார்க்கிறார்கள். ஆனபடியால் இப்படிப் படித்த பிள்ளைகளைக் கூட்டிவந்து எமது சிறப்பம்சங்களையும் உண்மை நிலையையும் தெரியப்படுத்த வேண்டும். என்ன மணித்தம்பி! நான் சொல்லுவது சரிதானே?"

என்றார் அந்தோனிப்பிள்ளை.

"அப்படிப் போடுங்க அந்தோனிப்பிள்ளை அண்ண! உங் களைப் போன்ற நாலு பேர் சொன்னாற்தான் நண்பன் உண்மையைப் புரிந்துகொள்ளுவான். நான் தனிய சொன் னால் அது பெரிதாய் எடுபடாது,"

என்று கோவிந் கூற, அருளைப் பார்த்த அந்தோனிப் பிள்ளை,

"தம்பி, என்னுடைய கள்ளைக் குடித்துப் பார்த்துவிட்டுச் சொல்லும் எங்கட ஊருக் கள்ளு எப்படி இருக்கென்று! ஒழிவு, மறைவு, கலப்படம் ஒன்றும் எங்களுடைய கள்ளில் கிடையாது. பனையிலிருந்து நேர இறக்கிவந்த புத்தம் புதிய அசல். பணத்துக்கு ஆசைப்பட்டு மனச்சாட்சிக்கு, உடல் நலத்துக்கு மாறாக எதையும் செய்யும் பழக்கம் எங்களிடம் கிடையாது. இந்த ஊரில் உங்களுக்குக் கிடைத்த அனுப வங்களை நீங்கள் ஊருக்குப் போனபின் மற்றையவர் களுக் கும் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லு கிறேன். பணத்துக்கு அதிகமாய் ஆசைப்படாமல் உள்ள தோடு சந்தோசமாய் வாழப் பழக்கப்பட்ட மக்கள் நாங்கள். அதற்காக நாங்கள் சோம்பேறிகள் அல்லர். பேராசைகொண்டு நியாயத்துக்குப் புறம்பாகப் பணம் சம்பாதிக்க முற்படமாட் டோம் என்பதுதான் எனது கதையின் அர்த்தம். நீங்கள் படித்தனீங்கள், இப்பொழுதும் படித்துக் கொண்டிருக்கிறீங்கள், உங்களால் எதையும் இலகுவாய்க் கிரகித்துக்கொள்ள முடியும். ஆனபடியால் நான் அதிகம் சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை,"

என்று சொல்லி முடித்த வேளையில் ஆளுக்கு இவ்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரண்டு பாய்ந்துவிட்டது. இப்போ இருவருக்கும் தாகம் தண்ணி விடாய் எல்லாம் தீர்ந்து நல்ல உசார் வந்துவிட்டது. இதற்கு மேலும் பாவிச்சால் நிலமை பிழைச்சுப் போய்விடும் என்று எண்ணிய கோவிந்,

" இவ்வளவும் போதும் அந்தோனிப்பிள்ளை அண்ண. எங்களுடைய நிலமையை அறிந்து இதைத் தந்ததிற்கு மிக்க நன்றி!"

என்று சொல்லிக்கொண்டு பணத்தை நீட்டினான் கோவிந்.

"மணித்தம்பி, எனக்குப் பணம் வேண்டாம். சந்தோச மாகத் தந்ததென்று வைத்துக்கொள்ளுங்கோ. இரண்டு மூன்று வருடங்களுக்குப் பிற்பாடு மறுபடியும் உங்களைச் சந்தித்ததிற் பெரிய மகிழ்ச்சி. உங்களுடைய தோட்டத்தில் தொழிற் செய்த காலத்தில் எவ்வளவு அன்பாதரவாய்ப் பழகினனாங் கள். அதையெல்லாம் மறந்துபோகலாமா! எனது அன்புக்கும் ஓர் அர்த்தம் வேண்டுமல்லவா!"

என்று சொல்லிப் பணத்தை வாங்க அந்தோனிப்பிள்ளை மறுத்த பொழுது,

"அந்தோனிப்பிள்ளை அண்ண, உங்களுடைய அன்பின் ஆழத்தை நான் இப்பொழுதுதான் புரிந்துகொள்ள வேண்டு மென்ற அவசியமில்லை. அது எப்பவோ புரிந்துகொண்ட உண்மை. இப்பொழுது நீங்கள் நடந்துகொண்ட விதத்தின் மூலம் மறுபடியும் உங்களுடைய அன்புக்கு அர்த்தம் கொடுத் திருக்கிறீங்கள். அதுவே போதும். நீங்கள் பிள்ளை குட்டிக் காரன், பெரிய குடும்பம். இதெல்லாம் எனக்கு நன்கு தெரியும். என்னைப்போன்று நாலு பேருக்குத் தெரிந்தவன் அறிந்தவன் என்று சும்மா கொடுத்தால், உங்களுடைய வீட்டுச் சீவியம் எப்படிப் போவது? சும்மா கொடுத்தாற்தான் அன்பு உண்டு, அல்லாவிட்டால் அன்பு இல்லை என்று எண்ணுபவன் அல்ல நான். உங்களுடைய அன்புக்குத் தலை வணங்குகிறேன். அதே வேளையிற் பணத்தைப் பிடியுங்கோ,"

என்று சொல்லிக்கொண்டு பணத்தை நிட்டினான் மறுபடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சரி தம்பி, இதற்கு மேலும் நான் பணத்தை வாங்க மறுப்பது மரியாதையல்ல,"

என்று சொல்லிக்கொண்டு பணத்தைப் பெற்றவர்,

" இன்னும் ஒவ்வொன்று எடுக்கப் போறீங்களா?" என்று கேட்டார்.

"வேண்டாம்! வேண்டாம்! எடுத்தது போதும், மிக்க திருப்தியும் சந்தோசமும்கூட. உங்களை எதிர்பாராத விதமாகச் சந்தித்தது, அன்பாதரவாய்க் கதைத்தது மேலும் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அப்ப.... நாங்கள் போயிட்டு வாறம் அந்தோனிப்பிள்ளை அண்ண!"

என்று கூறி விடைபெற, உடனே அருள்,

" உங்களுடைய ஆலோசனைக்கும் ஆதரவுக்கும் மிக்க நன்றி! கடலிற் குளித்துவிட்டுத் தாகத்தோடும் பசியோடும் வந்த எங்களுக்கு நீங்கள் கொடுத்த பானம் பெரிய ஆறுதலையும் மகிழ்ச்சியையும் அளித்துள்ளது. ஒரு தடவை பற்றைக் காட்டுக்கு ஈச்சம்பழம் பிடுங்க போயிட்டு வந்து கொண்டிருந்த பொழுது இதேபோன்ற தாகமும் பசியும் ஏற்பட்டது. அன்று கன்றுக்குட்டிகள் குடிக்கிற சவர்த்தண்ணீரைத் தவிர வேறு எதுகும் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பொருளினுடையதும் பெறுமதி அதன் அவசியத் திலும் அந்த நேரத்திலுந்தான் தங்கியுள்ளது என்ற ஒரு பெரிய உண்மை இன்று எனக்கு அனுபவரீதியாய்க் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைக் கொடுத்த இறைவனுக்கும் நன்றி சொல்லவேண்டும். உங்களுக்கும் ரொம்ப நன்றி! அப்ப.... நாங்கள் போயிட்டு வாறம் அண்ண!"

என்று கூறி விடைபெற இருவரும் வீடு நோக்கிப் புறப்பட்டனர்.

நடந்துகொண்டிருந்த பொழுது எதையோ சொல்லவிளைபவன் போன்று தன்னுள் சிரித்தான் அருள். இதை நன்கு அவதானித்த கோவிந்,

"எதையோ சொல்ல வேண்டுமென்று நினைக்கிறாய் அருள், என்னவென்று சொல்லேன். நானும் கேட்டுச் சந்தோசப்படுகிறேன்," என்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் மச்சான், சொல்லவேண்டுமென்றுதான் நினைக்கிறேன். உனக்கு இந்த ஊரில் இருக்கின்ற மதிப்பு மரியாதையையும், இந்த ஊர் மக்களுடைய பண்பாட்டையும் பார்க்கும் பொழுது, ஏதாவது இந்த ஊரைப் பற்றிச் சொல்ல வேண்டும் போன்றுதான் தோணுது. சுருக்கமாய்ச் சொன்னால் 'மணி ஊர்' என்று சொல்லலாம்." எனக் கூறிவிட்டு மறுபடியும் சிரித்தான். இந்த வேளையில் அருளின் மனோநிலையைப் புரிந்துகொண்ட கோவிந்,

"எப்படியாவது சொல்லு, ஆனால் எனக்காகச் சொல்ல வேண்டாம். உனது அடிமனதிற் பட்டதை வெளிப்படையாய்ச் சொல்வதில் எந்தத் தப்புமில்லை. அதைத்தான் நான் எதிர்பார்ப்பதும்கூட," என்று சொல்லியதைத் தொடர்ந்து பலதையும் பத்தையும் பேசிக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தனர் இருவரும்.

## அங்கம் - 09

அருள் தனது ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கு இன்னும் இரண்டு நாட்களே இருக்கின்றன. பிரயாணத்தின் இறுதி அம்சமாக அருளுக்கு எதைக் காட்டலாம் என்று யோசித்துக்கொண்டிருந்த வேளையில், நெடுந்தீவு மேற்கு நெழுவினிப் பிள்ளையார் கோயில் வருடாந்த மகோற்சவம் ஞாபகத்துக்கு வந்தது. மகோற்சவத் திருவிழாக்கள் ஆரம்பமாவதற்கு இன்னும் பன்னிரெண்டு நாட்கள் காத்திருக்க வேண்டும். அதுவரை நண்பன் இங்கு தங்கியிருக்க முடியாது என்பதைப் புரிந்துகொண்ட கோவிந், இறுதிப் பிரயாண வணக்கத்தைச் செலுத்தும் நோக்குடன் அருளை பிள்ளையார் கோயிலுக்கு அழைத்துச் சென்றான். வழிபாட்டை முடித்துக்கொண்டு அருகாமையில் இருந்த சனசமூக நிலையத்துக்குச் சென்று அங்கு நண்பர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடிக்கொண்டிருந்த வேளையில் எதிர்பாராத விதமாக புழுகுநடுவிலார் அங்கு வந்தார். அவரைக் கண்டதும் கோவிந்திற்கும் அருளுக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. நடுவிலாருக்கு ஓர் உணர்வு உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தது. அதாவது உணவருந்த வந்த விருந்தாளிக்குச் சோறு போட்ட இலையில் கறி போடத் தவறிவிட்டமை போன்ற ஒரு குற்ற உணர்வு. உடனே அருளிடம் சென்ற நடுவிலார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, அன்று நான் நெடுந்தீவைப் பற்றிச் சொன்ன விடயங் களோடு இன்னும் கொஞ்சம் சொல்லக்கிடக்கு, இப்போது அவற்றைச் சொல்லலாமா தம்பி? என்று மெதுவாய்க் கேட்டார். அருளுக்கு வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. புன்சிரிப்புடன்,

"செல்லுங்க பெரியவர், நான் கவனமாய் கேட்கிறேன்," என்றதும், புழுகுநடுவிலார் மிக்க மகிழச்சியோடு,

"எங்கள் ஊரில் உள்ள அதிசிறந்த ஒரு விடயம் கோயில்களில் பலியிடாமை. இதை எண்ணி எனது மனதிற்குள் பெருமைப் பட்டுக்கொண்ட நாட்கள் பல. இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி அநேக ஊர்களில் கோயில்களில் பலியிடும் வழக்கம் இன்று வரை இருக்கும்போது, இத்தீவில் இந்த வழக்கம் பின்பற்றப்படாததன் காரணம் என்ன? என்ற கேள்வி என்னுள் பல தடவைகள் எழுந்துள்ளது.

ஆடு, மாடு, கோழிச்சேவல் போன்ற பிராணிகளை கோயிலுக்கு நேர்ந்துவிடும் வழக்கம் எமது மக்களிடையே உண்டு. ஆனால், அவற்றை அங்கு கொண்டுசென்று பலியிடமாட்டார்கள். பதிலாக விசேடவிழா இடம்பெறும் நாளில் அவற்றினைக் கொண்டு சென்று ஒப்படைப்பர். கோவில் நிர்வாகிகள் அவற்றை ஏலத்தில் கூறி விற்பார்கள். அதன் மூலம் சேரும் பணம் கோயிலுக்குரியது.

இப்பெருங்குணம், காருண்யம் இந்த மக்களுக்கு எப்படி வந்தது? என்று என்னுள் பலதடவை கேட்டிருந்தேன். இங்கு பலியிடக்கூடாது என்று யாரும் சட்டம் வைக்கவில்லை. இது மக்களிடம் தானாகவே வளர்ந்த ஒரு வழக்கம்.

நூறு நூற்றியம்பது வருடங்களுக்கு முன் இத்தீவில் வாழ்ந்த சைவமக்களில் பெரும்பாலானோர் அதாவது 95% மானோர் மாமிசம் உண்பதில்லை. பிற்பட்ட காலத்திற்தான் மாமிசம் உண்ணும் பழக்கம் உருவாகியது. இவற்றிலிருந்து நாம் அறிந்துகொள்ளக் கூடிய, உண்மை என்னவென்றால், இவ்வூர் மக்கள் தூய்மையான சைவர்களாகவும் மற்றைய உயிரினங்கள் மீது அன்பு கொண்ட, காருண்ணியம் படைத்த மனிதர்களாகவும் வாழ்ந்தார்கள் என்பதாகும்.

எந்தவொரு கோயிலிலும், சிறியதாயினும் சரி பெரிய தாயினும் சரி நெய்வேத்தியம் வைக்கும் பொழுது அல்லது படையல் வைக்கும் பொழுது மச்சமோ மாமிசமோ மதுபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னமோ வைக்கும் வழக்கம் இத்தீவில் ஒருபோதும் இருக்க வில்லை. வேறு பல ஊர்களில் உயிர்ப்பலி உட்பட இவ்வா றான படையல்கள் இடம்பெற்றதை, இன்றும் இடம் பெறு வதை நான் அறிவேன். நீரும் அறிந்திருப்பீர் என்று எண்ணு கிறேன் தம்பி,"

என்று சொன்னதும் பெரியவரின் கூற்றை முற்றுமுழுதாய் ஆமோ திப்பவன் போன்று,

"நீங்கள் சொல்வது உண்மைதான் பெரியவர். இறை வனின் சந்நிதியில் உயிர்ப்பலி கொடுப்பதென்பது மனித நேயத்திற்கு ஒவ்வாத ஒரு கொடூரச் செயல்மட்டுமல்ல ஒரு காட்டுமிராண்டித்தனமான காரியமும் கூட. அது மனித நாகரீகத்தையே இழிவுபடுத்தும் செயலாகும்.

ஒரு காலத்தில் சமணசமயமும் புத்தசமயமும் சைவ சமயத்தை வீழ்த்தின. அதற்கு அடிப்படைக் காரணம் இந்த உயிர்ப்பலி. அப்புறம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் அதைத் தூக்கி நிறுத்தியபோதும், இன்றுவரை இந்த உயிர்ப் பலி கைக்கொள்ளப்படுகின்றதைப் பார்க்கும்போது காருண் ணியம் படைத்த எந்த உள்ளத்தாலும் தாங்க முடியாது தான். மனிதப் பண்பாடற்ற இச்செயல் மனித நாகரீகத்திற்கு விழும் சாட்டையடிதான்,"

என்றதும், மகிழ்ச்சி பொங்கப் பெரியவர்.

"அப்படிச் சொல்லு தம்பி! உங்களுடைய படிப்பறிவு நல்லாய் வேலை செய்யுது. இறைவன் எனப்படுவர் யார்? எல்லா உயிரினங்களையும் படைத்தவர். அப்படியாயின் எல்லா உயிரினங்களுக்கும் அவர்தான் அப்பாவும் அம்மாவும். அப்படி இருக்கும்போது இறைவனின் சந்நிதானத்தில் அவைகளைப் பலிகொடுப்பது எப்படிப்பட்ட செயல்? பெற்றோ ரின் முன்னிலையில் பிள்ளைகளைப் பலிகொடுப்பது போன் றது தானே! இதை இறைவன் ஏற்றுக்கொள்வானா?"

என்ற கேள்விகளைப் போட்டதும், பெரியவருடைய கருத்திற்கு மேலும் ஆதரவு கொடுக்கும் முகமாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதில். இன்னொரு வேடிக்கை என்னவென்றால் பெரியவர், இச்செயலை சாதாரண மொக்கன் மோடன் செய் தாற் பரவாயில்லை. அந்தந்தக் கிராமத்திலுள்ள பெரிய வர்களும் அறிவாளிகளும் சேர்ந்தல்லோ செய்கிறார்கள்,"

என்று சொல்லி வாய் மூடுவதற்குள்,

"சரியாய்ச் சொன்னாய் தம்பி, நான் சொல்ல நினைச்சதை அப்படியே சொல்லுறீங்க தம்பி அச்சொட்டாய்,"

என்று கூறித் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார் பெரியவர்

அதற்கான சரியான விளக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிய அருள் தொடர்ந்து,

"படிப்பறிவாலும், பெரியமனிதன் என்ற பட்டத்தினாலும் உள்ளத்தில் அன்பு வளராது பெரியவர். பதிலாக ஆண வந்தான் வளரும். அவன்களுக்குத் தேவையானது அன்பல்ல. அவன்களுக்குத் தேவையானது பொருட் செல்வ மும் சமூகக் கௌரவமும். அவற்றைக் கடவுளி டமிருந்து எப்படி இலகு வாய்ப் பெறமுடியும்? என்பதற்காக அவன்கள் கையாளும் வழிதான் இந்த உயிர்ப்பலி வேள்வி. அந்த உயிர்ப்பலி மூலம் அவன்கள் எதிர்பார்பது கிடைக்கிதோ! இல்லையோ! அவன்கள் அதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பான் கள். அவங்களைத் திருத்தவே முடியாது பெரியவர், அதை விட்டுவிட்டு வேறு ஏதாவது உங்கள் ஊரைப் பற்றிச் சொல் லுங்கோ," என்றதும்,

"ஓம் தம்பி, நாய்வாலை நிமித்த யாராற்தான் முடியும்?"

என்று கூறிய பெரியவர் தொடர்ந்து,

"ஒரு சமூகத்தின் கலை, கலாசாரம் அந்தச் சமூகத்தின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் ஒரு முக்கிய அம்சமாய்க் கருதப்படுகின்றது. அந்த வகையில் நெடுந்தீவு மக்களும் கலை, கலாசரத்தில் குறைந்தவர்கள் அல்லர்.

எனது இளமைக் காலத்தில் இங்கு நொண்டி நாடகம், பூதத்தம்பி நாடகம், காத்தவராயன் கூத்து, வள்ளி திருமணம் போன்ற நாட்டுக் கூத்துக்கள் முழுமையாக மேடையேற்றப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டன. அவற்றையெல்லாம் நான் நேரிற் பார்த்து இரசித்திருக் கிறேன். அப்பொழுது இவற்றில் ஆர்வங்கொண்ட வர்க ளென்று: பரியாரி வேலுப்பிள்ளை, மேசன் சின்னத்துரை கட்டாடி காத்தி, அவருடைய மகன் நன்னித்தம்பி, கரடிகடித்த இராமநாதன், தண்டேல் பசுபதி போன்றோரைச் சொல்லலாம். இவர்கள் நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்தவர்கள். நடுக்குறிச்சி யிலும் நல்ல கலைஞர்கள் இருந்தார்கள். அதில் மரியான், இராயப்பு ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். மற்றையவர் களுடைய பெயர் தற்போது எனக்கு ஞாபகம் வருகுதில்லை. அவர்களும் பல கூத்துக்களை மேடையேற்றியுள்ளார்கள். அவர்களிற் பெரும்பாலோர் கிறீஸ்தவர்கள். கிறீஸ்தவ சமயத்தை முதன்மைப்படுத்துவது போன்று அமைந்த கூத்துக் கள் மேடையேற்றப்பட்டதை நான் நேரிற் பார்த்துள்ளேன்.

பிற்பட்ட காலத்தில் பாடசாலைகளில், குறிப்பாக நெடுந் தீவு மகாவித்தியாலயத்தில், நாடகங்கள் நல்ல முறையிற் பயிற்றுவிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டன. அங்கு ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் வாணி விழாவிலும் கிறீஸ்தவ விழா விலும் நல்ல சிறந்த நாடகங்கள் மேடை யேற்றப் படுவது வழக்கம். மூன்று குறிச்சியிலுமிருந்து மக்கள் சென்று பார்த்து மகிழ்வார்கள்.

சில இளைஞர் அமைப்புக்களும் சிறந்த நாடகங்களை மேடையேற்றி வருகின்றார்கள். 'நீதி எங்கே?' என்ற ஒரு சிறந்த நாடகத்தை நடுக்குறிச்சி இளைஞர்கள் மேடையேற்றி இருந்தார்கள். தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இடம் பெறும் விழாக்களில் பல நாடகங்கள் மேடை யேற்றப்படுவ தும் வழக்கம். பரவலாக இளைஞர் அமைப்புக்கள் பல நாடகங்களை மேடையேற்றுவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மொத்தமாய்ச் சொன்னால், நெடுந்தீவு மக்கள் கலை ஆர்வம் கொண்டவர்களாயும் கலையை வளர்த்தவர்களாயும் கலையை நன்கு அனுபவித்தவர்களாயும் இருந்தனர், இன்றும் இருக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடனக்கலையில் வேல்ஆனந்தன் என்பவர் மிகவும் புகழ்பெற்றவர். அவருடைய புகழ் நெடுந்தீவில் மட்டுமல்ல, யாழ்பாணத்தில் மட்டுமல்ல, இலங்கை அடங்கலாக, இந்தியா ஐரோப்பா, அமெரிக்கா வரை சென்றிருந்தது. மிகச் சிறந்த ஒரு நடனக் கலைஞர். இவர் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்து பயின்றவர். மிகப் பிரபல்யமான நடனசிகாமணி சுப்பையா பிள்ளை ஆசிரியரிடம் இவர் நடனம் பயின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நாடகத்துறையில் சிறந்து விளங்கியவர்களில் க.அமரசிங்கம் அவர்களும் முக்கியமானவர். இவர் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் மாணவனாக இருந்தபொழுது சிறந்த நடிகராகத் திகழ்ந்ததோடு, பிற்பாடு நெடுந்தீவிற்கு வெளியே இலங்கையில் பல்வேறு இடங்களில் பல நடிகர்களை உருவாக்கியிருந்தார் என்பதை நான் நன்கு அறிவேன்.

1960 களில் என்று நினைக்கிறேன், சரியாக ஆண்டு ஞாபகமில்லை. அப்பொழுது நெடுந்தீவு மகாவித்தியால யத்தில் நடைபெற்ற ஒரு விழாவில், அப்போதைய பழைய மாணவர்கள் ஒரு நாடகத்தை மேடையேற்றினார்கள். அதன் பெயர் 'சுதுமலைச் சுப்பன்.' அதை இப்பொழுது நினைக்கும் போதும் என்னுள் சிரித்துக்கொள்வேன். அந்தளவிற்குக் காசியம் நிறைந்த அற்புதமான நாடகம், அதாவது சிறந்த நகைச்சுவை நாடகம், பார்வையாளர் அனைவரையும் விழுந்து விழுந்து சிரிக்க வைத்தது அந்த நாடகம். அக்காலப் பகுதியில் மகாவித்தியாலய அதிபராயிருந்த சி.வி.எட்வேட் நவரத்தினசிங்கமும் அங்கு சங்கீத ஆசிரியராய்க் கடமை யாற்றிய பாலசுந்தரம்பிள்ளையும் (புங்குடுதீவைச் சேர்ந்தவர்) மகாவித்தியாலய மாணவர்களிடையே நாடகம் வளர வழிச மைத்துக் கொடுத்தவர்கள் என்பது வரலாறு சொல்லும் உண்மையாகும். திரு.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள் சங்கீத ஆசிரியராய் இருந்தது மட்டுமல்ல நாடக இயக்குநராயும் இருந்துவந்தார் என்பது எம்மக்கள் யாவரும் அறிந்த உண்மை. அமரசிங்கம் போன்ற பல சிறந்த நடிகர்களை உருவாக்கிய பெருமை திரு.பாலசுந்தரம்பிள்ளை அவர்களையே சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 களின் பின் செல்வி புஸ்பம் இராமநாதன் என்ற ழைக்கப்படும் ஓர் ஆசிரியை ஆங்கில நாடகங்களை மாணவர் களிடையே பழக்கி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் அரங்கேற்றியிருந்தார். அவருடைய வருகைக்குப் பிற்பாடுதான் ஆங்கில நாடகங்களை நெடுந் தீவிற் பார்க்க முடிந்தது.

மேற்சொல்லப்பட்டவர்களைப் போன்று இன்னும் பல கலைஞர்கள் இருந்திருக்கலாம், தற்போதும் இருக்கலாம். எனினும், எனக்குத் தெரிந்தவர்களை, அதிலும் என்மனதில் ஞாபகம் இருப்பவர்களை மட்டுந்தான் இப்போது என்னாற் சொல்ல முடிகின்றது.

இவற்றின் மூலம் நான் சொல்ல வருவதென்னவென்றால் எமது மக்கள் கலைத்துறையில் வல்லவர்களாகவும் அதில் ஆர்வம் கொண்டவர்களாகவும் இருந்தார்கள் என்பதுதான்.

எங்கள் ஊரில் நடிகர்கள் மட்டுமல்ல புலவர்களும் இருக்கின்றார்கள். நெடுந்தொம்பு சுப்பிரமணியம், செவாலியர் அமுது (அமுதுப் புலவர்) ஆகியோரை நெடுந்தீவுப் புலவர்கள் எனலாம். தமிழ் கூறும் நல்லுலகில் இவர்கள் இருவரையும் தரமான புலவர்கள் என்று சொல்வதில் தப்பில்லை என்று நினைக்கிறேன்.

அறிஞர்கள் என்ற வகையில் வண.பிதா தனிநாயகம் அடிகளாரைச் சொல்லலாம். இவர் நெடுந்தீவைச் சேர்ந்தவர். இவர் நெடுந்தீவிற் பிறந்து வளரவில்லையாயினும் இவரது தந்தையார் கணபதிப்பிள்ளை நெடுந்தீவில் பிறந்து வளர்ந்தவர். தாயார் நெடுந்தீவைச் சேர்ந்தவர். தனிநாயகம் என்ற பெயரை இவர் பெற்றுக் கொண்டதே நெடுந்தீவிலிருந்து தான். அதாவது அவரது பரம்பரைக்குரிய பெயர். இவர் தனிநாயகமுதலி பரம்பரையைச் சேர்ந்தவர். இவருடைய பிறப்புப் பெயர் சேவியர். இவர் ஒரு தமிழ் அறிஞர் என்பதும் பல்மொழி வித்தகர் என்பதும் உலகறிந்த உண்மை. உலகத் தமிழ் ஆராட்சி மகாநாட்டின் ஆரம்பகர்த்தா இவரே. தந்தையின் ஊர் தனயனுக்குரியது என்பது உலக மரபு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் வண.பிதா தனிநாயகம் அடிகள் நெடுந்தீ வைச் சேர்ந்தவர் ஆவார்.

கல்விமான்கள் என்ற வரிசையில் பலர் தோன்றியிருந் தாலும், இலங்கை நாடாளுமன்றத்தின் முதலாவது சபாநாய கர் என்ற பெருமையைத் தட்டிக்கொண்ட சேர் வைத்திலிங்கம் துறைச்சாமி அவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர். அவர் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்தவர் அல்ல. அவரது பேரனோ, பூட்டனோ நெடுந்தீவில் பிறந்து வளர்ந்தவர்கள் என்ற வகை யில் சேர்வைத்திலிங்கம் துரைச்சாமி நெடுந்தீவைச் சேர்ந்த வராவார்.

சமயப்பணி ஆற்றியவர்கள் என்ற வரிசையில் திரு.க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் குறிப்பிடத்தக்கவர். இவரை வெள்ளைக் கணபதிப்பிள்ளை என்றும் அழைப்பர். நெடுந்தீவு நெழுவினி சித்திவிநாயகர் ஆலய புனருத்தாரண வேலையை சிரமேற்கொண்டு, சுண்ணாம்பு மணலால் கட்டப்பட்டிருந்த கோயிலை கல்லால் உருவாக்கிய முயற்சியில் இவரின் பங்கு மிகப்பெரியது. இக்கோயிலின் ஆரம்ப கர்த்தாக்களும் இவரது முற்சந்ததியினர் என்றே சொல்லப்படுகின்றது. அடுத்து திரு.ஆறுமுகம் வைத்திலிங்கம் அவர்களைக் குறிப்பிடலாம். இவர் சைவசமயத் தொண்டில் ஈடுபட்டிருந்த ஒரு சிறந்த பக்தன். இவ்வூர் சமயப்பணி வரலாற்றில் இவர் ஞாபகப்படுத் தப்பட வேண்டியவர்.

1955-60 காலப்பகுதியில் நெடுந்தீவு மகாவித்தியால யத்தில் ஸ்ரீகாந்ரூபரன் என்னும் பெயருடைய ஒரு மாணவன் கல்வி கற்றான். அவன் ஓர் உடற்பயிற்சி வல்லுநன். சாதாரண உடற்பயிற்சி மூலம் உடல் நலத்தைப் பேணுவதுடன் மட்டும் அவன் நின்றுவிடவில்லை. உடற்பயிற்சி மூலம் பல சாகசச் செயல்களைச் செய்துகாட்டும் வல்லமை கொண்டிருந்தான்.

பாடசாலையில் மட்டுமல்ல, பாடசாலைக்கு வெளியே நெடுந்தீவு கோயில்களில் நடைபெற்ற மகோற்சவத் திருவிழாக்களில் தனது உடற்பயிற்சிச் சாகசச் செயல்களை அரங்கேற்றிப் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுக்கொண்டான். அதற்கு அப்போதைய அதிபர் C.V. எட்வேட் நவரட்ணசிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதுணையாய் இருந்தார். ஸ்ரீகாந்தரூபனை ஓர் ஆண் அழகன் என்று சொல்லுவதிற்கூடத் தப்பில்லை என்று நான் எண்ணுகிறேன்.

பிற்பாடு ஸ்ரீகாந்தரூபன் நெடுந்தீவிற்கு வெளியிலும் மேலும் லண்டன் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளிலும் தனது வீரதீரச் செயல்களை அரங்கேற்றிப் பலருடையதும் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக்கொண்டான் என்று நான் அறிந்தேன். அவனை ஞாபகப்படுத்துவது இத்தீவிற்குப் பெருமை தேடித்தரும் விடயமாகும் என்பது எனது அபிப்பிராயம்''

என்றதும் அருள் வியப்போடு, "கேட்பதற்கு மிக்க சுவாரஸ்யமாயும், மிக்க மகிழ்ச்சியாயும் இருக்கிறது. இத்தீவிற்குள் இத்தனை சிறப்பம்சங்கள் உண்டா! என்று எண்ணும்போது பரந்த உள்ளம் படைத்த எவரும் மகிழ்ச்சியடையாமல் இருக்க முடியாது," என்று கூறிவிட்டு,

"மேலும் சொல்லுங்கள் பெரியவர்,"

என்றான். கதையைத் தொடர்ந்த பெரியவர்,

"எமது மக்கள் இன, மொழி, மத, ஊர்ப்பற்று நிறைந்தவர்கள். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திற்கூட சைவசமயம் அழிந்துவிடாமல் கட்டிக்காத்த பெருமை எமது மக்களுக்கு உண்டு. தாழ்த்தப்பட்ட சாதி என்ற பெயரால் சைவக் கோயில்களுக்குட் செல்ல அனுமதிக்கப்படாத மக்கள், கிறீஸ்தவ சமயத்தைத் தழுவினார்கள் என்பது உண்மை. அவர்களின் செயல் நியாயமானது என்றுதான் சொல்ல வேண்டும். மற்றையவர்களிற் சிலரைத் தவிர தொண்ணூற்றி ஒன்பது வீதமான மக்கள் சைவ சமயத்தவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.கிறீஸ்தவர் களுக்கும் சைவர்களுக்கும் இடையில் சமய ரீதியில் சிறிய பிணக்குத்தானும் நிகழ்ந்த வரலாறு கிடையாது. பரஸ்பரம் ஒருவருடைய தெய்வத்தை மற்றையவர் மதிக்கும் பண்பு இங்கு உண்டு. அதனால் இரு சமயத்தவரும் அன்னியொன்யமாகவே வாழுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வூரைப் பற்றி மேலும் சொல்லப்போனால், ஓர் ஊரின் வளர்ச்சிக்கும் அதன் இயக்கத்திற்கும் போக்குவரத்து வசதி மிக மிக அவசியம். நெடுந்தீவிற்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கும் இடையிலான தொடர்பு கடற்போக்குவரத்திற் தங்கியிருந்தபடியினால், அதைப்பற்றிச் சொல்லவேண்டியது முக்கியம். பண்டைக்காலத்தில் கட்டுமரமும் பாய்த்தோணியும் (வத்தை) கடற்போக்குவரத்துச் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்டன. இவை பாயின் உதவியுடனேயே இயங்கின. பிரயாணத்திற்கு பொருத்தமான காற்று வீசினாற்தான், அந்தப் பிரயாணங்களை மேற்கொள்ள முடியும். இதனால் அப் போதைய கடற்பிரயாணம் சிரமமும், தாமதமும் நிறைந்த பிரயாணமாய்த் தான் இருந்தது என்பது வெளிப்படையான உண்மை. இதைப் பிரதிபலிப்பது போன்று ஒரு கதை உண்டு. அதாவது:

'மனைவி கற்பம் தரித்திருக்கும் பொழுது, கற்பம் தரித்து ஆறாம் மாதம் நிறைவுபெற கணவன் சரக்கு வாங்க யாழ்ப்பாணம் புறப்பட்டுச் செல்வது வழக்கம். கணவன் சரக்குடன் திரும்பி வரும் பொழுது பிள்ளை தவழுமாம்,' என்று சொன்னதும் விழுந்து விழுந்து சிரித்த அருள் ஒருவாறு நிறுத்திக்கொண்டு,

'எப்படி சரக்கில்லாமல்?' என்று கேட்டு முடிப்பதற்குள் நடுவிலார் தொடர்ந்து,

"அண்டை அயலவர்களின் உதவியுடன் நிலமையைச் சமாளிக்கும் பழக்கம் இந்த ஊருக்குப் புதிய விடயமல்ல தம்பி!" என்றவர். தொடர்ந்து, "இதிலிருந்து அறிந்துகொள்ளும் உண்மை என்னவென்றால், சீரான காற்று அமையாத பட்சத்தில் ஆறுமாதம் சென்றாலும் தோணி நெடுந்தீவிற்குத் திரும்பி வராது" என்பதாகும்.

தோணி வருவதற்கு நுழைவாயிலும் துறைமுகமும் வேண்டும். பண்டைக் காலத்தில் பெரியதுறை முக்கிய நுழைவாயிலாய் அமைந்திருந்தது. அப்புறம் மாவலித்துறை உருவாக்கப்பட்டது. பிற்பட்ட காலத்தில் மாவலித்துறையில் பாலம் போட்டு துறைமுகம் நிர்மாணிக்கப்பட்டது. அதுதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய மாவலித்துறைமுகம். இது ஆங்கிலேயர் ஆட்சியில் அமைக்கப்பட்டதாயிருக்க வேண்டும்.

நெடுந்தீவு மக்களின் பிரயாணத்தைக் கருத்திற்கொண்டு அரசினால் முதன்முதலாக 1937 ஆம் ஆண்டில் சில்வஸ்பிறே (SILVER SPRAY) என்னும் பெயருடைய சிறிய இயந்திரப் படகு நெடுந்தீவிற்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதில் கூடியது நாற்பது பிரயாணிகள்தான் செல்லமுடியும். பிற்பாடு எட்வேட் லோஞ் என்னும் தனியார் இயந்திரப் படகும் சேவையில் ஈடுபட்டது. இதுகும் சில்வஸ்ப்றேயின் அளவை ஒத்ததுதான். இவைகள் இரண்டும் நீண்டகாலம் சேவைபுரிந்தன.

1958 களில் இராஜேஸ்வரி லோஞ் வரும்வரை இவற்றின் சேவை வரலாற்றில் பதியப்பட வேண்டிய அளவிற்கு முக்கி யம் பெற்றிருந்தது. இராஜேஸ்வரி 200 பிரயாணி களுக்கு மேல் செல்லக்கூடிய பெரிய இரட்டை இயந்திரப் படகு. ஆடி, ஆவணி மாதங்களில் கடல்நீர் மட்டம் குறையும் பொழுது, இப்படகு துறைக்கு வருவதற்கு பெரும் சிரமப் பட்டது. இதனாற் சிலவேளைகளில் சிறிய சேதத்திற்கும் உள்ளாக நேரிட்டது. மற்றும் சில வேளைகளில் துறைக்குள் வருவதற்கு முடியவில்லை. அப்பொழுதெல்லாம் சிறிய படகுகள் மூலம் பிரயாணிகள் கரைக்குக் கொண்டுவரப்பட்ட னர். ஊர்காவற்றுறைத் தொகுதிக்கு நாடாளுமன்ற உறுப் பினராக அல்பிரட் தம்பிஐயா அவர்கள் இருந்த காலத் தில், அவரின் முயற்சி யின் பயனாக இராஜேஸ்வரி லோஞ் அரசினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

இயந்திரப் படகுகள் சேவையில் ஈடுபடுத்துவதற்கு முன்பும் பின்பும் தோணிகள் (வத்தைகள்) பொருட்களை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபட்டிருந்தன. அவற்றுட் சில உள்ளூர்வாசிகளுக்கும் சொந்தமாயிருந்தன. அப்பொழுது தோணியின் உரிமையாளர்களாயிருந்தவர்கள்: சங்கிலி விதானை, சேர்மன் கணபதி, கொடுவேலி விதானை, வத்தைக் கார வேலாயுதம், வத்தைக்கார நெருப்புப்பெட்டி ஆகியோர். இதெல்லாம் அவர்களுடைய பட்டப்பெயர்கள். உண்மையான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்கள் எனக்குத் தெரியாது. பட்டப்பெயர் கொண்டு அழைப்பது இவ்வூர் வழக்கம். அதில் குறை நினைப்பதற்கு ஒன்றுமில்லை. இதற்கு முன்பு இருந்தவர்களு டைய விபரங் கள் எனக்குத் தெரியாது.

பிற்காலத்தில் இயந்திரப் படகுகள் பாவனைக்கு வந்ததைத் தொடர்ந்து பாய்த்தோணிகளின் பயன்பாடு முற்றாக அற்றுப்போய்விட்டது,"

என்று பிரயாணத்தைப் பற்றிய தனது அனுபவத்தைக் கூறிமுடித்தார் புழுகுநடுவிலார்.

இவற்றையெல்லாம் மிகவும் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்த அருளுக்கு பெரியவர் மீது ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டதில் வியப்பொன்றுமில்லை. அதனால், மேலும் அவருடன் பேசவேண்டும், மேலும் பல விடையங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமென அவனது மனம் தூண்டியது. அதன் பயனாக,

"இன்னும் சொல்லுங்கள் உங்களுக்கு தெரிந்தவற்றைப் பற்றி,"

என்றான். அருளின் ஆவலைப் புரிந்துகொண்ட பெரியவர் தொடர்ந்து,

"இத்தீவின் மண் உவர்மண்தான் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அதேவேளை, இந்த மண் வீரம் செறிந்த மண் என்றும் சொல்லப்படுகிறது. பல மனோதைரியசாலி களை, எந்த வன்முறைக்கும் அஞ்சாத பராக்கிரமசாலிகளை உருவாக்கிய வரலாறு இம்மண்ணுக்கு உண்டு. இதன் உண்மையை, இதன் வெளிப்பாட்டை நெடுந்தீவு மக்கள் வன்னிப் பிரதேசத்தில் குடியேறிய பொழுது நன்கு காண முடிந்தது.

நெடுந்தீவு மக்கள் வன்னிப் பிரதேசத்தில் வடக்குத் தெற்காய் பரந்தனிலிருந்து செட்டிக்குளம் வரையும், கிழக்கு மேற்காய் பன்குளத்திலிருந்து மன்னார் வரையும் குடியேறி வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் குடியேறிய காலத்தில் அங்கெல்லாம் ஏற்கனவேயிருந்த உள்ளூர்வாசிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்குதல்களுக்கும் துன்புறுத்தல்க ளுக்கும், அச்சுறுத்தல் களுக்கும் முகங்கொடுக்க வேண்டியேற் பட்டது. எல்லாவற் றையும் எதிர்கொண்டு அவற்றையெல்லாம் அடித்துநொறுக்கி தமது இருப்பை நிலைநிறுத்திக் கொண்ட தில் அந்த பரக்கிர மசாலிகள் வகித்த பங்கு மறந்து விடக்கூடிய ஒன்றல்ல. அது நெடுந்தீவ மக்களின் வரலாற்றுப் பதிவுகளில் இடம் பெறவேண்டியது.

அவர்களின் வீரதீரச் செயல்கள் எவரையும் கொடுமைப் படுத்தவோ அன்றி அடிமைப்படுத்தவோ மேற்கொள்ளப்பட்ட தல்ல. மாறாக தாங்கள் எவரினதும் கொடுமைக்கு உட்பட்டு விடக் கூடாது, யாராலும் அடிமைப்படுத்தப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக மட்டும் மேற்கொள்ளப்பட்டது என்பதை அனை வரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அவர்களுடைய வீரதீரச் செயல்களை விரும்பாத சிலர் நெடுந்தீவான் முரடன், அடிதடிக்காரன் என்று பட்டம் சூட்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. உண்மையை உணர்ந்தவர்கள் அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளமாட்டார்கள் என்பது எனது முடிவாகும்"

என்று கூறிமுடிக்க, இவற்றையெல்லாம் நன்கு இரசித்துக்கேட்டுக் கொண்டிருந்த அருள், மேலும் கொஞ்சம் அவற்றைப்பற்றி விளக்கமாய் அறிந்துகொள்ளுவம் என்ற எண்ணத்துடன்,

"பெரியவர், அந்தப் பராக்கிரமசாலிகளின் பெயர்களைச் சொல்லமுடியுமா?"

என்று ஆர்வமுடன் கேட்டான்.

உடனே பெரியவர் வாய்நிறையச் சிரித்துக்கொண்டு,

"அது.... வந்து... தம்பி, அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுவது எனக்குச் சரியாய்ப்படவில்லை. காரணம் அவர்களிற் சிலர் அதை விரும்பாதிருக்கலாம். ஆகையினால் அவர்களுடைய அனுமதியின்றிப் பெயர்களைச் சொல்ல முடியாது, மன்னிக்க வேண்டும்.

பொதுவாக இவ்வூரவர்களின் இரத்தத்தில் வீரம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிவு, ஓர்மம் என்பன இயல்பாகவே கலந்துள்ளன என்பது உண்மை,"

என்றதும், மேலும் பெரியவருக்கு ஊக்கத்தைக் கொடுக்க வேண்டுமென்று எண்ணிக்கொண்டு,

"பெரியவர், 'கோழையாய் இருந்து நூறு வருசம் வாழ் வதைவிட, வீரனாயிருந்து பத்து வருடம் வாழ்வது மேல்' என்று அனுபவசாலிகள் கூறுவார்கள். அதிலும் அர்த்தமிருக் கத்தான் செய்கின்றது," என்று கூறி பெரியவரின் கூற்றுக்கு வலுவூட்டினான்.

## அங்கம் - 10

பெரியவருக்குத் தெரிந்த எல்லாவற்றையும் தானும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன்,

"உங்களுடைய ஊரைப்பற்றி வேறு என்ன சொல்லப் போறிங்கள் பெரியவர்?" என்று கேட்டான்,

கதையைத் தொடர்ந்த பெரியவர்,

"இன்னொரு மனிதாபிமான விடயத்தையும் இவ்வேளை யில் சொல்லிவைக்க விரும்புகிறேன் தம்பி. எம்தமிழ் இனத்திடமும், மற்றைய இனங்களிடம் இருப்பது போன்று, மனித நேயத்திற்கு ஒவ்வாத சில விடயங்கள் இருக்கின்றன என்பது உண்மைதான். அவற்றுள் ஒன்றுதான் விதவைகள் சமூகத்தில் ஒடுக்கப்பட்டமை. அதாவது ஒரு பெண் கண வனை இழந்துவிட்டால் அந்தப்பெண் ஓர் அமங்கலி யாய்க் கருதப்பட்டு ஒடுக்கப்பட்டாள். வயது வேறுபாடின்றி இந்தக் கொடுமை நிகழ்ந்தது. ஒரு வெள்ளைச் சேலையைத் தவிர வேறு எதனையும் அணிய அவள் அனுமதிக்கப் படவில்லை. பதினெட்டு வயதில் கணவனை இழந்தவளுக்கும் அதே கதிதான். மறுமணம் அனுமதிக்கப் படவில்லை. ஏன்? பொட்டுக் கல்யாணம் செய்துவைக்கப்பட்ட சிறுவர் சிறுமி யருக்குக் கூட இந்தக் கொடுமை நேர்ந்தது.

இது மனித நேயத்திற்கு ஒவ்வாத, மனித உணர்வுகளை மதிக்காத, இருதயமற்றுச் செய்த ஒரு கொடூரச் செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு அளிக்கப்பட்ட அடிமை வாழ்வின் உச்சக்கட்டம். அந்தக் கொடுமையை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது,''

என்று சொல்லிக்கொண்டு போக அருள் திடீரென்று

''என்ன பெரியவர்! உங்கள் ஊரைப் பற்றி ஏதோ சொல்லப் போறீங்கள் என்று பார்த்துக்கொண்டிருக்க, நீங்கள் ஏதோ பெண் அடிமை, பெண் கொடுமை என்று பேசிக் கொண்டு போறீங்கள்,''

என்று அலுத்துக்கொண்டான்.

பெடியன் விடயத்திற்கு வருவதற்கு முன் அவசரப்படுகிறான் என்று எண்ணிய பெரியவர் கதையைச் சுருக்கமாய்ச் சொல்லுவம் என்று கருதிக்கொண்டு,

''தம்பி, உங்களுடைய எதிர்பார்க்கை எனக்குப் புரிகின்றது. நான் சொல்லவாறதென்னவென்றால், அந்தக் கொடுமை இத்தீவிலுள்ள பெண்களுக்கு ஏற்படவில்லை என்பதுதான். நாற்பது வயதுக்குள் கணவனை இழந்த எல்லாப் பெண்களும் மறுமணம் செய்து வைக்கப்பட்டார்கள். பிள்ளைகளின் நலன்கருதி மறுமணத்திற்கு விரும்பாத ஒரு சிலரைத் தவிர மற்றைய எல்லா விதவைப் பெண்களும் மறுமணம் செய்து வைக்கப்பட்டார்கள்.

எந்தவொரு விதவைப் பெண்ணும் அமங்கலி என்றோ இனிமேல் வாழத்தகுதி அற்றவளென்றோ ஒதுக்கிவைக்கப்படவில்லை. இதை நான் புகழுக்காகச் சொல்லவில்லை உண்மையைத்தான் சொல்லுகிறேன். எனது அம்மம்மாவின் தங்கைக்கு முதற்பிள்ளை பிறந்தவுடன் கணவன் இறந்துவிட்டான். அவவை இறந்தவரின் ஒன்றுவிட்ட சகோதரன் மறுமணம் செய்தார். எனது அப்பம்மாவிற்கு முதற் குழந்தை வயிற்றில் இருக்கும்பொழுது கணவன் இறந்துவிட்டார். சில வருடங்களின் பின் இன்னொரு மச்சானை அவ மறுமணம் செய்து கொண்டார். பண்டைக்காலத்தில் போதிய நவீன வைத்திய வசதி இன்மையால் ஆண்களும் பெண்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறப்பது சர்வசாதாரண நிகழ்வாய் இருந்தது. அப்பொழு தெல்லாம் எமது ஊரில் அவர்கள் மறுமணம் செய்துகொண் டார்கள். அவர்களெல்லாம் ஓகோவென்று மற்றையவர்களைப் போன்று வாழ்ந்து முடித்தனர்.'' எவரும் அமங்கலி என்றோ, வாழத்தகுதி அற்றவர் என்றோ ஒதுக்கிவைக்கப்படவில்லை,''

என்று சொல்லி முடித்த பெரியவர் தொடர்ந்து,

"இதிலிருந்து எங்களுடைய மக்களைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள் தம்பி?''

என்ற கேள்வியைப் போட்டுவிட்டு அருளை விழித்துப் பார்த்தார். உடனே அருள்,

"உங்களுடைய மக்கள் மனிதாபிமானம் நிறைந்த, மனித உணர்வுகளைப் புரிந்துகொண்டு அதற்கு மதிப்பளித்து வாழ்ந்த உயர் பண்பைக் கொண்டவர்கள் என்று சொல்லுகி றீங்கள் அப்படித்தானே?''

என்றதும்,

"அப்படிப் போடு அருவாளை. இதுதான் தம்பி உம்மிடம் எனக்குப் பிடித்துக்கொண்ட விடயம். இவ்வளவு நேரம் உங்களோடு கதைத்துக் கொண்டிருக்கிறேன் என்றால், என்ன காரணம்? கதையின் அர்த்தத்தைக் கச்சிதமாய்ப் பிடித்துக் கொள்ளும் உமது ஆற்றல்தான் காரணம்,''

என்று சொல்லி ஒரு தூக்கல் தூக்கிவைத்தார் பையனை. பெரியவ ரின் கருத்துக்கு சார்பாக தானும் சிலவற்றைக் கூறவேண்டும் என்று எண்ணிய அருள்,

"நீங்கள் சொல்வது உண்மைதான் பெரியவர். நமது தமிழ்ச் சமூகத்திடம் மனித நேயத்திற்கு ஒவ்வாத பல விடயங்கள் காணப்பட்டன. இன்றும் காணப்படுகின்றன. சீதணக்கொடுமை, சாதிப்பாகுபாட்டுக் கொடுமை என்பன தற்போதும் தலைவிரித்தாடுகின்றன. இவற்றை எல்லாம் பார்க்கும்போது எமது தமிழ் மக்களை திருத்தவே முடியாது போற் தோணுகின்றது,''

என்று கூறியபின் சிறிது யோசித்துவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்களுடைய ஊரின் பண்டைய பொருளாதாரக் கட்ட மைப்பைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோவேன். பெரியவர்,"

என்று கேட்டான். மெதுவாகச் சொண்டுக்குள் சிரித்துக்கொண்டே, எதற்கும் சளைக்காதவர் போன்று,

"நல்ல கேள்வி தம்பி, கேட்கப்பட வேண்டிய கேள்வி தான். என்னதான் இருந்தாலும், எந்தப் பெருமையைப் பேசினாலும், எல்லாவற்றிற்கும் அடிப்படையானது, மனித வாழ்விற்கு அத்தி யாவசியமானது பொருளாதாரம். அதன்மீது கட்டப்படுவது தான் மனிதவாழ்வும் அதற்குள் அடங்கும் கலை, கலாச்சாரம், பண்பாடு, கல்வி முன்னேற்றமெல்லாம். அந்தவகையில் உங்களுடைய கேள்வியைப் பாராட்டுகிறேன். தம்பி, இந்தக் கேள்வி உங்களுடைய அறிவுக்கூர்மையையும் சிந்தனா சக்தியையும் வெளிப்படுத்தி நிற்கின்றது,"

என்று கூறியவர் தொடர்ந்து,

"தம்பி, இத்தீவு சமுத்திரத்தால் சூழப்பட்டிருப்பதனாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து நெடுந்தூரத்தில் அமைந் திருப்பதனாலும் பொருளாதார ரீதியில் தனித்து இயங்க வேண்டிய ஒரு தேவை இருந்தது. பண்டைக்காலத்தில் கடற் போக்குவரத்து வசதிகள் குறைந்து காணப்பட்டன. அன்றைய நாட்களில், ஒரு வருடத்தில் பல மாதங்கள் வெளியூர்த் தொடர்பு அற்றிருந்த நிலமை ஒரு சாதாரண நிகழ்வாகவே இருந்தது.

இதை உணர்ந்துகொண்ட இவ்வூர்மக்கள் சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை அறிந்து அதற்கேற்ப பொருளாதாரக் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அதனால், பல மாதங்கள் வெளியூர்த் தொடர்பு இல்லாத நிலையிலும் இவ்வூர் மக்களால் தனித்து வாழ முடிந்தது.

தேவைகளில் முதன்மையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாய் வரகு, சாமை, மொண்டி ஆகிய சிறுதானியங்கள் பரந்த அளவிலும், நெல் வரையறுக்கப்பட்ட நிலவளம் உள்ள காணிகளிலும், குரக்கன், பனிச்சாமை போன்றவை தோட்டக் காணிகளிலும் செய்கை பண்ணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரக்கறி வகைகள் வீட்டுத் தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்டதுடன், இயற்கை அன்னையின் கொடையிலிருந் தும் பெறப்பட்டன. கூதிர்காலத்தில் இதன் பங்கு முக்கிய இடம் வகித்தது. மீன் இவர்களது உணவில் முக்கிய இடம் பெற்றிருந்தது. இதற்கு ஒருபோதும் இங்கு குறைவு ஏற்பட்ட தில்லை. காரணம் கடல் வளம். சிறுதானியங்களுக்கு அடுத்த படியாய் உணவில் முக்கியம் வகித்தது பனம் பொருட்கள். பனை வளத்தைப் பெருக்கி அதிலிருந்து பனங்காய், பனாட்டு, கிழங்கு, ஒடியல், புழுக்கொடியல், கள்ளு, பதநீர், நுங்கு போன்ற உணவுப் பொருட்களையும் ஓலை, பனஞ்சட்டம், வரிச்சு போன்ற வீடு கட்டுவதற்கான மூலப்பொருட்களையும் பெற்றனர்.

தென்னை மரத்தை வீட்டுக்காணிகளில் வளர்த்து தமது சுயதேவையைப் பூர்த்தி செய்தனர்.

மாடுவளர்ப்பு எம்மக்களின் தேவைக்கு மேல் காணப்பட் டது என்றால் மறுப்பதற்கில்லை. அதனால் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் என்பனவற்றிற்கு ஒருபோதும் பஞ்சமிருக்க வில்லை. விவசாயத்திற்கும் போக்குவரத்திற்கும் எருதுகள் பயன்படுத்தப்பட்டன. மற்றைய தீவுகளிலிருந்தும் யாழ்.குடா நாட்டிலிருந்தும் பலர் வந்து எருதுமாடுகளை வாங்கும் வழக்கம் நீண்ட காலமாய் இருந்தது.

வெள்ளாடு, செம்மறி ஆடு வளர்ப்பும் மிக முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. இவற்றில் 95% மானவை வெளியூர்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. விசேடமாய் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பனை ஓலைப் பாய் இழைத்தல் குடிசைக் கைத்தொழிலாயிருந்தது. பாய் முழுவதும் யாழ். குடாநாட்டிற்கு புகையிலைச் சிற்பம் கட்ட ஏற்றுமதி செய்யப்பட்டன. வெங்காயக் கூடு சிறிது காலம் முக்கிய குடிசைக் கைத்தொழிலாயிருந்தது. இது 1956 களில் ஆரம்பித்து ஏறக்குறைய இருபத்தைந்து வருடங்கள் நீடித்தது. இதுகும் யாழ்.குடாநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

தம்பி, இந்த ஊரில் எவராவது உணவில்லாமல் வாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்தனர் என்ற கதையே கிடையாது. பிச்சைக்காரன் இல்லாத ஊர் தம்பி இது. பணத்தை அடிப்படையாய்க் கொண்டு பார்க்கும்போது இத்தீவின் பொருளாதாரம் வரண்ட பொருளாதாரம் என்பது உண்மைதான். ஆனால், சுயதேவைப் பூர்த்தியைக் கொண்ட ஒரு கட்டுக்கோப்பான பொருளா தாரமாகத்தான் பண்டைக் காலத்தில் இருந்தது என்பதை யாரும் மறுக்கமுடியாது. அதன் காரணமாய்த்தான் வந்தாரை வரவேற்று வயிறார உணவளிக்க எம்மக்களால் முடிந்தது. அதன் பெறுபேறுதான் 'நெடுந்தீவு மக்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்கள்,' என்ற புகழாரம்,"

என்று ஒரேயடியாய் விளாவாரியாய்ச் சொல்லி முடித்தார் பெரியவர்.

பெரியவரின் அறிவையும் அதை வெளிப்படுத்திய விதத்தையும் பார்த்து வியந்துபோன அருள், பெரியவரைப் பார்த்து,

"என்ன பெரியவர்! பேரசிரியர் ஒருவர் பல்கலைக் கழகத்தில் விரிவுரை ஆற்றியது போன்று ஒரேயடியாய்ப் பொழிந்து தள்ளிவிட்டீங்கள்! உங்களுடைய ஊரைப் பற்றி எவ்வளவு விடயத்தை இவ்வளவு நுணுக்கமாய்த் தெரிந்து வைத்திருக் கிறீங்கள்!"

என்று புகழாரம் சூட்டினான். இதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்த பெரியவர் தொடர்ந்து,

"தம்பி, நான் இதுவரை சொன்னவை எல்லாம் நானும் என்போன்ற பலரும் அறிந்த விடயங்கள். அதேவேளை பலருக்குத் தெரியாத ஒரு புராணக் கதையும் உண்டு. அதாவது, அக்கதையோடு இத்தீவு தொடர்புபடுத்தப் பட்டுள்ளது. அந்தக் கதையைக் கேட்டு அதிலுள்ள உண்மைகளைத் தெரிந்து கொண்டபொழுது நான் ஆச்சரியமடைந்தேன்,"

என்று கூறிய பெரியவர் தொடர்ந்து,

"நான் சொல்லப்போகும் அந்தக் கதையைக் கவனமாய்க் கேளும் தம்பி,"

என்று சொல்லிவிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முன்னொரு காலத்தில் மதுராபுரியை மகேந்திரன் என்னும் பெயருடைய மன்னன் ஆட்சிசெய்து வந்தான்.

அக்காலத்தில் ஐம்பத்தாறு தேசத்து மன்னர்களும் தலை வணங்க ஆட்சி செய்த விக்கிரமாதித்தன் ஏழரைச்சனியனின் பிடிக்குட்பட்டான். சனிபகவானின் தோசத்தின்படி விக்கிர மாதித்தன் வேறு மன்னனின் கீழ் பணியாற்ற வேண்டி ஏற்பட் டது. சனிபகவானின் வேண்டுகோளுக்கிணங்க மதுராபுரி மன்னன் மகேந்திரனிடம் சேவை புரியச் சென்றான். தான் விக்கிரமாதித்தன் என்று தெரிந்தால் மகேந்திரன் வேலை கொடுக்கமாட்டான் என்று எண்ணி தன்னை ஒரு தளபதி போல் அலங்கரித்துக் கொண்டு மதுராபுரி மன்னன் மகேந்திர னிடம் சென்றான். தன்னை வணங்கிநின்ற தளபதியை நோக்கி மன்னன் மகேந்திரன்,

"நீ யார்?" எனக் கேட்டான்.

"மன்னா! என்பெயர் ஆதித்தன். தாங்கள் உண்மையான வீரர்களை ஆதரிப்பவர் என்று கேள்விப்பட்டேன். தங்களிடம் பணிபுரிய வந்திருக்கிறேன்,"

என்றான் (விக்கிரமாதித்தன்) ஆதித்தன்.

மன்னன் மந்திரியுடன் ஆலோசனை செய்தபிற்பாடு,

"வீரனே! உனக்கு எவ்வளவு ஊதியம் வேண்டும்?" என்று கேட்டான்.

"ஒரு நாளைக்கு ஆயிரம் பொன் வேண்டும்!"

என்றான் ஆதித்தன்.

மன்னன் மகேந்திரன் அதற்குச் சம்மதித்தான். அவனுக்குத் தனி மாளிகை கொடுக்கக் கட்டளையிட்டான். அன்றைய ஊதியம் ஆயிரம் பொன்னையும் கொடுத்தான்.

ஆதித்தன் தினமும் சபைக்குச் செல்வான். சபையில் சேவகம் செய்வான். மாலையில் ஆயிரம் பொன் ஊதியத்தை வாங்கிக்கொண்டு வருவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்க்கோடகன், சோழகன் என்னும் இரு சகோதரர்கள் மன்னன் மகேந்திரனுக்கு மெய்க்காவலர் ஆவார்கள். அவர்கள் ஆதித்தனுடன் நெருங்கிப் பழகி நண்பர்கள் ஆனார்கள். ஆதித்தனுடைய மாளிகைக் குச் சென்று பழகுமளவிற்கு நட்பு வளர்ந்தது.

ஒரு நாள் கார்க்கோடகனும் சோழகனும் ஆதித்தனுடைய மாளி கைக்கு வந்திருந்த வேளையில், ஆதித்தனின் மனைவி இரத்தின மாலையைப் பார்த்தனர். அவளின் அபூர்வ அழகைப் பார்த்து மயங்கி னர். மறுநாள் மகேந்திரனிடம் சென்று,

"தளபதி ஆதித்தனிடம் உலகிலேயே சிறந்த அழகி ஒருத்தி இருக்கிறாள். அவள் உங்களுக்கு ஏற்றவள்,"

என்று கார்க்கோடகன் சொன்னான். கார்க்கோடகன் அவளின் அழகை வர்ணித்த விதத்திலிருந்து அவளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை மகேந்திரனுக்கு அதிகரித்தது.

"கார்க்கோடகா! அந்தப் பெண்ணைப் பார்க்க வேண்டுமே,"

என்றான்

"மன்னா! ஆதித்தன் மாளிகையிற் கட்டுக்காவல் அதிகம். நானும் சகோதரனும் மட்டுமே அனுமதிக்கப்படுகிறோம். மற்ற எவரையும் அவன் உள்ளே விடமாட்டான். நீங்கள் அந்த அழகியைப் பார்க்க விரும்பினால் எனது சகோதரனைப் போன்று வேடம் போட்டு வரவேண்டும்,"

என்றான் கார்க்கோடகன். அவ்வாறே சென்று அவளின் அழகைப் பார்த்துவிட்டு மாளிகை திரும்பிய மன்னன்.

"அவளின் அழகில் மனதைப் பறிகொடுத்துவிட்டேன். எப்படியாவது அவளை அடைய வேண்டும்,"

என்று சொன்னான். அதைக் கேட்டு சிரித்த மந்திரி.

"அரசே! ஆதித்தன் இருக்கும்வரை உங்களால் அந்தப் பெண்ணை அடையமுடியாது. அவனை எப்படியாவது ஒழித் தால் உங்கள் ஆசை நிறைவேறும். அதற்கு யோசனை சொல்லுகிறேன்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று அரசனிடம் தன் யோசனையைச் சொன்னான்.

மறுநாள் ஆதித்தன் வழமை போன்று சேவகம் செய்ய வந்த பொழுது மன்னன் அவனை அருகில் அழைத்தான்.

"ஆதித்தா! எனது மனைவியின் பிறந்த நாள் வருகின்றது. அவளுக்கு ஒரு சிறந்த நாகரத்தினம் பதித்த அட்டியலைப் பரிசாக அளிக்க விரும்புகிறேன். நான் நினைக்கும் அந்த நாகரத்தினம் இங்கே கிடைக்காது. அது இந்து மகா சமுத்திரத்திலுள்ள நாகரத்தினத் தீவிற்தான் கிடைக்கும். அதை மூலிகைத் தீவு என்றும் அழைப்பர். அங்கு சென்று அதைப் பெற்றுவர முடியுமா?"

என்று கேட்டான்.

"தாங்கள் உத்தரவிட்டால் காரியத்தைச் செய்து முடிக்கிறேன்,"

என்றான் ஆதித்தன். தான் சென்று வர அறுபது நாள் தவணை கேட்டான் ஆதித்தன் பணிவோடு. அதற்கு மன்னன் சம்மதித்து அறுபது நாட்களுக்குரிய சம்பளத்தையும் நாகரத்தினம் வாங்க இரண்டு லட்சம் பொன்னையும் கொடுத்தனுப்பினான்.

மாளிகைக்குத் திரும்பிய ஆதித்தன் (விக்கிரமாதித்தன்) அரசவையில் நடந்ததை வேதாளத்திடம் சொல்லி,

"ஏதோ கெட்ட நோக்கோடே மன்னன் எவராலும் செய்ய முடியாத இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யுமாறு கேட்கிறான், என்ன செய்வது? நான் அவனிடம் சம்பளம் வாங்கும் வேலைக்காரன். அவனது கட்டளையை நிறைவேற்றுவதுதான் எனது கடமை. ஆனால் எப்படி இந்த வேலையைச் செய்து முடிப்பது?" என்று ஆலோசனை கேட்டான் ஆதித்தன். உடனே வேதாளம்,

"அரசே! நீங்கள் நினைப்பது சரிதான். மன்னன் மகேந்திரன் ஏதோ கெட்ட எண்ணத்தோடுதான் இந்தக் கட்டளையை இட்டுள்ளான். நாகரத்தினத்தைப் பணம் கொடுத்து வாங்கமுடியாது. நாகரத்தினம் ஒருவகை நாகபாம்பிலிருந்துதான் பெறப்படுகின்றது. அந்தவகை நாகபாம்பு நாகரத்தினத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவில் அதாவது மூலிகைத் தீவில் இருக்கின்றது என்பது உண்மை. ஆதிகாலத்தில் இந்தவகை நாகபாம்பு மந்திரமலையில் இருந்தனவாம். மந்திரமலையை அனுமான் தூக்கிச் சென்ற பொழுது அதிலிருந்து உடைந்துவிழுந்த துண்டினாற் தான் மூலிகைத்தீவு உருவாகியது. அதனால் அந்த வகை நாகபாம்பு மூலிகைத்தீவிலும் இருக்க நேர்ந்தது. இதனால் அத்தீவு நாகரத்தினத் தீவு என்ற பெயரைப் பெற்றது.

அந்தத் தீவிற்குச் செல்வதும் நாகரத்தினத்தைப் பெறுவதும் மிகமிகக் கடினமான காரியந்தான். ஆனால், இயலாத காரியமல்ல. இது இயலாத காரியம் என்று எண்ணிக் கொண்டுதான் மன்னன் மகேந்திரன் உங்களை ஏதோ சதி வலையில் விழுத்தப் பார்க்கிறான். இது நீங்கள் ஏழரைச் சனியனால் பீடிக்கப்பட்டிருக்கிற காலம். சனிபகவானின் சோதனைதான் இது என்பதை நீங்கள் உணரவேண்டும். அரசே! நீங்கள் உங்கள் குலதெய்வமாகிய காளிதேவியிடம் சென்று உங்கள் கவலையைத் தெரியப் படுத்துங்கோ. அவள் ஒரு வழி விடுவாள்,''

என்று வேதாளம் ஆலோசனை வழங்கியது.

காளிகோயிலுக்குச் சென்ற ஆதித்தன் அவளை வணங்கி நின்றான். சிறிது நேரத்தில் அவன்முன் தோன்றிய காளிதேவி,

"மகனே! உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

"எனது எஜமான் மகேந்திரன் கேட்கும் நாகரத்தினத்தைப் பெற்றுவர எனக்கு வழி சமைத்துக் கொடுக்க வேண்டும் தாயே!'' என்றான் ஆதித்தன்.

"உனது நண்பன் அனந்தனிடம் சென்று ஆலோசனை கேள். அவன் அதற்குரிய வழிவகைகளைச் செய்துதருவான்,''

என்று கூறி காளிதேவி மறைந்தாள்.

ஆதித்தன் உடனே சென்று நண்பன் அனந்தனிடம் தனது கவலையைச் சொன்னான்.

"அரசே! நீங்கள் கவலைப்பட வேண்டாம். நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் ஜலந்திரனின் உதவியுடன் நாகரத்தினத் தீவிற்குச் செல்வோம். அங்கு பொன்னாவெளி என்ற ஒரு இடமுண்டு. அங்கு நாகரத்தினத்தை (நாகமணியை) உடைய நாகங்கள் அதிகம் வசிக்கின்றன. பௌர்ணமி இரவில் அவை இரைதேடி வரும். அப்பொழுது அவைகள் நாகரத்தினத்தை ஒரு இடத்தில் வைத்துவிட்டு அதன் ஒளியின் சுற்றுவட்டாரத்தில் இரைதேடும். அப்பொழுது அந்த நாகரத்தினத்தைப் பசுவின் சாணத்தால் மூடவேண்டும். பசுவின் சாணத்தால் மூடப்பட்ட அந்த நாகரத்தினத்தை எக்காரணங்கொண்டும் அந்த நாகத் தால் எடுக்கமுடியாது. அதனால் அந்த நாகம் தனது தலையை நிலத்தில் அடித்து இறந்துவிடும். அப்புறம் நாங்கள் அதனை எடுத்துவரலாம்.

ஆனால், நான் சொல்வது போன்று இலகுவாய்ப் பெற முடியாது. அந்தவகை நாகம் பாய்ந்து கொத்தும் வல்லமை மட்டுமல்ல பறந்து கொத்தும் வல்லமையும் கொண்டது. மிகக்கொடிய நஞ்சைக் கொண்ட பற்கள் உடையவை. அதனால் அதன் நாகரத்தினத்தை இலகுவாய் சாணத்தால் மூடமுடியாது. அச்செயலில் இறங்குவது தற்கொலை செய்து கொள்ளுவதற்கு ஒப்பானது.

இருந்தபோதும், அதைப் பெறுவதற்குரிய வழியை அங்கு சென்றபிற்பாடு சொல்லுகிறேன்,"

என்று சொல்லி முடித்தது.

ஒரு பௌர்ணமி தினத்தில் ஆதித்தனும் (விக்கிரமாதித்தன்) அனந்தனும் ஜலந்திரனின் உதவியுடன் நாகரத்தினத் தீவிற்குச் சென்றடைந்தனர். இரவாகியதும் பொன்னாவெளி எனப்படும் இடத்திற் குச் சென்றனர். பற்றை, கொடி, செடி, நிறைந்த பற்றைக்காடு. இடையி டையே சிறிய மரங்கள். நடுநிசி அளவில் இருவரும் ஒரு மரத்தில் பசுவின் சாணாகத்துடன் ஏறிக்கொண்டனர். சரியாக நடுநிசியில் ஓர் இடத்தில் திடீரெனக் கண்ணைப் பறிக்கும் ஒளி தோன்றியது. அதை அவதானித்த அனந்தன், ஆதித்தனிடம்,

"அங்கபாருங்கள் அரசே! ஒரு நாகம் நாகரத்தினத்தை அகற்றி வைத்துவிட்டு இரைதேட ஆரம்பிக்கிறது. அது எட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றதும் நான் சென்று அதனுடன் சண்டையிடுவேன். அந்தவேளையில் நீங்கள் விரைந்து சென்று அந்த நாகரத்தி னத்தை சாணத்தினால் மூடிவிட்டு திரும்பி மரத்தில் ஏறிக் கொள்ளுங்கள்,"

என்றது. சில நிமிடங்களில் நாகம் எட்டச் சென்றதை அவதானித்த அனந்தன், பாம்பு உருவம் எடுத்துக் கொண்டு, திடீரென்று இறங்கிச் சென்று அந்த நாகத்துடன் சண்டையிட்டான். சண்டை உக்கிரமடைந்த வேளை பார்த்து ஆதித்தன் வேகமாய்ச் சென்று நாகரத்தினத்தைச் சாணத்தால் மூடிவிட்டான்.

திடீரென்று ஒளி மறைந்தது. உடனே நாகம் நாகரத்தி னத்தை நோக்கி விரைந்தது. சாணத்தால் மூடப்பட்டிருந்த நாகரத்தினத்தை எடுக்கமுடியாத நிலையில் தலையை நிலத்தில் அடித்து இறக்கும் வேளையில், தனது நாகரத் தினத்தை அணிபவர் தலை இரண்டாகப் பிளக்கக் கடவாய் என்று சாபமிட்டு இறந்தது.

இதை வேதாளம் அறிந்திருந்தது. ஆனால், இதைப்பற்றி விக்கிரமாதித்தனிடம் கூறவில்லை, காரணம் விக்கிரமாதித்தன் இரக்க குணம் உடையவன். இதை அணிவதன் மூலம் மன்னன் மகேந்திரனின் மனைவியின் மண்டை பிளக்கும் என்று தெரிந்தால், நாகரத்தினத்தை மன்னனுக்குக் கொடுக்க மாட்டான் என்பதைத் தெரிந்துகொண்ட வேதாளம், மன்னன் மகேந்திரன் செய்த பாவத்திற்கு அவன் மனைவியின் தலை இரண்டாய்ப் பிளந்து இறந்து போகவேண்டும் என்று எண்ணி யது.

இந்தளவில் அறுபதுநாள் முடிவடைவதற்கு இன்னும் மூன்று நாட்களே இருந்தன. மன்னன் மகேந்திரனுக்கும் அவனது மந்திரிக்கும் ஆதித்தன் திரும்பிவரமாட்டான் என்ற எண்ணத்தில் ஒரே ஆனந்தம். அன்றும் கழிந்தது அடுத்த நாளும் கழிந்தது. இன்னும் ஆதித்தன் திரும்பி வரவில்லை. மன்னனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோ எல்லையில்லை.

அடுத்தநாள், அறுபதாவது நாள் நிறைவேறிய அன்று நாகரத்தினத்துடன் வந்து குதித்தான் ஆதித்தன். அதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட மன்னனுக்குப் பெரிய ஏமாற்றம். மறுநாள் மனைவியின் பிறந்த நாள் கொண்டாட்டம். மகாசபையில் நாகரத்தினம் பதித்த அட்டியலை மனைவியின் கழுத்தில் அணிந்தான் மன்னன் மகேந்திரன். மறு நிமிடம் அவளின் மண்டை இரண் டாகப் பிளந்தது. எல்லோரும் பேரதிர்ச்சியில் உறைந்தனர்.

அந்தவேளையில் வேதாளம் உண்மையை விக்கிரமா தித்தனிடம் கூறியது. அன்று நாடாறுமாதமென்ற விக்கிர மாதித்தனுடைய விரதம் நிறைவேறியது. விக்கிரமாதித்தன் தனது சொந்தரூபத்தைக் காட்டினான். உடனே மன்னன் மகேந்திரன் வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கோரினான். தனது நயவஞ்சகச் செயலுக்குக் கிடைத்த தண்டனை இதுவென்று எண்ணிய மன்னன் மகேந்திரன் திருந்தி நல்லவனாய் நீதி வழுவாது ஆட்சி புரிந்தான்,"

என்று கதையைச் சொல்லிமுடித்த பெரியவர் தொடர்ந்து,

"தம்பி, இந்தக் கதையை எனக்கு எனது பாட்டி சொன்னார்,"

என்று கூறிவிட்டு,

"அங்க பாருங்கோ, அதுதான் பொன்னாவெளி. அந்தக் காலத்தில் அந்தப்பகுதி முழுவதும் காரைப் பற்றை, புல்லாப் பற்றை, ஆவரசு, ஈஞ்சு, நாகதாளி, பிரம்பட்டைநாறி, புல்லாந்தி, காத்தோட்டி, காண்டை, பிரண்டை, தூதுவளை, வல்லுவெட்டி போன்ற கொடி, செடி, பற்றையினமும் விகாய், பரட்டைப் பாலை, காட்டுப் பூவரசு, குரா, கருக்குவாச்சி போன்ற மரங்களும் நிறைந்து அடர்ந்து காணப்பட்டன. நாகங்கள் பாதுகாப்பாய் வாழுவதற்கும் இரை தேடுவதற்கும் பொருத்த மான பூமியா யிருந்தது பொன்னாவெளி.

இப்பொழுது வெங்கிறாந்து வெளியாய்க் காட்சி கொடுக் கின்றது. இப்போது நான் சொல்வதை உங்களால் நம்பவே முடியாது. நான் சொன்ன கதையில் வருகின்ற நாகரத்தினத் தீவு, மூலிகைத்தீவு என்னும் பெயர்கள் இப்போதைய நெடுந்தீவைத்தான் குறிக்கின்றன. எப்படியிருந்த பூமி இப்படி ஆகிவிட்டது. கலியுக காலத்தின் மனிதரின் கொடுமையால் இதுகும் நடக்கும் இன்னமும் நடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாவெளி என்று இவ்விடத்திற்குப் பெயர் வந்த திற்கு ஒரு காரணமுண்டு. நாகரத்தினமுடைய நாகங்கள் இரைதேட வரும்போது நடுநிசியில் நாகரத்தினங்களின் ஒளியி னால் நிரப்பப்பட்ட இவ்விடம் பொன்போன்று காட்சி கொடுக்கு மாம். அதனால் மக்கள் இவ்விடத்தைப் பொன்வெளி என்று அழைத்தார்கள். காலகதியில் பொன்வெளி பொன்னா வெளி யாக மருவியது.

விக்கிரமாதித்தன் நாகரத்தினம் பெற்ற கதையைக் கேட்டறிந்த வெடியரசன் இந்தப் பொன்னாவெளியிலிருந்த பாம்புகளைக் கொன்று பல நாகரத்தினங்களைப் பெற்றிருந் தான் என்பது வாய்மூலம் வந்த வரலாறு. வெடியரசனுக்குப் பின் நயினாதீவை நிர்வகித்து வந்த வெடியரசனின் தம்பி யிடம் இந்த நாகரத்தினங்கள் இருந்ததாகவும், அவற்றைப் பாண்டியர் கண்ணகி சிலைக்குப் பதிப்பதற்காகப் பறித்துச் சென்றதாயும், அதைத் தொடர்ந்து பாண்டிய மன்னர்களும் பிற்பாடு அந்த நாகரத்தினங்களை வைத்திருந்த மன்னர்களும் ஆட்சி இழந்து போனதாயும், வாய்மொழி வரலாறு சொல்லு கின்றது. நாகபாம்புகளின் சாபந்தான் அம்மன்னர்களின் அழி விற்குக் காரணம் என்று நம்பப்படுகின்றது,"

என்று சொல்லி முடிக்க, இதைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த அருள்,

"பெரியவர், நீங்கள் சொல்லுவது புராணக்கதையோ! இதிகாசக் கதையோ! எதுவாயிருந்தாலும் அதில் உண்மை கள் இருப்பதாய்த்தான் தென்படுகின்றது. இவ்வளவு பெயர் களையும் ஞாபகத்தில் வைத்து அற்புதமாய்ச் சொல்லு கிறீங்களே! உங்களுடைய திறமையை எப்படிப் பாராட்டுவது!!"

என்று கூறி வாயிற் கையை வைத்த வேளையில்,

"இன்னொரு புராணக் கதையும் இருக்கின்றது"

என்றார் பெரியவர். அதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடைந்த அருள்,

"இன்னொன்றா! சொல்லுங்கள் பெரியவர், கேட்டுப் புதுப்புது விடயங்களைத் தெரிந்துகொள்கிறேன்,"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றான். அருளின் ஆர்வத்தை விளங்கிக்கொண்ட பெரியவர் இரண்டாவது புராணக் கதையைச் சொல்ல ஆரம்பித்தார். கோவிந்தும் அதை ஆர்வமாகக் கேட்க ஆயத்தமானான்.

## அங்கம் - 11

"முன்னொரு காலத்தில் மந்திரகிரிச் (மந்திரமலை) சாரலில் சரபூதி நதித்தீரத்தில் உமாபுரிப் பட்டணம் இருந்தது. அதைக் கௌசிகன் எனும் மன்னன் ஆண்டுவந்தான். அவன் ஒரு சந்தர்ப்பத்தில் வசிட்ட முனிவருடன் சண்டையிட்டுத் தோல்வியடைந்தான். அதனால் வசிட்ட முனிவரின் தவவலி மையை அவன் அறிந்துகொண்டான். அவரைப் போல் தானும் தவவலிமை பெறவேண்டும் என்று தீர்மானித்தான்.

நரசிம்மகிரிச் சாரலில் ஒரு சுனைக்கருகில் கௌசிகன் தவமிருந்தான். நீண்டகாலத்திற்குப் பிறகு சித்திபெற்றான். ராஜரிஷி எனும் பட்டமும் பெற்றான். ஓர் உலகத்தைப் படைக்கவும் அழிக்கவும் கூடிய வல்லமையை அவன் பெற்றிருந்தான் என்றால் மிகையாகாது.

ஒரு நாள் கௌசிகன் வானவீதியில் வந்துகொண்டிருந்த பொழுது பூலோகத்தில் ஒரு பட்டணத்தைப் பார்த்தான். தங்கமயமாக இருந்த அந்தப் பட்டணத்தைக்காண கீழே இறங்கினான். சோலைகளுக்கிடையே காணப்பட்ட மடம் ஒன்றிற்குச் சென்ற அவர் ஆசனமிட்டு அமர்ந்தார். அங்குள்ள துறவியை அழைத்து,

"இந்த நகரத்தின் பெயர் என்ன? இதற்கு மன்னன் யார்?" என்று கேட்டார்.

துறவி பணிவுடன் "நகரத்தின் பெயர் தங்கமாபுரி பட்டணம். இதற்கு அரசன் தங்கேஸ்வரன்" என்று கூறினார்.

"கௌசிகன் வந்திருக்கிறான். உடனே வந்து பார்க்கச் சொல்லுகிறான் என்று மன்னனிடம் சொல்லுங்கள்,"

என்றார் கௌசிகர்.

துறவி அரண்மனைக்குச் சென்று அரசனிடம் கௌசிகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ள செய்தியைச் சொன்னான். அரசன் தனது மனைவி மந்திரி ஆகியோரை அழைத்துக் கொண்டு வரத் தாமதமாயிற்று. அதனால் கௌசிகர் ஆத்திரமடைந்தார். வேண்டுமென்றே மன்னன் தாமதப்படுத்துவதாய் எண்ணினார். அதனால் 'அந்த நகரமே உயிரற்ற பட்டணமாய்ப் போகக் கடவது' என்று சபித்தார். சாபத்தின் பலன் தொடர்வதை உணர்ந்த இராணி ஓடோடி வந்தாள். கௌசிகரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி சாபத்தைத் திரும்பப் பெறும்படி வேண்டினாள்.

"பெண்ணே! கொடுத்த சாபத்தைத் திரும்பப் பெற முடியாது? உனக்கு ஏதாவது வரம் தேவையானால் கேள், தருகிறேன்,"

என்று கூறி சாந்தியடைந்தார் கௌசிகர்.

உடனே ராணி காந்தரூபி, தன்கரம் குவித்து,

"மகரிஷியே! அடுத்த பிறவியிலும் என் கணவர் இந்த நாட்டிற்கு மன்னராகவும் நான் ராணியாகவும் இருக்க வேண்டும். அடுத்த பிறவியில் நான் 10 ஆம் வயதிலேயே பூப்பெய்த வேண்டும். அப்பொழுது முற்பிறவியின் நினைவுகள் வரவேண்டும். 16 வயதில் என்கணவரை அடைய வேண்டும். தங்கமாபுரிக்கு மறுபடியும் செல்வதற்கு முன் அங்கு நடப்பனவற்றையெல்லாம் நான் ஞானத்தால் அறிய வேண்டும். எனது கணவரும் நானும் இங்கே வந்த பிறகு இந்த நகர் மக்கள் யாவரும் பழையபடி உயிர்பெற்று எழ வேண்டும். இந்த வரத்தைக் கொடுங்கள்,"

என்றாள்.

கௌசிகர் அவ்வாறே அளித்து அங்கிருந்து சென்றார். உடனே மற்றையவர்களைப் போன்று காந்தரூபியும் உயிரற்ற கற்சிலையானாள்.

பர்வத மலைச்சாரலில் தாம்பிரபரணி நதிக்கருகில் பிரசிட்டாபுரி உள்ளது. அந்நாட்டு மன்னன் சற்குணனுக்கும் இராணி காயச்சவதிக்கும் காந்தரூபி மகளாகப் பிறந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்குச் சஞ்சீவிமடந்தை எனும் பெயர் சூட்டினர். ஆஸ்தான புரோகிதனான காலகண்டனுக்கும் அவர் மனைவி கனகாம்பிகைக்கும் தங்கேஸ்வரன் மகனாகப் பிறந்தான். அவனுக்கு ஆதிமூலம் என்று பெயரிட்டனர்.

சஞ்சீவிமடந்தை பத்து வயதானதும் ரிஷி அருளியபடி பூப்பெய்தினாள். அப்போது முற்பிறவி நினைவுகள் வந்தன.

மகள் பதினாறு வயதை அடைந்ததும் அரசனும் அரசியும் தம் மகள் திருமணத்தை விரைவாக நடத்த எண்ணம் கொண்டனர். வரன் தேடுவதற்கு முன் மகளின் விருப்பத்தை அறிய எண்ணினர். அவளை அழைத்து தமது எண்ணத்தைச் சொன்னார்கள். பெற்றோரின் எண்ணத்திற்குச் சம்மதித்த சஞ்சீவிமடந்தை ஒரு நிபந்தனை இட்டாள்.

"என்னைத் திருமணம் செய்பவர் தங்கமாபுரிப் பட்டணம் சென்று பார்த்துவந்து, எல்லா விபரங்களையும் எனக்குச் சொல்லவேண்டும்,"

மகளின் முடிவைக்கேட்டு மகிழ்ச்சியடைந்த அரசனும் அரசியும், "தங்கமாபுரிப் பட்டணம் சென்று வந்து விபரம் சொல்பவர் எவராயினும் அவருக்கு எனது மகள் சஞ்சீவிமடந்தையை திருமணம் செய்து கொடுக்கிறேன்,"

என்று அறிவித்தனர். சஞ்சீவிமடந்தையின் அழகைக் கேள்விப்பட்ட பல நாட்டு இளவரசர்கள் அவளை மணப்பதற்காக தங்கமாபுரிப் பட்டணத்தைத் தேடி அலைந்தனர். எங்கும் காணாது சோர்ந்து இறுதியில் ஆசையைக் கைவிட்டனர்.

ஆதிமூலம் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருந்தான். முயற்சியின் தொடராக ஒருநாள் ஓர் ஆலமரத்தின் கீழ் களைப்புற்றிருந்த வேளை கௌசிகமுனிவர் ஓர் அகண்ட பறவை வேடம் தாங்கி வந்து ஆலமரத்தில் உட்கார்ந்து கொண்டு,

"மகனே! ஏன் கவலையோடு இருக்கிறாய்"

என்று கேட்டார்.

"தங்கமாபுரிப் பட்டணத்தைத் தேடி அலைந்து களைப்புற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிருக்கிறேன். கண்டுபிடிக்க முடியவில்லை என்பதுதான் எனது கவலை,"

என்றான் ஆதிமூலம்.

"மகனே! கவலைப்பட வேண்டாம். நான் உனக்குத் தங்கமாபுரிப் பட்டணத்தைக் காட்டுகிறேன். நீ எனது முதுகில் அமர்ந்துகொள் என்றது. ஆதிமூலம் முதுகில் ஏறி அமர்ந்து கொண்டான். நெடுந்தூரம் பறந்து சென்ற பிற்பாடு தங்கமா புரியைச் சுற்றிக்காட்டியது. எல்லாவற்றையும் நன்கு பார்த்துத் தெரிந்துகொண்டான் ஆதிமூலம். மறுபடியும் ஆதி மூலத்தைக் கொண்டு சென்று அந்த ஆலமரத்தின் கீழ் இறக்கிவிட்டது அகண்டபறவை.

மறுநாள் அரசன் அரண்மனைக்குச் சென்று ஆராய்ச்சி மணியை அடித்தான் ஆதிமூலம். காவலர் அவனை இளவரசி முன் அழைத்துச் சென்று நிறுத்தினர். "தங்கமாபுரிப் பட்டணத்தைப் பார்த்துவந்தாயா?" என்று கேட்டாள் சஞ்சீவி மடந்தை.

"பார்த்து வந்தேன். உன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறேன்,"

என்றான் ஆதிமூலம்.

"தங்கமாபுரிப் பட்டணத்தில் என்ன அதிசயங்களைக் கண்டாய்?" என்று கேட்டாள் சஞ்சீவிமடந்தை. ஆதிமூலம் விபரித்ததைக் கேட்டதும் அவள் அயர்ந்துவிட்டாள். அவனே முற்பிறவியில் தனது கணவன் என்று உணர்ந்தாள். தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி அவன் கழுத்தில் அணிந்து அவனை வணங்கினாள். பின் தன் பெற்றோரை அழைத்துவரச் சொன்னாள். அவர்களிடம் தன் முற்பிறவி குறித்துச் சொன்னாள். பெற்றோர் மகிழ்ந்தனர்.

அப்பொழுது ஆதிமூலம் அகண்டபறவை தனக்குச் செய்த உதவிபற்றிச் சொன்னான்.

இது ரிஷியின் அருளினாற்தான் நடந்திருக்க வேண்டும் என எண்ணிய சஞ்சீவிமடந்தை, ஆதிமூலத்திடம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமாபுரிப் பட்டணம் சென்று உயிரற்று இருக்கும் அனைவரையும் உயிர்பெற்றெழச் செய்து தன்னை மணக்கும் படி வேண்டினாள்.

வீடு திரும்பிய ஆதிமூலம் இதை எப்படிச் செய்வதென்று தெரியாமல் மனங்குழம்பினான். மறுநாள் மறுபடியும் சென்று அந்த ஆலமரத்தின் கீழ் கவலையோடு அமர்ந்திருந்தான். அப்பொழுது அங்கு வந்த அகண்டபறவை.

"மகனே! கவலைப்பட வேண்டாம். கௌசிக முனிவரிடம் சென்று உனது கவலையைச் சொல்லு, அவர் தீர்த்து வைப்பார்," என்றது.

"கௌசிக முனிவரை எங்கே காண்பது?" என்று கேட்டான் ஆதிமூலம்.

"இவ்விடத்திலிருந்து ஐந்து மைல் தொலைவில் ஒரு பெரிய வில்வமரம் உண்டு. நாளை இதேநேரம் அங்கு போ. அதன்கீழ் கௌசிகர் அமர்ந்திருப்பார். உனது வேண்டு கோளை அவரிடம் கூறு," என்றது.

மறுநாள் ஆதிமூலம் அங்கு சென்று வில்வமரத்தின் கீழ் அமர்ந்திருந்த கௌசிக முனிவரை வணங்கிநின்றான்.

"மகனே! உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் முனிவர்.

"மகரிஷியே! தங்கமாபுரி பட்டணம் முன்புபோல் உயி ருள்ள பட்டணமாக ஆகவேண்டும். ஒளிமங்காது பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டும். எனக்கும் சஞ்சீவிமடந்தைக்கும் அங்கு திருமணம் நடைபெறவேண்டும். நாங்கள் முன்போல் அரசனும் அரசியுமாக விளங்க வேண்டும். தாங்கள் இதற்கு அருள் புரியவேண்டும் சுவாமி," என்றான் பணிவுடன்

கௌசிகர் மகிழ்ந்து, "நீங்கள் இருவரும் அங்கு செல்லுங்கோ. அங்கு சென்றதும் எல்லாம் அப்படியே ஆகும்," என்று ஆசீர்வதித்து அனுப்பியவேளை,

"ஒரு நிபந்தனை," என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதென்ன நிபந்தனை சுவாமி?"

"அது உயிருள்ள பட்டணமாக ஆகும்பொழுது அதற்குப் பொன்னாபுரி பட்டணம் என்று பெயரிட்டு அழைக்கவேண்டும்," என்றார் முனிவர்.

"அப்படியே ஆகட்டும் சுவாமி," என்றான் ஆதிமூலம்.

மறுநாள் ஆதிமூலமும் சஞ்சீவிமடந்தையும் அகண்ட பறவையின் உதவியுடன் தங்கமாபுரிக்குச் சென்றனர்.

தங்கமாபுரியில் உயிரற்றிருந்த அனைவரும் தூங்கி விழிப்பது போன்று உயிர்பெற்றெழுந்தனர். ஆதிமூலத்திற்கும் சஞ்சீவிமடந்தைக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது. அவர்களிருவரும் ஆலயம் சென்று ஈஸ்வரனையும் அம்மனையும் வணங்கி வழிபட்டனர். அவர்கள் பழைய தங்கேஸ்வரனாயும் சொர்ண காந்தரூபியாயும் மாறினர். ரிஷியின் வேண்டுகோளுக்கிணங்க தங்கமாபுரி எனும் பெயர் பொன்னாபுரி என்று மாற்றப்பட்டது.

அப்பொழுது அகண்ட பறவை ரூபத்திலிருந்த கௌசிக முனிவர் சுயரூபத்தை எடுத்து அனைவரையும் ஆசீர்வதித்தார். அதன்பின்

"உமது மக்கள் விரும்பினால் இந்துமகா சமுத்திரத்திலுள்ள மூலிகைத் தீவிற்குச் சென்று அங்கு குடியேறி வாழலாம்,"

எனப் பகர்ந்து சென்றார் கௌசிக முனிவர்.

இந்தக் கதையைச் சொல்லிமுடித்த பெரியவர் சிறிது யோசித்துவிட்டு,

தொடர்ந்து,

"தம்பி, இந்தப் புராணக் கதையிலிருந்து நான் புரிந்து கொள்வ தென்னவென்றால்: நெடுந்தீவில் உள்ள மக்கள் இந்தியாவிலுள்ள பொன்னாபுரி என்னும் ஊரிலிருந்து வந்து இங்கு குடியேறி வாழ்பவர்கள் என்பது வரலாற்று உண்மை. இந்தப் புராணக் கதையை இத்தீவுடன் தொடர்புபடுத்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கும் பொழுது இந்தப் பொன்னாபுரிதான் முன்னைய தங்கமாபுரியாய் இருந்திருக்க வேண்டும்.

மூலிகைத்தீவு மந்திரகிரியை (மந்திரமலையை) அனுமான் தூக்கிச் சென்றபொழுது உடைந்து விழுந்த துண்டினால் ஆகியது என்று புராண வரலாறு கூறுகின்றது. மூலிகைத் தீவுதான் தற்போதைய நெடுந்தீவு என்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

கௌசிக முனிவர் கௌசிக மன்னனாக இருந்தபொழுது அவன் உமாபுரிப் பட்டணத்தை ஆட்சி செய்தான். உமாபுரிப் பட்டணம் மந்திரகிரி மலைச்சாரலில் (மந்திரமலைச்சாரலில்) சரயூநதி தீரத்தில் அமைந்திருந்தது. அந்த வகையில் மந்திர மலைக்கும் கௌசிகருக்கும் தொடர்புண்டு என்பது புலனாகின்றது.

கௌசிக முனிவர், தான் இட்ட சாபத்தால் துன்புற்ற மக்களுக்கு விமோசனம் அளிப்பது போல் மூலிகைத் தீவை அறிமுகம் செய்துள்ளார் என்பது எனது விளக்கமாகும்.

எனவே மூலிகைத்தீவு (நெடுந்தீவு) கௌசிக முனிவருடைய ஆசிர்வாதம் பெற்ற மண் என்பதும், இங்கு வாழும் மக்கள் கௌசிக முனிவருடைய ஆசிர்வாதம் பெற்ற பொன்னாபுரி மக்களுடைய பிற்சந்ததியினர் என்பதும் நிரூபணமாகின்றது,'' என்று கூறிமுடிக்க, இதை நன்கு இரசித்துக் கேட்டுக்கொண்டிருந்த அருள்,

"பெரியவர்! நீங்கள் சாதாரண ஆளில்லை. நீங்கள் சொன்ன கதை சுவாரஸ்யமானது மட்டுமல்ல, மிக்க அர்த்தமுள்ளதாயும் தென்படுகின்றது. உங்களுடைய விளக்கத்தை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

இவ்வளவு பெயர்களையும் ஞாபகம் வைத்து என்ன அற்புதமாய்ச் சொல்லுகிறீங்கள்! உங்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை. அது சரி..... சரி.... இந்தக் கதையை உங்களுக்கு யார் சொல்லித் தந்தார்கள் என்று சொல்லமுடியுமா பெரியவர்?'' என்று கேட்டுவிட்டு பெரியவரின் வாயைப் பார்த்துக்கொண்டு நின்றான் பதிலுக்காக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியவர் ஒரு புன்சிரிப்பை தனது பொக்குவாயில் மலர விட்டுக்கொண்டு,

" அது... வந்து... தம்பி, இந்தக் கதையை எனக்குச் சொன்னவர் எனது அப்பாவின் அப்பா, அதாவது அப்பப்பா. நாங்கள் தம்பி, பரம்பரை பரம்பரையாக சோதிடம், ஆயுள் வேத சித்த வைத்தியம் என்பவற்றைப் பகுதிநேரத் தொழிலா கக் கொண்டவர்கள். எங்களுக்குப் பெயர்கள் ஞாபகத்தில் இருப்பதென்பது இரத்தத்தோடு ஊறிய ஒன்று," என்று சொல்லி முடித்த பொழுது,

"நான் நினைச்சேன்! ஏதோ எங்கயோ மர்மம் இருக் கென்று!

நான் நினைச்சது சரியாப் போய்ச்சு. அப்படிச் சொல்லுங் கோவன் விசயத்தை. பரம்பரைத் திறமையின் வெளிப்பாடு தான் இது?"

என்று சொல்லித் தட்டிக் கொடுக்க, மேலும் உத்வேகம் அடைந்த பெரியவர்,

"தம்பி, எனது ஊரைப்பற்றி இன்னொரு விடயத்தையும் சொல்லிவிட்டு விடைபெறலாம் என்று நினைக்கிறேன்,"

என்று கூறிய பெரியவர் சிறிது யோசித்துவிட்டு,

"தம்பி, பண்டைக் காலத்தில் ஒவ்வொரு ஊருக்கும் பொருளாதாரரீதியில் தனித்து இயங்க வேண்டிய தேவை இருந்தது. காரணம், வர்த்தகம், போக்குவரத்து இல்லாமை. அதற்காகத்தான் சாதிப்பிரிவு ஏற்பட்டது. அப்போதைக்கு அது தேவையாய்த்தான் இருந்தது. அதன்படி வேளாளர் ஒரு முக்கிய பிரிவினர் சமூகத்தில்,"

என்று சொல்லிக்கொண்டு போனவர் திடீரென்று,

"தம்பிக்கு! யாழ்ப்பாணம் பெரிய சிவன் கோயிலைத் தெரியுமோ? அதாவது கே.கே.எஸ். றோட்டில் முட்டாஸ் கடைச் சந்திக்கு அண்மையில் அமைந்துள்ளது,"

என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் பெரியவர்! எனக்குத் தெரியும்"

"அதை யார் நிர்மாணித்தது என்று தெரியுமோ தம்பி?"

"தெரியாது பெரியவர்," என்றான் அருள்.

"தம்பி! அதை நிர்மாணித்தவர்கள் தென்னிந்தியச் செட்டிமார். அவர்கள்தான் அந்தக் காலத்தில் அந்தப் பகுதியில் ஆதிக்கம் செலுத்தினவர்கள்.

கோயில் கட்டி முடிந்ததும் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். கும்பாபிசேகத்தின் போது பிராமணண் செய்யும் கிரிகைகளுக்கு சங்கல்ப்பதாரராயிருக்க ஒரு வேளாளன் வேண்டும். அக்காலத்தில் யாழ்.குடாநாட்டில் வேளாளரும் மற்றைய சாதியினரும் கலந்து வேளாளரின் தூய்மை கெட்டு விட்டதாய் செட்டிமார் கருதினார்கள். அதனால் தூய்மையான சுத்த வேளாளன் எங்கு இருக்கிறான் என்று தேடும் படலம் ஆரம்பமானது. இறுதியில் நெடுந்தீவிற்தான் சுத்த வேளாளன் இருக்கிறான் என்று கண்டுபிடித்தார்கள்.

பிறகென்ன! அங்கு சென்று சுத்த வேளாளனை அழைத் துச் சென்று கும்பாபிசேகம் செய்தார்கள் என்பது உண்மைக் கதை. இது புராணக்கதை அல்ல தம்பி!

இதை நான் ஏன் சொன்னேன் என்றால், இவ்வூர் மக்கள் சமூக விதிகளை மதித்து நடந்த கட்டுக்கோப்பான மக்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்பதற்காகவே. அதா வது, இவ்வூர் மக்களின் வாழ்க்கையில் ஒழுக்கம் பின் பற்றப்பட்டது, தூய்மை நிலவியது என்பதைத் தெரியப்படுத் துவதற்காக மட்டுமே இதைச் சொன்னனான் என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் தம்பி!

இந்தக் கதையைச் சொன்னதற்காக நான் சாதிக் கொடு மையை ஆதரிப்பவன் என்று தப்பாக எண்ணிவிடக் கூடாது தம்பி, அல்லது மற்யவர்களைக் குறைத்து மதிப்பதாயும் கருதிவிடக் கூடாது. நான் சொன்னது உண்மைக் கதை,"

என்றதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சீ! சீ!! அப்படி நான் நினைக்கமாட்டேன் பெரியவர். அந்தள விற்கு விளக்கம் இல்லாதவனே? நானும் யாழ்ப்பாணத்தான் தானே! நீங்கள் சொன்ன கதையிலிருந்து ஒரு முக்கிய உண்மை யைக் கற்றுக் கொண்டேன் பெரியவர். அதாவது வாழ்க்கையிற் தூய்மை இருக்கவேண்டும் என்பதாகும்,"

என்று சொன்னதுதான் தாமதம்?

"அப்படிச் சொல்லு தம்பி! இதுதான் உம்மில எனக்குப் பிடிச்சுக்கொண்ட விடயம். எதைச் சொன்னாலும் அதன் உட் பொருளைக் கச்சிதமாய்ப் பிடிச்சுக்கொள்ளுகிறீரே! அந்தத் திறமை எல்லோருக்கும் இருக்காது தம்பி!"

என்று கூறி முடித்த பெரியவர் தொடர்ந்து,

"தம்பி, நான் கிளம்பப்போறன். எனக்கொரு முக்கியமான அலுவலிருக்கு,"

என்று சொல்லிக்கொண்டு எழும்ப, பக்குவமாய் மரியாதையோடு வழியனுப்பி வைக்க விரும்பிய அருள்,

"பெரியவர்! உங்களிடமிருந்து பெற்றுக்கொண்ட செய்திகள், ஆலோசனைகள், அறிவுரைகளெல்லாம் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. அதற்காக எனது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் இன்னும் பல ஆண்டுகள் நலமோடிருக்க வேண்டும் என்று வாழத்து கிறேன்,"

என்று கூறி, கரங்கூப்பி வழியனுப்பி வைத்தான் அருள்.

இன்று அருள் தனது ஊருக்குத் திரும்பிச் செல்வதற்கான நாள். காலை பத்து மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட வேண்டும். அப்படியானாற் தான் மதியம் பன்னிரண்டு மணிக்குப் புறப்படும் இராஜேஸ்வரி லோஞ் சைப் பிடிக்க முடியும். காலை ஆறு மணிக்கு எழும்பிய அருள் கோவிந்தின் உதவியுடன் எல்லா ஆயத்தங்களும் செய்து முடித்து விட்டான். இப்பொழுது நேரம் 9:50 மணி. கோவிந்தின் அப்பா, அம்மாவிற்குப் பிரியாவிடை சொல்வதற்கான தருணம். அந்த வேளை யில் ஒரு கைப்பையைக் கொடுத்த கோவிந்தின் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, இதற்குள் நெடுந்தீவுத் தேன், நெய், பனங்கிழங்கு என்பன இருக்கின்றன. எங்கள் ஊருக்கு வந்துவிட்டுத் திரும்பிப் போகும் நீங்கள் வெறுங்கையுடன் உங்களுடைய வீட்டிற்குப் போகப்படாது. மறுக்காமல் இதைக் கொண்டு சென்று உங்கள் அப்பா அம்மாவிடம் கொடுங்கள். அவர்களும் எங்களுடைய ஊரைப் பற்றி அறிந்து கொள்ளட்டும்"

என்று அன்பு ததும்பச் சொல்லி முடிக்க, கோவிந்தின் அப்பா அருளைப் பார்த்து,

"தம்பி, புதிய ஓர் அனுபவத்துடன் திரும்பிச் செல்லுகிறீர்கள் என்று நம்புகிறேன். உங்களுடைய அனுபவத்தை மற்றையவர்களுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது தான் எனது விருப்பம்,"

என்று சொல்லி முடியும் தறுவாயில் குறுக்கிட்ட அருள்,

"என்னுடைய அனுபவத்தை மற்றையவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்போதுதான் பாருங்கோ! என்னுடைய பிரயாணம் நிறைவு பெறும் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. இவ்வளவு காலமும் நெடுந்தீவைப் பற்றி அவனிவன் சொன்னவற்றைக் கொண்டும், பத்திரிகைகள், புத்தகங்களில் வாசித்தவற்றை வைத்துந்தான் அறிந்தி ருந்தேன். அவற்றில் பல தப்பானவை என்பதை இப்போது தெரிந்து கொண்டேன். இந்த ஊர் மக்களுடைய பண்பாடு, மற்றையவர்கள் மீது காட்டும் அன்பு, நட்பு பாராட்டல், விருந்தோம்பலின் சிறப்பு என்பவற்றைப்பற்றி நானே ஒரு புத்தகம் எழுதக்கூடிய அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளேன். உங்களுடைய மகன் கோவிந்தைப் போன்ற ஒரு நண்பனைப் பெற்றுக் கொடுத்தமைக்காக உங்களுக்கும் இறைவனுக்கும் நிச்சயம் நான் நன்றி சொல்லவேண்டும். இந்தப் பிரயாணமும், இதன் மூலம் நான் பெற்றுக் கொண்ட அனுபவமும், இங்கு நின்ற நாட்களில் நான் அடைந்த மகிழ்ச்சியும் மனநிறைவும் என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாதவை,"

என்றதும், மேலும் பிரயாணத்தைச் சுணக்க விரும்பாத கோவிந்தின் அப்பா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புரியுது தம்பி, எல்லாம் புரியுது! மேலும் தாமதிக்காமல் சந்தோசமாய்ப் போயிட்டு வாங்கோ! போய்ச் சேர்ந்ததும், சுகமாய்ப் போய்ச் சேர்ந்துவிட்டதாய் நண்பனுக்குக் கடிதம் போடுங்கோ,"

என்றதும்,

"நிச்சயமாய்! போனதும் அதுதான் முதல் வேலை. அப்ப....நான் போயிட்டு வாறன். உங்களுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் மிக்க நன்றி!"

என்று கூறிவிட்டு விடைபெற்றுச் செல்ல, நண்பனுடைய ஒரு பெட்டியைத் தூக்கிக்கொண்டு முன் நடந்தான் கோவிந்.

இப்பொழுது நேரம் நண்பகல் 11:50 மணி. லோஞ் புறப்படுவதற்கு பத்து நிமிடங்கள்தான் பாக்கி. லோஞ்சில் ஏறுவதற்குத் தயார். ஏறுவதற்கு முன் பாலத்தில் நின்றுகொண்டு சமுத்திராதேவி மீது முழுக் கவனத்தையும் செலுத்தினான் அருள். சில நிமிடங்களின் பின் என்ன நினைத்தானோ தெரியவில்லை, ஒரு புன்சிரிப்புடன் லோஞ்சில் ஏறி மேற்தட்டில் உட்கார்ந்து கொண்டான். அப்பொழுது கோவிந்,

"லோஞ். மலையடியை அண்மிக்கும்போது உள்ளுக்குப் போயிரு. அது கழிந்த பிற்பாடு திரும்பவும் வெளியில் வந்திருக்கலாம், சரியா?"

என்றதும், "சரி" என்பதைப் போன்று சிறு சோகத்துடன் தலையை ஆட்டினான் அருள். மறுகணம் முகத்தில் சோகத்துடன் கூடிய சிரிப்புத் தென்பட்டது. இரு அன்பு உள்ளங்கள் பிரியும்போது மனதில் ஏற்படும் சலனத்தின் வெளிப்பாடுதான் அது என்பதை இருவரும் உணர்ந்து கொண்டனர். பாலத்தின் கட்டைகளில் போடப்பட்டிருந்த கயிறுகள் இரண்டும் கழற்றப்பட்டன. ஆயத்தமாய் நின்ற ஊழியர்கள் தாங்கு கோலைப் போட்டு அணியத்தை திருப்பினர். புறப்பிலர்கள் வேலை செய்யத் தொடங்க லோஞ் மெதுவாக இதமாகச் செல்ல ஆரம்பித்தது. இருவருடைய கைளும் தலைகளும் பிரியாவிடைக்கான சைகையைக் காட்டின. ஆற்றுக்கட்டைத் தூண்களைக் கடக்கும் வரை இருவரும் இடையிடையே கைகளை அசைத்து தங்களுடைய பிரிவுத்துயரையும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆற்றுக்கட்டைத் தூண்களைக் கடந்ததும் இயந்திரங்களின் வேகம் முடுக்கிவிடப்பட்டன. கர்ச்சிக்கும் சத்தத்துடன் இராஜேஸ்வரி எதிர்த்து வந்த அலைகளைப் பிளந்துகொண்டு சென்றாள். இயந்திரங்களின் அதிர்வுகளும் இலேசான ஆட்டமும் அருளுக்கு இப்போது பழக்கப்பட்டு விட்டன என்றால் மறுப்ப தற்கில்லை. அதனால் இலாகவகமாய் உட்கார்ந்து கொண்டு அருகில் இருந்தவரிடம் கதையைக் கொடுத்த அருள்.

"அண்ண, மலையடி வரும்போது எனக்குச் சொல் லுங்கோ, தேவைப்பட்டால் நான் உள்ளுக்குப் போயிருக்க வேண்டும்,"

என்று கேட்டுக் கொண்டான்,

இன்பமும் துன்பமும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை என்ற பாடத்தை மறுபடியும் ஞாபகமூட்டிய நெடுந்தீவுக் கடலுக்கும் நெடுந்தீவு மண்ணுக்கும் நன்றி சொல்லிக்கொண்டு, நீங்காத நினைவுகளுடன் வீடுபோய்ச் சேர்ந்தான் அருள்.

முற்றும்

இந்தப் பிரயாணக் கதை பற்றிய உங்களுடைய அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், கருத்துக்களைக் கூற விரும்புபவர்கள் எனது கனடா தொலைபேசி இலக்கத்துடன் (416-431-6587) தொடர்பு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ.கோவிந்தன் B.A. (Hons) Econ.
ஓய்வுபெற்ற வங்கியாளர்.

இவ்வாசிரியர் கடந்த ஒன்பது ஆண்டுகளாக எழுத்துத் துறையில் தன்னை ஈடுபடுத்தி, இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நாவல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஆறு நாவல்கள் புத்தக வடிவிலும் மிகுதி பத்திரிகையிலும் வெளிவந்துள்ளன. இவருடைய படைப்புக்கள் வாசகர்களுடைய வரவேற்பையும், பாராட்டையும் பெற்றன என்பது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. இவருடைய எழுத்திலுள்ள ஒரு சிறப்பு : கதையில் வரும் ஒரு காட்சியையோ அன்றி நிகழ்வையோ தனது எழுத்தின் மூலம் வாசகர்களின் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தும் வல்லமையாகும். இதனால் இவருடைய கற்பனைகளைக் கூட நிஜம் என்று கருதும் வாசகர்கள் பலர். இவர் சிறந்த சிந்தனா சக்தியும் கற்பனை வளமும் கொண்டவர். இதன் பயனாக "சிந்தனைச் செம்மல்", "கற்பனைச் சிற்பி" என்ற கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ளார்.

ஓர் எழுத்தாளனின் வளர்ச்சி, இருப்பு என்பன வாசகர்களின் ஆதரவிலேயே தங்கியுள்ளது. வாசகர்களாகிய உங்களின் ஆதரவு இவரது இந்நூலுக்கு நிச்சயம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் இந்நூலை அச்சிட்டுக்கொடுப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம். வாசகர்களின் ஆதரவே எழுத்தாளனை இயக்கும் சக்தியாகும்.

– பதிப்பாளர்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org